
# இலங்கையின் பொருளாதாரம்

T. லோகநாதன், B.A.




ஸ்ரீ லங்கா வெளியீடு

# இலங்கையின்
# பொருளாதாரம்

கல்விப் பொதுத் தராதர உயர்தர பாடத்திட்டத்திற்கு
அமையவும் ஏனைய உயர் வகுப்புகளுக்குரிய
பாடத்திட்டத்திற்கு அமையவும்
எழுதப்பட்டது.

ஆசிரியர்:
**தி. லோகநாதன் B. A. (Cey.)**
( அதிபர், கல்வி போதனை நிலையம், யாழ்ப்பாணம் )

**ஸ்ரீ லங்கா வெளியீடு**
**234, கே. கே. எஸ். வீதி**
**யாழ்ப்பாணம்.**

முதற்பதிப்பு : 1980 மார்ச்

ஆசிரியர் : இ. லோகநாதன்
(அதிபர், கல்வி போதனா நிலையம்,
யாழ்ப்பாணம்)

வெளியீடு : ஸ்ரீ லங்கா புத்தகசாலை
கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்.

பதிப்புரிமை : ஆசிரியருக்கே.

விலை ரூபா : 14/90 19/60

அச்சுப்பதிப்பு :
விவேகானந்தா அச்சகம் லிமிட்டெட்
யாழ்ப்பாணம்

# முன்னுரை

தமிழைக் கல்லூரி மொழியாக்கிப் பல ஆண்டுகளாகி விட்டன. அரிச்சுவடி முதல் பட்டப்படிப்பு வரை தமிழில் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இந்நிலையில் தமிழில் குறிப்பாக வர்த்தக மாணவர்களுக்குப் போதியளவு தமிழ் நூல்கள் இல்லாமை முக்கிய குறைபாடாகவுள்ளது. இக் குறைபாட்டினை நீக்கும் முகமாக எனது 2-வது முயற்சியே "இலங்கையின் பொருளாதாரம்" ஆகும். பொருளாதாரம் பற்றிய நூல்கள் பெருமளவு வெளிவராவிடினும் பல ஆசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கு இடையிலும் குறுகிய காலத்தில் அரிய நூல்களை வெளியிட்டுள்ளனர். எனினும் இலங்கையின் பொருளாதாரம் பற்றிய நூல்கள் மிகக் குறைவாகவே வெளிவந்துள்ளன. இவ்வாறு வெளி வர பொருளாதாரம் பற்றிய முழு விபரங்களையும் போதியளவு பெற்றுக் கொள்ள முடியாதிருந்தமையே அடிப்படைக் காரணமாகும்.

இலங்கையின் பொருளாதாரத்தின் செயலாற்றம் பற்றிய இந்நூல் க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கு மாத்திரமன்றி பல்கலைக்கழக மாணவர்களையும் கருத்திற் கொண்டே எழுதப்பட்டுள்ளது. பொருளாதாரத்தின் போக்குகள், வளர்ச்சிகள் பற்றிய புள்ளி விபரங்களை என்னால் இயன்றளவு திரட்டித் தந்துள்ளேன். பல்வேறு நூல்களிலிருந்து திரட்டப்பட்ட விபரங்களையும் இதில் அடக்கியுள்ளேன். நாட்டின் உற்பத்திப் போக்குகள், அவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள், வெளிநாட்டு நடவடிக்கைகள் ஆகியன பற்றிய விளக்கங்களை விரிவாகத் தந்துள்ளேன். சிறப்பாக இந் நூல் க. பொ. த. உயர்தர மாணவர்களுக்குக் கூடிய பயனைத் தரலாம்.

எனது கன்னி முயற்சிகளில் இதுவும் ஒன்று. குறையிருப்பின் குணமாகக் கொண்டு ஏற்கும்படி அனைவரையும் வேண்டுகின்றேன்

உரைதனை முடிக்கு முன் என்னுடன் ஒத்துழைத்த சகலருக்கும் நன்றி கூற நான் கடமைப்பட்டவனாகின்றேன். இந்நூல் எழுதுவதற்கு எனக்கு வழிகாட்டியாக அமைந்த நூலாசிரியர்கள் பலர். அவர்கள் அனைவருக்கும் எனது நன்றி உரித்தாகுக. பொருளாதார நூல்களை எழுத என்னைத் தூண்டிவிட்ட பெருமை ஆசிரியர் திரு. க. குணராஜா அவர்களுக்குரியதாகும். அவருக்கு எனது

மனமார்ந்த நன்றிகள். இந்நூலின் கையெழுத்துப் பிரதியை எழுத என்னுடன் ஓயாது உழைத்த செல்வி அநுரதி அருணாசலம் அவர்களுக்கும் நான் என்றும் நன்றிக் கடனுடையவனுவேன். மேலும் எனக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளித்த எனது கங்காவிற்கும், ஆசிரியர் பண்டிதர் நா. இராசையா அவர்களுக்கும், திரு. வி. ஏ. நிமல் பெரேரா அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக. இந்நூலுக்குரிய அட்டையை அழகுற அமைத்துத் தந்த கொழும்பு ஸ்ருடியோ நிறுவனத்திற்கும், அழகுற அச்சிட்டுதவிய விவேகானந்தா அச்சகப் பணியாளர்களுக்கும், வெளியீட்டுப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஸ்ரீ லங்கா புத்தகசாலை நிருவாகிகளுக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

தி. லோகநாதன்

# உள்ளடக்கம்


அத்தியாயம் | பக்கம்

1. **பொருளாதார வரலாறும் அமைப்பும்** 1-10
   இரட்டைப் பொருளாதாரம்
   ஏற்றுமதிப் பொருளாதாரம்

2. **குறைவிருத்தியும் இலங்கையும்** 11-16

3. **தேசிய உற்பத்தியும் வருமானமும்** 17-23
   துறை வகைப்படியான அபிவிருத்திகள்

4. **உழவர் விவசாயம்** 24-54
   பிழைப்பூதிய பொருளாதாரம்
   பொருளாதாரத்தில் உழவர் விவசாயத்தின் பங்கு
   நெல் விவசாயத்துறை எதிர்நோக்கும் பிரச்சனைகள்
   பிரச்சனைக்குரிய தீர்வுகள்

5. **பொருளாதாரத்தில் மகாவலியின் பங்கு** 55-62
   துரிதப்படுத்தலுக்கான நோக்கங்கள்
   பொருளாதார விளைவுகள்

6. **பெருந்தோட்டப் பொருளாதாரம்** 63-82
   உற்பத்தியமைப்பு
   ஏற்றுமதியும், பெருந் தோட்டப் பயிர்களும்
   பிரச்சனைகளும், அரசாங்க நடவடிக்கைகளும்

7. **கைத்தொழில் உற்பத்தி** 83-103
   அமைப்பு, அமைவிடம், உற்பத்திப் போக்கு,
   மூலப் பொருட்களின் பயன்பாடு,
   வலுவினதும், எரிபொருட்களினதும் பயன்பாடு
   முக்கியத்துவம்

8. **தீர்வையற்ற வர்த்தக வலயம்** 104-109

9. வெளிநாட்டு வர்த்தகம் 110-129
அமைப்பு, ஏற்றுமதி, இறக்குமதி
வர்த்தக மாற்று விகிதம், சென்மதி நிலுவை

10. அந்நிய செலாவணியும் பற்றுக் குறையும் 130-138
பற்றுக் குறைக்கான காரணங்கள்
தீர்வுகள்

11. ரூபாவை மிதக்க விடல் 139-142

12. அரசநிதி (வரவு செலவுத் திட்டம்) 143-153
பன்முகப்படுத்தப்பட்ட
வரவு செலவுத் திட்டம்

13. பொருளியலில் உள்நாட்டு இறைவரியின் பங்கு 154-161
வருமானவரி, செல்வவரி,
மொத்த விற்பனவு வரி, கம்பனிவரிகள்
நன்கொடை வரி

14. பணமும் வங்கித் தொழில் அபிவிருத்தியும் 162-176
பண நிரம்பல், விலைகள், வங்கித் தொழில்,
மத்திய வங்கி, வணிக வங்கிகள்,
தேசிய சேமிப்பு வங்கி,
வட்டி வீத மாற்றங்கள்

15. குடித்தொகையும் குறை விருத்தியும் 177-195
பரம்பல், குடியடர்த்தி, வயதமைப்பு
போக்கு, பிரச்சனைகள், தீர்வுகள்

அத்தியாயம் 1

# பொருளாதார வரலாறும் அமைப்பும்

வரலாற்று ரீதியாக இலங்கையின் பொருளாதாரத் தினை நோக்கும் பொழுது தனிப்படுத்தப்பட்ட கிராமியப் பொருளாதரரமாக இருந்து வந்துள்ளமையை அவதானிக் கலாம். பன்னூற்ருண்டு காலமாக ஒருமுனைப்படுத்தப் பட்ட அரசியலமைப்பினூடாகவும் சிறிய நீர்த்தேக்கங்களை ஒன்ருேடொன்று தொடர்புபடுத்தி மேற்கொள்ளப்பட்ட பாரிய நீர்ப்பாசன அமைப்பினூடாகவும் கிராமியப் பொரு ளாதாரத்தின் தார்ப்பரியத்தினைக் காண முடிகின்றது. கி. மு. 5-ம் நூற்ருண்டிலிருந்து கி. பி. முதல் 10 நூற்ருண்டு காலம் வரை இத்தகைய அமைப்புமுறை இத்தீவின் ஒரு பிரதான போக்காக இருந்துள்ளது. நீர்ப்பாசன அமைப் புக்கள் நாடு முழுவதும் என்ற அடிப்படையில் விஸ்தரிக் கப்பட்டிருந்தன; ஆறுகளை மறித்து அணைகள் நீர்த்தேக் கங்கள் கட்டப்பட்டிருந்தன. நீண்ட கால்வாய்களினூடாக நீர்ப்பாசன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன; இப் பொருளாதாரத்தின் அடிப்படை நடவடிக்கையாக நெல் உற்பத்தி அமைந்திருந்தது. அக்கால அமைப்பில் நிலப் பிரபுக்களும் அரச சபைகளும் முக்கியத்துவம் பெற்றிருந் தமையால் நெல் உற்பத்தியின் மேலதிகம் அரச சபைக்கும் நிலப் பிரபுக்களுக்கும் வழங்கப்பட்டன. இம் மேலதிகம் நீர்ப்பாசனக் கால்வாய்களை உருவாக்குவதற்கும் சமய சின்னங்களை எழுப்புவதற்கும் பயன்படுத்தப்பட்டன.

இலங்கையில் நாணயப் புளக்கம் 5-ம் நூற்ருண்டள விலிருந்தே காணப்படுவதாகப் புதை பொருள் ஆய்வுகள் காட்டுகின்றன. எனினும் நீண்ட காலமாகப் பண்டமாற்று நடவடிக்கைகளே நடைமுறையில் இருந்து வந்துள்ளது. உள்நாட்டில் மாத்திரமன்றி வெளிநாட்டு வர்த்தகத்திலும் இத்தகைய பண்டமாற்றங்கள் இருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. பெரும்பாலும் ஏற்றுமதி இறக்குமதிப் பண்ட

மாற்றுக்கள் ஆடம்பரப் பொருட்களாக வருமானம் கூடிய வர்க்கத்தின் நுகர்வுப் பொருட்களாக அமைந்தமை குறிப்புபிடத்தக்கதாம்.

ஐரோப்பியரின் வருகையுடன் இலங்கையின் பொருளாதாரத்தில் பெருமளவு மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. 16-ஆம் நூற்ருண்டளவில் போர்த்துக்கேயரின் வருகையுடன் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் ஒரு குறிப்பிடத்தக்க பரிணுமத்தையடைந்தது. ஆரம்பத்தில் வாசனைத் திரவியமான கறுவாவைச் சேகரிப்பதற்காக இலங்கை வந்த போர்த்துக்கேயர்கள் தமது பொருளாதார பிடியை இறுக்கமாக்குவதற்கு அரசியல், சமூக, கலாச்சார அமைப்புக்களிலும் குறுக்கிட்டனர். போர்த்துக்கேயர்களின் ஊடுருவலே இலங்கையின் திரிபுப் பொருளாதார வளர்ச்சியின் ஆரம்பமாகும். இதன் விளைவாக இலங்கையின் பொருளாதாரம் சுயதேவைப் பூர்த்தியினின்றும் திசை திருப்பப்பட்டு ஏற்றுமதி இறக்குமதி பொருளாதாரமாக மாறத் தொடங்கியது. 1796-ம் ஆண்டு வரை டச்சுக்காரர்களது ஆட்சியிலும் இலங்கையின் பொருளாதாரம் ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்டு செயற்படலாயிற்று. 1796-ஆம் ஆண்டு தொடக்கம் பிரித்தானியர்கள் இலங்கையில் தமது ஆதிக்கத்தைச் செலுத்துவதில் வெற்றி கண்டனர். பிரித்தானியரின் ஆட்சிக்காலம் இலங்கையின் பொருளாதாரம் மேலும் திரிபடையக் காரணமாயிற்று.

1840-ஆம் ஆண்டிலிருந்து பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் வளர்ச்சியானது எமது பொருளாதாரத்தில் பல புதிய மாற்றங்களை ஏற்படுத்தின. பெருந்தோட்ட முறையினுல் புகுத்தப்பட்ட பொருளாதார அடிப்படை மாற்றங்கள், விளைவுகள் இன்றும் இலங்கையின் பொருளாதாரத்தில் ஒரு முக்கிய இடத்தினை வகித்துக் கொண்டிருப்பதனைக் காணலாம். உணவுற்பத்திக்கு எதிரிடையான பெருந்தோட்ட விவசாயமுறை பெருந்தோட்டங்களையும், பயிற்றப்பட்ட தொழிலாளர்களையும், தொழில் ஆலைகளையும், அன்னிய சந்தைக்கான உற்பத்தியையும் கொண்டி

ருந்தன. ஆரம்பத்தில் சிறியளவு அன்னிய மூலதனத்தினைக் கொண்டிருந்த இத் தொழில் காலப்போக்கில் பெருந் தொகை மூலதனத்தினைக் கொண்டதாக மாறிற்று. இதன் விளைவாக இலங்கையின் பொருளாதாரம் முற்றுகவே பெருந் தோட்டங்களைச் சுற்றி புனரமைப்புப் பெற்றது. 1834-ஆம் ஆண்டு தொடக்கம் 1842-ஆம் ஆண்டு வரை இலங்கையின் பெருந்தோட்டப் பயிரான கோப்பிப் பயிர்ச் செய்கை குறிப்பிடத்தக்க விஸ்தரிப்பைக் கண்டது. இலங் கையின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கினை வகித்த கோப்பியின் விலை 1846-ஆம் ஆண்டளவில் உலகப் பொரு ளாதார மந்தநிலை காரணமாக பெருமளவு வீழ்ச்சியடைந் தது. அத்துடன் நோயினுல் கோப்பிப்பயிர் 1869-ஆம் ஆண்டு அழியத் தொடங்கியது. 1886-ஆம் ஆண்டளவில் இது முற்றுகவே சரிந்துவிட்டது. கோப்பியின் இடத்தினைப் பின்னர் தேயிலையும், இறப்பரும், தெங்குப் பொருட்களும் நிரப்பின. எனவே 19-ஆம் நூற்றுண்டின் பிற்பகுதியில் இலங்கையின் பொருளாதாரம் செம்மையான பெருந் தோட்டப் பொருளாதாரமாக மாற்றமடைந்தது.

இலங்கையின் பொருளாதார வரலாற்றைக் கொண்டு நோக்கும் பொழுது பொருளியல் அமைப்பில் இரு முக்கிய தன்மையினை அவதானிக்க முடிகிறது. இதன் காரணமாக இலங்கையின் பொருளாதார அமைப்பினை விபரிப்பதற்கு பின்வரும் சுருக்கமான சொற்றெடர்கள் பல்வேறு சந்தர்ப் பங்களில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன.

1. இரட்டைப் பொருளாதாரம்
2. ஏற்றுமதிப் பொருளாதாரம்

மேலே குறிப்பிட்ட சொற்றெடர்களிலிருந்து இலங் கையின் பொருளாதார அமைப்பினை வரையறை செய் யலாம்

**இரட்டைப் பொருளாதாரம்:—**

இரட்டைப் பொருளாதார அமைப்பு என்னும்பொழுது ஒரு குறிப்பிட்ட நாட்டின் பொருளாதார அமைப்பி

னுள் வேறுபட்ட மட்டங்களின் வளர்ச்சி, அபிவிருத்தி என்பனவற்றை அடைந்த இரு துறைகள் ஒன்ருக இணைந்திருக்கும் தன்மையைக் குறிக்கும். 19-ஆம் நூற்ருண்டின் பிற்பகுதியில் பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் வளர்ச்சி நாட்டின் பொருளாதாரம் இவ்வாருன இரட்டைத் தன்மைகளைக் கொண்டதாக மாற வழிவகுத்தது. விவசாயத்தையே மூலாதாரமாகக் கொண்ட இலங்கையின் பொருளாதாரத்தில் இரண்டு முக்கிய பிரிவுகளை அவதானிக்கலாம்.

1. நவீனதுறை என்றழைக்கப்பட்ட அந்நிய ஆதிக்கப் பொருளாதாரம் (பெருந்தோட்டப் பொருளாதாரம்)
2. பாரம்பரியமிக்க கிராமியப் பொருளாதாரம்

இன்றைய இலங்கையின் தேசிய உற்பத்தியில் விவசாயம் தவிர்ந்த கைத்தொழில் சேவைகள் துறைகள் வளர்ச்சியடைந்து காணப்படும் நிலையிலும் பொருளாதாரத்தினை நிர்ணயிப்பதில் விவசாயமே முக்கிய பங்கினை வகிக்கின்றதெனலாம். விவசாயத்தில் வெளி உலகத்தோடு தொடர்பினை வைத்துக் கொண்ட பெருந்தோட்டப் பொருளாதாரம் நவீன முறையில் வளர்த்தெடுக்கப்பட்ட ஓர் துறையாகக் காணப்படுகின்றது. நாட்டின் வர்த்தகத்தின் பெரும்பகுதி இவ்வாருன பெருந்தோட்டத் துறையிலேயே பெருமளவு தங்கியிருந்தது. அவற்றுடன் உருவாக்கப்பட்ட நகரங்களும் பட்டிணங்களும் அவற்றின் அடிப்படைத் தேவைகளுக்கு ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்திலேயே அதிகளவு தங்கியிருந்தன. இவ் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் நவீன முறையில் வளர்த்தெடுக்கப்பட்ட பெருந்தோட்டப் பயிர்களிலேயே தங்கியிருந்தது. இதற்கிணங்க அரசாங்கத்தின் தொடர்புகளும் நடவடிக்கைகளும் இத்துறையினூடாகவே அமைந்திருந்தன.

இவ்வாறு நவீன முறையில் வளர்த்தெடுக்கப்பட்ட துறை ஒருபக்கமமைய குடித்தொகையில் 65 வீதத்தினரையும் ஊழியப்படையில் 50 சத வீதத்தினரையும் கொண்ட

பாரம்பரிய விவசாயத்துறை மறுபக்கம் காணப்பட்டது. பெரும் தொகைத் தொழிலாளர்களை உள்ளடக்கியதாக அமைந்த நிலையிலும் இதன் வளர்ச்சி பிழைப்பூதிய நிலை யிலேயே காணப்பட்டது. இப்பாராம்பரிய துறை வெளி உலகுடன் எத்தகைய தொடர்பினையும் வைத்துக் கொண் டிருக்கவில்லை. எனவே கிராமிய விவசாயத்துறை வளர்த் தெடுக்கப்படாத துறையாக அமைந்துள்ளதெனலாம். இவ் இரு தன்மைகளையும் ஒப்பிட்டு நோக்கியே இலங்கை யின் பொருளாதாரம் இரட்டைப் பொருளாதாரம் என வரையறை செய்யப்படுகின்றது.

நவீனதுறை என அழைக்கப்படும் பெருந்தோட்டப் பொருளாதரத்துறை அந்நியரால் வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு துறையாகும். அந்நிய ஆதிக்கம் பொருளாதாரத் துறையின் நிர்மாணமும் அதனது தொடர்ச்சியான பரா மரிப்பும் அத்துறையோடு வளர்ந்த உள்ளூர் சமூக பொரு ளாதார அமைப்புக்களாலும் உதவப் பெற்றுள்ளன. இதற்கிணங்க சமூக கலாச்சாரக் காரணிகளும் மாற்ற மடைந்தன. பெருந்தோட்டத் துறையைச் சுற்றி வளர்ந்த சமூக முறைமை தானே தோன்றியதோடு அந்நிலையை ஏற்றுக் கொள்ளக் கூடிய கலாச்சார அம்சங்களும் வளர்ச்சியடைந்தன. இக்காரணிகள் குறிப்பிட்ட ஒரு துறை நன்கு வளர்த்தெடுக்கப்பட வழிவகுத்தது. அதே சமயம் இலாபகரமற்ற கிராமிய விவசாயம் புறக்கணிக் கப்பட்டது. இப்புறக்கணிப்பு அத்துறையின் வளர்ச்சி யின்மைக்கும் அத்துறையில் தங்கியிருப்போரின் பின்தங் கிய நிலைக்கும் காரணமாயிற்று. இவ்வாறான ஒரு சூழ்நிலை இலங்கையில் நீண்ட காலமாக நிலவி வந் தமையே இலங்கையின் பொருளாதாரம் இரட்டைப் பொருளாதாரம் என அழைக்கப்படக் காரணமாகும்.

நவீன இலங்கையின் பொருளாதார அம்சங்களைக் கொண்டு நோக்கும்பொழுது பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை, சுரங்கத் தொழில், கட்டிட ஆக்கம், போக்கு

வரத்து, மொத்த சில்லறை வர்த்தகங்கள், வங்கித் தொழில், பொது நிர்வாகம் போன்றவை நவீன முறையில் வளர்த்தெடுக்கப்பட்ட துறைகளாகவும் பெருமளவு சந்தை நடவடிக்கைகளை உள்ளடக்கிய துறைகளாகவும் காணப்படுகின்றன. தேசிய உற்பத்தியில் பெருந்தோட்டப் பயிர்கள் 1978-ம் ஆண்டு புள்ளிவிபரப்படி 10·6 வீதத்தினைக் கொண்டுள்ளன. கைத்தொழில் உற்பத்தி 20·1 வீதமாகும். இக் கைத்தொழில் துறை பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைகளை அடிப்படையாகக் கொண்டே பெருமளவு உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றிற்கு மாறாக தேசிய உற்பத்தியில் 17.8 வீதத்தைக் கொண்டுள்ள கிராமிய விவசாய உற்பத்தியான நெல்லும் ஏனைய உபஉணவு உற்பத்தியும் வளர்த்தெடுக்கப்படாத ஒரு துறையாகக் காணப்படுகின்றது. தொழில்நுட்பத்திலும் வளர்ச்சி வேகத்திலும் பின்தங்கிய துறையாக இக் கிராமிய விவசாயம் அமைந்துள்ளது. உற்பத்தித் திறன் குறைந்த கிராமிய விவசாயத் துறையும் நவீன முறையில் வளர்த்தெடுக்கப்பட்ட பெருந்தோட்ட விவசாயம், கைத்தொழில் போன்றவையும் இலங்கையின் பொருளாதார அமைப்பில் இரு வேறுபட்ட துறைகள் ஒன்றாக இணைந்திருக்கும் தன்மையைக் காட்டுகிறது. இவ்வாறான தன்மை இலங்கையின் பொருளாதாரம் இரட்டைப் பொருளாதாரம் என விபரிப்பதற்குக் காரணமாகின்றது.

இரட்டைப் பொருளாதாரம் என வரையறை செய்யினும் முற்றாக இரட்டைத் தன்மைகளை இலங்கையின் பொருளாதாரத்தில் காண்பதரிது. சுதந்திரம் அடைந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளுள் இலங்கையின் பொருளாதாரத்தில் இரட்டைப் போக்கு நலிவடையக் காரணமாயிற்று. காலத்திற்குக் காலம் இறக்குமதிகள் பெருமளவு குறைக்கப்பட்டுத் தனியார் துறையிலும் அரசாங்கத் துறையிலும் உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

1950-ம் ஆண்டின் பிற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில் மயப்படுத்தும் முயற்சிகள் இலங்கையில் பாரிய தொழிற்சாலைகளின் தோற்றத்திற்கும் சிறு கைத் தொழிலுக்கும் வழிவகுத்தன. பாரம்பரியம் மிக்க கிரா மிய விவசாயத் துறையை நவீன மயப்படுத்த பல நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அரசாங்கங்களின் பல்வேறு நடவடிக்கைகள் கிராமியப் பொருளாதாரம் வளர்த்தெடுக்கப்படக் காரணமாயிற்று. எனவே யதார்த்த இலங்கையின் பொருளாதாரத்தினை இரட்டைப் பொரு ளாரம் என வரையறை செய்யினும் அது முற்றிலும் பொருத்தமானதொன்றல்ல.

## ஏற்றுமதிப் பொருளாதாரம்:—

19-ம் நூற்றுண்டில் வளர்ச்சியடையத் தொடங்கிய பெருந்தோட்டங்கள் உள்நாட்டு விவசாயத்தில் ஏற்ப டுத்திய தாக்கம் பாரதூரமானதாகும். இதுவரை கால மும் பிழைப்பூதிய விவசாயத் துறையில் வேரூன்றியிருந்த பொருளாதாரம் படிப்படியாக நவீன ஏற்றுமதிப் பொருளாதரமாக உருமாறத் தொடங்கியது. ஐரோப் பியரின் வருகையினுல் பெருந்தோட்டங்கள் ஆரம்பிக் கப் பட்டமையும் அவை ஏற்றுமதி கருதி செயற்பட்ட மையும் ஏனைய துறைகளில் முக்கியத்துவம் குறையக் காரணமாயிற்று. இதன் காரணமாக இலங்கையின் பொருளாதாரத்தின் பெரும்பகுதி ஏற்றுமதி இறக்கு மதியை மையமாகக் கொண்டே செயற்படத் தொடங் கின. இதனடிப்படையில் இலங்கையின் பொருளாதா ரத்தினை ஏற்றுமதிப் பொருளாதாரம் என வரையறை செய்யலாம்.

இலங்கையின் பெரும்பாலான தேவைகள் இறக்கு மதி மூலமே பூர்த்தி செய்யப்படுகின்றன. அத்தியாவ சியப் பண்டங்களான அரிசி, சீனி, மா, புடவை போன்ற நுகர்வுப் பொருட்கள் மாத்திரமன்றி கைத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூலதனப் பொருட்

களும் நடுத்தரப் பொருட்களும் இறக்குமதி மூலமே பெறப் படுகின்றன. இப்பொருட்களை இறக்குமதி செய்ய ஏற்று மதி வருமானமே மூலகாரணியாக அமைந்துள்ளது. எனவே நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகள், கைத்தொழில் வளர்ச்சி, வேலை வாய்ப்புக்கள், வாழ்க்கைத்தரம் ஆகிய அனைத்தும் ஏற்றுமதி வருமானத்திலேயே தங்கியுள்ளது.

இலங்கையின் ஏற்றுமதித் துறையினை மரபு ரீதியான ஏற்றுமதிகள், மரபு ரீதியற்ற ஏற்றுமதிகள் என இரண்டு வகையாக வகுக்கலாம். பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, இறப்பர், தெங்குப்பொருட்கள் மரபு ரீதியான ஏற்றுமதியில் அடங்கும். சிறுவேளாண்மை உற்பத்திகள், இரத்தினக் கற்கள், சிறுகைத்தொழிற் பொருட்கள், மரபு ரீதியற்ற ஏற்றுமதியில் அடங்கும். அட்டவணை *1* கடந்த மூன்று ஆண்டு காலப் பகுதிகளில் ஏற்றுமதிகளின் உள் ளடக்கத்தைக் காட்டுகின்றது.

*அட்டவணை* I

ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் 1976 - 1978

| வகை | பெறுமதி 10 இலட்சம் ரூபாய்களில் | | | மொத்த ஏற்றுமதி களின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1976 | 1977 | 1978 | 1976 | 1977 | 1978 |
| தேயிலை | 2100 | 3503 | 6401 | 44 | 53 | 48 |
| இறப்பர் | 890 | 931 | 2021 | 18 | 14 | 15 |
| தெங்கு | 382 | 335 | 972 | 8 | 5 | 8 |
| சிறுவேளாண்மை உற்பத்திகள் | 231 | 378 | 658 | 5 | 6 | 5 |
| இரத்தினக்கற்கள் | 261 | 298 | 531 | 5 | 4 | 4 |
| சிறுகைத்தொழில் ஏற்றுமதிகள் | 782 | 919 | 1891 | 16 | 14 | 14 |
| ஏனைய ஏற்றுமதிகள் | 170 | 275 | 733 | 4 | 4 | 6 |
| மொத்த ஏற்றுமதிகள் | 4816 | 6639 | 13207 | 100 | 100 | 100 |

ஆதாரம் : *மத்தியவங்கியின் ஆண்டறிக்கை* 1978.

*மரபு ரீதியான பொருட்களே நீண்ட காலமாக ஏற்று மதி வருமானத்தில் பெரும்பங்கினை வகித்து வந்துள்ளன. 1972–ஆம் ஆண்டு ஏற்றுமதி வருமானத்தில் 88 சத வீதம்*

மரபுரீதியான பெருந்தோட்டப் பயிர்களிலிருந்து பெறப் பட்டவையாகும். ஆனல் சமீப காலங்களில் ஏற்றுமதித் துறையில் மரபுரீதியற்ற பொருட்களின் முக்கியத்துவம் அதிகரித்து வந்தமை குறிப்பிடத் தக்கதோர் மாற்றமா கும். 1976-ஆம் ஆண்டின் பின்னர் ஏற்றுமதி வருமா னத்தில் ஏறத்தாழ 30 சதவீதம் மரபுரீதியற்ற பொருட் களின் ஏற்றுமதியால் பெறப்பட்டவையாகும்.

இலங்கையின் தேசிய வருமானத்தில் இவ் ஏற்றுமதி வருமானம் ஏறத்தாழ 15 சதவீதமாகக் காணப்படுகின்றது. எனவே தேசிய உற்பத்தியை நிர்ணயிப்பதில் ஏற்றுமதித் துறையும் முக்கிய பங்கினை வகிக்கின்றது. எமது தேசிய வரு மானம் அடிக்கடி தளம்புகின்றமைக்கு ஏற்றுமதித் துறையின் உறுதியின்மை காரணமாகக் காட்டப்படுகின் றது. ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகள் அடிக்கடி தளம் புகின்றமையும் நீண்ட காலப்போக்கில் அவை வீழ்ச்சி யடைந்து வருகின்றமையும் தேசிய வருமானத் தளம்ப லுக்கு ஒரு காரணமாகும். பிரதான ஏற்றுமதிப் பண்ட மான தேயிலையின் விலைகள் 1977-ம் ஆண்டிலும் பார்க்க 1978-ஆம் ஆண்டு 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இறப்பர் ஏற்றுமதிகளின் பெறுமதி 14 சதவீதத்தால் அதிகரித்தது. தெங்கின் ஏற்றுமதி விலைகள் காய் ஒன் றிற்கு ஏறக்குறைய 18 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. எனவே ஏற்றுமதித் துறையின் உறுதியின்மை இலங்கை யின் தேசிய வருமான உறுதியின்மைக்குக் காரணமாக வுள்ளது. இவை அனைத்தையும் ஒப்பிட்டு நோக்கும் பொழுது இலங்கையின் பொருளாதாரத்தினை ஏற்றுமதிப் பொருளாதாரம் எனக் கூறிக் கொள்ளலாம்.

**இதுவரை கற்றவை:—**

(1) பொருளியல் நடவடிக்கைகளில் கி. மு. 5-ஆம் நூற்றுண்டு தொடக்கம் கி. பி. 10-ஆம் நூற்றுண்டு வரை கிராமிய ஆதிக் கம் காணப்பட்டமை.

(2) இக்காலப் பகுதியில் நாணயப் புளக்கம் காணப்படினும் பண்ட மாற்று நடவடிக்கைகளே முக்கியத்துவம் பெற்றிருந்தன.

(3) 16-ஆம் நூற்றூண்டளவில் ஐரோப்பியரின் வருகை திரிபுப் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்தமை.

(4) பெருந்தோட்டப் பயிர்களின் தோற்றமும் கிராமிய பொரு ளாதாரம் பிழைப்பூதிய நிலையை அடைந்தமையும் பொரு ளாதார நடவடிக்கைகள் ஏற்றுமதியை மையமாகக் கொண்டு செயற்பட்டமையும்.

இரட்டைப் பொருளாதாரம்:—

(1) நவீனமயமாக்கப்பட்ட ஏற்றுமதித் துறையும் பிழைப்பூதிய கிராமியத் துறையும்

(2) வர்த்தகம், கைத்தொழில், போக்குவரத்து, பெருந்தோட்டங் களை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியடைந்தமை.

(3) கிராமிய உணவு உற்பத்தித் துறை புறக்கணிக்கப்பட்டமை யும் உணவுப் பொருட்களின் இறக்குமதியும்.

(4) சுதந்திரம் அடைந்த பின்னர் இரட்டைப் பொருளாதாரம் நலிவுற்றமையும் பொருளாதாரம் பன்முகப்படுத்தப்பட்டமை யும்.

ஏற்றுமதிப் பொருளாதாரம்:—

(1) பொருளாதார நடவடிக்கைகள் ஏற்றுமதியினை மையமாகக் கொண்டு செயற்பட்டமை.

(2) தேயிலை, இறப்பர், தெங்குச் செய்கையும் அவை ஏற்றுமதி யில் வகித்த பங்கும்.

(3) மரபுரீதியற்ற பொருட்களின் ஏற்றுமதி.

(4) தேசிய உற்பத்தியும் ஏற்றுமதியும்.

அத்தியாயம் 2

# குறைவிருத்தியும் இலங்கையும்

உலக நாடுகளை அபிவிருத்தியடைந்த நாடுகள் எனவும் குறைவிருத்திப் போக்கினைக் கொண்ட நாடுகள் எனவும் வரையறை செய்யலாம். மூன்றுவது மண்டல நாடுகளென அழைக்கப்படும் கிழக்காசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் குறைவிருத்தி நாடுகள் அல்லது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் என வகுக்கப்பட்டுள்ளன. இலங்கையும் மூன்றுவது மண்டல நாடுகளில் ஒன்றுகும், குறைவிருத்தி என்றல் என்ன என்பதற்கு இதுவரை சரியானதொரு வரைவிலக்கணம் வகுக்கப்படவில்லை, ஐக்கியநாடுகள் ஸ்தாபன நிபுணர்களின் கருத்துப்படி ஒரு நாடு முழுமையான உற்பத்தியில் உண்மையான உற்பத்தியை அடையாமையும் அவ்வாறு அடைவதற்குப் பயன்படுத்தப்படும் வழிமுறைகள் மிகவும் பின்தங்கியுள்ளமை கொண்டும் அந்நாட்டின் பொருளாதாரத்தைக் குறைவிருத்திப் பொருளாதாரம் என வரையறை செய்யலாம்.

பெரும்பாலான பொருளாதார ஆசிரியர்கள் தலாவருமான வேறுபாட்டினை அடிப்படையாகக் கொண்டே நாடுகளை அபிவிருத்தியடைந்த நாடுகளெனவும் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளெனவும் வரையறை செய்கின்றனர். இலங்கையின் தலாவருமானம் அபிவிருத்தியடைந்த நாடுகளின் தலாவருமானத்தோடு ஒப்பிடும்பொழுது மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ளது என்ற காரணத்தினுலேயே எமது நாட்டைக் குறைவிருத்திப் பொருளாதாரப் போக்கினைக் கொண்ட நாடென வரையறை செய்யலாம் இலங்கையின் தலாவருமானம் 1978-ஆம் ஆண்டு ரூபா 917 ஆகும். அபிவிருத்தியடைந்த நாடுகளின் தலாவருமானம் இலங்கையின் தலாவருமானத்திலும் பார்க்க 35 மடங்கு கூடுதலாகக் காணப்படுகின்றது. இத்தலா

வருமான வேறுபாட்டினைக் கொண்டு நோக்கினால் இலங்கையின் தரம் ஏனைய எல்லாப் பொருளியற் கூறுகளின் வளர்ச்சி வேகத்தையும் தெளிவுபடுத்தும்.

(1) இந்நாட்டின் உற்பத்தித் திறன்

(2) உற்பத்தியமைப்பு (விவசாயம், கைத்தொழில், சேவைகள்)

(3) தேசிய வருமான ஊற்றுக்கள்

(4) வேலையில்லாத் திண்டாட்டம்

(5) சனத்தொகை வளர்ச்சி

6) வருமான மறுபங்கீடு

(7) மூலவளங்களின் உச்சப் பயன்பாடு பற்றிய தன்மை

(8) வாழ்க்கைத்தர அமைப்பும் மெய்வருமான நிலையும்

மேற்கூறிய பொருளியல் கூறுகளின் நிலவரம் தலா வருமானத்தினூடாக இலங்கையின் பொருளியல் தன்மையை எடுத்துக் காட்டுகின்றது. எமது நாட்டு உற்பத்தித் திறன் சிறந்த தொழில் நுட்ப சாதனங்களின் இணைப்புக்கள் இன்மையால் உழைப்புச் சக்திக்குக் குறைவாகவே காணப்படுகின்றது. நீர்வளங்களும், நிலவளங்களும், மனித சக்தியும் போதியளவு இருந்தும்கூட பின்தங்கிய உற்பத்தித் திறன், இவற்றின் பயன்பாடுகள் முற்றாகப் பெறப்படத் தடையாக அமைகின்றன. இது இலங்கையின் பொருளாதாரம் குறைவிருத்திப் பொருளாதாரம் என வரையறை செய்யக் காரணமாக அமைகின்றது.

பொருளாதார உற்பத்தியமைப்பினை விவசாயம், கைத்தொழில், சேவைகள், துறைகள் எனப் பாகுபடுத்தலாம். விவசாயம், பிழைப்புமட்ட விவசாயமாகவும், ஏற்றுமதி விவசாயமாகவும் பிரிந்து நிற்பதோடு வளர்ச்சியடையாத கைத்தொழில் சேவைகள் துறையையும் கொண்டதாக உற்பத்தியமைப்பு காணப்படுகின்றது. மொத்தத் தேசிய உற்பத்தியில் உற்பத்தித்திறன் குறைந்த

துறைகளான விவசாயமும் சேவைகளும் ஏறத்தாழ 80 சதவீதத்தினைக் கொண்டுள்ளமையை அட்டவணை 2 காட்டுகின்றது.

அட்டவணை 2

நிலையான [1959] காரணிச் செலவு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி [சதவீதம்]

| ஆண்டுகள் | 1959 | 1974 | 1976 | 1978 |
|---|---|---|---|---|
| விவசாயம் | 39.1 | 32.9 | 31.0 | 30.7 |
| கைத்தொழில் | 16.9 | 19.9 | 19.6 | 20.6 |
| சேவைகள் | 44.0 | 47.2 | 49.4 | 48.7 |
| மொத்தம் | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

ஆதாரம் : மத்தியவங்கியின் ஆண்டறிக்கைகள்.

விவசாயம் உறுதியற்ற காலநிலையில் தங்கியுள்ளமை பொருளாதார வளர்ச்சியின் உறுதியின்மைக்கு அடிப்படைக் காரணமாகும். கிராமிய விவசாயம் பல ஆண்டு காலமாக உலக சந்தையின் விலைக் கொள்கையுடன் வளர்த்தெடுக்கப்படாமையால் தற்பொழுது உயர்ந்து செல்லும் விலைக் கொள்கை பெருமளவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதெனலாம். இதன் காரணமாக உள்நாட்டுக் கேள்விக்கேற்ப நிரம்பலை வழங்க முடியாதுள்ளது. இறக்குமதிச் செலவுகளின் அதிகரிப்பிற்கும் பாதகமான வர்த்தக நிலுவைக்கும் இது காரணமாகும். 1978 ஆம் ஆண்டு ஏற்றுமதி வருமானம் 13,206 மில்லியன் ரூபாய்களாகும். இறக்குமதிக் கொடுப்பனவுகள் 14,663 மில்லியன் ரூபாய்களாகும். வர்த்தக நிலுவைப் பற்றுக்குறை ரூபா 1457 மில்லியனாகும். இலங்கையின் ஏற்றுமதித் துறை உற்பத்தித் திறனுடையதாக இருந்தாலும் சகட ஒட்ட முதலாளித்துவ வருமானங்களில் தங்கியிருப்பதால் நிலையற்ற வருமானத்தையும் தாழ்ந்து போகும் வருமானத்தையும் கொண்டுள்ளது. தொழில்நுட்பம் கூடிய கைத்தொழிற்றுறை தேசிய உற்பத்தியில் மிகக் குறைந்த பங்கினையே வகிக்கின்றது. அட்டவணை 2இல் 1959-ஆம்

ஆண்டு கைத்தொழிலின் பங்கு 16.9 சதவீதமாகவும் 1978-ஆம் ஆண்டு 20.6 சதவீதமாகவும் காணப் படுகின்றது. எனவே உற்பத்தியமைப்பின் பின்தங்கிய நிலை உண்மையான உற்பத்தியில் முழுமையான உற்பத் தியை அடையாமையைப் பிரதிபலிக்கின்றது.

இலங்கையின் குடித்தொகையில் 44 சதவீதம் 18 வய திற்கும் 60 வயதிற்கும் இடைப்பட்ட தொழில்புரிவோ ராவர். இவ் உழைக்கும் வர்க்கத்தில் 9.2 வீதம் வேலை யற்றோராகக் காணப்படுகின்றனர். எனவே சிறு பகுதி யினரின் உழைப்பில் உழைக்காத பெரும் பகுதியினர் தங்கியுள்ளமை சேமிப்பு மட்டத்தைக் குறைப்பதுடன் முதலீடுகளுக்கும் தடையாக அமைகின்றது. வேலைவாய்ப் பினை வழங்கக் கூடியவகையில் எமது பொருளாதாரம் அபிவிருத்தியடையாமை அதன் வளர்ச்சியின்மையைக் குறிக்கின்றது. இவ்வாறான பிரச்சனைக்கு பெருகிச் செல் லும் குடித்தொகையும் ஒரு காரணமாகக் காட்டப்படு கின்றது. இன்று மணித்தியாலத்திற்கு 31 குழந்தைகள் பிறக்கின்றன. நாளொன்றுக்குக் குடித்தொகை 700-ஆல் அதிகரிக்கின்றது. இவ்வாறு பெருகும் குடித்தொகை துரித பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக அமை கின்றது. அரைகுறை வேலையின்மையை உருவாக்கத் தங்கியிருப்போர் தொகையை அதிகரிக்கச் செய்து குடும்ப நிலவரங்களின் தரத்தினை வீழ்ச்சியடையச் செய்கின்றது.

தென்கிழக்காசியாவில் தரமான வருமான மறுபங்கீடு டைய நாடாக இலங்கை காணப்படினும் உற்பத்தி வளர்ச்சி வேகம் இன்மையால் வருமான மறுபங்கீடு தேக்க நிலையை அடைந்துள்ளது.

அட்டவணை 3

**தலாவருமான மாற்றங்கள் (1959 — 1978)**

| காலம் | தலாவருமானம் (ரூபா) | வளர்ச்சிவீதம் |
|---|---|---|
| 1959 | 612 | — |
| 1965 | 676 | — |
| 1970 | 774 | 2.0 |
| 1975 | 822 | 1.0 |
| 1978 | 917 | 6.4 |

**ஆதாரம் :** மத்தியவங்கி ஆண்டறிக்கை

அட்டவணை 3-இல் தலாவருமானம் 1959–ம் ஆண்டு ரூபா 612 லிருந்து 1979 ம் ஆண்டு 917 ரூபாவாக அதிகரித்துள்ளது. கடந்த இருபது வருடங்களில் தலாவருமான அதிகரிப்பு சராசரி 2.5 சத வீதமாகக் காணப்படுகின்றது. உற்பத்தி வளர்ச்சி பற்ருமையும் தங்கியிருப்போர் தொகை அதிகரித்துச் சென்றமையுமே வருமான உயர்வின்மைக்குரிய காரணங்களாகும்.

சாதன உபயோகத்திற்கு வேண்டிய நிதி பற்ருமையும் தொழில்நுட்ப வசதியின்மையும் இன்னமும் எமது பூரண சாதன உபயோகத்திற்குத் தடையாகவுள்ளது. 1965–70 காலப் பகுதிகளில் தயாரிக்கப்பட்ட மாபெரும் திட்டமான மகாவலிகங்கைத் திட்டம் இன்னமும் பூர்த்தி செய்யப்படாமை இதனை எடுத்துக் காட்டுகின்றது. இவையனைத்தும் மக்களின் மெய்வருமானம் உயர்வடையத் தடையாக அமைந்தன. வாழ்க்கைத்தரம் மிகவும் பின்தங்கிக் காணப்பட மெய்வருமான உயர்வின்மையே அடிப்படைக் காரணமாகும். இவையனைத்தும் நேரடியாகத் தலாவருமானத்தைத் தாக்கி அதன் மூலம் இலங்கையின் குறைவிருத்தியினைத் தெளிவுபடுத்துகின்றது.

**இதுவரை கற்றவை:—**

(1) தலாவருமானத்தினை அடிப்படையாகக் கொண்டே நாடுகளின் பொருளாதாரத் தரங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன.

(2) அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் பார்க்க இலங்கையின் தலாவருமானம் மிகக் குறைவாகக் காணப்படுகின்றமையே குறைவிருத்திப் பொருளாதாரமென வரையறை செய்யக் காரணமாயுள்ளது.

(3) நாட்டின் உற்பத்தித் திறன் தொழில்நுட்ப சாதனங்களின் இணைப்புக்கள் இன்மையால் பின்தங்கியுள்ளது.

(4) உற்பத்தித்திறன் குறைந்த துறைகளே தேசிய உற்பத்தியில் முக்கிய பங்கினைப் பெறுகின்றன.

(5) வேலையில்லாத் திண்டாட்டத்தின் அளவும் பெருகும் குடித் தொகையின் வேகமும் பொருளாதார முதலீடுகளுக்குத் தடையாக அமைந்துள்ளன.

(6) மூலதனமின்மை, தொழில்நுட்ப வசதி பற்றுமை, உற்பத்தி வளங்களின் முழுமையான உற்பத்தியைப் பெறமுடியாதிருத்தல்.

(7) மெய்வருமான உயர்வின்மையும் பின்தங்கிய வாழ்க்கைத் தரமும்.

# தேசிய உற்பத்தியும் வருமானமும்

குறிக்கப்பட்ட காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் இறுதிப் பண்டங்களினதும் சேவைகளினதும் பணரீதியான மொத்தப் பெறுமதியே ஒரு நாட்டின் தேசிய வருமானமாகும். உற்பத்தியாகும் பண்டங்களும் சேவைகளும் பல்வேறு வகையான பௌதீக அளவுகளைக் கொண்டிருப்பதால் தேசிய வருமானக் கணிப்பீடுகள் பணத்தினூடாக மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையில் 1947-ஆம் ஆண்டின் பின்னரே தேசிய வருமானம் பற்றிய கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டு வகையில் இக் கணிப்பீடுகள் அமைந்துள்ளது.

(1) காரணிச் செலவு விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி
(2) சந்தை விலைகளில் மொத்தத் தேசிய உற்பத்தி.

இவ்வாறு இரு வழிமுறைகளிலும் கணிப்பிடும் பொழுது நடைமுறை விலைகளிலும் நிலையான விலைகளிலும் இக் கணிப்பீடுகள் அமைகின்றன. தேசிய உற்பத்தியிலும், தலா உற்பத்தியிலும் 1958-ல் இருந்து 1978 ஆம் ஆண்டு வரை ஏற்பட்டுள்ள மாற்றங்களை அட்டவணை 4 காட்டுகின்றது.

கடந்த இரு தசாப்தங்களில் தேசிய உற்பத்தியின் வளர்ச்சி வீதம் குறிப்பிட்ட ஆண்டுகளைத் தவிர ஏனைய காலப் பகுதிகளில் மிகவும் பின்தங்கியே காணப்படுகின்றது. 1960, 1964, 1967, 1968, 1978-ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் சராசரி 5 சத வீதத்திற்கு மேல் உற்பத்தி வளர்ச்சி காணப்படுகின்றது. ஏனைய காலப்பகுதிகளில் வளர்ச்சி வீதம் குறைவாகவே அமைந்துள்ளது. தேசிய வருமான வளர்ச்சி வீதத்திலும் பார்க்க தலா வருமான வளர்ச்சி வீதம் குறைவாகக் காணப்படுகின்றது. 1968, 1978-ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தலைக்குரிய மொத்த தேசிய உற்பத்தி 5 சத வீதத்திற்கு மேற்பட்டதாக அமைந்

அட்டவணை 4

## தேசிய உற்பத்தி, வருமானம், செலவு, குடித்தொகை 1959 – 1978

| ஆண்டு | நிலையான (1959) காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உற்பத்தி | | உண்மையான தேசிய வருமானம் | | நடு ஆண்டின் குடித்தொகை | | தலைக்குரிய மொ. தே. உ. | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப. இ. ரு | வளர்ச்சி வீதம் % | தொகை ப. இ. ரு. | வளர்ச்சி வீதம் % | தொகை 1000 | வளர்ச்சி வீதம் % | தொகை ரூபாய்கள் | வளர்ச்சி வீதம் |
| 1959 | 5,893 | — | 5,893 | — | 9,625 | — | 612 | — |
| 1960 | 6,289 | 6.7 | 6,278 | 6.5 | 9,896 | 2.8 | 635 | 3.8 |
| 1961 | 6,425 | 2.2 | 6,274 | –0.1 | 10,168 | 2.7 | 632 | -0.5 |
| 1962 | 6,710 | 4.4 | 6,628 | 5.6 | 10,443 | 2.7 | 643 | 1.7 |
| 1963 | 6,900 | 2.8 | 6 658 | 0.5 | 10.646 | 1.9 | 648 | 0.8 |
| 1964 | 7,363 | 6.7 | 7,048 | 5.9 | 10,903 | 2.4 | 675 | 4.2 |
| 1965 | 7,551 | 2.6 | 7,242 | 2.8 | 11,164 | 2.4 | 676 | — |
| 1966 | 7,818 | 3 5 | 7,313 | 1.0 | 11,440 | 2.5 | 683 | 1.0 |
| 1967 | 8,210 | 5.0 | 7,543 | 3.1 | 11,703 | 2.3 | 702 | 3.8 |
| 1968 | 8,901 | 8.4 | 8,117 | 7.6 | 11.992 | 2.5 | 742 | 5.7 |
| 1969 | 9,801 | 4.5 | 8,487 | 4.6 | 12,252 | 2.2 | 759 | 2.3 |
| 1970 | 9,743 | 4.8 | 8,828 | 4.0 | 12,514 | 2.1 | 779 | 2.0 |
| 1971 | 9,769 | 0.3 | 8,814 | 0.2 | 12,699 | 1.5 | 769 | -1.0 |
| 1972 | 10,085 | 3.2 | 9.115 | 3.4 | 12,951 | 2.0 | 779 | 1.2 |
| 1973 | 10,470 | 3.8 | 9,300 | 2.0 | 13,091 | 1.1 | 800 | 2.7 |
| 1974 | 10,867 | 3 8 | 9,724 | 4.6 | 13,284 | 1.5 | 818 | 2.3 |
| 1975 | 11,167 | 2.8 | 9,798 | 0.8 | 13,514 | 1.7 | 826 | 1.0 |
| 1976 | 11,506 | 3.0 | 10,199 | 4.0 | 13,730 | 1.6 | 838 | 1.4 |
| 1977 | 12,016 | 4.4 | 11,127 | 9.1 | 13,971 | 1.7 | 860 | 2.6 |
| 1978 | 13,002 | 8.2 | 11.943 | 7.3 | 14,184 | 1.7 | 917 | 6.4 |

மூலம்: இலங்கை மத்தியவங்கியின் ஆண்டறிக்கைகள்.

துள்ளது. பெரும்பாலான ஆண்டுகளில் தலா உற்பத்தியானது 2 சத வீதத்திற்கும் உட்பட்டதாகவே காணப்படுகின்றன. வேகமான குடித்தொகை வளர்ச்சியே தலா வருமானம் குறைவடையக் காரணமாகும்.

1978–ஆம் ஆண்டு தேசிய வருமான வளர்ச்சி வீதம் ஏனைய ஆண்டுகளிலும் பார்க்க இரட்டிப்பாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதோர் மாற்றமாகும் 1978-இல் மொத்தத் தேசிய உற்பத்தி (1959-ன்) நிலையான விலைகளில் 1300.2 கோடி ரூபாவாகக் கணிக்கப் பட்டுள்ளது. இது 8·2 சதவீத அதிகரிப்பாகும். எனவே கடந்த தசாப்தத்தில் பதிவு செய்யப்பட்ட சராசரி மட்டங்களை விடவும் இவ் ஆண்டில் இலங்கை இரட்டிப்பான வளர்ச்சி வீதத்தை எய்தியிருக்கின்றது. ஆயினும் மொத்தத் தேசிய அதிகரிப்பினுலோ தலாநபர் வருமான அதிகரிப்பினுலோ அபிவிருத்தியானது ஏற்பட்டுவிடுவதில்லை. நாட்டு மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவு செய்யப்படுவதையும் வாழ்க்கைத்தர நிலைகளில் ஏற்படும் விருத்தியையுமே அபிவிருத்தி எனலாம்.

**துறைவகைப்படியான அபிவிருத்திகள்:-**

இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தியில் பல்வேறு துறைகளினை அவதானிக்கலாம். 1959-இன் அடிப்படை ஆண்டிற்குத் தொடர்பான கடந்த நான்கு ஆண்டுகளின் உண்மைத் தேசிய உற்பத்தியின் துறைவகைப்படியான பகுப்பாய்வு அட்டவணை 5-இல் சதவீதத்தில் காட்டப் பட்டுள்ளது.

மொத்தத் தேசிய உற்பத்தியில் விவசாயத் துறையின் பங்கு குறைவடைந்து சென்றுள்ளமையை அட்டவணை 5-இல் காணலாம். 1959-இல் 39·1 சதவீதமாக இருந்த விவசாய உற்பத்தி 1978-இல் 30·7 வீதமாக குறைந்துள்ளது. உற்பத்தித் திறன் குறைந்த விவசாயத் துறையின் பங்கு தேசிய உற்பத்தியில் குறைவடைந்து செல்கின்றமை பொருளாதார வளர்ச்சியைப் பிரதிபலிப்பதாகும். விவசா

அட்டவணை 5

## மொத்தத் தேசிய உற்பத்தியில் வெவ்வேறு துறைகளினதும் பங்கு (1959) காரணிச் செலவு விலைகளில்

| துறைகள் | 1959 | 1975 | 1976 | 1977 | 1978 |
|---|---|---|---|---|---|
| (1) விவசாயம், காட்டுத்தொழில், வேட்டையாடல், மீன்பிடி | 39.1 | 32.2 | 31.0 | 31.3 | 30.7 |
| (2) சுரங்கமகழ்தல் | 0.5 | 2.2 | 3.1 | 2.6 | 3.2 |
| (3) உற்பத்தி | 11.6 | 13.1 | 12.9 | 12.5 | 12.6 |
| (4) நிர்மானம் | 4.8 | 4.5 | 4.6 | 4.0 | 4.8 |
| (5) மின்சாரம், வாயு, நீர், சௌக்கிய சேவைகள் | 0.1 | 0.8 | 0.9 | 0.8 | 0.9 |
| (6) போக்குவரத்து, களஞ்சியப் படுத்துதல் தொடர்பு சாதனங்கள் | 9.2 | 9.8 | 9.9 | 10.0 | 9.9 |
| (7) மொத்த சில்லறை வியாபாரம் | 13.6 | 13.4 | 13.4 | 13.5 | 13.6 |
| (8) வங்கி, காப்புறுதி, அசையா சொத்துக்கள் | 0.9 | 1.6 | 1.7 | 1.9 | 2.0 |
| (9) வதிவிட உரிமை | 3.4 | 3.1 | 3.1 | 3.0 | 2.9 |
| (10) பொதுநிர்வாகமும் பாதுகாப்பும் | 5.1 | 5.8 | 5.9 | 5.8 | 5.8 |
| (11) ஏனைய சேவைகள் | 12.3 | 13.5 | 13.8 | 14.2 | 13.8 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி | 100.6 | 100.2 | 100.3 | 100.2 | 100.3 |
| தேறிய வெளிநாட்டுக் காரணி வருமானம் | 0.6 | 0.2 | 0.3 | 0.2 | 0.3 |
| மொத்தத் தேசிய உற்பத்தி | 100 | 100 | 100 | 100 | 100 |

ஆதாரம்: பொருளியல் நோக்கு ஜன/பெப் 1979

யத் துறையின் வீழ்ச்சிக்குப் பெருந்தோட்டத் துறையின் வீழ்ச்சியே காரணமாகக் காட்டப்படுகின்றது. தேசிய உற்பத்தியில் 1959-இல் பெருந்தோட்டத் துறைகளின் பங்கு 20·9 சதவீதமாகும். 1973-இல் இதன் பங்கு 10·6 சத வீதம் மாத்திரமே. பிரதான உணவுப் பொருளான நெல் உற்பத்தியின் பங்கு 1959-இல் 5.8 வீதத்திலிருந்து 1978-இல் 6·0 வீதமாக மாத்திரமே மாற்றமடைந்துள்ளது.

தேசிய உற்பத்தியில் நிர்மாணத் துறையின் பங்கு அதிகரித்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கதோர் மாற்றமாகும். சுரங்கமகழ்தல், நிர்மாணம், மின்சாரம், நிதி, உற்பத்தி, வர்த்தகம் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது. உற்பத்தித் திறன் கூடிய இத் துறைகள் 1977-ஆம் ஆண்டின் பின்னர் பெருமளவு அதிகரித்துள்ளன. வர்த்தகம், கைத்தொழில் என்பனவற்றின் வளர்ச்சிக்கு இறக்குமதிகள் தாராளமயமாக்கப்பட்டமையேகாரணம் என்று மத்திய வங்கி கூறுகின்றது. நிர்மாணத் துறையின் பங்கு 1977-ஆம் ஆண்டோடு ஒப்பிடும் பொழுது 1978-ஆம் ஆண்டு 4 சத வீதத்திலிருந்து 5 சத வீதமாக அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். முதலீட்டு சூழல் சாதகமாக மாறியமை, வர்த்தகத்தின் மீதான கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை என்பவற்றின் விளைவாக நிர்மாணம் போன்ற துறைகளில் விஸ்தரிப்பு ஏற்பட்டதெனலாம்.

1978–இன் நடுப்பகுதியில் நாட்டின் சனத்தொகை 1 கோடியே 42 இலட்சம் என மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இது 1·7 சதவீத அதிகரிப்பாகும்: எனவே மெய்யளவுகளில் தலா நபருக்கான மொத்தத் தேசிய உற்பத்தி 917 ரூபாவாகும். இவ்வதிகரிப்பு 6.4 சதவீதமானதாகும். மத்திய வங்கியின் அறிக்கையின்படி 1977-ஆம் ஆண்டு 2·6 சதவீத அதிகரிப்பே பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே 1977-ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 1978-ம் ஆண்டின் வளர்ச்சி வீதம் கூடியதொன்றாகக் காணப்படுகின்றது. தலா வருமான வளர்ச்சி வீதம் நாட்டு மக்களின் சராசரி வருமானப்பங்கீட்டுக்கு சமனாக அமையமாட்டாது·

எனவே உண்மையான வருமானப் பங்கீட்டினை இது பிரதி பலிக்கும் என எதிர்பார்க்க முடியாது.

வருமானப் பங்கீடுகள் வேறுபட்டதொன்றாகவே அமைந்துள்ளது. வேறுபட்டுக் காணப்பட ஊழியப்படையின் பெரும் பகுதியினர் உறுதியற்ற விவசாயத் துறையில் தங்கியுள்ளமையே காரணமாகக் காட்டப்படுகின்றது. குடித்தொகையில் 65 சதவீதத்தினரையும் ஊழியப்படையில் 50 சதவீதத்தினரையும் கொண்ட துறையாக விவசாயம் உள்ளது. ஊழியப்படையில் பெரும் பங்கினைக் கொண்டிருப்பினும் தேசிய உற்பத்தியில் குறைந்த பங்கினையே விவசாயம் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்க தொன்றாகும். தேசிய உற்பத்தியில் 1959–இல் 39·1 சதவீதமாக இருந்த விவசாயம் 1978–இல் 30·7 சதவீதமாக குறைவடைந்துள்ளது. 300 ரூபாவிற்கும் குறைந்த வருமானமுடைய குடித்தொகையில் ஏறத்தாள 70 இலட்சம் பேர் அரசாங்கத்தில் இலவச காசுப் புத்தகங்களைப் பெற இதுவே காரணமாகும்.

கைத்தொழில் துறையிலும் சேவைகள் துறையிலும் ஊழியப்படையினரின் அளவு குறைவாகவே காணப்படுகின்றது. இத்துறையில் குறைந்தளவு ஊழியமே தங்கியிருப்பதனால் வருமான மட்டம் கூடுதலாகக் காணப்படுகின்றது. மொத்தத் தேசிய உற்பத்தியில் 70 சதவீதம் சேவைகள் துறையிலும் கைத்தொழில் துறையிலும் இருந்து பெறப்படுகின்றது. ஆனால் ஊழியப்படையில் 50 சதவீதமே இத் துறைகளில் தங்கியுள்ளன. எனவே வருமான ஏற்றத்தாழ்வுக்கு ஊழியப்படையின் பரம்பலின் போக்கே காரணமாகக் காட்டப்படுகின்றது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் வருமானப் பங்கீடுகள் ஏற்றத்தாழ்வுகளை உள்ளடக்கியனவாகவே காணப்படுகின்றன. இலங்கையில் இதனைத் தெளிவாகக் காணலாம். குடித்தொகையில் பெரும் பங்கினர் குறைந்த வருமானத்தைப் பெறுவது மாத்திரமன்றி தேசிய உற்பத்திக்கு அவர்கள் வழங்கும் பங்கு மிகவும் குறைவாகவே

காணப்படுகின்றது. அண்மைக் காலங்களில் வருமானப் பங்கீட்டில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அரசாங்க நடவடிக்கைகள், கொள்கைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் வருமான உயர்விற்கு காரணங்களாக அமைந்துள்ளன. குடித்தொகையில் அரைவாசிக்கு மேற்பட்டோர் 300 ரூபாவிற்கு மேற்பட்ட வருமானத்தைப் பெறுகின்றனர். எனினும் கிராமப்புறங்களிலும், பெருந் தோட்டங்களிலும் உள்ள உழைக்கும் வர்க்கத்தைவிட நகரப்புறங்களில் உள்ளோர் கூடிய வருமானத்தினைப் பெறும் வாய்ப்பு காணப்படுகின்றது. இவ்வருமான ஏற்றத்தாழ்வுகள் நாட்டு மக்களில் ஒரு பகுதியினர் வறுமையில் வாடவும் மறு பகுதியினர் செல்வந்தர்களாக உல்லாச வாழ்க்கை வாழவும் வழி வகுத்துள்ளது. எனவே தலா வருமான உயர்வு வாழ்க்கைத்தர உயர்வினைப் பிரதிபலிக்கும் எனக் கூற முடியாது.

**இதுவரை கற்றவை :**

(1) தேசிய வருமானக் கணிப்பீடுகள் காரணிச் செலவு விலைகளிலும் சந்தை விலைகளிலும் மேற்கொள்ளப்படுகின்றன.

(2) கடந்த 20 ஆண்டுகளில் இலங்கையின் தேசிய வருமான வளர்ச்சி வீதம் சராசரி 4-5 சதவீதத்திற்குட்பட்டதாகும்.

(3) 1978-ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அரசாங்க நடவடிக்கைகள் (கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை) தேசிய உற்பத்தியின் இரட்டிப்பான அதிகரிப்புக்கு வழி வகுத்துள்ளது.

(4) தேசிய உற்பத்தியில் விவசாயத் துறையின் பங்கு குறைவடைந்து ஏனைய துறைகளின் பங்கு அதிகரித்து வந்துள்ளது.

(5) தலா வருமானம் உயர்வடைந்திருப்பினும் வருமானப் பங்கீடுகள் சமமாக அமையவில்லை.

அத்தியாயம் 4

# உழவர் விவசாயம்

இலங்கையின் கிராமியப் பொருளாதாரமான உழவர் விவசாயம் பன்னூற்ருண்டு கால பராம்பரியத்தை தன்னகத்தே கொண்டதாகும். குடித்தொகையில் பெரும்பான்மை யோரின் சீவனோபாயம் அதுவாகும். இலங்கையில் மாத்திர மன்றி அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் இவ்வாறுண உழவர் விவசாயமே அந்நாடுகளின் பொருளாதாரத்தினை நிர்ணயிப்பதில் முக்கியத்துவம் பெற்று வந்துள்ளன. இலங்கையின் பொருளாதாரமும் நீண்டகாலமாக உழவர் விவசாயத்தையே மூலாதாரமாகக் கொண்டிருந்தது. ஆனுல் 19-ம் நூற்ருண்டில் வளர்ச்சியடையத் தொடங்கிய பெருந்தோட்டங்கள் உள்நாட்டு விவசாயத்தில் ஏற்படுத்திய தாக்கங்கள் பாரதூரமானதாகும். இதுவரை காலமும் உழவர் விவசாயத்தில் வேரூன்றியிருந்த பொருளாதாரம் படிப்படியாக நவீன ஏற்றுமதிப் பொருளாதாரமாக உருமாற்றமடைந்தது. பாரம்பரிய கிராமியப் பொருளாதாரத்தில் பெருந்தோட்டத்துறை பூரணமாக ஊடுருவியதுடன் இவ்வுருமாற்றம் முற்றுப் பெற்றது. பின்னர் கிராமியப் பொருளாதாரம் சமுதாயத்தின் நாளாந்தத் தேவைகளை மிகக் குறைவாக நிறைவு செய்யும் நிலைக்கு மாறலாயிற்று. இதன் விளைவாக எமது உள்நாட்டு நெல் உற்பத்திப் பொருளாதாரம் ஏறத்தாழ ஒரு நூற்ருண்டு காலமாக தேக்கமுற்றிருந்தது.

### பிழைப்பூதிய பொருளாதாரம்:

உழவர் விவசாயம் ஒரு பிழைப்பூதிய பொருளாதாரம் என வரையறை செய்யப்படுகின்றது. பிழைப்பூதியம் என்பது அடிப்படைத் தேவைகளை மாத்திரம் பூர்த்தி செய்வதற்குரிய வருமானத்தைத் தரக்கூடிய உற்பத்தியமைப்பினைக் குறிக்கும். குடித்தொகையில் 65 சத வீதத்தினரை உள்ளடக்கிய உழவர் விவசாயம் நீண்ட காலமாக பிழைப்பூதிய பொருளாதாரமாகவே இருந்து வந்துள்ளது. இத்

துறையின் வறுமை மட்டமே பிழைப்பூதியத் துறை என வர்ணிக்கப்படக் காரணமாகும். குறைந்த முதலீடுகள் பின்தங்கிய உற்பத்தித்திறன், விளைவு குறைவாகக் காணப்படுகின்றமை, சந்தை வாய்ப்புக்களின்மை ஆகியன உழவர் விவசாயம் பிழைப்பூதிய நிலையில் அமையக் காரணமாகும். இதன் காரணமாக கிராமியப் பொருளாதாரம் சமுதாயத்தின் நாளாந்தத்தேவைகளை மிகக்குறைவாக நிறைவு செய்யும் நிலைக்கு மாறலாயிற்று. எமது அடிப்படைத் தேவையான உணவுக்குக்கூட வெளிநாடுகளில் தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு நாடு தள்ளப்பட்டது, தனிப்பட்ட விவசாயியின் இலட்சியம் சுயதேவையைப் பூர்த்தியாக மாத்திரமே இருந்தது. இவ்வாறன சூழ்நிலை நீண்டகாலமாக உழவர் விவசாயம் சில அடிப்படைப் பண்புகளைக் கொண்டமையக் காரணமாயிற்று.

(அ) சிறிய அளவிலான நிலம்

(ஆ) பொருளியல் ரீதியில் இலாபகரமற்ற முறையில் அவை மென்மேலும் துண்டாடப்படல்.

(இ) மரபுரீதியான தொழில் நுட்பம்.

(ஈ) விவசாயி நிலத்தை விருத்தி செய்து உற்பத்தியினை அதிகரிக்கச் செய்வதனைத் தடுக்கும் குத்தகை ஒப்பந்தம்.

(உ) கிராமிய நில உடைமையாளர்களின் பிடியில் விவசாயியைச் சிக்க வைக்கும் கடன்பழு.

உழவர் விவசாயத்தின் இப்பண்புகள் அதன் பிழைப்பூதிய நிலையைப்பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

## பொருளாதாரத்தில் உழவர் விவசாயத்தின் பங்கு:

அடிப்படை உணவுப் பொருளான நெல் உற்பத்தியையும் ஏனைய உப உணவுப் பயிர்களையும் உள்ளடக்கியதாக உழவர் விவசாயம் அமைந்துள்ளது. இவ் உணவுற்பத்தித் துறையின் முக்கியத்துவம் இலங்கையின் பொருளாதாரத்தில் பல்வேறு கோணங்களிலும் பிரதிபலிப்பதைக் காணலாம். மொத்தத் தேசிய உற்பத்தியிலும் பொருளாதார

வளர்ச்சியிலும் அதன் பங்கு முக்கியமானதாகும். ஒப்பீட்டு ரீதியிலான தேசியக் கணக்கீட்டுத் தரவுகள் 1959–ம் ஆண்டிலிருந்தே கிடைக்கப்பெறுகின்றன. 1959-ம் ஆண்டிலிருந்து தேசிய உற்பத்தியில் உணவுற்பத்தித் துறையின் பங்கினை அட்டவணை 6 காட்டுகின்றது.

அட்டவணை 6

**மொத்தத் தேசிய உற்பத்தியும் விவசாயத்துறையும்**
**(1959 நிலையான விலைகளில்)**

(மில்லியன் ரூபாய்களில்)

| வருடம் | 1960 | 1965 | 1970 | 1975 | 1978 |
|---|---|---|---|---|---|
| 1. நெல் | 350.0 | 377.4 | 597.13 | 549·6 | 775 |
| 2. உப-உணவுப் பயிர்கள் | 105·1 | 116.5 | 240·8 | 501·3 | —— |
| 3. பிரதான ஏற்று மதிப் பயிர்கள் | 1337·0 | 1547·4 | 1524·7 | 1449.1 | 1372 |
| மொத்தத் தேசிய உற்பத்தி | 6202·2 | 7577·4 | 9570·8 | 11096·0 | 13001·9 |

மூலம்: ஸ்ரீ லங்கா மத்திய வங்கி.

மேற் காணப்படும் தரவுகள் தேசிய உற்பத்தியில் உணவுத் துறையினதும் உப-உணவுத் துறையினதும் முக்கியத்துவத்தைத் காட்டுகின்றன. உணவுத்துறையிலும் பார்க்க உபஉணவுத் துறையின் பங்கு பெருமளவு அதிகரித்து சென்றுள்ளமையை அட்டவணை காட்டுகின்றது. 1972 – 1976-ம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலப்பகுதிகளில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் பெருமளவு காணப்பட்டமை உபஉணவுப் பயிர்களின் உற்பத்திப் பெருக்கத்திற்குரிய காரணங்களாகும். உணவுப் பயிர்த்துறையின் முக்கியத்துவம் 1959-ம் ஆண்டின் பின்னரே பெருமளவு மாற்றமடைந்துள்ளது. மொத்த தேசிய உற்பத்தியின் உணவுப் பயிர்களின் விகிதாசாரம் 1959-ம் ஆண்டு 13 சதவீதமாகும். 1978–இல் இது 17·8 சதவீதமாக அதிகரித்துள்ளது.

தொழில் வாய்ப்புக்களை வழங்கும் ஒரு துறையாக உழவர் விவசாயம் அமைந்துள்ளது. நாட்டின் மொத்த ஊழியத்தில் ஏறத்தாள 50 சதவீதம் விவசாயத்துறையில் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். ஒப்பீட்டு ரீதியில் மேற்கூறிய வேலை வாய்ப்பினை வழங்கும் தனிப்பயிராக நெல் உற்பத்தியமைந்துள்ளது. அட்டவணை 7 விவசாயத் துறையின் தொழில் வாய்ப்புக்களைக் காட்டுகின்றது.

அட்டவணை 7

**விவசாயத்துறையில் தொழில் வாய்ப்பு – 1971**

| | (1000) |
|---|---|
| விவசாயம், காட்டுத்துறை, மீன்பிடி – | 1828.98 |
| நெற் (அரிசி) பயிர்ச் செய்கை | 802·8 |
| ஏனைய நிலத் தானியங்கள் | 1·8 |
| காய்கறியும், பழச் செய்கையும் | 62·2 |
| தேயிலை, இறப்பர், தென்னை | 740·3 |
| ஏனைய பயிர்ச் செய்கைகள் (சிறு ஏற்றுமதிப் பயிர் தவிர) | 132·4 |
| கால்நடை | 4·7 |

மூலம்: சனத்தொகை மதிப்பீடு 1977 – பொருளியல் ரீதியில் உழைக்கும் சனத்தொகை

குடும்ப வரவு செலவுப்பட்டியலிலும் அரிசியும் உப உணவுப் பொருட்களும் வகிக்கும் பங்கு இத்துறையின் முக்கியத்துவத்தினைக் காட்டுகின்றது. 1978–ம் ஆண்டு நுகர்வோர் ஆய்வின்படி மொத்த உணவுச் செலவில் அரிசியின் பங்கு 27 சதவீதமாகவும் ஏனைய உப உணவுப் பயிர்களின் பங்கு 5 சதவீதமாகவும் காணப்படுகின்றது. எனவே வாழ்க்கைச் செலவுப் பட்டியலில் உணவுப் பொருட்கள் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன.

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்திலும் உணவுப் பொருட்களின் இறக்குமதி பெரும் பங்கினை வகிப்பதைக் காணலாம். 1978-ம் ஆண்டு புள்ளி விபரப்படி மொத்த இறக்குமதியில் நுகர்வுப் பொருட்களின் பங்கு 30·7 சதவீதமாகும். நெல் இறக்குமதி வருடா வருடம் பெருமளவு அதிகரித்துச் சென்றுள்ளது. 1978-ல் 166000 தொன்னுக

இருந்த அரிசியின் இறக்குமதி 1979-ல் ஏறத்தாள 200000 தொன்னுக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். எனவே இலங்கையின் வெளிநாட்டுச் செலவாணியை நிர்ணயிப்பதிலும் அதிகரிப்பதிலும் உழவர் விவசாயம் முக்கிய பங்கினைப் பெறுகின்றது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் கைத்தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய நாடுகளாக உள்ளன. இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. நம்நாட்டின் கைத்தொழில் வளர்ச்சியின்மைக்கு மூலதனப் பற்றுக்குறை ஓர் காரணமாகக் காட்டப்படுகின்றது. இம் மூலதனத்தினைத் திரட்டித் தருவதில் உழவர் விவசாயம் முக்கிய பங்கினை வகிக்கின்றது. பெரும் தொகையான ஊழியத்தை உள்ளடக்கிய கிராமிய விவசாயத்துறை அபிவிருத்தி செய்யப்படுவதன் மூலம் வருமான அதிகரிப்பிற்கும் சேமிப்பிற்கும் வழி வகுக்க முடியும். இச் சேமிப்பு அதிகரிப்பு கைத்தொழில் முதலீடுகளுக்கு வழிவகுப்பதுடன் கிராமிய மக்களின் வருமான அதிகரிப்பினூடாக கைத்தொழில் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பினையும் தோற்றுவிக்கும்.

இலங்கை மக்களின் வாழ்க்கைத்தர உயர்விற்கும் தேசிய வருமான ஊற்றுக்கும் வேலையில்லாத் திண்டாட்டத் தீர்வுக்கும் கிராமியப் பொருளாதாரம் வழிகாட்டியாக அமைகின்றது. அதுமாத்திரமன்றி அன்னிய செலவாணியின் சேமிப்பிற்கும் கைத்தொழில் துறையின் வளர்ச்சிக்கும் கிராமியப் பொருளாதாரமே மூலாதாரமாகும். எனவே இலங்கையின் பொருளாதாரத்தில் உழவர் விவசாயத்தின் பங்கு மிகவும் இன்றியமையாத தொன்றெனலாம்.

## நெல் விவசாயத்துறை எதிர்நோக்கும் பிரச்சனைகள்:

கிராமியப் பொருளாதாரமான நெல் விவசாயமானது புராதன காலம் தொடக்கம் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது. ஆனல் கடந்த ஒரு நூற்றுண்டு கால

மாக இத்துறை பிழைப்பூதிய நிலையிலேயே இருந்து வந்துள்ளது. இவ்வாறு பின்தங்கியிருக்க இதில் காணப்படும் குறைபாடுகளே அடிப்படையாகும். பல்வேறு வகையான பிரச்சனைகளை உழவர் விவசாயம் எதிர்நோக்குகின்றமையே அதன் வளர்ச்சியின்மைக்கு அடிப்படைக் காரணமாகும்.

**காலநிலை பொய்த்து விடுகின்றமை:**

சாதகமற்ற காலநிலை என்றழைக்கப்படும், சற்றும் எதிர்பாராத சூழ்நிலை இலங்கையின் பொருளாதாரத்தினை பல்வேறு காலப்பகுதிகளில் பாதித்துள்ளது. 1972-ம் ஆண்டு தொடக்கம் 1976-ம் ஆண்டு வரை நெல் உற்பத்தி பெருமளவு அதிகரிக்காமைக்குப் பாதகமான காலநிலையே காரணமாகக் காட்டப்படுகின்றது. அட்டவணை 8 நெல் உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றங்களைக் காட்டுகின்றது.

அட்டவணை 8

**நெல் உற்பத்தி - உற்பத்தி இலக்குகளும் சாதனைகளும்**
**1972 — 1978**

| ஆண்டு | இலக்கு (10 இலட்சம் புசலில்) | உண்மை விளைச்சல் | உண்மை விளைச்சல் வீதம் |
|---|---|---|---|
| 1972 | 78 | 62·9 | 80·6 |
| 1973 | 94 | 62·9 | 66·9 |
| 1974 | 100 | 76·8 | 76·8 |
| 1975 | 107 | 55.3 | 51·7 |
| 1976 | 115 | 60.0 | 56·1 |
| 1977 | —— | 68·7 | 51·4 |
| 1978 | —— | 70·6 | 64·4 |

1978 / 79-ம் ஆண்டுகளில் பெரும்போக நெல் விளைச்சல் முந்திய பெரும்போக நெல் விளைச்சலான 62 மில்லியன் புசலுடன் ஒப்பிடுகையில் 63 மில்லியன் புசல் என மதிப்பிடப்பட்டுள்ளது. விளைச்சல் பெருமளவு அதிகரிக்காமைக்கு இக்காலப் பகுதியில் கிழக்கு மாகாணத்தில் ஏற்

பட்ட சூருவளித் தாக்கமே காரணமாகக் காட்டப்படு கின்றது. எனவே நெல் உற்பத்தியை நிர்ணயிப்பதில் முக்கிய பங்கினைப் பெறும் காலநிலை பொய்த்து விடுகின் றமை ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனையாக அமைந் துள்ளது.

**சிக்கனமற்ற உடைமைகள்:**

இலங்கையின் 75 சததவீதமான நெற்காணித் துண்டு கள் பல்வேறு வகையான குத்தகை முறைகளில் இயங்கு கின்றன. இவ்விவசாயத் துறையிலுள்ள பெரும்பான்மை யான உற்பத்தியாளர்கள் சிறு நெற்காணி உடமையை உடையோராகக் காணப்படுகின்றனர். 1962-இல் மேற் கொள்ளப்பட்ட விவசாய மதிப்பீட்டின்படி முழுவிவசாயத் துறையினதும் 95.8 சதவீத காணித் துண்டுகள் 10 ஏக்க ருக்கும் குறைவானதாகும். 1970-இல் கமநல சேவைகள் திணைக்களம் திரட்டிய தரவுகள் நெல்லைப் பொறுத்த வரையில் உற்பத்தியாளர்களில் ⅔ பங்கினர் 1 ஏக்கருக்கும் குறைவான துண்டுகளையே பெற்றிருந்தனர். என்பதனைக் காட்டுகின்றது. இந்த ⅔ பங்கு உற்பத்தியாளர்களின் வேளாண்மை நிலம் ஏறக்குறைய $\frac{1}{2}$ ஏக்கராக மாத்திரமே காணப்பட்டது. மேலும் இதே தரவுகளின்படி தீவின் $\frac{3}{4}$ பங்கு நெற்காணித் துண்டுகள் 5 ஏக்கருக்கும் குறைவா கவே காணப்படுகின்றன. இதன் காரணமாக விவசாய நிலங்கள் சிக்கனமற்ற உடைமைகள் என வரையறை செய் யப்பட்டன.

சிக்கனமான உடைமைகள் என்னும் பொழுது மூன்று முக்கிய அம்சங்களை அவை உள்ளடக்கியனவாக காணப் படவேண்டும்.

1. ஒரு விவசாயக் குடும்பம் தனது நிலத்தின் உற் பத்தியிலிருந்து பெறப்படும் வருமானத்தைக் கொண்டு வாழ்க்கை நடாத்தக் கூடியதாக இருத் தல் வேண்டும்.

2. அக்குடும்பத்திலுள்ள அங்கத்தவர்கள் அனைவரும் வேலை வாய்ப்பினைப் பெறக்கூடியதாக நிலத்தின் அளவு காணப்பட வேண்டும்.

(3) அவ் விவசாயக் குடும்பம் தனது நிலத்திலிருந்து பெறப்படும் வருமானத்தைக் கொண்டே முதலீடு செய்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட மூன்று அம்சங்களையும் உள்ளடக்கிய நிலமே சிக்கன உடைமைகளாகக் கருதப்படுகின்றன. இலங்கையில் இன்று 3–5 ஏக்கருக்கு இடைப்பட்ட நிலத்தினை சிக்கன நிலமாகக் கருதுவர். இதனடிப்படையில் நோக்கும்பொழுது இலங்கையின் விவசாயிகளில் ஏறத்தாள 82 சதவீதத்திற்கு மேற்பட்டோர் சிக்கனமற்ற உடமைகளை உடையோராவர்.

அட்டவணை 9

**கிராமிய விவசாயத்தில் நில உடைமைப் பங்கீடு**

**(சதவீதமாக)**

| நில அளவு | உடைமையாளர் | மொத்த நிலப்பரப்பு |
|---|---|---|
| ½ ஏக்கருக்கு குறைவானது | 35 7 | 7·6 |
| ½ — 1 | 29·4 | 13·4 |
| 1 — 2 | 17·1 | 19·8 |
| 2 — 5 | 14·2 | 34·6 |
| 5 — 10 | 2·9 | 15·2 |
| 10 ஏக்கருக்கு மேலானது | 0·7 | 9·4 |
| | 100·0 | 100·0 |

மூலம் : இலங்கை கமத்தொழில் சேவை இலாகா.

1970-ம் ஆண்டில் நெற்காணிப் பதிவுகள், குத்தகை வேளாண்மையாளர்களின் தொகை 3,18,459 என்றும் வேளாண்மை நிலம் 3,08,459 எனவும் காட்டுகின்றது. நெற்காணிகளின் 8 இலட்ச உரிமையாளர்களில் 3·6 சதவீதத்தினர் மட்டுமே 5 ஏக்கருக்கும் அதிகமான நிலத்தைப் பெற்றிருந்தனர். அண்மைக்கால ஆய்வுகளின்படி 4,50,929

குத்தகை வேளாண்மைக்காரர்கள் ½ ஏக்கர் நெல் வயலிலேயே வேலை செய்கின்றனர். இவ்வாறான சிக்கனமற்ற உடைமைகள் கிராமிய விவசாயத்துறையின் வளர்ச்சியின்மைக்கு ஓர் காரணமாகக் காட்டப்படுகின்றது.

**காணிகள் பற்றாமை!**

விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ளோரில் 40 சதவீதத்தினர் காணியற்றோராவர். சிக்கனமற்ற உடமைகளுடன் இக்காணிப் பற்றாக்குறை கிராமிய விவசாயப் பிரச்சனைகளை விரிவுபடுத்த மற்றுமோர் காரணமாக அமைகின்றது. மொத்த நில உடைமையாளர்களில் 96.4 சதவீதத்தினர் 5 ஏக்கருக்கும் குறைவான நிலமுடையோராவர். 5 ஏக்கருக்கும் மேலாக நில உடைமையினைக் கொண்டோர் 3.6 சதவீதம் மாத்திரமே, ஆனால் மொத்த நிலப்பரப்பில் இவர்களுடைய பங்கு 24·6 சதவீதமாகக் காணப்படுகின்றது. இத்தகைய ஏற்றத்தாழ்வான காணிப்பங்கீடே, காணிப்பற்றாக் குறைப் பிரச்சனைக்கு அடிப்படைக் காரணமாகும். எனவே கிராமிய விவசாயத் துறையில் காணிப் பசி முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனையாகக் காணப்படுகின்றது.

**கீழுழைப்பும் பருவகால வேலையின்மையும்:**

கீழுழைப்பு என்பது அரை குறை வேலை வாய்ப்பினை அல்லது மறைமுக வேலையின்மையைக் குறிக்கும். பிழைப்பூதியத்தை நோக்கமாகக் கொண்டியங்கும் கிராமிய விவசாயத் துறையில் கீழுழைப்பானது ஓர் இயல்பான பிரச்சனையாகக் காணப்படுகின்றது. பெருகிச் செல்லும் குடித்தொகைக்குப் பெருந்தோட்டச் செய்கையிலோ, கைத்தொழில் துறையிலோ போதிய வேலை வாய்ப்பு இல்லாமையினால் அவர்கள் மரபுரீதியான கிராமிய விவசாயத்துறையிலேயே பெருமளவு தங்கிவிடுகின்றனர். இதன் காரணமாகத்தேவைக்கும் மேலாக இத்துறையில் மக்கள் காணப்படுகின்றனர். கீழுழைப்பு நிலவ இதுவே காாணமாகும்.

ஒரு நபர் செய்ய வேண்டிய வேலையைப் பலர் மேற்கொள் கின்றமையே கீழுழைப்பாகும். இதன் காரணமாக எல்லை நபரால் பெறப்படும் விளைவு பூச்சியமாகக் காணப்படு கின்றது.

1971-இல் இறுதியாக மேற்கொண்ட சனத்தொகைக் கணிப்பீட்டில் விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ளோரில் நெல் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளோரே பெரும் பங்கினரா வர். கிராமியப் பொருளாதாரம், கலாச்சார வாழ்க்கை என்பனவற்றின் ஆதார சுருதியாக நெல் விவசாயத்துறை அமைந்துள்ளமையால் சனத்தொகைப் பெருக்கத்தின் பெரும்பகுதி அத்துறையிலேயே தங்கியிருக்கின்றனர். ஏனைய உபஉணவு உற்பத்தியில் ஈடுபடுவோரின் எண் ணிக்கை மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. நெல் உற்பத்தியில் கீழுழைப்பு நிலவ இதுவே காரணமாகும். இக்கீழுழைப்பானது எல்லை விளைவு பூச்சிய மட்டத்தை அடைவதற்கும் மரபு அடிப்படையில் காணிகள் மேலும் மேலும் துண்டாடப்படவும் காரணமாக அமைகின்றது. இதன் காரணமாகக் கிராமிய விவசாய வளர்ச்சி பின் தங்கி அமைந்துள்ளதெனலாம்.

இலங்கையில் பெரும்பாலான விவசாய நிலங்களில் பருவமழையை நம்பியே பயிர்ச்செய்கை மேற்கொள்ளப் படுகின்றது. பருவ காலங்கள் தவிர்ந்த ஏனைய காலங் களில் விவசாயிகள் வேலையற்றோராகக் காணப்படுகின்ற னர். எனவே பருவகால வேலையின்மையும் கிராமிய விவ சாயிகள் எதிர்நோக்கும் மற்றுமோர் பிரச்சனையாகும். குடிசைக் கைத்தொழில்கள், கால்நடை வளர்ப்பு, பண் ணைத்தொழில் போன்றவற்றினை மேற்கொள்ளப் போதிய வருமானம் இல்லாதபடியால் பருவகாலங்கள் தவிர்ந்த ஏனைய காலங்களில் கிராமிய விவசாயிகள் வேறு தொழில் களில் ஈடுபடும் வாய்ப்பற்றவர்களாகக் காணப்படுகின்ற னர்.

**குறைந்த உற்பத்தித் திறன்:**

நெல் உற்பத்தியானது அபிவிருத்தியடைந்த நாடுகளின் உற்பத்தியோடு ஒப்பிடும்பொழுது மிகக் குறைவாகக் காணப்படுதலைக் கொண்டு இலங்கையின் உழவர் விவசாயம் உற்பத்தித் திறன் குறைந்த துறையென வரையறை செய்யப்படுகின்றது. ஏக்கருக்குரிய சராசரி விளைச்சல் மிகக் குறைவாகக் காணப்படுதலையே குறைந்த உற்பத்தித்திறன் என்பர். உற்பத்தித் திறனை நிலத்தின் உற்பத்தித் திறன் எனவும் ஊழியத்தின் உற்பத்தித் திறன் எனவும் இரண்டு வகையாகப் பாகுபடுத்தலாம். நிலத்தின் உற்பத்தித் திறன் பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது அது உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் நெல் இனங்கள், உரம், பசளை, யந்திரங்களின் பயன்பாடு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டனவாகும். ஊழியத்தின் உற்பத்தித் திறன் என்பது உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் தொழிலாளர்கள், அவர்களின் ஆற்றல், தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றில் தங்கியுள்ளது. இவ்விரு உற்பத்தித் திறன்களும் கிராமிய விவசாயத் துறையில் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. உயர் விளைச்சலைத் தரும் நெல் இனங்களைப் பெருமளவு பயன்படுத்தாமை, உரப் பாவனைகள் குறைவாகக் காணப்படுகின்றமை, பயிர் நோய்க் கட்டுப்பாடின்மை, மரபுரீதியான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகின்றமை குறைந்த உற்பத்தித் திறனுக்குரிய காரணங்களாகும்.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் நெல் உற்பத்தியினை அதிகரிப்பதற்குப் பல நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையிலும் சராசரி ஏக்கருக்குரிய விளைச்சல் பெருமளவு அதிகரிக்கவில்லை. இலங்கையின் ஏக்கருக்கான சராசரி விளைச்சல் ஆசியாவின் மிகக் குறைந்த விளைச்சலில் ஒன்றாகவே இருக்கின்றது. சராசரி விளைச்சல் இன்னும் 45 க்கும் 50 புசலுக்கும் இடைப்பட்டதாகவே காணப்படுகின்றது. பின்வரும் புள்ளி விபரங்கள் கடந்த 25 ஆண்டுகளில் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பினைக் காட்டுகின்றது.

அட்டவணை 10

| ஆண்டு | அதிகரிப்பு வீதம் |
|---|---|
| 1952 — 59 | 4.1% |
| 1960 — 64 | 2.1% |
| 1965 — 70 | 1.4% |
| 1971 — 76 | 3.3% |

அதிகரிப்பு வீதமானது 1950 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணப்பட்டதைவிட இரட்டிப்பானதாகும். எனினும் முழுத்தானிய நுகர்ச்சியுடனுன உள்ளூர் உற்பத்தி விகிதாசாரம் ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இவ்வாறு காணப்பட பின்தங்கிய உற்பத்தித் திறனே காரணமாகும்.

அட்டவணை 11

முழுத்தானிய நுகர்ச்சியுடனுன உள்ளூர் உற்பத்தி விகிதாசாரம்

(தெரிந்தெடுக்கப்பட்ட சில ஆசிய நாடுகளில்)

| | 1963 — 1967 | 1970 — 1974 |
|---|---|---|
| இந்தியா | 93.8 | 89.2 |
| பாகிஸ்தான் | 91.4 | 97.1 |
| வங்காள தேசம் | 93.3 | 99.6 |
| மலேசியா (மேற்கு) | 56.2 | 66.5 |
| பிலிப்பைன்ஸ் | 85.1 | 87.2 |
| இந்தோனேசியா | 94.3 | 92.5 |
| ஸ்ரீலங்கா | 45.4 | 56.7 |

மூலம்: ஆசிய அபிவிருத்தி வங்கிச் சஞ்சிகை

உற்பத்தித் திறன் பின்தங்கிக் காணப்பட அதற்குரிய வாய்ப்புக்கள் குறைவாக உள்ளமையும் மற்றுமோர் காரணியாகும். உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொழுது பல்வேறு வகையான பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. சிக்கனமற்ற

உடமைகளையும் பிழைப்பூதிய வருவாய்களையும் கொண்ட விவசாயிகள் விவசாயத் துறைக்குத் தேவையான உற்பத்தித் திறனை அதிகரிக்கத் தக்க இயந்திரங்களையோ உபகரணங்களையோ பெற்றுக் கொள்ளுதல் இயலாத தொன்றாகும். அத்துடன் விவசாய நிலங்கள் சிறுசிறு துண்டுகளாகக் காணப்படுகின்றமையால் இயந்திரங்களைப் பயன்படுத்துதலும் சாத்தியமற்றதாகின்றது. மேலும் இலங்கையின் பெரும்பாலான வர்க்கத்திற்கு வேலைவாய்ப்பினை வழங்கியுள்ள தொழில் செறிவு கொண்ட துறையாக விவசாயம் அமைந்துள்ளது. எனவே இயந்திரமயத்தினை ஏற்படுத்தல் மூலம் வேலையில்லாப் பிரச்சனையை எதிர்நோக்க வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படலாம். இவ்வாறான காரணங்கள் உழவர் விவசாயம் உற்பத்தித் திறன் குறைந்த துறையாக இருப்பதற்கு அடிப்படையாக அமைகின்றன.

போதியளவு ஊக்கிகளின்மை:

கிராமிய விவசாய வளர்ச்சியின்மைக்குப் போதியளவு ஊக்கிகள் வழங்கப்படாமையும் முக்கிய காரணமாகும். நீண்ட காலமாகக் கிராமிய விவசாயிகள் சமுதாயத்தின் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே கருதப்பட்டு வந்தனர்; நகரங்களிலிருந்து அவர்கள் புறக்கணிக்கப்பட்டனர். கிராமிய உற்பத்திப் பண்டங்களுக்கும் சந்தையில் பெருமளவு விலைகள் வழங்கப்படவில்லை. அத்துடன் இயற்கையை நம்பி மேற்கொள்ளும் கிராமிய விவசாய உற்பத்திக்குப் போதிய பாதுகாப்புக்கள் பெருமளவு வழங்கப்படவில்லை. பயிர்க் காப்புறுதித் திட்டங்கள் நீண்ட காலத்தின் பின்னரே மேற்கொள்ளப்பட்டன. விவசாயிகளுக்கு அரசாங்கம் பல ஊக்கிகளை வழங்கிய பொழுதும் அவை சரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை. விவசாயிகளின் நேர்மையின்மையும் அரசாங்கத்தின் ஆற்றலின்மையுமே இதற்குரிய காரணங்களாகும்.

**விவசாயம் பற்றிய போதிய அறிவின்மை:**

விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளோரில் பெரும்பாலோர் மரபடிப்படையில் பிணைக்கப்பட்டவர்களாகவே காணப்படுகின்றார்கள். நவீன விஞ்ஞானத் தொழிலாக விவசாயம் மாறிவரும் இன்றைய நிலையில் இலங்கையின் விவசாயிகள் அதுபற்றிய போதிய அறிவற்றவர்களாகக் கான ப்படுகின்றனர். விவசாயத் துறையின் வளர்ச்சியின்மைக்கு இதுவிம் ஒரு காரணமாகும்.

**விவசாயக் கடன் பிரச்சனை!**

குறைந்த உற்பத்தித் திறன், முதலீடுக்ள் பற்றுமை, சேமிப்பின்மை ஒழுங்கினமான வருமானம் என்பனவற்றின் விளைவாகக் கிராமியத் துறைக்கு கடன் தேவைப்படுகின்றது. உற்பத்திச் செலவுகள் பன்மடங்கு அதிகரித்திருக்கும் இக்காலகட்டத்தில் விவசாயிகளுக்கான கடன் ஓர் அத்தியாவசியமான அங்கமாக மாறி இருக்கின்றது. உற்பத்தியைப் பெருக்குவதற்குரிய அதிக விளைச்சலைத் தரும் நெல் இனங்கள், கூடிய பசளை, களைக் கொல்லிகள், என்பனவற்றைக் கொள்வனவு செய்ய முற்பணங்கள் தேவைப்படுகின்றன. டிராக்டர் போன்ற பண்ணை இயந்திரங்களுக்கும் உபகரணங்களுக்கும் நடுத்தர மூலதனம் தேவைப்படுகின்றது. இவற்றை விட நுகர்வுத் தேவைகளுக்காகவும் விவசாயிகள் கடன் பெற வேண்டியவர்களாக உள்ளார்கள். மேலும் மத வைபவங்கள், திடீர் சுகயீனம், திருமணம் போன்ற குடும்பச் சடங்குகள், பயிர்நாசம் போன்றன நேரிடும் சந்தர்ப்பங்களில் அவற்றுக்காகச் செலவு செய்ய விவசாயிகளிடம் மேலதிக பணம் இருப்பதில்லை. இதனுல் அவர்களது கடன்படு தன்மை அதிகரிக்கின்றது.

இலங்கையின் கிராமியத் துறை அதன் கடன் தேவைகளுக்காகப் பாரம்பரியமாக நிறுவன ரீதியற்ற மூலங்க

ளிலேயே தங்கியிருந்து வந்திருக்கின்றது. தேவைகள் நேரிடும் பொழுது விவசாயிகள் தமது நண்பர்கள், உறவினர்கள், நிலச்சுவாந்தார் என்பவர்களிடமே கடன் பெற்று வந்துள்ளனர். இவர்கள் சில சந்தர்ப்பங்களில் வட்டியின்றியும் சில சந்தர்ப்பங்களில் குறைந்த வட்டி வீதத்திலும் கடன்களைக் கொடுத்து உதவினுர்கள். பரஸ்பர நம்பிக்கையிலேயே இக்கடன்கள் வழங்கப்பட்டு வந்துள்ளன. மத்திய வங்கி 1969–ல் நடாத்திய கிராமியக் கொடுகடன் படுகடன் தன்மை பற்றிய ஆய்வின்போது வட்டிவீதங்கள் பற்றியபலவிடயங்கள் கண்டறியப்பட்டன. பல சந்தர்ப்பங்களில் வருடவட்டி 175 சதவீதத்திற்கும் கூடுதலாக இருந்துள்ளது. இவ்வாருன அதிக வட்டிக்கே விவசாயிகள் நிறுவன ரீதியற்ற மூலங்களிலேயே கடன் பெற்று வந்துள்ளனர்.

அட்டவணை 12

**இலங்கையில் கிராமியக் கொடுகடன் மூலங்கள்**
**1957, 1969 வருடங்களில்**

| மூலம் | மொத்தக் கடனில் சதவீதம் 1957 | மொத்தக் கடனில் சதவீதம் 1969 |
|---|---|---|
| **நிறுவன ரீதியான மூலகங்கள்** | 7.8 | 25.0 |
| அரசாங்கம் | 2.6 | 2.7 |
| கூட்டுறவு | 4.1 | 9.7 |
| வர்த்தக வங்கிகள் | 1.1 | 6.7 |
| ஏனையன | — | 5.9 |
| **நிறுவன ரீதியற்ற மூலங்கள்** | 92.2 | 75.0 |
| தொழில் ரீதியான கடன் கொடுத்தோர் | 15.5 | 11.0 |
| உபதொழில் ரீதியான கடன் கொடுப்போர் | — | 17.8 |
| கடைக்காரர்கள் | 7.4 | 14.3 |
| வர்த்தகர்கள். தரகு முகவர்கள் | 4.1 | 1.5 |
| நிலச்சுவாந்தார்கள் | 8.0 | 0.7 |
| உறவினர், நண்பர் | 44.2 | 25.8 |
| ஏனையோர் | 13.0 | 3.9 |
| | 100.0 | 100.0 |

மூலங்கள்: குடிசனக் கணிப்பீட்டு புள்ளிவிபரத் திணைக்களம், கிராமியக் கடனுய்வு 1957, இலங்கை மத்திய வங்கி, கிராமியக் கடன் படுகடன் ஆய்வு 1969.

கிராமிய விவசாயக் கடன்கள் நிறுவன ரீதியற்ற மூலங்களில் இருந்தே பெருமளவு பெறப்படுகின்றது. 1957-ல் கடனில் 92.2 சதவீதம் நிறுவன ரீதியற்ற மூலங்களில் இருந்தே பெறப்பட்டுள்ளது. அரசாங்கக் கடன் திட்டங்கள் அதிகரித்த நிலையிலும் கூட நிறுவன ரீதியான கடன் நடவடிக்கைகள் பெருமளவு அதிகரிக்கவில்லை. நிறுவன ரீதியற்ற கடன் மூலங்களிலிருந்து விவசாயிகள் கடன் பெறப் பல காரணிகள் அடிப்படையாகவுள்ளன. இந்த முறையில் பெரும்பாலும் பிணைகள் கோரப்படுவதில்லை. மேலும் திருப்பிச் செலுத்தும் கால அளவை கடனாளியின் வசதிக்கேற்ப மாற்றிக் கொள்ளலாம். படிவங்களைப் பூர்த்தி செய்தல், ஆவணங்களில் கையெழுத்து வைத்தல் போன்ற நீண்ட படிமுறைகள் இவ்வமைப்பில் இல்லை. நிறுவன ரீதியற்ற கடன்துறை நுகர்வுத் தேவைகளுக்காகவும், அவசரத் தேவைகளுக்காகவும் கடன்களைக் கொடுக்கின்றது. எனவே “கேள்வி கேட்கப்படாத கடன்” என்று இது அழைக்கப்படுகின்றது. வசதி, நெகிழ்ச்சித் தன்மை, இலகுவில் பெற்றுக் கொள்ளக் கூடிய தன்மை என்பன காரணமாக கிராமியத் துறை பெருமளவில் நிறுவன ரீதியற்ற கடன் அமைப்பிலேயே தங்கியிருக்கின்றது. நிறுவன ரீதியான கடன் வசதிகள் அதிகரிக்கப்பட்ட பின்னரும் கூட இத்தகைய வசதிகள் காரணமாகப் பெருந்தொகையான விவசாயிகள் நிறுவன ரீதியற்ற துறைகளில் இருந்தே கடன்களைப் பெற்றுக் கொள்கின்றனர்.

நிறுவன ரீதியற்ற மூலங்களில் இருந்து அதிக வட்டிக்குக் கடன் பெறும் விவசாயிகள் காலப்போக்கில் அவற்றினைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலையில் தமது சிறிய துண்டு நிலங்களையும் இழந்து காணியற்றோராக மாறுகின்றனர். விவசாயக் கடனை மீளச் செலுத்த முடியாத நிலைக்குப் பல காரணங்கள் அடிப்படையாக அமைகின்றன. அட்டவணை 13 இதனைக் காட்டுகின்றது.

அட்டவணை 13

**விவசாயக் கடன்களை மீளச் செலுத்தாமைக்கான காரணங்கள்**

| காரணம் | வெளியிட்டோர் தொகை | சதவீதம் |
|---|---|---|
| (1) பயிர்நாசம் | 148 | 65.78 |
| (2) விஸ்தரிப்புச் சேவைக் குறைபாடு | 16 | 7.11 |
| (3) வேறு துறைகளில் முதலீடு | 18 | 8.0 |
| (4) கடன்களை அரச உதவியாகக் கருதியமை | 13 | 5.77 |
| (5) ஏனைய கடன்களை முதலில் செலுத்தியமை | 15 | 6.67 |
| (6) ஏனைய காரணங்கள் | 15 | 6.67 |
| | 225 | 100.00 |

பயிர்நாசம், விஸ்தரிப்பு சேவைக் குறைபாடு, வேறு துறைகளில் முதலீடு, கடன்களை அரச உதவியாகக் கருதியமை, ஏனைய கடன்களை முதலில் செலுத்தியமை போன்ற காரணங்களால் விவசாயிகள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலைக்கு உள்ளாவதுடன் மீண்டும் கடன் பெற வேண்டியவர்களாக உள்ளனர். எனவே விவசாயத் துறையின் வளர்ச்சியின்மைக்குப் விவசாயக் கடன் பிரச்சனையும் ஓர் காரணமாகும்.

## உழவர் விவசாயப் பிரசனைக்குரிய தீர்வுகள்:

இலங்கையின் பொருளாதாரத்தினை நிர்ணயிப்பதில் வரலாற்று ரீதியாக நெல் விவசாயமே முக்கியத்துவம் பெற்று வந்துள்ளது. கிராமியப் பொருளாதாரத்தில் மூலாதாரமாக அமைவது இந்நெல் உற்பத்தியே. இதன் காரணமாக 1948-ம் ஆண்டிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சகல திட்டங்களினதும் பிரதான நோக்கம் அரிசியில் தன்னிறைவு காண்பதாக அமைந்தது. உற்பத்

திப் பெருக்கம் ஒன்றே உழவர் விவசாயத் துறையில் காணப்படும் பிரச்சனைகளுக்குத் தீர்வாகும். உற்பத்தி அதிகரிப்பினை இருவேறு வழிகளில் அடையலாம்.

(1) பசளை, கிருமி நாசினிகள், கூடிய விளைச்சல்தரும் தானியங்கள் என்பன மூலம் ஏற்கனவே பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள விளை நிலங்களின் உற்பத்தியை அதிகரித்தல்.

(2) புதிய நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதியைச் செய்தல், செறிவுப் பயிர்ச் செய்கையை அதிகரித்தல் என்பதன் மூலம் விளை நிலப்பரப்பினை விரிவு படுத்தல்.

இவற்றுள் முதலாவது வழிமுறையினை குறுங்காலத் திட்டங்கள் எனவும் இரண்டாவது வழிமுறையினை நீண்ட காலத் திட்டங்கள் எனவும் அழைக்கலாம். 1950-ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் உலர் வலயத்தில் பெருமளவு காணப்பட்ட பயிர் செய்யப்படாத நிலமும் வளர்ச்சி பெற்றுவந்த குடியேற்றத் திட்டங்களும் முதலாவது நடவடிக்கைகளுக்குச் சாதகமாக அமைந்தன. 1958 ஆம் ஆண்டின் 10 வருடத் திட்டம் அரிசி உற்பத்தி அதிகரிப்பில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை நோக்கமாகக் கொண்டிருந்தது. 1958–ம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 1968–ம் ஆண்டில் இரு மடங்குக்கும் கூடுதலாக அதிகரிப்பதனை இது நோக்கமாகக் கொண்டிருந்தது. ஏக்கருக்குரிய சராசரி விளைச்சலை அதிகரிப்பதையே இத் திட்டம் அடிப்படையாகக் கொண்டிருந்தது. ஆனால் முன்னைய திட்டங்களைப் போன்றே இப் பத்து ஆண்டுத் திட்டமும் அமுல் நடத்தப்படவில்லை. 1960 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் விவசாயத் திட்டமிடல் அமுலாக்கம் என்பன தொடர்பாக மிகக்கூடிய கவனம் எடுக்கப்பட்டது. 1966 ஆம் ஆண்டில் விவசாய அபிவிருத்தி தொடர்பான 5 வருடகால செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. உள்ளீடுகள், கடன் நிறுவன அமைப்புக்கள் போன்ற சேவைகள் தொடர்பான அம்சங்களை இத்திட்டம் கொண்டிருந்தது. இந்நோக்கங்களுக்கமையப் பிராந்திய, மாவட்ட நடவடிக்கைகளைத்

தேசிய செயல் திட்டத்துடன் ஒன்றிணைக்கும் பொருட்டு நிறுவன அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் 1970 ஆம் ஆண்டளவில் ஓரளவு எய்தப்பட்டன. 1972-76 காலப்பகுதியை உள்ளடக்கிய 5 ஆண்டுத் திட்டத்தின் மூலம் அடுத்த கட்டத்திற்கான அத்திவாரம் இடப்பட்டது. 1976 ஆம் ஆண்டின் நெல் லுற்பத்தி 11.6 கோடி புசலாக இருக்கும் என எதிர் பார்க்கப்பட்டது. இது 97 சதவீத சுயதேவைப் பூர்த்தியாகும். ஆனல் 1974, 75, 76 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஏற்பட்ட காலநிலைப் பாதிப்பின் விளைவாக இத்திட்டம் வெற்றியளிக்கவில்லை. 1977/78 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் நெல்லுற்பத்தி ஓரளவு அதிகரித்துச் சென்ற நிலையிலும் 1979 ஆம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட சூருவளியின் தாக்கம் காரணமாக நெல்லுற்பத்தி வீழ்ச்சியடைந்தது. கடந்த ஒரு தசாப்தத்தில் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றங்களை ஒப்பிடுவதன் மூலமும் அதன் வளர்ச்சி வீதத்தைக் கண்டுகொள்ளலாம்.

அட்டவணை 14

| நெல் | 1972 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 |
|---|---|---|---|---|---|---|---|
| உற்பத்தி (ப. இ. புசல்கள்) | 62.9 | 62.9 | 76.8 | 53.3 | 60,0 | 80.4 | 90.6 |
| பரப்பு விதைக்கப் பட்டது ('000) | 1.795 | 1,792 | 2.028 | 1.719 | 1.789 | 2.046 | 2.162 |
| அறுவடைசெய்யப் பட்டது ('000) | 1.579 | 1.660 | 1·969 | 1,476 | 1.570 | 1.933 | 2.074 |
| திருத்திய இனங் களின்கீழ் ('000) | 1.252 | 1.284 | 1.647 | 1.285 | 1.381 | 1.710 | 1.692 |
| ஏக்கருக்குரிய விளைவு | 46.87 | 44.58 | 45.65 | 44.04 | 44.91 | 48.92 | 50.70 |

மூலம்: மத்தியவங்கி ஆண்டறிக்கை 1978

அட்டவணை 14 இல் கடந்த 7 ஆண்டுகளில் நெல் உற்பத்தியில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமை

யைக் காணலாம். 1972 ஆம் ஆண்டு 62.9 மில்லியன் புசலாக இருந்த நெல் உற்பத்தி 1977 இல் 80.4 மில்லியனுகவும் 1978 ஆம் ஆண்டு 90.6 மில்லியன் புசலாகவும் அதிகரித்துள்ளமையினைக் காணலாம். 1972 - 76 ஆம் ஆண்டு காலங்களில் நெல்லுற்பத்தி பெருமளவு அதிகரிக்காமைக்குப் பாதகமான காலநிலையே காரணமாகும். எனினும் கடந்த இரு தசாப்தங்களிலும் நெல் விவசாயத் துறை குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது. 1950 ஆம் ஆண்டளவில் நெல் உற்பத்தி 22.0 மில்லியன் புசலாகும் 1978 இல் 90.6 மில்லியன் புசலாகும். எனவே 4 மடங்கிற்கு மேற்பட்டளவில் உற்பத்தியானது கடந்த 28 ஆண்டுப் பகுதிகளில் அதிகரித்துள்ளது. சராசரி ஏக்கருக்குரிய விளைச்சலும் அதிகரித்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். 1959/60 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் சராசரி ஏக்கருக்குரிய விளைச்சல் 36–38 புசலாகும். 1977/78 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் சராசரி ஏக்கருக்குரிய விளைச்சல் 50-70 புசலாகும். உற்பத்தி நிலப்பரப்பும் முன்னரிலும் பார்க்கப் பெருமளவு அதிகரித்துள்ளது. 1969-ம் ஆண்டு 17,09,000 பரப்பு விதைக்கப்பட்டது. 1978 இல் இது 21,62,000 பரப்பாக அதிகரித்தது. இவ்வாறு வளர்ச்சி அதிகரித்து இருப்பினும் இவ்வளர்ச்சி சீரானதாக அமையவில்லை. அத்துடன் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடையவில்லை. உற்பத்தி வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு இக்காலப் பகுதியை 5 முக்கிய பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

(1) 1950–59: 4 கோடி புசலுக்குக் குறைந்த உற்பத்தி

(2) 1959–65: ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் 4 கோடி முதல் 5 கோடி புசல் வரையிலான உற்பத்தி

(3) 1965-70: 5 கோடி முதல் 7 கோடி 80 இலட்சம் புசல் வரையிலான உற்பத்தி

(4) 1971-75: 6 கோடி முதல் 7½ க் கோடி புசல் வரையிலான உற்பத்தி

(5) *1975-79: 6 கோடி முதல் 9 கோடி வரையிலான உற்பத்தி*

கடந்த இரு தசாப்தங்களில் நெல் உற்பத்தியில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அரசாங்கத்தின் பல்வேறு வகையான செயற்திட்டங்களே காரணங்களாக அமைந்துள்ளன. பல்லாயிரக் கணக்கான சிறு நெல் விவசாயிகளைக் கொண்ட நெல் உற்பத்தித்துறை சிக்கலானதொன்ருகும். தொழில் நுட்பம், அறிவு, சம்பிரதாயம், பொருளாதார ஊக்கி, கூட்டுறவு நடவடிக்கை, குத்தகைச் சட்டம், அரசாங்க நிர்வாகம் போன்ற இன்னேரன்ன பல சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகளை உள்ளடக்கிய ஓர் அமைப்பாக இது காணப்படுகின்றது. இவ்வாருன சிக்கல் நிறைந்த கிராமிய விவசாயத்தினை விருத்தி செய்யும் முகமாக அரசாங்கம் பல நடவடிககைகளை மேற்கொண்டு வருகின்றது.

(1) **விலைக் கொள்கை**

விலை வகுப்பது பற்றிய கொள்கையில் பரந்த அளவினதான இரு அம்சங்கள் அடங்கும்.

(அ) உள்ளீடுகளுக்கான விலைக் கொள்கை

(ஆ) வெளியீடுகளுக்கான விலைக் கொள்கை

உள்ளீடு விலை அம்சத்தின் சார்பாக அரசாங்கம் 1950 ஆம் ஆண்டு முதல் நெல்லுக்கு மானியம் வழங்கும் முறையை அமுல்செய்து வருகின்றது. நீர்ப்பாசனத்துக்கான தண்ணீர் வழங்குவதிலும் மானிய வசதி செய்யப்பட்டுள்ளது. வெளியீடு சார்பாக அநேகமாகச் சகல பயிர்களுக்கும் விலை வகையால் ஆதரவளிக்கும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. 1948 ஆம் ஆண்டிலேயே நெல்லுக்கு உத்தரவாத விலைத்திட்டம் கொண்டு வரப்பட்டது. 1952 ஆம் ஆண்டில் உத்தரவாத விலை ரூபா 12 ஆகப் புதுப்பிக்கப்பட்டது. 1966 ஆம் ஆண்டுவரை அதேவிலை தொடர்ந்து இருந்தது. 1966

ஆம் ஆண்டுக்குப் பின்னர் இறக்குமதி விலை வீழ்ச்சி கண்ட போதிலும் நெல்லின் தற்பேதைய விலைக்கு (புசல் ரூபா 40) வருமளவுக்கு உத்தரவாத விலை உயர்ந்து வந்துள்ளது.

அட்டவணை 15

**நெல்லிற்கான உத்தரவாத விலை (1948–78)**

[ரூபாய்களில்]

| காலம் | ஒரு புசல் நெல்லின் விலை |
|---|---|
| 1948 | 8 |
| 1952 | 12 |
| 1967 | 14 |
| 1973 | 18 |
| 1974 | 33 |
| 1978 | 40 |

உத்தரவாத விலைத்திட்டம் உற்பத்தியாளர்களுக்கு நியாயமான விலையை வழங்குவதற்கு மாத்திரமன்றி நெல்லுற்பத்தியைப் பெருமளவு அதிகரிப்பதற்குமாக மேற்கொள்ளப்பட்டது. ஆனல் இத்திட்டம் நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கு எந்தளவுக்கு ஊக்கமளித்துள்ளது என்பதனை மதிப்பிடுவது சற்றுக் கடினமாகும். உத்தரவாத விலையானது லாபக் குறிக்கோள் எதையும் மையமாக வைத்து நிர்ணயிக்கப்படுவதில்லை. எனினும் அது எவ்வாறு விவசாயிகளைக் கவர்ந்துள்ளது என்பதை மதிப்பிடுவதற்கு உற்பத்திச் செலவுக்கும் வெளிச்சந்தை விலைக்கும் இடையேயுள்ள உறவைக் கருத்திற் கொள்வது அவசியமாகும். ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய மதிப்பீடு ஒன்றின்படி 1966-77 ஆம் ஆண்டு காலப்பகுதியிலே 5 மாவட்டங்களில் ஒரு புசல் நெல்லின் உற்பத்திச் செலவு ரூபா 23 முதல் ரூபா 30 ஆக இருந்தது. அக்காலத்தில் ஒரு புசல் நெல்லுக்கு வழங்கப்பட்ட உத்தரவாத விலை ரூபா 14 மாத்திரமே. எனவே உற்பத்திப் பொருட்களின் சந்தை விலைகள் உத்தரவாத விலைகளைவிடப்

பொதுவாகப் பலமடங்கு அதிகமாகக் காணப்பட்டன. இதன் காரணமாக உத்தரவாத விலைத்திட்ட அடிப்படையில் அரசாங்கத்திஞல் மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. உதாரணமாக 1969-ம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட 65.8 மில்லியன் புசல்களில் 13.7 மில்லியன் புசல்களே உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டது. 1978-ல் உற்பத்தி 90.6 மில்லியஞக அமைய உத்தரவாத விலைத்திட்டக் கொள்வனவு 32.0 மில்லியஞகக் காணப்படுகின்றது.

அட்டவணை 16

**உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் நெற்கொள்வனவு (1950 – 77)**

**(மொத்த உள்நாட்டு நெல் உற்பத்தியின் சதவீதமாக)**

| காலம் | கொள்வனவு |
|---|---|
| 1950 | 1.0 |
| 1954 | 10.8 |
| 1956 | 34.4 |
| 1960 | 50.8 |
| 1965 | 58.9 |
| 1970 | 48.4 |
| 1975 | 20.5 |
| 1978 | 35.3 |

மூலம்: ஸ்ரீ லங்கா மத்திய வங்கி.

நெல்லிற்கான உத்தரவாத விலைத்திட்டம் மாத்திரமன்றி உபஉணவுப் பொருட்களுக்கான உத்தரவாத விலைத்திட்டமும் பெருமளவு வெற்றி அளிக்கவில்லை. மாறிவரும் அரசாங்கங்களில் இறக்குமதிக் கொள்கைகள் உபஉணவுப் பண்டங்களின் உத்தரவாத விலைத்திட்டம் வெற்றியளிக்காமைக்குரிய காரணமாகும். நெல்லிற்கான உத்தரவாத விலைத்திட்டம் வெற்றியளிக்காமைக்குப் பின்வரும் காரணங்கள் அடிப்படையாக அமைகின்றன.

(1) நிறுவன ரீதியற்ற மூலகங்களிலிருந்து கடன்பெறும் விவசாயிகள் தமது உற்பத்தியை அவர்களுக்கே விற்று விடுகின்றமை.

(2) கூட்டுறவுச் சங்கங்களுக்கு நெல்லைக் கொடுத்து உடனடியாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை.

(3) கூட்டுறவுச் சங்கத்தில் காணப்படும் ஊழல்கள் அதே சமயம் கூட்டுறவுச் சங்கங்களிடம் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற அச்சம்.

(4) போக்குவரத்து வசதி பற்றுமை.

**(2) குடியேற்றத் திட்டங்களும் நீர் விநியோகங்களும்**

1930-ம் ஆண்டளவிலேயே பெரும் நீர்ப்பாசனத் திட்டங்களில் மக்களைக் குடியேற்றும் வேலை ஆரம்பமாகியது. குடித்தொகை கூடிய பிரதேசங்களில் உள்ள மேலதிகக் குடியானவர்களை குடித்தொகை குறைந்த விருத்தி செய்யப்படாத பிரதேசங்களில் குடியேற்றுவதையே இத் திட்டங்கள் முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தன. எனினும் அவை ஏற்படுத்தப்படுதலின் குறிக்கோள்களை இதுவரை பூரணமாக அடையட முடியவில்லை என்றே கொள்ளலாம். ஆரம்ப காலங்களில் ஒரு குடியேற்றத்திட்டவாசி 5 ஏக்கர் நெற் காணியையும் 3 ஏக்கர் மேட்டுக் காணியையும் பெற்றுவந்தான். 1953–ம் ஆண்டின் பின்னர் இவை 3 க்கு 2 டாகக் குறைக்கப்பட்டது. இக் குடியேற்றத் திட்டங்கள் அன்றும் இன்றும் பெருமளவு வெற்றியளிக்கவில்லை. 1957-ம் ஆண்டளவில் ஒரு குடியேற்றத் திட்டவாசி குடியேற்றத்திட்ட நிலத்தில் பல்வேறு வகையான பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது.

(1) குடியேற்றத் திட்டங்கள் அனைத்தும் வரண்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப் பட்டமையால் விவ

சாய நடவடிக்கைகள் உறுதியாக அமைய முடிய வில்லை.

(2) இக் குடியேற்றத் திட்டங்களில் கல்வி, சுகாதார வசதிகள், போக்குவரத்து வசதிகள், இருப்பிட வசதிகள் போதியளவு அமையவில்லை.

(3) விருத்தி செய்யப்பட்ட பகுதியிலிருந்து வந்து குடி யேறியவர்கள் விருத்தி செய்யப்படாத பகுதிகளில் வாழ்வது கடினமாக அமைந்தது.

(4) இக் குடியேற்றத்திட்ட நிர்வாகப் பொறுப்பாளர் களும் சரியான முறையில் நடந்து கொள்ள வில்லை. இவர்கள் தமது அதிகாரத்தை துஷ்பிர யோகம் செய்பவர்களாகவே காணப்பட்டனர்.

இதன் காரணமாகக் குடியேற்றவாசிகள் 1957-ம் ஆண்டளவில் என்னென்ன கஷ்டங்களை அனுபவித்தார் களோ எப்படியான சூழ்நிலையில் இருந்தார்களோ அதே கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு அதே போன்ற சூழ்நிலையிலேயே இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கி றார்கள். 1970-ம் ஆண்டின் பின்னர் இக் குடியேற் றத் திட்டங்கள் ஓரளவுக்கு வெற்றியளிக்கத் தொடங் கின. உபஉணவுப் பொருட்களின் இறக்குமதி தடை செய்யப்பட்டமை 1972–76-ம் ஆண்டு காலப் பகுதிகளில் குடியேற்றத்திட்ட வாசிகளுக்கு ஒரு வாய்ப்பாக அமைந் தது. அத்துடன் முன்னைய அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட காணிச் சீர்திருத்தச் சட்டங்கள் குடியேற்றத் திட்ட நடவடிக்கைகளுக்கு வாய்ப்பாக அமைந்தது. எனி னும் தற்போதைய அரசாங்கம் மகாவலித் திட்டத்தினூ டாக மிகப் பாரிய குடியேற்றத் திட்டமொன்றை நிறுவ திட்டமிட்டுள்ளது. குடியேற்றத் திட்டங்கள் நீர்ப்பாசன நடவடிக்கைகளையும் உள்ளடக்கியனவாகக் காணப்படும் நிலையில்தான் அவை வெற்றியளிக்க முடியும்.

(3) காப்புறுதித் திட்டம்

பயிர் அழிவு விவசாயிகளின் ஊக்கத்தை மங்கச் செய் துவிடும் ஒரு முக்கிய காரணியாகக் கருதப்படுகின்றது.

விவசாயிகள் எதிர்நோக்கும் நிச்சயமின்மைகளுக்கு மத்தியில் வரட்சி, வெள்ளம், கிருமிகள், நோய்கள் என்பன அவனைக் கதிகலங்கச் செய்து விடுகின்றன. இக்குறைபாட்டிலிருந்து விவசாயிகளைப் பாதுகாக்கும் முகமாக நெற்பயிர்க் காப்புறுதித் திட்டங்கள் 1958 இலிருந்து இயங்கி வந்திருக்கின்றன. இவ்வருடத்தில் 5 மாவட்டங்களில் 26,000 ஏக்கர் நிலம் காப்புறுதி செய்யப்பட்டது. 1962–63 பருவத்தில் 11 மாவட்டங்களில் 65,000 ஏக்கர் நிலம் காப்புறுதியின் கீழ் கொண்டுவரப்பட்டது. 1973–74இல் 16 மாவட்டங்களில் 2,00,000 ஏக்கர் நிலம் காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. 1973–ம் ஆண்டில் விவசாயக் காப்புறுதிச் சட்டம் அறிமுகம் செய்யப்பட்டது. நெல்லிற்கான கட்டாயக் காப்புறுதியாக இது அமைந்தது. இதன்படி சகல விவசாயிகளும் காப்புறுதி நோக்கங்களுக்காகத் தமது நிலங்களைச் சேர்த்துக் கொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இது பெருமளவு வெற்றியளிக்கவில்லை.

புதிய காப்புறுதித் திட்டம் 1975 இல் அமுல் செய்யப்பட்டதின் பின்னரும் கூட காப்புறுதியினால் பாதுகாப்புப் பெற்ற நிலப்பரப்பளவு மிகக் குறைவாகவே இருந்து வந்துள்ளது. 1976/77 காலப்பகுதிகளில் மொத்தச் சாகுபடி நிலப்பரப்பில் 22 சதவீதம் மாத்திரமே காப்புறுதி செய்யப்பட்டிருந்தது. காப்புறுதித் திட்டத்தின் ஆரம்ப வருடங்கள் கடுமையான வரட்சியினால் பாதிக்கப்பட்டதனால் அவை பெருமளவு வெற்றியளிக்கவில்லை. ஆனால் 1976–ம் ஆண்டின் பின்னர் இவை வெற்றியளிக்கத்தக்க வகையில் மாற்றமடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

4. உர மானியத் திட்டம்

ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரிக்கும் முகமாக 1951-ம் ஆண்டளவில் உர மானியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால் 1961–ம் ஆண்டின் பின்னரே நெல்

உற்பத்திக்கான உர விநியோகம் முக்கியத்துவம் பெற்றது. கமத்தொழில் சேவை இலாகா மூலமும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் உர விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஏறத்தாள 50 சதவீத மானிய அடிப்படையில் இவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அட்டவணை 17

நெல் உற்பத்திக்கான உர விநியோகம்

(ஆயிரம் தொன்களில்)

| ஆண்டுகள் | விநியோகம் |
|---|---|
| *1961* | *29.0* |
| *1965* | *42.0* |
| *1970* | *87.1* |
| *1975* | *48.7* |
| *1978* | *113.3* |

மூலம்: பொருளியல் நோக்கு

இலங்கையின் உரப் பயன்பாடு பெருகிச் செல்ல உர மானியத் திட்டமே அடிப்படைக் காரணமாகும். அட்டவணை 17–ல் 1961–ல் 29,000 தொன்னுக இருந்த உர விநியோகம் 1978-ல் 1,13,300 தொன்னுக அதிகரித்துள்ளமையைக் காணலாம். நெல் உற்பத்தியின் அதிகரிப்பிற்கு உர விநியோகம் தூண்டுகோலாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**5. விவசாயக் கடன்**

நிறுவன ரீதியற்ற மூலங்களில் அதிக வட்டிக்குக் கடன் பெறும் விவசாயிகளைப் பாதுகாக்கும் முகமாக விவசாயக் கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. உழவர் விவசாயிகளுக்குக் கடன்களை வழிப்படுத்தும் முயற்சியை 1947–ல் அரசாங்கம் மேற்கொண்டது. இத்திட்டம் காணியாளர்களால் நாடுதழுவிய ரீதியில் நிர்ணயிக்கப்பட்டு வந்தது. 1952–57 வரையிலான 5 ஆண்டு காலத்தில் இக் கடன் திட்டத்தினை உணவுற்பத்தித் திணைக்களம் மேற்கொண்டது. இக்கடன் திட்டம் 1957-ல்

கமத்தொழில் சேவைகள் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது. 1962/63ம் அளவில் 19.3 கோடி ரூபா கடன் வழங்கப்பட்டிருந்தது. 1961-ம் ஆண்டில் நிறுவப்பட்ட மக்கள் வங்கி கிராமியக் கடன் நடவடிக்கைகள் மேலும் விஸ்தரிக்கப்படக் காரணமாயின. 1964-ம் ஆண்டளவில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களை அடிப்படையாகக் கொண்டு கிராமிய வங்கிகள் தோற்றுவிக்கப் பட்டன. இக் கிராமிய வங்கிகளின் வளர்ச்சி கிராமியக் கொடு கடன் திட்டத்தின் முக்கியத்துவத்தினைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது.

அட்டவணை 18

**கிராமிய வங்கிகளின் விஸ்தரிப்பு (1964–1977)**

| வருடம் | கிராமிய வங்கிகள் | விஷேட கிளைகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1964 | 3 | — | — |
| 1969 | 68 | — | — |
| 1974 | 332 | 71 | 403 |
| 1976 | 345 | 158 | 503 |
| 1977 | 285 | 259 | 544 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி பொருளாதார ஆய்வு 1977

கிராமிய வங்கிகள் விவசாயம் தவிர்ந்த ஏனைய பல துறைகளுக்கும் கடன் வழங்கி வருகின்றன. கால்நடை வளர்ப்பு, குடிசைக் கைத்தொழில், வீடமைப்பு, கடன் மீட்சி போன்ற பல்வேறு துறைகளுக்கும் இவை கடன் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். சிறப்பாக நெல் உற்பத்திக்கே பெருமளவு கடன்களை வழங்கி வருகின்றன.

1947/48 ஐ அடிப்படையாண்டாகக் கொண்டு நோக்கும் பொழுது நிறுவன ரீதியான கடன் நடவடிக்கைகள் பெருமளவு விருத்தியடைந்துள்ளது எனலாம். 1975/76 வரை ஏற்பட்டிருற்கும் அதிகரிப்பு 2310 சதவீதமாகும். வருடாந்த சராசரி அதிகரிப்பு 81 சதவீதமாகும். இவ்வாறான

அட்டவணை 19

**கிராமியக் கொடுகடன் திட்டத்தின்கீழ் வழங்கிய பயிர்ச் செய்கைக் கடன்கள்**

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| பயிர்ச்செய்கை ஆண்டு | வழங்கப்பட்ட கடன்கள் | | |
|---|---|---|---|
| | நெல் | ஏனைய பயிர்கள் | எல்லாப் பயிர்களும் |
| 1966/68 — 1969/70 | 180.1 | 19.4 | 199.5 |
| 1970/71 — 1972/73 | 88.2 | 24.8 | 113.0 |
| 1973/74 | 111.1 | 26.2 | 137.3 |
| 1974/75 | 85.6 | 27.3 | 112.9 |
| 1975/76 | 72.2 | 36.4 | 108.6 |
| 1976/77 | 98.7 | 78.8 | 177.6 |
| 1977/78 | 452.7 | 81.4 | 534.1 |
| மொத்தம் | 1,088.7 | 294.3 | 1,383.0 |

**மூலங்கள்:** மக்கள் வங்கி, இலங்கை வங்கி, வரையறுக்கப்பட்ட அட்டண் நெசனல் வங்கி

நிறுவன ரீதியான கொடுகடனமைப்பில் சில போக்குகளை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. முக்கியமாக நிறுவன கடன்களில் மீளப் பெறப்படாதவையின் அளவு பெருமளவு அதிகரித்துச் சென்றுள்ளன. அட்டவணை 20–இல் மீளப் பெறப்பட்டவைகளின் சதவீதம் மீளப்பெருத கடன்களின் முக்கியத்துவத்தை பிரதிபலிப்பதாகவுள்ளது.

அட்டவணை 20 இல் சராசரி வழங்கப்பட்ட கடன்களில் 58 சதவீதம் திருப்பிச் செலுத்தப்படாதவையாகக் காணப்படுகின்றன. குறைந்த விளைச்சல், பயிர் நாசம், கூட்டுறவு அதிகாரிகளின் அக்கறையின்மை, வேறு நோக்கங்களுக்காகப் பணத்தைப் பாவித்தல், அரச அதிகாரிகளின் ஊழல், அரசியல் தலையீடு, விவசாயிக்குத் திருப்பிச் செலுத்தும் நோக்கமின்மை போன்ற காரணங்களே கடன் மீளச் செலுத்தப்படாமைக்கு அடிப்படையாக அமைகின்றன. இக்குறைபாட்டினை நீக்குமுகமாக 1978/79

அட்டவணை 20

வழங்கிய கடன்களில் மீளப் பெறப்பட்டவை.

(சதவீதம்)

| பயிர்ச்செய்கை ஆண்டு | நெல் | ஏனைய பயிர்கள் | எல்லாப் பயிர்களும் |
|---|---|---|---|
| 1967/68 — 1969/70 | 71.4 | 79·9 | 72·2 |
| 1970/71 — 1972/73 | 64·8 | 76·6 | 67·4 |
| 1973/74 | 52·8 | 58·4 | 53.9 |
| 1974/75 | 50·9 | 56·8 | 52·3 |
| 1975/76 | 58·7 | 45·3 | 54·2 |
| 1976/77 | 44·1 | 27·0 | 36·5 |
| 1977/78 | 21·5 | 22·5 | 21·7 |
| மொத்தம் | 43·3 | 41·3 | 42·9 |

மூலம்: *மத்திய வங்கி அறிக்கை.*

பருவத்தில் கடன் நிபந்தனைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. கடன்களை முற்றாக மீளச் செலுத்தியவர்களுக்கே மீண்டும் கடன் வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

இலங்கையின் உழவர் விவசாயத்துறையை விருத்தி செய்யும் முகமாக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஓரளவேவெற்றியைத்தந்துள்ளன. உத்தரவாத விலைத்திட்டம், விவசாயக்கடன் திட்டங்களை சிறப்பாக அமுல் நடத்துவதன் மூலமும், பாரிய நீர்ப்பாசனத் திட்டமான மகாவலிகங்கைத் திட்டத்தினை குறுகிய கால வேளையில் பூர்த்தி செய்வதன் மூலமும், நெல் உற்பத்தியை அதிகரிக்கச் செய்து உணவில் தன்னிறைவு அடைய முடியும்.

**இதுவரை கற்றவை:**

*(1) உழவர் **விவசாயத்தின் பின்னணியும்** பெருந்தோட்டத் துறையின் தோற்றமும்.*

(2) கிராமியப் பொருளாதாரம் பிழைப்பூதியப் பொருளாதாரமாக மாற்றமடைந்தமையும் அதற்கிணங்கிய அதன் பண்புகளும்.

(3) தேசிய உற்பத்தியிலும் தொழில் வாய்ப்பிலும், பொருளாதார வளர்ச்சியிலும் உழவர் விவசாயத்தின் பங்கு.

(4) நெல் உற்பத்தியும், உப உணவுப் பயிர்ச்செய்கையும் எதிர் நோக்கும் பிரச்சனைகள்.

(அ) காணிப் பற்றுமை
(ஆ) காலநிலை பொய்த்து விடுகின்றமை
(இ) சிக்கனமற்ற உடமைகள்
(ஈ) குறைந்த உற்பத்தித் திறன்
(உ) கீழ் உழைப்பும் பருவகால வேலையின்மையும்
(ஊ) பேதியளவு ஊக்கிகள் இன்மை
(எ) விவசாயக் கடன்

(5) உணவு உற்பத்தியைப் பெருக்க அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள்.

(அ) குடியேற்றத் திட்டங்கள்
(ஆ) உரமானியத் திட்டம்
(இ) காணி உச்சவரம்புச் சட்டங்கள்
(ஈ) பயிர்க் காப்புறுதித் திட்டம்
(உ) உத்தரவாத விலைத்திட்டம்
(ஊ) விவசாயக் கடன் நடவடிக்கைகள்
(எ) நீர்ப்பாசனத் திட்டங்கள்

# பொருளாதாரத்தில் மகாவலியின் பங்கு

பாரிய நீர்ப்பாசனத் திட்டமான மகாவலிகங்கை அபிவிருத்தித் திட்டம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததொன்றுகக் கருதப்படுகின்றது. இலங்கை ஒரு விவசாய நாடாக இருந்தும் விவசாயத் துறை பிழைப்பூதியத் துறையாகக் காணப்படுவதுடன், இன்றும் நாடு அத்தியாவசியமான உணவுப் பொருளான நெல் அரிசியையும், உபஉணவுப் பொருட்களையும் இறக்குமதி செய்யும் நிலையிலேயேயுள்ளது. நெல் உற்பத்தியையும் உபஉணவுற்பத்தியையும் மேற்கொள்ளப் பெருந்தொகை நிலங்கள் இருந்தும்கூட அவற்றில் ⅔ பங்கு வரண்ட பிரதேசங்களாகக் காணப்படுகின்றன. இவ் வரண்ட பிரதேசங்களைப் பயிர்செய் நிலங்களாக மாற்றும் முயற்சியாக உருவாக்கப்பட்ட மாபெரும் திட்டமே மகாவலி கங்கைத் திட்டமாகும்.

இலங்கையின் 25,000 சதுரமைல் பரப்பில் 4034 சதுர மைல்களில் மகாவலி நதிப் படுக்கை விரிந்து கிடக்கின்றது. அந்தப் பரப்பில் வருடாந்தம் சராசரி 67 இலட்சம் ஏக்கர் அடித் தண்ணீர் ஊற்றெடுப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் 47,00,000 ஏக்கர் அடி நீரைப் பயன்படுத்தும் முகமாக உருவாக்கப்பட்ட திட்டமே மகாவலி கங்கைத் திட்டமாகும். ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டப் பிரிவு உலக விவசாய ஸ்தாபன நிபுணர் குழு இலங்கை நிபுணர்களுடன் இணைந்து 1965 முதல் 1970 வரையான காலத்தில் தயாரித்த தலைமைசால் திட்டமான மகாவலி கங்கைத் திட்டம் காணப்படுகின்றது. பல நோக்கங்களைக் கொண்ட இத் திட்டத்தை நிறைவேற்ற 1968-ம் ஆண்டிலேயே 670 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருந்தது. பிரஸ்தாபத்திட்டம் 30 வருட காலத்தில் செயற்படுவதாக இருந்தது. ஆனால் தற்போதைய அரசாங்கம் இதன் கால

அளவை ஆறு வருடங்களாகச் சுருக்கி இக்குறுகிய கால எல்லேக்குள் பாரிய பணியை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளது.

1983-ம் ஆண்டிற்குள் மகாவலிகங்கை பலநோக்கு அபிவிருத்தித் திட்டத்தின் பெரும் பகுதி பூர்த்தி செய்யப் படவுள்ளது. இக்காலப் பகுதிக்கிடையில் ஏறத்தாள 15,00,000 மக்கள் இப்பிரதேசத்தில் குடியேற்றப்படுவர். அத்துடன் இவர்கள் தொழில் வாய்ப்புக்களேயும் பெறக் கூடியதாக இருக்கும் 5 பாரிய அணேகளும் அதனுடன் தொடர்பான வேலேகளும் நிர்மாணிக்கப்படவுள்ளன. ஏற்கனவே பயிர்செய்யப்பட்டுவரும் 90,000 ஏக்கர் நிலத்துடன் மேலும் 3,20,000 ஏக்கர் புதிய நிலங்கள் பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டுவரப்படும். 5 பெரிய நீர்த் தேக்கங்கள் நிறுவப்படுவதுடன் அவற்றிலிருந்து 381 மெகவட் மின்சக்தியும் 1291 கிலோவோல்ட் வலுவும் உற்பத்தி செய்யப்படக் கூடியதாகவும் இருக்கும். இவை யாவற்றையும் மேற்கொள்ள 1100 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மகாவலி ஆரம்ப அடிப்படைத்திட்டம் ஒரு பலநோக்குத் திட்டமாக அமைந்திருந்தது. ஏறக்குறைய நாட்டின் 40 சதவீதமான நிலப்பகுதியை உள்ளடக்கும் அனேக செயன் முறைகளேயும் நடவடிக்கைகளேயும் கொண்டதாக இது உருவாக்கப்பட்டது. திட்டத்தின் ஆரம்ப நோக்கம் 47,00,000 அடி நீரை உபயோகிப்பதன் மூலம் 9'00,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகளே மேற்கொள்வதே. அத்துடன் 15 பலநோக்குத் திட்டங்களேயும் 4 வடிநிலம் சார்ந்த திசை திருப்புக்கால்வாய்களேயும் மொத்தமாக 500 மெகவாட் மின்சக்தியை வழங்கக்கூடிய மின் சக்தி நிலேயங்களேயும் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது. இத் திட்டத்திற்கான ஆரம்ப செலவுகள் 1968-ஆம் ஆண்டு விலேகளின்படி 670 கோடி ரூபாவாகும். ஆனல் 1977-ன் விலேகளின்படி இச்செலவு 2700 கோடி ரூபாவாகும். ஆயி

னும் இத்திட்ட வேலைகளுக்கிருந்த 30 வருட காலப் பகுதி ஆறு வருடங்களாகக் குறைக்கப்பட்டு இன்று முழுத் திட்டமும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

## துரிதப்படுத்தலுக்கான நோக்கங்கள்:

பாரிய நீர்ப்பாசனத் திட்டமான மகாவலி கங்கைத் திட்டம், ஆறு வருட காலப்பகுதிக்கிடையில் துரிதப்படுத்தப்பட பல காரணங்கள் அடிப்படையாக அமைகின்றன. 1968-ல் ஆரம்பித்த இத்திட்டம் இன்றுவரை சரியான முறையில் செயற்படுத்தப் படாமை இலங்கையின் பல்வேறு வகையான பிரச்சனைகளுக்கு காரணமாக அமைந்துள்ளன. இக்குறைபாட்டை நீக்கும் முகமாக 1977-ம் ஆண்டு பதவியேற்ற ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் இத்திட்டத்தை ஆறுவருட காலப் பகுதிக்கிடையில் பூர்த்தி செய்ய எண்ணியுள்ளது. இவ்வாறு திட்டம் துரிதப்படுத்தப்படப் பின்வரும் காரணிகள் அடிப்படையாக அமைகின்றன.

(1) இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சி குன்றிய தொன்றாக இருப்பதுடன் உறுதியற்றதொன்றாகவும் காணப்படுகின்றது. எனவே நாடு தழுவிய ரீதியில் உறுதியான பொருளாதாரம் ஒன்றையும் புதிய சமுதாயம் ஒன்றையும் கட்டியெழுப்ப வேண்டிய சூழ்நிலையில் இன்று நாம் இருக்கின்றோம். இவ்வாறான ஓர் அமைப்பை உருவாக்க மகாவலி கங்கைத் திட்டம் உறுதுணையாக அமையும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

(2) இலங்கை அரிசி, சீனி, மா, பால் போன்ற விவசாயப் பொருட்களை இன்னும் பெருமளவு இறக்குமதி செய்யும் நிலையிலேயே இருக்கின்றது. இவற்றைப் பெற்றுக் கொள்வதில் தொடர்ந்தும் நாம் வெளிநாட்டிலேயே தங்கியுள்ளோம். வருடா வருடம் ஏறத்தாள 300 கோடி ரூபாய் அன்னிய செலாவணி இதற்

காகச் செலவிடப்படுகின்றது. இவ் அன்னிய செலாவணியை மீதப்படுத்தவும் விவசாய உணவுப் பொருட்களில் தன்னிறைவு அடையவும் மகாவலிகங்கைத் திட்டம் ஓர் உந்து கருவியாக அமையலாம்.

(3) வேலைவாய்ப்பு ஆற்றலை உயர்த்தவும் வேலையற்றோருக்கு வேலை வாய்ப்பினை வழங்கவும் மகாவலிகங்கைத் திட்டம் துரிதப்படுத்தப்படுவதற்கு மற்றுமோர் காரணமாகும். நாட்டின் உழைக்கும் படையில் 9.2 சதவீதத்தினர் வேலையற்றோராவர். வருடாந்தம் புதிதாக 1,50,000 பேர் வேலைப்படையினரில் சேர்கின்றனர். இவ் வேலையற்றோர் பிரச்சனைக்குத் தீர்வுகாண இத்திட்டம் வழிவகுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(4) இலங்கையின் கிராமப் புறங்களில் 10 சதவீதத்தினர் மாத்திரமே மின்வலுவைப் பெற்றுள்ளனர். நீர்மின் வலு உற்பத்திச் சக்தியை விருத்தி செய்ய மகாவலி கங்கைத் திட்டம் வழிவகுக்கின்றது. இதன் மூலம் இலங்கையில் உற்பத்தி செய்யக்கூடிய மின்சக்திவலு என்பனவற்றின் 60 சதவீதத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். கிராமப் புறங்களின் வளர்ச்சிக்கு இது ஊன்றுகோலாக அமையும்.

(5) தீவிரமடைந்து செல்லும் பணவீக்க நிலைமைகள் செலவுகள் பல மடங்காக உயர்வடையக் காரணமாக அமைகின்றன. மகாவலிகங்கைத் திட்டம் தயாரிக்கப்பட்ட காலப்பகுதியான 1968-ல் 670 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. ஆனால் 1973-ல் பணவீக்க நிலைமைகள் இச்செலவினை 2500 கோடி ரூபாவாகப் பிரதிபலித்தது. எனவே மேலும் திட்டம் காலதாமதப் படுத்தப்படின் உற்பத்திச் செலவு பல மடங்கு அதிகரிக்கலாம். உற்பத்திச் செலவைக் குறைக்க மகாவலி கங்கைத் திட்டம் துரிதப்படுத்தப்பட்டமை மற்றுமோர் காரணியாகும்.

மேற்குறிக்கப்பட்ட நோக்கங்களைக் கொண்டே 30 வருடங்களாக நீண்டிருந்த மகாவலி கங்கைத் திட்டத்தை ஆறு வருட காலப் பகுதியில் பூர்த்தி செய்ய அரசாங்கம் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது. மூலத்திட்டம் 9 இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகளை மேற்கொள்ள வழிவகுக்கின்றது. இதில் 6,54,000, ஏக்கர் புதிய நிலங்களாகவும், 2,46,000 ஏக்கர் நிலங்கள் ஏற்கனவே பயிர் செய்யப்பட்டனவாகவும் காணப்படுகின்றன. ஐந்து அல்லது ஆறு வருட காலப்பகுதியில் 5 பெரும் நீர்தேக்கங்களை நிறுவுவதன் மூலம் 9.00,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கொத்மலை நீர்த்தேக்கம், தெல்தெனியா நீர்த்தேக்கம், விக்டோரியா நீர்த்தேக்கம், அருகில் றந்தெனிகல நீர்த்தேக்கம், உல்ஹிட்டியாவில் உல்ஹிட்டி - ரத்கிந்த நீர்த்தேக்கம் பிம்புறத் தேவவுக்கருகே மதுறுஓயா நீர்த்தேக்கம் என்பனவற்றை நிறுவுவதற்குத் தேவையான நிதியை உலக வங்கியிடமும், நட்பு நாடுகளிலும் பெற்றுக்கொள்ள அரசாங்கம் எண்ணியுள்ளது. இத்திட்டம் பின்வரும் விதிகளைக் கருத்திற் கொண்டு செயற்பட்டு வருகின்றது.

(1) மகாவலி வடிநிலத்தில் கிடைக்கும் நீர்வளங்கள் அனைத்தையும் நீர்ப்பாசன நீர்மின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு உபயோகித்தல்.

(2) வடிநிலப் பகுதியில் கிடைக்கும் நிலவளங்கள் அனைத்தையும் நீர்ப்பாசன அபிவிருத்திக்கு உபயோகித்தல்.

(3) மகாவலி வடிநிலத்தில் கிடைக்கும் மேலதிக நீரை அயலிலுள்ள வடிநிலங்களுக்கு மாற்றுதல்.

பலநோக்குத் திட்டமான மகாவலி கங்கைத் திட்டத்தின் பரிமானம், இலக்குகள், சமூக பொருளாதார நலன்கள் என்பனவற்றின் பின்னணி சிக்கல் நிறைந்ததொன்

ருகும். எனினும் பல்வே சாகதமான சமுகப் பொரு ளாதாரக் காரணிகளைக் கருத்திற் கொண்டே மகாவலி கங்கைத் திட்டம் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

**பொருளாதார விளைவுகள்:**

இலங்கையின் பொருளாதாரத்தில் மகாவலி கங்கைத் திட்டம் ஒரு பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தும் என்ப தனை மறுப்பதற்கில்லை. இத்திட்டத்தின் மூலம் ஏறத் தாள 9,00,000 ஏக்கர் நிலம் பயிர்ச்செய்கையின் கீழ்க் கொண்டுவரப் படுவதன் மூலம் நெல் உற்பத்தி அதி கரித்து நாடு உணவுத் தேவையில் சுயதேவைப் பூர்த்தி யடையும் வாப்பினைப் பெறுகின்றது. நெல் உற்பத்தி மாத்திரமன்றி பருத்தி, சோயா அவரை, பல்வேறு தானிய வகைகள், காய்கனிகள், நிலக்கடலை என்பன போன்ற உபஉணவுப் பொருட்களையும் இப்பிரதேசத்தில் உற்பத்தி செய்ய முடியுமாகையால் உணவிலும் உப உணவிலும் தன்னிறைவு அடைவதற்குரிய வாய்ப்புக்கள் உண்டாகலாம்.

ஒரு குடும்பத்திற்கு 2½ ஏக்கர் என்ற அடிப்படையில் ஏறத்தாள 15,00,000 மக்கள் இப்பிரதேசத்தில் குடியமர்த் தப்படுவர். பெரும்பாலான விவசாயிகளுக்கு 2½ ஏக்கர் காணியும் ½ ஏக்கர் குடியிருப்பு நிலமும் வழங்கப்பட்டுள் ளது. ஆரம்பகால குடியேற்றத்திட்டங்கள் போலல்லாது தொகுதிக் குடியிருப்புக்களை மேற்கொள்ளல் மூலமும், குக் கிராமத் தொகுதிகளைக் கிராமங்களாக ஒன்றிணைப்பதன் மூலமும் குடியேற்றத் திட்டங்கள் வெற்றிகரமாகச் செயல் படுவதற்கு வழி வகுக்கப்பட்டுள்ளது. குடியேற்ற வாசிகளை பல பிரச்சனைகள் எதிர்நோக்கினும் இக் குடியேற்றங்கள் இலங்கையின் நீண்ட காலப் பிரச்சனையான வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு தீர்வாக அமைவதுடன் நகரப் புறங் களை நாடிச் செல்வோரைத் தடுத்து புதிய பட்டினங்களின் தோற்றத்திற்கு வழிவகுக்கும்.

அபிவிருத்திப் பிரதேசங்களில் புதிய கைத் தொழில்களை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயத்தை அடிப் படையாகக் கொண்ட கைத்தொழில்கள், துணைக் கைத் தொழில்கள், சிறிய கைத்தொழில்கள் ஆகியவற்றை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. இது இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சிக்கும் அதன் மூலம் தோன்றும் பொருளாதார வளர்ச்சிக்கும் வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின் றது. மகாவலி அபிவிருத்திக்கான மொத்தச் செலவில் 50 சதவீதம் ஐக்கிய இராட்சியம், கனடா, யப்பான், ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு, சுவீடன் ஆகிய நாடுகளிலி ருந்து பெறத் திட்டமிடப்பட்டுள்ளது. மிகுதி 50 சதவீத மும் உள்ளூர் மூலவளங்களிலிருந்தே திரட்டப்படும். உள்ளூர் மூலவளங்களின் பயன்பாடு அதிகரிக்கவும் அவற் றின் உற்பத்தி அதிகரிக்கவும் இது வழி வகுக்கும்.

மகாவலி அபிவிருத்தித் திட்டம் அரசாங்கத்தினுல் குறிக்கப்பட்ட காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்படுமாளுல் இலங்கையின் பொருளாதாரம் சுபீட்சமான பாதையை நோக்கிச் செல்லலாம். இலங்கையில் தற்பொழுதுள்ள எல்லா நீர்ப்பாசனத் திட்டங்களும் 9,25,000 ஏக்கர் நிலத் திற்கே நீர்ப்பாய்ச்சப்படுகின்றது. இத்திட்டம் மாத்திரம் 9,00,000 ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசனத்தைப் பெற்றுத் தருமாகையால் இலங்கையின் பொருளாதாரத்துறையில் பெரியதோர் மாற்றத்தினை ஏற்படுத்துவதாக அமையும். இதன்மூலம் தோன்றும் உணவுற்பத்தியின் தன்னிறைவு இதுவரை செலவிட்ட வெளிநாட்டுச் செலாவணியைச் சேமிக்க வழி வகுக்கின்றது. செலாவணியின் சேமிப்பு மட்ட உயர்வு நீண்ட காலமாக நிலவி வரும் செல்மதி நிலுவைப் பற்ருக்குறைக்குத் தீர்வாக அமையுலாம். உண வுற்பத்தியில் தன்னிறைவு, கைத்தொழில் வளர்ச்சி, வேலை யில்லாத் திண்டாட்டத்தை மட்டுப்படுத்தல், சனத் தொகை செறிவு குறைந்த பகுதிகளில் மக்களைக் குடிய மர்த்தல், அன்னிய செலாவணியைச் சம்பாதித்தல்

போன்ற சாதகமான பொருளாதார வளங்களைப் பெற்றுத் தருவதில் எதிர்காலத்தில் மகாவலி கங்கைத் திட்டம் பெரும் பங்கினை வகிக்கும்.

**இதுவரை கற்றவை:**

(1) வரண்ட பிரதேசங்களை பயிர்செய் நிலங்களாக மாற்றும் முயற்சியில் உருவாக்கப்பட்டதே மகாவலிகங்கைத் திட்டமாகும்.

(2) மூலத் திட்டம் 1965/70 காலப்பகுதியில் உருவாக்கப்பட்டது. இத்திட்டம் 1977-ம் ஆண்டின் பிற்பகுதியில் துரிதப்படுத்தப்படும் திட்டமாக மாற்றியமைக்கப்பட்டது.

(3) 1983-ம் ஆண்டின் இறுதிக்குள் இத்திட்டம் பூர்த்தி செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(4) உறுதியான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தல், உற்பத்திச் செலவினைக் குறைத்தல், அன்னியச் செலவாணியைச் சம்பாதித்தல், வேலை வாய்ப்பினை அதிகரித்தல் ஆகிய நோக்கங்களே இத்திட்டம் துரிதப்படுத்தப் பட்டமைக்கான காரணங்களாகும்.

(5) உணவில் தன்னிறைவு அடையவும். கைத்தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தவும், வேலையில்லாத் திண்டாட்டத்திற்குத் தீர்வு காணவும், செலவாணிப் பிரச்சனையை நீக்கவும் மகாவலி கங்கைத் திட்டம் வழிவகுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# பெருந்தோட்டப் பொருளாதாரம்

*1840*-ம் ஆண்டிலிருந்தே பெருந்தோட்டப் பொருளாதார வளர்ச்சியினை இலங்கையில் அவதானிக்க முடிகின்றது. போத்துக்கேயரினுல் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ்வமைப்பானது இலங்கையின் பொருளாதாரம் பல்வேறு விதத்தில் திரிபடையக் காரணமாயிற்று. டச்சுக்காரர்களினுல் ஆரம்பிக்கப்பட்ட கோப்பிப் பயிர்ச்செய்கை பிரித்தானியரின் ஊடாக மேலும் விஸ்தரிக்கப்பட்டது. ஐரோப்பியர்கள் தமது செல்வாக்கினூடாக ஏற்கனவேயிருந்த உணவிற்கான விவசாயத்துக்கு எதிரிடையான பெருந்தோட்ட அமைப்பினைச் சிறப்பாக இயக்கினர். பெருந்தோட்ட முறை கூலிப்படி தொழிலையும் பெரிய தோட்டங்களின் ஆலை மாதிரி இயக்கத்தினையும் அன்னிய சந்தைக்கான உற்பத்தியையும் கொண்டிருந்தது. இவை கவர்ச்சிகரமான இலாபத்தை ஈட்டித் தந்தமையினுல் இலங்கையின் பொருளாதாரம் முற்றுகவே பெருந்தோட்டங்களைச் சுற்றிப் புனரமைப்புப் பெற்றது.

*1834* இலிருந்து *1842* வரை இலங்கையின் பெருந்தோட்டப் பயிராகக் கோப்பி காணப்பட்டது. *1846*-ம் ஆண்டுவரை கோப்பிச் செய்கை வளர்ச்சியடைந்தது. ஆனுல் *1846*-ல் ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்தம் கோப்பியின் விலை மிகப் பயங்கரமாக வீழ்ச்சியடையவும் நோயினுல் கோப்பிப் பயிர்கள் அழிந்தமையும் பெருந்தோட்டத் பயிர்களில் அதன் முக்கியத்துவம் குறைவடையக் காரணமாயிற்று. *1866*-இல் *3,00,000* ஏக்கராக இருந்த கோப்பிப் பயிர்ச் செய்கை *1886*-ஆம் ஆண்டளவில் முற்றுகவே வீழ்ச்சியடைந்தது. கோப்பியின் இடத்தினைப் பின்னர் தேயிலையும், இறப்பரும், தேங்காயும் நிரப்பின. இவ்வாறுன ஒரு வடிவமைப்பு இலங்கையின் பொருளாதாரம், பெருந்தோட்டப் பொருளாதாரமாக மாற வழி வகுத்தது. பிரித்தானிய தோட்ட முதலாளி

களின் சொத்துரிமை, பிரித்தானிய வங்கிகளின் நிதியளிப்பு, இந்தியக்கூலி முறை ஆகியன பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சிக்குக் காரணங்களாயின.

18-ஆம் நூற்றூண்டின் பிற்பகுதியில் செம்மையான பெருந்தோட்டப் பொருளாதாரம் புகுத்தப்பட்டதோடு நாட்டின் பொருளாதாரம் இரு பெரும் பிரிவுகளாக மாற வழிவகுத்தது. பெருந்தோட்டப் பயிர்கள் அதிக இலாபத்தை ஈட்டித் தந்தமையினுல் அவற்றின் மீதான நடவடிக்கைகளும் அதிகரித்தன. நீண்ட காலமாக பிரித்தானியரின் ஆதிக்கத்தின் கீழிருந்த பெருந்தோட்டங்கள் இன்று தேசியமயமாக்கப்பட்ட நிலையிலும் கூட இலங்கையின் பொருளாதாரத்தினை நிர்ணயிப்பதில் பெருந்தோட்டப் பயிர்கள் முக்கிய இடத்தினைப் பெறுகின்றன. எனவே பெருந்தோட்ட முறையினுல் புகுத்தப்பட்ட பொருளாதார அடிப்படை மாற்றங்கள் இன்றுவரை நிலவுவதுடன் அதன் பாரதூரமான விளைவுகள் இன்றும் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன.

**உற்பத்தியமைப்பு:**

நாட்டின் ஏற்றுமதி வருமானத்தை நிர்ணயிப்பதில் நீண்ட காலமாக மரபுரீதியான பெருந்தோட்டப் பயிர்களே முக்கிய இடத்தினை வகித்து வந்துள்ளன. இன்றும் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் 70 சதவீதம் பெருந்தோட்டப் பயிர்கள் மூலமே பெறப்படுகின்றது. இலங்கையின் பயிர் நிலப்பரப்பாகிய 46 இலட்சம் ஏக்கரில் பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய மூன்றும் 23 இலட்சம் ஏக்கர் நிலத்தில் பயிரிடப்படுகின்றன. ஆரம்ப காலத்திலிருந்தே உற்பத்தியமைப்பில் பெருமளவு மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. சிறப்பாக கடந்த 10 ஆண்டுக் காலப்பகுதியில் பயிரிடும் நிலப்பரப்பின் அளவில் சிறிதளவு மாற்றங்களே ஏற்பட்டுள்ளன. 1969–ல் தேயிலைப் பயிர்ச் செய்கை 5,56,514 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டது. 1978–ல் இது

6,03,464 ஏக்கராக மாத்திரமே அதிகரித்து வந்தது. 1969-ல் 5,63,633 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்ட இறப்பர் உற்பத்தி 1978-ல் 4376 ஏக்கராக வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கையில் தென்னை பயிரிடப்படும் நிலம் 11,50,000 ஏக்கராகும். இது தேயிலை இறப்பர் இரண்டும் பயிரிடப் படும் மொத்த நிலப்பரப்புக்கு நிகரானது. முதன்மை வேளாண்மைப் பயிர்களில் மொத்தச் சாகுபடிப் பரப்பள வினை அட்டவணை 21 காட்டுகின்றது.

அட்டவணை 21

பெருந்தோட்டப் பயிர்களின் பரப்பளவு 1969–78
(ஏக்கரில்)

| காலம் | தேயிலை | இறப்பர் | தென்னை |
|---|---|---|---|
| 1969 | 5,56,514 | 5,63,633 | — |
| 1971 | 5,97,171 | 5,67,974 | — |
| 1973 | 5,98,740 | 5,65,000 | — |
| 1975 | 5,97,691 | 5,62,494 | — |
| 1978 | 6,03,464 | 5,59,257 | 11,50,000 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை

பெருந்தோட்ட வரலாற்றினை நோக்கும் பொழுது நீண்ட காலமாக இவற்றின் உடைமையாளர்கள் வெளி நாட்டவர்களாகவே இருந்து வந்துள்ளமையைக் காண லாம். இவ்விவசாயத்தில் பெரிய வர்த்தக நிறுவனங்களே ஆதிக்கம் செலுத்தி வந்தன. இப் பண்டங்களுக்கான சந்தை பெருமளவு வெளிநாட்டிலேயே காணப்பட்டது. சிறப்பாகத் தேயிலை, இறப்பர் ஆகிய இரண்டும் முற்றாக வெளிநாட்டுச் சந்தையிலேயே தங்கியிருந்தன. தெங்குப் பொருட்கள் உள்நாட்டுச் சந்தை வாய்ப்பையும் கொண் டிருந்தது.

## தேயிலை உற்பத்தி:-

இலங்கையில் தேயிலை பயிரிடப்படும் நிலப்பரப்பு சுமார் 6,30,000 ஏக்கர்களாகும். பெரும்பாலான தேயிலை

உற்பத்தி இலங்கையில் மத்திய மலைநாட்டிலேயே மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறு உற்பத்தியாகும் தேயிலையை உயர்நிலைத் தேயிலை எனவும், இடைநிலைத் தேயிலை எனவும், தாழ்நிலத் தேயிலை எனவும் பாகுபடுத்தலாம். தேயிலை உற்பத்தியின் நிலப்பரப்பில் பெருமளவு மாற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை. 1946-ல் 5,50,000 ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலைப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டன. எனவே நீண்டகாலமாக ஒரே நிலப்பரப்பிலேயே தேயிலைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

இலங்கையில் தேயிலைத் தோட்டங்கள் பெருந்தோட்ட அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏறத்தாள 40 சதவீதத்திற்கு மேற்பட்ட தேயிலை பயிரிடப்படும் நிலங்கள் 500 ஏக்கருக்கும் மேலானவையாகும். இத்தோட்டங்கள் நீண்டகாலமாக ஸ்ரேலிங் கம்பனிகளுக்குச் சொந்தமாக இருந்தன. ஆனால் 1975-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட காணிச் சீர்திருத்த (திருத்தச்) சட்டங்கள் மூலம் தேசிய உடைமைகளாக்கப்பட்டன. இன்று இவை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை என்பவற்றின் மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

தேயிலை உற்பத்திப் போக்கினை நோக்கும் பொழுது கடந்த 10 ஆண்டுகளில் அவை வீழ்ச்சிப் போக்கினையே காட்டுகின்றன. இவ்வாறு நீண்ட காலமாக தேயிலை உற்பத்தி பெருமளவு அதிகரிக்காமைக்கு பின்வரும் காரணங்கள் அடிப்படையாக அமைகின்றன.

(1) நீண்ட காலமாக ஒரே நிலத்தில் பயிர்ச் செய்கை மேற் கொள்ளப்படுகின்றமையால் சராசரி விளைச்சல் மூன்னரிலும் பார்க்க குறைவடைந்து காணப்படுகின்றது.

(2) தேயிலை உற்பத்தி நிலைகளில் வரட்சி காரணமாகவும் காணி ஒதுக்கீடு காரணமாகவும் உற்பத்தி வீழ்ச்சியடைந்து செல்கின்றமை.

(3) உற்பத்தி செலவுகள் உயர்ந்து வருவதுடன் ஒப்பியல் ரீதியாக அறவிடப்படும் ஏற்றுமதித் தீர்வைகளும் உயர்மட்டத்தில் இருந்து வருவதின் விளைவாக உற்பத்தியாளர்களின் இலாப மட்டங்கள் குறைவடைந்து செல்கின்றமை.

(4) உரம் பசளை ஆகியவற்றின் பாவனைகள் குறைவடைந்து செல்கின்றமை.

அட்டவணை 22

**தேயிலை உற்பத்திப் போக்குகள்**
**(பத்து இலட்சம் இருத்தல்களில்)**

| ஆண்டு | மொத்த உற்பத்தி |
|---|---|
| 1969 | 484 |
| 1970 | 468 |
| 1971 | 480 |
| 1972 | 471 |
| 1973 | 466 |
| 1974 | 450 |
| 1975 | 471 |
| 1976 | 433 |
| 1977 | 460 |
| 1978 | 439 |

மூலம்: இலங்கைத் தேயிலைச் சபை

## இறப்பர் உற்பத்தி:

முதல் விளைவுப் பொருளான இறப்பர் சுமார் 5,59,000 ஏக்கர் நிலத்தில் பயிரிடப்படுகின்றது. இப் பயிர்ச்செய்கை பெருந்தோட்ட அடிப்படையில் மத்திய மலைநாடுகளிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. உற்பத்தி நிலங்களில் ஏறத்தாள 50 சதவீதம் 100 ஏக்கருக்கு மேற்பட்டவையாகும். தேயிலையுடன் ஒப்பிடும் பொழுது இறப்பரில் சிற்றுடைமைகளின் அளவு அதிகமாகும். அட்டவணை 23 இறப்பருக்கான பரப்பளவினை பங்கீட்டு முறையில் தருகின்றது.

அட்டவணை 23

## இறப்பரின் பங்கீட்டு முறை

(சதவீதமாக)

| பரப்பளவு | இறப்பர் |
|---|---|
| 10 ஏக்கருக்குக் குறைவானது | 30.9 |
| 10 — 100 | 22.8 |
| 100 — 500 | 21.9 |
| 500 ஏக்கருக்கு மேலானது | 14.4 |
| | 100.0 |

மூலம்: தேயிலே இறப்பர் கட்டுப்பாட்டாளர்களது அறிக்கை

இறப்பரின் உற்பத்திப் போக்குகள் காலத்திற்குக் காலம் மாற்றமடைந்து வந்துள்ளன. அதற்கிணங்க ஏற்று மதிகளும் மாற்றமடைந்து சென்றுள்ளமை குறிப்பிடத் தக்கதாகும். இறப்பரின் ஏற்றுமதி அதிகரிப்போடு ஒப்பிடும் பொழுது விலேமட்டங்களின் அதிகரிப்பு வேகம் கூடிய தொன்ருகவுள்ளது. பெற்ரேல் இரசாயனக் கைத்தொழில் களின் உற்பத்தியாக செயற்கை இறப்பர் இருப்பதாலும்

அட்டவணை 24

## இறப்பர் உற்பத்தியும் ஏற்றுமதியும்

| | உற்பத்தி | ஏற்றுமதிகள் (தொகை மில்லியன் கிலோ) | சராசரி (கிலோ ரூபா) |
|---|---|---|---|
| 1975 — 76 | | | |
| முதல் அரையாண்டு சராசரி | 75.4 | 78.1 | 4.56 |
| இரண்டாம் அரையாண்டு சராசரி | 80.1 | 70.6 | 5.88 |
| 1977 | | | |
| முதல் அரையாண்டு | 71.3 | 78.9 | 6.79 |
| இரண்டாம் அரையாண்டு | 75.5 | 55.7 | 7.13 |
| 1978 | | | |
| முதல் காலாண்டு | 38.2 | 42.1 | 13.92 |
| இரண்டாம் காலாண்டு | 41.2 | 41.6 | 13.54 |
| முதல் அரையாண்டு | 79.4 | 83.7 | 13.75 |

எண்ணெய் விலை அதிகரித்துச் செல்லும் போக்கைக் கொண்டிருப்பதாலும் உலக சந்தையில் செயற்கை இறப்பரின் விலை உயர்வடைந்து செல்கின்றது. இதன் காரணமாக இயற்கை இறப்பரின் விலையும் உயர்வடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கதோர் மாற்றமாகும்.

இறப்பரின் உற்பத்தியில் பெரும் பகுதி ஏற்றுமதிக்காகவே பயன்படுத்தப்படுகின்றது. மொத்த உற்பத்தியில் ஏறத்தாள 95 சதவீதம் ஏற்றுமதியாகின்றன. பெற்றோலின் விலை ஏற்றம் இலங்கையின் இறப்பருக்கு ஒரு பிரகாசமான எதிர்காலத்தைப் பெற்றுத் தரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் உற்பத்திப் போக்கினை நோக்கும் பொழுது அவற்றின் தளம்பல் முக்கிய குறைபாடாகக் கருதப்படுகின்றது.

## தெங்குற்பத்தி:

இலங்கையில் தென்னை பயிரிடப்படும் நிலப்பகுதி சுமார் 11,50,000 ஏக்கர்களாகும். 85 சத வீதமான தென்னைப் பயிர்ச் செய்கை நிலம் இலங்கையின் 8 மாவட்டங்களில் காணப்படுகின்றது. 66 சதவீதமானவை இந்த 8 மாவட்டங்களில் மூன்றில் காணப்படுகின்றது. இலங்கையின் தென்னை பயிரிடப்படும் நிலப்பரப்பளவின் சராசரி பங்கீடு பின்வருமாறு.

அட்டவணை 25

**தென்னை பயிரிடும் நிலப்பரப்பு**

| மாவட்டம் | ஹெக்டர் | மொத்தம் (வீதம்) |
|---|---|---|
| குருநாகல் | 157,000 | 39 |
| கொழும்பு | 89,000 | 22 |
| புத்தளம் | 60,000 | 15 |
| கேகாலை | 28,000 | 7 |
| அம்பாந்தோட்டை | 21,000 | 5 |
| களுத்துறை | 15,000 | 4 |
| மாத்தறை | 15,000 | 4 |
| காலி | 15,000 | 4 |
| மொத்தம் | 400.000 | 100.0 |

இலங்கையைப் பொறுத்தவரையில் தென்னை பெரும்பாலும் சிறு நிலப் பயிராகவே விளங்குகின்றது. தென்னை நிலங்களின் உரிமைகளில் 60 சதவீதத்திற்கும் அதிகமானவை 10 ஏக்கருக்கும் குறைவாகும். நிலச் சீர்திருத்தத்தின் விளைவாக 50 ஏக்கருக்கு மேற்படாத காணி உச்சவரம்பு நில உரிமையில் ஏற்படுவதைத் தொடர்ந்து 1972, 1975-ம் ஆண்டுகளில் தென்னைப் பயிர் நில உடைமைகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. மொத்த நிலப்பரப்பில் தனியாருக்கு சொந்தமானவையே அதிகமாகும். தென்னை பயிரிடும் நிலத்தில் 6·1 வீதம் மாத்திரமே அரச நிறுவனங்களால் நிர்வகிக்கப்படுகின்றது. இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை, தேசிய கால்நடைச் சபை, தெங்கு ஆராய்ச்சிச் சபை, நிலச்சீர்திருத்தக் கமிசன் என்பவை இத் தென்னை நிலங்களை நிர்வகிக்கின்றன. கடந்த 10 ஆண்டுகளில் தென்னை உற்பத்திப் போக்குகளில் பெருமளவு மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. 1972-ல் இருந்து உற்பத்திப் போக்கில் ஒரு வீழ்ச்சி தென்படுவதை அட்டவணை 26 காட்டுகின்றது.

அட்டவணை 26

தெங்கு உற்பத்தியும் ஏற்றுமதியும் 1970—1979

| ஆண்டு | மொத்த உற்பத்தி (மில்லியன் காய்கள்) | ஏற்றுமதிகள் (மில்லியன் காய்கள்) |
|---|---|---|
| 1970 | 2,445 | 905 |
| 1971 | 2,668 | 1,109 |
| 1972 | 2,828 | 1,231 |
| 1973 | 1,946 | 351 |
| 1974 | 2,030 | 495 |
| 1975 | 2,585 | 914 |
| 1976 | 2,330 | 794 |
| 1977 | 1,825 | 233 |
| 1978 | 2,208 | 507 |
| 1979 | 2,100 (தற்காலிக மதிப்பீடுகள்) | 596 |

தகவல் மூலம்: தெங்கு சந்தைப்படுத்தும் சபை, குடிசனக் கணிப்பீட்டு புள்ளிவிபரத் திணைக்களம்.

விவசாய முதல் விளைவுப் பொருளான தெங்குற்பத்தியின் பெரும்பகுதி உள்நாட்டிலேயே நுகரப்படுகின்றமையால் ஏற்றுமதி அளவுகள் மிகக் குறைவாகக் காணப்படுகின்றன. அத்துடன் உற்பத்தியின் நீண்டகால தேக்கத்திற்குப் பல காரணங்கள் அடிப்படையாகின்றன.

(1) அடுத்தடுத்து ஏற்பட்ட காலநிலைப் பாதிப்புக்கள். (உதாரணமாக: 1979-ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட சூறவளியின் பாதிப்பின் காரணமாக 30,000 ஏக்கர் தென்னைத் தோட்டங்கள் அழிந்தமை)

(2) உரப் பாவனை குறைவு, பசளைகளுக்கான விலைகள் அதிகரித்தமை, உரங்களைக் கொள்வனவு செய்வதற்குப் போதிய விவசாயக் கடன்கள் வழங்கப்படாமை ஆகியவற்றின் காரணமாக உற்பத்தி மட்டம் வீழ்ச்சி அடைந்தமை.

(3) தேயிலை, இறப்பர் உற்பத்தியுடன் ஒப்பிடும் பொழுது தென்னை உற்பத்தியாளர்களுக்கு அவர்களது உற்பத்திக்கு ஈடான வருமானம் கிடைக்காமை.

(4) நகர அபிவிருத்தி கிராம விஸ்தரிப்பு, ஹோட்டல்கள், சுற்றுலாத்துறை போன்ற ஏனைய துறைகளுக்காகத் தென்னை நிலங்கள் துப்பரவு செய்யப்பட்டமை.

(5) கள் இறக்குவதற்காகப் பயன்படுத்தப்படும் தென்னை மரங்களின் தொகை வருடா வருடம் அதிகரித்துச் சென்றமை.

(6) மானியங்கள், ஆராய்ச்சி என்பன குறித்த தகவல்கள் பொதுமக்களைச் சென்றடையாமையும் விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர்கள் பற்றுக்குறையும்.

**ஏற்றுமதியும் பெருந்தோட்டப் பயிர்களும்:**

இலங்கையின் ஏற்றுமதியில் அன்றும் இன்றும் பெருந்தோட்டப் பயிர்களே முக்கிய பங்கினை வகித்து வருகின்

றன. மொத்த ஏற்றுமதி வருமானத்தில் ஏறத்தாள 70 சதவீதம் இப் பெருந்தோட்டப் பயிர்களிலிருந்து பெறப் படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஏற்றுமதியின் பெரும் பங்கு தேயிலையின் மூலமே பெறப்படுகின்றது. 1978-ல் 48 சதவீதமான ஏற்றுமதி வருமானத்தைத் தேயிலை பெற் றுத் தந்துள்ளது. அட்டவணை 27 தேயிலை, இறப்பர், தெங்கின் மூலம் பெறப்படும் ஏற்றுமதியின் அளவை மில்லியன் ரூபாய்களில் தருகின்றது.

அட்டவணை 27

ஏற்றுமதிகள் 1974 — 1978
(மில்லியன் ரூபாய்களில்)

| | 1974 | 1975 | 1976 | 1977 | 1978 |
|---|---|---|---|---|---|
| தேயிலை | 1,360 | 1,932 | 2,100 | 3,503 | 6,401 |
| இறப்பர் | 738 | 654 | 890 | 931 | 2,021 |
| தேங்காய் | 397 | 397 | 392 | 335 | 972 |
| மொத்த ஏற்றுமதிகள் | 3,472 | 3,933 | 4,815 | 7,638 | 13,206 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த பெருந்தோட்ட ஏற்றுமதிகளின் விலைகள் உறுதியற்றதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். உறுதியற்றவை என அழைக்க அவற்றின் விலைகள் அடிக்கடி தளம்புகின்றமையும், நீண்ட காலப் போக்கில் வீழ்ச்சியடைந்து செல்கின்றமையுமே காரணங்களாகக் காட்டப்படுகின்றன. தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்களின் பெரும்பகுதி முதலாளித்துவ நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இம் முதலா ளித்துவ நாடுகளில் ஏற்படும் மந்தம் செழிப்புக்கிணங்க இவற்றின் கேள்வி கூடிக்குறைவதனால் அவற்றின் விலை கள் பெருமளவு தளம்புகின்றன. அத்துடன் பெருந்தோட் டப் பயிர்களுக்கு உலக சந்தையில் பெருமளவு போட்டி காணப்படுகின்றமை விலைத்தளம்பலுக்கு மற்றும் ஓர் காரணமாகும். 1978-இல் உலக சந்தையில் இறப்பரின் விலை 11 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அதன் போட்டிப்

பொருளான செயற்கை இறப்பரின் விலையேற்றமே காரண மாகும். காலநிலையில் ஏற்படும் பாதிப்புக்களும் பெருந் தோட்டப் பயிர்களின் நிரம்பலின் மாற்றத்தை ஏற்படுத்தி விலைத்தளம்பலை ஏற்படுத்தும் மற்றுமோர் காரணியாகக் கருதப்படுகின்றது.

விவசாய உற்பத்திச் சுட்டெண்ணை நோக்கும் பொழுது இவ் விலைத்தளம்பலை அவை பிரதிபலிப்பதாக அமைவதைக் காணலாம்.

அட்டவணை 28

**மத்திய வங்கியின் வர்த்தகச் சுட்டெண்கள் (1967 = 100) ஏற்றுமதிகள்**

| காலம் | ஏற்றுமதியளவு | | |
|---|---|---|---|
| | தேயிலை | இறப்பர் | தெங்குற்பத்தி |
| 1967 | 100 | 100 | 100 |
| 1968 | 96 | 113 | 118 |
| 1969 | 93 | 108 | 97 |
| 1970 | 96 | 122 | 94 |
| 1971 | 96 | 98 | 109 |
| 1972 | 87 | 98 | 135 |
| 1973 | 95 | 122 | 45 |
| 1974 | 81 | 97 | 50 |
| 1975 | 98 | 121 | 90 |
| 1976 | 92 | 104 | 84 |
| 1977 | 85 | 102 | 31 |
| 1978 | 89 | 104 | 64 |

மூலம்: புள்ளி விபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

இறப்பர் விலைகள் தவிர்ந்த ஏனைய பெருந்தோட்டப் பயிர்களின் விலைகள் அடிக்கடி தளம்பல் அடைந்துள்ள மையை வர்த்தகச் சுட்டெண் மூலம் கண்டுகொள்ளலாம். இவ்விலைகள் தளம்புவது மாத்திரமன்றி நீண்டகாலப் போக்கில் வீழ்ச்சியடைந்து செல்லும் தன்மையுடையன வாகவும் காணப்படுகின்றன. இதன் காரணமாக நிச்சய

மற்ற வருங்காலத்தினை உடையனவாகப் பெருந்தோட்டப் பயிர்கள் காணப்படுகின்றன. இவ்வாறு விலை வீழ்ச்சியடைய கொள்வோர் சந்தையின் ஏகபோக உரிமை ஓர் காரண மாகக் காட்டப்படுகின்றது. 1978-ம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 1979—ம் ஆண்டு தேயிலையின் விலைகள் குறிப் பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டின. 1979-ம் ஆண்டின் முதல் காலாண்டில் தாழ் பூமித் தேயிலை ரகங்களுக்கு அற விடப்பட்ட விலைகளில் ஒரு கடும் பின்னடைவு காணப் பட்டது. இவ்வருடத்தில் 1 கிலோக்கிராம் தேயிலையின் விலை 10 ரூபா 65 சதம் குறைந்துள்ளது. 1978-ல் 1 கிலோகிராம் தேயிலை 21 ரூபா 34 சதமாகும். 1979-ல் இது 10 ரூபா 69 சதமாக வீழ்ச்சியடைந்தது. தேயிலை விலை வீழ்ச்சியடையும் அதேசமயம் ஏற்றுமதி அளவும் வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இலண்டன் சந்தையில் தேயிலை ஏல விற்பனையில், 1978-ல் ஏல விற்பனையிலும் பார்க்க 1979-ல் உயர்நிலத் தேயிலையின் ஏல விற்பனை வீழ்ச்சியடைந் துள்ளமையை அட்டவணை 29 காட்டுகின்றது.

அட்டவணை 29

**லண்டனின் தேயிலை ஏல விற்பனை**

| | 1978 (கிலோ கிராம்) | 1979 (கிலோ கிராம்) |
|---|---|---|
| உயர் நிலம் | 2,284,920.0 | 1,486,339.0 |
| மத்திய நிலம் | 1,213,777.0 | 1,186,807.0 |
| தாழ் நிலம் | 46,870.0 | 129 275.0 |

இவ்வாறு தேயிலையின் ஏற்றுமதியும் விலைகளும் வீழ்ச்சி யடைந்து செல்ல உலக உற்பத்திப் பெருக்கமும் ஓர் காரணமாகக் காட்டப்படுகின்றது. புதிய கண்டமான ஆபி ரிக்காவில் பல நாடுகள் தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டுவ ருகின்றன. இதன் காரணமாக உலக உற்பத்திப் பெருக்க மடைய கேள்வி மாறு நிலையில் விலைகள் வீழ்ச்சியடைந்து செல்கின்றன. உதாரணமாக அண்மைக் காலங்களில் கென்யா பெருமளவு தேயிலையை உற்பத்தி செய்து வரு

கின்றது, 1974–ல் 53·5 மில்லியன் கிலோ கிராமாக இருந்த தேயிலை உற்பத்தி 1977-ல் 86·3 மில்லியன் கிலோ கிராமாக அதிகரித்துள்ளது. கென்யா, உகண்டா, தன்ஸேனியா இந்தோனேசியா போன்ற நாடுகள் பெருமளவு தேயிலையை உற்பத்தி செய்கின்றன. இதன் காரணமாக உலக தேயிலையின் நிரம்பல் அதிகரித்து அதன் விலைகள் வீழ்ச்சியடையும் போக்கினைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன.

இறப்பரின் விலைகள் உயர்ச்சிப் போக்கினைக் காட்ட செயற்கை இறப்பரின் விலையேற்றமே காரணமாகும். எரிபொருளின் விலையேற்றம் செயற்கை இறப்பரின் விலை உயர்விற்கும் அதனூடாக அதன் பிரதியீடான இயற்கை இறப்பரின் விலை உயர்விற்கும் காரணமாக அமைந்துள்ளது. தெங்குப் பொருட்களின் விலைகள் அடிக்கடி தளம்புவது மாத்திரமன்றி வீழ்ச்சிப் போக்கினையும் பிரதிபலிக்கின்றது.

அட்டவணை 30

இருத்தல் தேங்காய்த் துருவலின் சராசரிச் சந்தை விலை 1970—1977

| வருடம் | விலை/ஒரு இருத்தல் ரூபா. சதம் |
|---|---|
| 1970 | .64 |
| 1971 | .57 |
| 1972 | .71 |
| 1973 | .89 |
| 1974 | 1.41 |
| 1975 | .90 |
| 1976 | 1.57 |
| 1977 | 2.68 |

மூலம்: பொருளியல் நோக்கு

சமீப காலங்களில் தெங்குப் பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செனறிருப்பினும் ஏற்றுமதி பெருமளவு அதிகரிக்கவில்லை. அட்டவணை 26-ல் 1970/71-ம் வருடங்களோடு ஒப்பிடும் பொழுது 1978/79–ம் ஆண்டுகளுக்கான ஏற்றுமதி பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளமையைக் காண

லாம். 1971-ல் ஏற்றுமதிகள் 1109 மில்லியன் காய்களாகும். 1979-ல் இது 596 மில்லியனுகக் குறைவடைந்துள்ளது. தெங்கு ஒரு சுதேசப் பயிராகக் காணப்படுவதுடன் உற்பத்தியின் பெரும்பகுதி உள்நாட்டில் நுகரப்படுகின்றமையே ஏற்றுமதி அதிகரிக்காமைக்குரிய காரணங்களாகும். தெங்கு உற்பத்தியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி உற்பத்திவீழ்ச்சியடைந்து வருவதாகவும் 1980-ல் 32·8 கோடி காய்களும் 1990-ல் 20.3 கோடி காய்களும் கிடைக்குமெனக் கணிக்கப்பட்டுள்ளது. உலகக் கேள்வி அதிகரித்து வருகின்ற அதே சமயம் உற்பத்தி மட்டம் வீழ்ச்சியடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்க குறைபாடாகும்.

**பெருந்தோட்டத்துறையின் பிரச்சனைகளும் அரசாங்க நடவடிக்கைகளும்:**

இலங்கையின் பொருளாதாரத்தை நிர்ணயிக்கும் பெருந்தோட்ட விவசாயம்நீண்டகாலமாகபல்வேறு வகைப்பட்ட பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டு வந்துள்ளது. உலக சந்தையில் அதன் முக்கியத்துவம் குறைவடைந்து வருகின்றமைக்கு இதுவே காரணமாகும். உற்பத்தியடிப்படையிலும், அவற்றினைச் சந்தைப்படுத்தும் வகையிலும் பிரச்சனைகளை நோக்க முடியும்.

கடந்த 150 வருடங்களாக பெருந்தோட்டப் பயிர்கள் ஒரே நிலப் பரப்பிலே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக நிலப்பசளை குறைவடைந்து ஏக்கருக்குரிய விளைச்சலும் குறைவடைந்து வருகின்றது. நீண்டகாலமாக பெருந்தோட்டங்கள் அன்னியர் ஆதிக்கத்தில் இருந்தமையால் புனர்நடுகைத் திட்டங்களோ, புதிய நிலங்களைப் பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டுவருவதற்குரிய நடவடிக்கைகளோ பெருமளவு மேற்கொள்ளப்படவில்லை. அத்துடன் அரசாங்கம் பெருந்தோட்டங்களைத் தேசியமயமாக்கலாம் என்னும் மனோபாவம் தனிப்பட்ட

முதலாளிகள் அதில் பாரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள தடையாக அமைந்தன.

பெருந்தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்ட நிலையிலும் கூட அதன் வளர்ச்சி பின்தங்கிய தொன்றுகக் காணப்பட்டது. நல்ல இனங்கள் தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்தியில் அறிமுகப்படுத்தப்பட்டும் அவை பெருமளவு பயன்படுத்தப்படாமை உற்பத்திமட்டம் பெருக்கமடையாமைக்கு மற்றுமோர் காரணமாகும். மேலும் ஏக்கருக்குரிய விளைச்சலை அதிகரிக்கத்தக்க வகையில் உரம், பசளை என்பனவற்றின் பாவனைகளும் குறைவாகவே காணப்பட்டன. தோட்டக் காணிகள் சுவீகரிக்கப்பட்டபொழுது பல தோட்டங்களில் நீண்ட காலமாக உரங்கள் பயன்படுத்தப்படாமை கண்டறியப்பட்டது. அத்துடன் உரப்பாவனையும் குறைவடைந்தே சென்றுள்ளது. 1961-ம் ஆண்டில் தேயிலைத் தோட்டங்களில் 143494 தொன் உரம் பாவிக்கப்பட்டது. 1973-ம் ஆண்டில் இது 91498 தொன்னுகக் காணப்பட்டது. இறப்பர் தோட்டங்களில் 1961–ல் 28648 தொன் உரம் பாவிக்கப்பட்டது. 1975–ம் ஆண்டில் 9348 தொன் உரமே பாவிக்கப்பட்டது. எண்ணெய்ப் பிரச்சனைகளைத் தொடர்ந்து உர வகைகளின் விலை உயர்ந்தமை, உரங்களைச் சந்தைப்படுத்துவதில் நிலவிய தாபன ரீதியான சீர்கேடுகள் என்பன இவ்வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாகும்.

உற்பத்திமட்டங்கள் வீழ்ச்சியடைந்து செல்லும் அதே சமயம் அவற்றினை சந்தைப்படுத்துவதிலும் நாடு பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. பெருந்தோட்டப் பயிர்களின் உலக சந்தை விலை வீழ்ச்சியடையும் போக்கினைக் கொண்டிருப்பதால் உற்பத்தியாளர்களின் இலாப மட்டங்கள் மிகக் குறைவாகக் காணப்படுகின்றன இது சிற்றுடமையாளர்களை பெருமளவு பாதிப்பதுடன் சிற்றுடமை நிலங்கள் கைவிடப்படவும் காரணமாக அமைகின்றது. இதன் காரணமாக உற்பத்தி மட்டம் மேலும் வீழ்ச்சிப் போக்கிணைப் பிரதிபலிக்கின்றது.

1972/75-ம் ஆண்டு காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட காணிச் சீர்திருத்தங்களின் பின்னர் இலங்கையரல்லாதோருக்குச் சொந்தமான பெருந்தோட்டங்கள் அனைத்தும் தேசியமயமாக்கப்பட்டன. இப்பெருந் தோட்டங்கள் இலங்கை அரச பெருந்தோட்டக்கூட்டுத்தாபனம், ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை, தேசிய கால்நடை சபை என்பவற்றால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. நீண்ட காலத்தின் பின் பெருந்தோட்ட உற்பத்தியினை அதிகரிக்கும் முகமாக அரசாங்கம் பல்வேறு வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. தோட்டங்களுக்கான புனர்நடுகை, உரமானியத் திட்டங்கள், புதிய நிலங்கள் பயிற் செய்கையின் கீழ் கொண்டுவரப்படல், பெருந்தோட்டப் பயிர்கள் சம்பந்தமான ஆராய்ச்சிகள், தொழிற்சாலைகளுக்கான அபிவிருத்திகள் ஆகியன இவற்றுள் முக்கியத்துவம் பெறுகின்றன.

தேயிலை, இறப்பர் தோட்டங்கள் நீண்டகாலமாக ஒரே நிலத்திலே மேற்கொள்ளப்பட்டு வந்தன. இக்குறைபாட்டை நீக்கும் முகமாக புனர்நடுகைத் திட்டம் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது. 1953-ம் ஆண்டு இறப்பர் புனர்நடுகைக்கான மானியத்திட்டம் கொண்டு வரப்பட்டது. 1959-ல் தேயிலை புனர்நடுகை மானியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. முன்னருள்ள பயிர்களை அழித்து புதிய பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளுதலே புனர் நடுகைத் திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். இத்திட்டத்தின் கீழ் 1978-ம் ஆண்டு 7968 ஏக்கர் இறப்பர் நிலங்கள் புனர் நடுகையின்கீழ் கொண்டுவரப்பட்டன. தேயிலை புனர் நடுகையானது 1978-ல் 5811 ஏக்கர் நிலத்தில் மேற்கொள்ளப்பட்டது, தெங்குச் செய்கையிலும் புனர் நடுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. தெங்குப் பயிர்ச்செய்கையில் புனர் புயிர்ச்செய்கைக்கான நிலப்பரப்பு 1207 ஏக்கர்களாகும். இப்புனர் நடுகைக்கான மானியம் வருடா வருடம் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மீள் நடுகைக்கான

நிலப்பரப்பு முன்னரிலும் பார்க்க வீழ்ச்சியடைந்து காணப் படுகின்றது. எனவே மீன் நடுகையை ஊக்குவிக்கும் முக மாக அரசாங்கம் இதற்கான மானியத்தை அதிகரித்து வருகின்றது. 1980-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் இறப்பர் மீள் நடுகைக்கான மானியம் ஏக்கர் ஒன்றிற்கு ரூபா 5000 இலிருந்து ரூபா 6000 ஆக உயர்த்தப்பட்டது. ஏக்கருக்கு ரூபா 2200 ஆக இருந்த தென்னை மீள் நடுகை மானியம் ரூபா 2750 ஆக உயர்த்தப்பட்டது. ஒரு ஏக் கருக்கும் குறைவான காணித்துண்டுகளை வைத்திருக்கும் தெங்கு உற்பத்தியாளருக்கான மானியம் கன்று ஒன்றுக்கு ரூபா 23 இலிருந்து ரூபா 28 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனையாக உரப் பிரச்சனை காணப்படுகின்றது. இக் குறைபாட்டை நீக்கும் முகமாக அரசாங்கத்தினுல் உர மானியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1961-ம் ஆண்டில் தேயிலைத் தோட்டங்களில் 1,43,494 தொன் உரம் பாவிக்கப்பட்டது. 1964-ம் ஆண்டில் 1,72,462 தொன் பாவிக்கப்பட்டது. உரப் பாவனையின் அதிகரிப் பிற்கு அரசாங்கத்தின் உரமானியத் திட்டமே அடிப்படை யாகும். இறப்பர் தோட்டங்களில் 1961-ம் ஆண்டில் 28,648 தொன் உரம் பாவனை செய்யப்பட்டது. ஆனுல் 1975-ம் ஆண்டில் 9348 தொன் உரமே பாவிக்கப்பட் டது. தெங்கு உர உதவி மானியத் திட்டம் 1956-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 1970-ம் ஆண்டில் 63,769 தொன் உரம் பாவிக்கப்பட்டது. ஆனுல் 1975-ல் இத் தொகை 26,622 தொன்னுகக் குறைவடைந்தது, அர சாங்கம் உரமானியத் திட்டத்தினை அறிமுகப்படுத்திய நிலையிலும் 1973-ம் ஆண்டுக்குப் பின்னர் உரப் பாவனை கள் பெருமளவு குறைந்துள்ளன. எண்ணெய்ப் பிரச்சனை யைத் தொடர்ந்து உரவகைகளின் விலைகள் அதிகரித்தமை உரங்களை சந்தைப்படுத்துவதில் நிலவிய சீர்கேடுகள் என் பன இவ் வீழ்ச்சிக்குரிய காரணங்களாகும். 1976-ம் ஆண் டின் பின்னர் நிலைமை ஓரளவு மாற்றமடைந்துள்ளது.

தேயிலை தவிர்ந்த ஏனைய உற்பத்திப் பொருட்களுக்கு அனுமதிப் பத்திரமின்றி உரவகைகளை கொள்வனவு செய்யக் கூடிய ஒருமுகப்படுத்தப்பட்ட உதவித் திட்டம் 1976-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் கொண்டு வரப்பட்டது. இதனைத் தொடர்ந்து உரப் பயன்பாடும் பாவனையும் அதிகரித்தது. எனினும் உரப் பாவனை பற்றுக்குறையுடைய தொன்றாகவே காணப்படுகின்றது.

அரசாங்கம் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டுவரத் திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றது. 1969-ம் ஆண்டு தேயிலை விளைநிலப்பரப்பு 5,56,514 ஏக்கர்களாகும். 1978-ல் இது 6,03,464 ஏக்கர்களாக அதிகரிக்கப்பட்டது. இறப்பர் உற்பத்தி நிலப்பரப்பில் வீழ்ச்சிப் போக்கு காணப்படுகின்றது. 1969—ல் 5,63,633 ஏக்கராகக் காணப்பட்ட இறப்பர் உற்பத்தி 1978—ல் 5,59,257 ஏக்கர்களாகவே காணப்படுகின்றன. புதிய இறப்பர் தோட்டங்கள் பெருமளவு பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டுவரப் படாதபடியால் இறப்பர் மீள் நடுகைக்கான நடுகைகள் பெருமளவு அதிகரித்துள்ளன. தெங்குச் செய்கைக்கான உண்மையான புள்ளி விபரங்களைப் பெற்றுக் கொள்ளுதல் கடினமாகவுள்ளது. ஆனுல் ஒப்பீட்டு ரீதியில் தென்னை பயிரிடப்படும் நிலப்பரப்பு தேயிலை, இறப்பர் இரண்டும் பயிரிடப்படும் மொத்த நிலப்பரப்புக்கு நிகராகக் காணப்படுகின்றது. 1978 நவம்பரில் ஏற்பட்ட சூறுவளி அம்பாறை, மட்டக்களப்பு, பொலநறுவை ஆகிய மாவட்டத்திலுள்ள ஏறக்குறைய 30,000 ஏக்கர் தெங்கு நிலப்பரப்பினை முற்ருக அழித்திருக்கும் என மதிப்பிடப்படுகின்றது. இத்தொகை நாட்டின் மொத்தப் பரப்பில் ஏறக்குறைய 2 சதவீதமாகும். எனினும் 1978-ல் 1297 ஏக்கர் புதிதாக தெங்குப் பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்தி செய்யும் நாடுகளோடு இலங்கையின் உற்பத்தி மட்டத்தை ஒப்பிடும் பொழுது சராசரி ஏக்கருக்கான விளைச்சல் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இக்குறைபாட்டை நீக்கும் மூகமாக அரசாங்கத்தினால் பெருந்தோட்ட விவசாயப் பயிர்கள் சம்பந்தமான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. தேயிலை ஆராய்ச்சி நிலையம், இறப்பர் ஆராய்ச்சி நிலையம், தெங்கு ஆராய்ச்சி நிலையம் போன்றன நிறுவப்பட்டன. ஏக்கருக்குரிய விளைச்சலை எவ்வாறு அதிகரிக்கலாம், நவீன முறைகளை எவ்வாறு கையாளலாம், நோய் ஒழிப்பு நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்பன பற்றிய ஆராய்ச்சிகள் இந் நிலையங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவை ஓரளவுக்கு வெற்றிகரமாக செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

நீண்ட காலமாக அன்னியருக்குச் சொந்தமாக இருந்த பெருந்தோட்டங்கள் 1975—ல் காணிச் சீர்திருத்தச் சட்டம் மூலம் அரசுடமையாக்கப்பட்டன. காணிச் சீர்திருத்தத்தின் மூலம் 195 பெருந்தோட்டங்களை அரசு பொறுப்பேற்றது. மொத்தத் தேயிலை நிலப்பரப்பில் 63 சதவீதமும், மொத்த இறப்பர் நிலப்பரப்பில் 32 சதவீதமும், மொத்த தென்னை நிலப்பரப்பில் 10 சதவீதமும் காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன. காணி திருத்தக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டபடி புதிய முகாமைத்துவ முகவராண்மைகள் தேயிலை, இறப்பர்த் தோட்டங்களைச் சிறந்த முறையிலும், உற்பத்தித் திறன் மிக்க முறையிலும் நிர்வகித்து வருகின்றன. தேசிய வருமான அதிகரிப்பிற்கும், வெளிநாட்டு நாணய மாற்றப் பிரச்சனையின் தீர்விற்கும், நாட்டில் வளர்ந்து வரும் தொழிலாளர் தொகையில் ஒரு பகுதியினரை ஈர்ப்பதற்கும் ஊன்றுகோலான பெருந்தோட்டத்துறை இப்பொழுது அரசின் கைகளிலுள்ளது: சமீப காலங்களில் இப்பெருந்தோட்ட உற்பத்தி அதிகரித்து வருகின்றது. ஆனால் விலை வீழ்ச்சியின் காரண

மாக உற்பத்தி அதிகரிப்பின் தாக்கம் குறைவுபடுத்தப் பட்டுள்ளது. எனினும் பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேலும் விஸ்தரிக்கப்படுவதன் மூலமே இலங்கையின் பல பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண முடியும்.

**இதுவரை கற்றவை:**

(1) ஐரோப்பியரின் வருகையும் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையின் தோற்றமும்.

(2) கோப்பிப் பயிர்ச் செய்கையின் வளர்ச்சியும் 1886-ல் அவற்றின் வீழ்ச்சியும்.

(3) தேயிலை, இறப்பர், தெங்குச் செய்கைகளின் வளர்ச்சி.

(4) பெருந்தோட்டப் பயிர்களின் உற்பத்திப் போக்குகள்.

(5) தனித்தனிப் பயிர்களின் உற்பத்தியும் பிரச்சனைகளும்.

(6) ஏற்றுமதியிலும் தேசிய உற்பத்தியிலும் பெருந்தோட்டப் பயிர்களின் பங்கு.

(7) பெருந்தோட்ட உற்பத்தியை அதிகரிக்கும் முகமாக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள்.

# கைத்தொழில் உற்பத்தி

ஐரோப்பியர் ஆட்சிக்காலம் தொடக்கம் இலங்கையின் பொருளாதாரம் உற்பத்தித்திறன் குறைந்த கிராமிய விவசாயத்தையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. கைத்தொழில் வளர்ச்சியில் நீண்ட காலமாக எத்தகைய கவனமும் செலுத்தப்படவில்லை. ஐரோப்பியர் இலங்கையின் கைத்தொழிலில் ஆர்வம் செலுத்தாமை, உள்நாட்டார் அத்துறையில் போதிய நம்பிக்கையின்மை, கைத்தொழில் வளர்ச்சியடையாமைக்கு ஓர் காரணமாகக் காட்டப்பட்டுள்ளது. கைத்தொழில் விஞ்ஞான யுகமாகிய 20-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் எந்த ஒரு நாட்டின் பொருளாதாரத்திலும் கைத்தொழிலின் பங்கு இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது. ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியைப் பிரதிபலிப்பதாக கைத்தொழில் துறையின் வளர்ச்சி அமைந்துள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் தேசிய உற்பத்தியில் 70 சதவீதம் கைத்தொழில் பொருட்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கைத்தொழிலின் பங்கு மிகக் குறைவாகக் காணப்படுகின்றமை இந் நாடுகளின் பொருளாதார வளர்ச்சியின்மையைப் பிரதிபலிப்பதாகவுள்ளது.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னர் கைத்தொழிலின் முக்கியத்துவம் உணரப்பட்டு கைத்தொழில் மயப்படுத்தும் நடவடிக்கைகள் பெருமளவு மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. 1950-ம் ஆண்டு தொடக்கம் 1960-ம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில் மயப்படுத்தும் முயற்சி இறக்குமதிப் பதிலீட்டடிப்படையிலேயே செயற்பட்டு வந்தன. இக்காலப் பகுதியில் இறக்குமதிப் பண்டங்கள் ஆடம்பரப் பொருட்களாக அமைந்தமையால் அதற்கிணங்கவே உள்நாட்டிலும் உற்பத்தி மேற்

கொள்ளப்பட்டது. குளிர்சாதனப் பெட்டிகள், மின்சார விசிறிகள், சொக்கலேட்டுக்கள், விசுக்கோத்துகள் போன்றவையே கைத்தொழில் உற்பத்திப் பொருட்களாகக் காணப்பட்டன. இதற்கான தொழில் நுட்பமும், மூலப் பொருட்களும் இறக்குமதி மூலமே பெறப்பட்டது. இவ் உற்பத்திகள் பெரும்பாலும் தனியார் துறையிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தன. ஆனால் 1960-ம் ஆண்டின் பின்னர் அந்நிய செலாவணி ஒதுக்கீடு வீழ்ச்சியுற்றமையால் இத்தகைய கைத்தொழில்கள் பாதிப்படைந்தன. இதனைத் தொடர்ந்து கைத்தொழில் உற்பத்தியில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டது. அரசாங்கம் கைத்தொழில் உற்பத்தியை விஸ்தரிக்கும் முகமாகப் பல நடவடிக்கைகளில் ஈடுபடலாயிற்று. 1956/66 காலப்பகுதிகளில் ஒப்பிடும் பொழுது 1974-ல் கைத்தொழில் உற்பத்தி விளைவில் 90 சதவீத அதிகரிப்பு இருப்பதை மத்திய வங்கியின் அறிக்கைகள் சுட்டிக் காட்டுகின்றன. 1965–ல் தேசிய கைத்தொழில் கூட்டுத் ஸ்தாபனங்களின் முதலீடுகள் ஏறத்தாள 50 கோடி ரூபாய் மாத்திரமே. இன்று இது 250 கோடி ரூபாய்க்கு மேல் உயர்வடைந்துள்ளமை இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றத்தினைப் பிரதிபலிப்பதாகவுள்ளது.

கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக இலங்கையின் கைத்தொழில் உற்பத்தியில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது, இம்மாற்றத்தை நான்கு முக்கிய பிரிவுகளில் அடக்கலாம்.

(1) அரசாங்கத் துறையிலுள்ள கைத்தொழில் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டமை.

(2) தனியார் துறை வளங்களின் அடிப்படையிலான கைத்தொழில்கள் நிறுவப்பட்டமை.

(3) ஏற்றுமதிச் சந்தைக்கான பொருட்களை உற்பத்தி செய்யவும் இறக்குமதிப் பதிலீட்டடிப்படையிலான

பொருட்களை உருவாக்கவும் தனியார்துறைக் கைத் தொழில் நிறுவப்பட்டமை.

(4) ஆரம்பிக்கப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்காக கைத்தொழில் அமைச்சு நடவடிக்கைகளை மேற் கொண்டமை.

இவ்வாறான தாக்கங்கள் தேசிய உற்பத்தியில் கைத் தொழிலின் பங்கு அதிகரித்துச் செல்வதற்கு வழிவகுத் துள்ளது. 1977-ம் ஆண்டின் பின்னர் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட புதிய பொருளாதாரக் கொள்கை கள் இலங்கையின் கைத்தொழில்கள் வேகமாக அமையக் காரணமாக அமைந்துள்ளன. இலங்கையின் தயாரிப்பு கைத்தொழிலின் உற்பத்திப் பெறுமதி 1977-ல் ரூபா 70,000 இலட்சத்தில் இருந்து 1978-ல் 88,510 இலட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. உண்மை வளர்ச்சி வீதத்தை நோக்கும் பொழுது 1977-ல் உள்ள ஒரு சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1978-ல் 11 சதவீதமாக மதிப்பிடலாம். அரசாங்கம் கட்டுப்பாடுக ளைத் தளர்த்தியமையால் இறக்குமதிகள் தாராளமாக்கப் பட்டு மூலப் பொருட்களினதும் உதிரிப் பாகங்களின தும் கிடைக்கத்தக்க தன்மை இலகுவாகியது. இதன் காரணமாக 1978-ல் அரசுத் துறைக் கைத்தொழில்களும் தனியார்துறைக் கைத்தொழில்களும் கணிசமான அளவு வளர்ச்சியடைந்தன. தனியார்துறை வெளியீடு 30 சத வீதத்தாலும் அரசு துறை வெளியீடு 26 சதவீதத் தாலும் அதிகரித்தது. எனவே இலங்கையின் கைத்தொ ழிலில் கடந்த சில ஆண்டுகளில் பெருமளவு மாற்றம் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

## கைத்தொழில் அமைப்பு:

உற்பத்தி அடிப்படையில் இலங்கையின் கைத்தொழில் அமைப்பினை நான்கு பிரிவாக வகுக்கலாம்.

(1) மரபு ரீதியான கைப்பணிகள்.

(2) தனியார் துறையின் உருவத்தில் சிறியவையும் பெரியவையுமான பல்வேறுபட்ட கைத் தொழில்கள்.

(3) அரசதுறைக் கைத்தொழில்கள்.

(4) கைத்தொழில் கூட்டுறவுத்துறை.

இலங்கையின் கைத்தொழில் மரபு ரீதியான கைப் பணிகள் அன்று தொடக்கம் இன்று வரை முக்கியத்துவம் பெற்று வந்துள்ளன. இவற்றினையே குடிசைக் கைத்தொழில் என அழைக்கின்றனர். மிகக் குறைவான மூலதனத்தை யும், மரபு ரீதியான தொழில் நுட்பத்தினையும், பெருமள விலான ஊழியத்தையும் உள்ளடக்கியனவாக இக்குடிசைக் கைத்தொழில்கள் காணப்படுகின்றன. நகைத்தொழில், கொற்றொழில், வீட்டுத் தளபாட உற்பத்தி, மரவரிவு, கூடைகள் செய்தல், பிரம்பு உபகரணங்கள் செய்தல், சட்டி பானை வனைதல், பாய் பின்னுதல், தச்சுத் தொழில், கைத்தறிப் புடவை செய்தல், தும்பு பதனிடுதல் ஆகியன இதில் அடங்கும். இத்தொழில்களில் 100,000 க்கும் அதிக மான சிறிய அளவிலான கைவினை அலகுகளைக் கொண்ட பராம்பரிய ஸ்தாபனப்படுத்தப்படாத துறைகள் ஈடுபடுத் தப்பட்டுள்ளன. கைத்தொழில் உற்பத்தியில் 10-15 சத வீதம் இவற்றிலிருந்தே பெறப்படுகின்றது.

கைத்தொழில் அமைச்சில் பதிவு செய்யப்பட்ட பல் வேறு வகையான தனியார் துறைக் கைத்தொழில்கள் செயற் பட்டு வருகின்றன. இவை ஆலை அளவினதான கைத்தொழி லாகக் காணப்படுகின்றன. ஓரளவு மூலதனத்தினையும், இயந்திரப் பயன்பாட்டினையும் உள்ளடக்கியனவாக இவை அமைந்துள்ளன. இத்தனியார் துறைக் கைத்தொழில் களில் ஊழியச் செறிவு கூடுதலாகக் காணப்படினும் குடிசைக் கைத்தொழிலுடன் ஒப்பிடும் பொழுது குறைவா கவே காணப்படுகின்றது. 3000 க்கும் மேற்பட்ட இத்தகைய

தனியார் துறைக் கைத்தொழில் உள்நாட்டுச் சந்தைகட்குத் தேவையான பல்வேறு வகைப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்கின்றது. உணவுற்பத்திப் பொருட்கள், துணி உற்பத்திப் பொருட்கள், குளிர்சாதனப் பொருட்கள், மரப் பொருட்கள், தோற் பொருட்கள், கடதாசி, இறப்பர் உற்பத்திப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், மருந்து வகைகள், இயந்திரங்கள், உபகரணங்கள், தளபாடங்கள், மின்சார உபகரணங்கள் போன்ற நானுவித உற்பத்திப் பொருட்களையும் உற்பத்தி செய்து வருகின்றன. உள் நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்வதில் இவை முக்கிய பங்கினை வகிக்கின்றன. கைத்தொழில் உற்பத்தி விளைவுப் பெறுமானத்தில் 45 சதவீதம் தனியார்துறைக் கைத் தொழிலிலிருந்தே பெறப்படுகின்றது.

அரசதுறைக் கைத்தொழில்கள் என்னும் பொழுது கூட்டுத் ஸ்தாபனங்களைக் குறிக்கும். ஏறத்தாள எண்ணிக்கையில் 30 ஆகவுள்ள கூட்டுத் ஸ்தாபனங்கள் தொழிற்சாலை அடிப்படையில் செயற்பட்டு வருவனவாகும். பாரிய முதலீடுகளையும், பெருமளவு இயந்திரங்களையும் உள்ளடக்கியனவாக இவை காணப்படுகின்றன. ஊழியச் செறிவிலும் பார்க்க கூட்டுத் ஸ்தாபனங்களில் மூலதனச் செறிவே அதிகமாகக் காணப்படுகின்றது. இலங்கையின் கூட்டுத் ஸ்தாபனங்கள் பல்வேறு வகையிலான பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றன. இவற்றுள் உருக்கு, உலோகப் பொருள், டயர், இறப்பர், ஒட்டுப் பலகை, மரப்பலகை, கடதாசி, சீனி, தோற் பொருட்கள், நெசவுப் பொருள், புடைவை, புகையிலை, அரசு வடிசாலைகள், பால், மீன் பிடி, மாவரைப்பு, எண்ணெய்களும் கொழுப்பும், உரம், பெற்றோலியம், உப்பு, கோஸ்ரிக் சோடா, குளோரின், மருந்து வகைகள், மட்பாண்டம், சீமேந்து, காரீயம், இரத்தினக் கல், கரிய மணல் போன்றவற்றிற்கான உற்பத்தி அடங்கும். இவற்றுடன் கைத்தொழில் துறையிலுள்ள பல ஆராய்ச்சி நிலையங்கள் அரசுக் கூட்டுத் ஸ்தாபனங்களினாலேயே நடாத்தப்படுகின்றன. உற்பத்தி விளைவுப்

பெறுமானத்தில் 40 சதவீதத்தினை இக்கூட்டுத் ஸ்தாபனங்கள் ஈட்டித் தருவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

சமீப காலமாக இலங்கையின் கிராமப் பகுதிகளில் உருவாகி வரும் ஓர் கைத்தொழில் அமைப்பே கைத்தொழில் கூட்டுறவுத் துறையாகும். 500 க்கும் அதிகமான அலகுகள் இன்று இத்துறையில் காணப்படினும் இவை ஆரம்ப நிலையிலேயே உள்ளன. மெல் எந்திரக் கைத்தொழில், கனி வளங்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில், விவசாய மரவடிப்படைக் கைத்தொழில் என்பன இவ்வமைப்பில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. அதிகவளவு தொழில் வாய்ப்புக்களை உள்ளடக்கிய ஓர் துறையாக இது அமைந்துள்ளது.

## கைத்தொழில் அமைவிடம்:-

இலங்கையின் கைத்தொழில் அமைவிடம் குறிப்பிட்ட சில மாகாணங்களிலேயே காணப்படுகின்றது. சிறப்பாக மேல் மாகாணத்திலேயே கைத்தொழில் கூடிய அளவு செறிவாகக் காணப்படுகின்றது. மொத்தக் கைத்தொழில் உற்பத்திப் பெறுமதியில் ஏறக்குறைய 90 சதவீதமானவற்

அட்டவணை 31

மாகாண அடிப்படையிலான கைத்தொழில்கள் (1974) அமைவிடம்

| மாகாணம் | சதவீதத்தில் |
|---|---|
| மேற்கு மாகாணம் | 89·2 |
| வட மாகாணம் | 5·7 |
| கிழக்கு மாகாணம் | 2·4 |
| தென் மாகாணம் | 1·9 |
| மத்திய மாகாணம் | 0·4 |
| வடமேல் மாகாணம் | 0·2 |
| சப்பிரகமுவா மாகாணம் | 0·1 |
| வடமத்திய மாகாணம் | 0·1 |
| ஊவா மாகாணம் | 0·0 |
| மொத்தம் | 100 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை

றிற்கு மேல் மாகாணமே வகை கூறிற்று. இம் மேல் மாகாணத்திலுள்ள கைத்தொழிலும் அனேகம் கொழும்பைச் சுற்றியே காணப்படுகின்றன. கொழும்பில் 20 மைல் சுற்றுடலில் ஏறத்தாள 80 சதவீதமான கைத்தொழில் காணப்படுகின்றன. ஏனைய மாகாணங்கள் பின்தங்கிக் காணப்படுவதுடன் மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் அவற்றின் பங்கு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. அட்டவணை 31 மாகாண அடிப்படையில் கைத்தொழில் பரம்பலை சதவீதத்தில் தருகின்றது.

கடந்த 10 ஆண்டுகளில் கைத்தொழில் பரவல் மிகக் குறைந்தளவு மாற்றத்தையே ஏற்படுத்தியுள்ளது என்பதை அட்டவணை காட்டுகின்றது. கைத்தொழில் அமைவிடத்தை நிர்ணயிப்பதில் பல காரணிகள் முக்கியம் பெறுகின்றன. மூலப் பொருட்களினதும், மின்சக்தியினதும், போக்குவரத்துச் சந்தை சாதனங்களின் கிடைப்பனவுகளிலுமே கைத்தொழில் அமைவிடம் தங்கியுள்ளது. இலங்கையில் இத்தகைய வாய்ப்புக்கள் கொழும்பு தவிர்ந்த ஏனைய இடங்களில் அமையாமைக்கு மேற்கூறிய காரணங்கள் போதியளவு கிடைக்காமையே காரணமாகும். அத்துடன் உலக சந்தையில் எண்ணெய் விலையின் அதிகரிப்பு இலங்கையின் போக்கு வரத்துச் செலவுக்கும் கைத்தொழில் பரவலுக்கும் தடையாகவுள்ளன. இத்தகைய குறைபாடுகளை நீக்கும் முகமாகவும் கைத்தொழில் அமைவிடத்தை பரவலாக்கும் முகமாகவும் பல நடவடிக்கைகள் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. 1972-76 ஐந்தாண்டுத்திட்டக் காலப்பகுதியில் கிராமப்புறங்களில் கைத்தொழிலை விஸ்தரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. தற்போதைய அரசாங்கம் கைத்தொழில் அமைவிடங்களை விரிவாக்கப் பல திட்டங்களை உருவாக்கிச் செயல்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

**உற்பத்திப் போக்கு:-**

இலங்கையின் தேசிய உற்பத்தியில், கைத்தொழில் உற்பத்தியானது நீண்டகாலமாக மிகவும் பின்தங்கிய

நிலையிலேயே இருந்து வந்துள்ளது. ஆரம்பகாலக் கைத் தொழில் உற்பத்தியை நோக்கும் பொழுது அவை பெரும் பாலும் பெருந் தோட்டக் கைத்தொழில் உற்பத்திகளா கவே காணப்பட்டது. தேயிலை, இறப்பர் பொருட்களை ஏற்றுமதிக்கு ஏற்ற வகையில் தரப்படுத்தும் அடிப்படை யிலேயே கைத்தொழில்கள் அமைந்திருந்தன. 1950-ம் ஆண்டு வரை கைத்தொழில் உற்பத்தியில் பெருமளவு கவனம் செலுத்தப்படவில்லை. 1950-ம் ஆண்டின் பின்னர் கைத்தொழில் தரப்படுத்தும் முயற்சிகள் காணப்பட்டன. இதற்கு முற்பட்ட காலத்தில் சிமெந்து, சீனி, உருக்கு ஆகிய தொழில்கள் காணப்பட்ட நிலையிலும் அவை பெரு மளவு வளர்ச்சியடையவில்லை. 1950-60 காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில் மயப்படுத்தும் முயற்சி கள் இறக்குமதிப் பதிலீட்டின் அடிப்படை மீதே பெரும் பாலும் செய்யப்பட்டு வந்தன. இக் கைத்தொழிலில் பெரும்பாலானவை தனியார் துறைகளையே சார்ந்து இருந் தன. 1956-ம் ஆண்டளவில் கைத்தொழில் மயமாக்கும் முயற்சிகள் மேலும் அதிகரித்தன. இவ் வளர்ச்சி 1960-ம் ஆண்டில் மேலும் விரிவடையத் தொடங்கியது. இக் காலப் பகுதிகளிலிருந்து கைத்தொழில் நிறுவனங்கள், ஊழியர் களின் எண்ணிக்கை, உற்பத்தியாகியன துரிதமாக அபி விருத்தியடைந்தன. 1961-ல் 315 ஆக இருந்த கைத் தொழில் நிறுவனங்கள் 1976-ல் 1508 ஆக அதிகரித்தது. கைத்தொழில் உற்பத்திப் பெறுமானம் 1961-ல் 331·7 மில்லியன் ரூபாய்களாகவும், 1976-ல் 6061 மில்லியன் ரூபாய்களாகவும், 1978-ல் 8851 மில்லியன் ரூபாக்களா கவும் மாற்றமடைந்துள்ளது. உற்பத்தியின் பெறுமதி சமீப காலங்களில் அதிகரித்துச் சென்றுள்ளமை குறிப் பிடத்தக்க தொன்றுகும். கைத்தொழில் உற்பத்தியின் பெறுமதியானது 1974-ம் ஆண்டின் பின்னர் பெருமளவு மாற்றமடைந்து சென்றுள்ளது. 1974-ம் ஆண்டு மத்திய வங்கி அறிக்கையின்படி பணவீக்க உயர்வும், இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் கைத்தொழில் அபிவிருத்திக்குக் காரண

அட்டவணை 32

**கைத்தொழில் உற்பத்தியின் பெறுமதி 1970—78**

| கைத்தொழில் தொகுதி | உற்பத்தியின் பெறுமதி (ப. இ. ரூபாய்களில்) | | |
|---|---|---|---|
| | 1970 | 1974 | 1978 |
| (1) உணவு, குடிபானமும் புகையிலையும் | 684·5 | 1247·3 | 2609 |
| (2) புடைவைகள், அணியும் ஆடைகளும் தோல் உற்பத்திகளும் | 282·7 | 570.8 | 1008 |
| (3) தளபாடங்களை உள்ளடக்கிய மரமும் மர உற்பத்திகளும் | 21.1 | 53·1 | 124 |
| (4) தாளும் தாள் உற்பத்திகளும் | 65·5 | 136·5 | 376 |
| (5) இரசாயன, பெற்ரோலிய கரி இறப்பரும், பிளாஸ்ரிக் உற்பத்திகளும் | 439·2 | 1353·0 | 3279 |
| (6) உலோகமல்லாத கனிப்பொருள் உற்பத்தி (பெற்ரோலியமும் கரியும் தவிர்ந்த) | 138·8 | 238·1 | 592 |
| (7) அடிப்படை உலோக உற்பத்திகள் | 38·9 | 129·6 | 219 |
| (8) உருவாக்கப்பட்ட உலோக உற்பத்திகள், பொதியும் போக்குவரத்துக் கருவிகளும் | 256·1 | 349·2 | 590 |
| (9) உற்பத்திகள் (வேறு எங்கும் குறிப்பிடாதவை) | 18·6 | 16·2 | 55 |
| மொத்தம் | 1945·0 | 4093·9 | 8851 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

மாக அமைந்துள்ளது. அட்டவணை 32 கைத்தொழில் உற்பத்தியின் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றத்தினைக் காட்டுகின்றது.

இலங்கையின் கைத்தொழில் உற்பத்திப் போக்கினை இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்து நோக்கலாம்.

(1) தனியார்துறைக் கைத்தொழில்கள்.

(2) கூட்டுத் ஸ்தாபனங்கள்.

தனியார் துறைக் கைத்தொழில்கள் குறிப்பிட்ட சில நபர்களிடமும் குறிப்பிட்ட சில இடங்களிலும் குவிந்து காணப்படுகின்றது. 1974-ம் ஆண்டளவில் நாட்டின் உற்பத்தி நடவடிக்கைகளின் பெரும் பங்கினை பாரிய அளவிலான சிறு தொகை நிறுவனங்களே பெற்றிருந்தன. 8 சதவீதமான நிறுவனங்கள் மொத்த உற்பத்தியில் 55 சதவீதமான பங்கினை வகிக்கின்றன. இவற்றுள் உணவு, குடிபானங்கள், புகையிலை உற்பத்தி போன்றன பதிவு செய்யப்பட்ட முழு தனியார்துறைக் கைத்தொழில்களில் $\frac{1}{3}$ பகுதியை வகிக்கின்றன. இத்துறை 1952-ம் ஆண்டில் உற்பத்தித் துறையில் 17·5 சதவீதத்தையும் 1966-ல் 28·4 சதவீதத்தையும் பெற்றிருந்தது. ஜவுளிகள், தயாரிப்பு ஆடைகள், தோல் உற்பத்திகள் போன்றனவையும் கணிசமான அளவு அதிகரித்துள்ளன. இப்பிரிவு 1952-ம் ஆண்டில் கைத்தொழில் உற்பத்தியில் 6·2 சதவீதத்தையும், 1966-ம் ஆண்டில் 20·9 சதவீதத்தையும், 1974-ம் ஆண்டில் 23·8 சதவீதத்தையும் பெற்றிருந்தது. இயந்திரங்கள் கருவிகள் தவிர்ந்த பொருத்தப்பட்ட உலோக உற்பத்திகளும் மொத்த உற்பத்தியில் $\frac{1}{5}$ பகுதியை வகித்தன. இரசாயனப் பொருள் உற்பத்தி, பெற்றோலியம், கரி, இறப்பர், பிளாஸ்ரிக் போன்றவற்றின் உற்பத்தி கடந்த சில வருடங்களில் முக்கியத்துவம் குறைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இத்துறை 1952-ம் ஆண்டில் தனியார் துறையினரின் மொத்தக் கைத்தொழில் உற்பத்தியில் அரைவாசிப் பங்கினை வகித்து

வந்தது. பின்னர் 1966-ல் 20·2 சதவீதமாகவும் 1974-ல் 16·6 சதவீதமாகவும் வீழ்ச்சியடைந்தது. ஆனால் 1978-ல் அது 37 சதவீதமாக மாற்றமடைந்துள்ளது. கைத்தொழில் துறையின் சகல உற்பத்தி நடவடிக்கைகளினதும் பிரதான 9 பிரிவுகளின் வீதம் பற்றிய அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

அட்டவணை 33

**கைத்தொழில் துறையின் சகல நடவடிக்கைகளினதும் பிரதான ஒன்பது பிரிவுகளின் உற்பத்தி விகிதம்**
(உற்பத்தி சதவீதம்)

| | 1952 | 1966 | 1974 | 1978 |
|---|---|---|---|---|
| (1) உணவு, குடிபான புகையிலை உற்பத்தி | 17.5 | 28·4 | 33·2 | 29·5 |
| (2) ஜவுளி, தயாரித்த ஆடை, தோற்க் கைத்தொழில் | 6.2 | 20·9 | 23.8 | 11·4 |
| (3) மரம், மர உற்பத்திகள் | 1·1 | 0.4 | 0·4 | 1·4 |
| (4) காகிதம், காகித உற்பத்தி, அச்சடித்தல், பிரசுரம் | 6·0 | 4·0 | 3·0 | 4.2 |
| (5) இரசாயனம், பெற்றோலியம், கரி, இறப்பர், பிளாஸ்டிக் உற்பத்திகள் | 47.3 | 20.2 | 16·6 | 37·0 |
| (6) பெற்றோலிய உற்பத்தி தவிர்ந்த உலோகமற்ற கனிப் பொருள் உற்பத்திகள் | 3·2 | 5·6 | 2·1 | 6·7 |
| (7) அடிப்படை உலோகக் கைத்தொழில்கள் | — | 0·5 | 1·3 | 2.5 |
| (8) இயந்திரம், கருவிகள் தவிர்ந்த பொருத்தப்பட்ட உலோக உற்பத்திகள் | 15·7 | 18·6 | 18·8 | 6·7 |
| (9) ஏனைய உற்பத்திக் கைத்தொழில்கள் | 3.0 | 1·4 | 0·8 | 0.6 |

1974–ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின்படி கைத் தொழில் அமைச்சிடம் 1283 கைத்தொழில் அலகுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன. ஆய்வு முடிவில் சுமார் 500 பிரிவுகள் அல்லது பதிவு செய்யப்பட்ட மொத்தக் கைத் தொழில்களில் 14·5 சதவீதமானவை உற்பத்தியிலிருந்து ஒதுங்கியிருப்பதாகத் தெரிய வந்தது. 5·6 சதவீதமான கைத்தொழில்களைத் தேடிக் கண்டுபிடிக்க முடியவில்லை. 3·2 சதவீதமானவை இதுவரை உற்பத்தியை ஆரம்பிக்க வில்லை. 4 சதவீதமானவை எவ்வித தகவல்களையும் வழங்க வில்லை. எனவே மொத்தமாகப் பதிவு செய்யப்பட்ட கைத்தொழில்களில் 72 சதவீதமே உற்பத்தியில் ஈடுபட் டிருப்பதாகத் தெரிய வந்தது.

தனியார் துறைக் கைத்தொழில்கள் இறக்குமதி நாணய பரிவர்த்தனை சம்பந்தமாகக் கைக்கொள்ளப் பட்ட தாராள போக்கினை அடுத்து சமீப காலங்களில் பெருமளவு அதிகரித்துள்ளது. 1978-ம் ஆண்டிலும் 1979-ம் ஆண்டிலும் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில் எண்ணிக்கை நிலையங்கள் இதனைப் புலப்படுத்துகின்றன. ஜவுளிக் கைத் தொழில் அமைச்சு மட்டும் 1978–ல் 1315 புதிய முயற்சி களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. கைத்தொழில் விஞ் ஞான அலுவல் அமைச்சும் 1978–ம் ஆண்டில் 1070 வரை யிலான புதிய தொழில் முயற்சிகளை அங்கீகரித்துள்ளது. எனவே அரசாங்கத்தின் இறக்குமதித் தாராளக் கொள்கை தனியார் துறைக் கைத்தொழில்களின் உற்பத்தி பெரு மளவு அதிகரித்துச் செல்லக் காரணமாக அமைந்துள்ளது.

தனியார்துறைக் கைத்தொழில்கள் மாத்திரமன்றி அரசதுறைக் கைத்தொழில்களும் இலங்கையின் கைத் தொழிலில் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அரசாங் கத் துறையிலுள்ள கைத்தொழில் கூட்டுத் ஸ்தாபனங் களின் 1971–ன் உற்பத்திப் பெறுமதி மொத்தக் கைத் தொழில் உற்பத்தியில் 25·7 சதவீதமாகும். இது 1976-ல் 66 சதவீதமாக அதிகரித்துள்ளது. 1970–ம் ஆண்டின்

பின்னர் மேற்கொள்ளப்பட்ட கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் அரசாங்கத்துறையிலுள்ள கூட்டுத் ஸ்தாதாபனங்களின் பங்கு கைத்தொழில் துறையில் பெருமளவு அதிகரிக்கக் காரணமாயின. 1976-ம் ஆண்டு வரை கைத்தொழில் கூட்டுத் ஸ்தாபனங்களின் பங்கு பெருமளவு அதிகரித்தது. 1978-ம் ஆண்டின் பின்னர் தனியார்துறைக் கைத்தொழில்களுக்குப் பெருமளவு முக்கியத்துவம் வழங்

அட்டவணை 34

அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபனங்களின் ஆக்கம் 1974

| கூட்டுத் தாபனங்களின் பெயர் | | | உற்பத்திப் பெறுமதி (ரூ 000) |
|---|---|---|---|
| (1) | தேசிய பாற்சபை | | 164,279 |
| (2) | எண்ணெய்க் கொழுப்புக் கூட்டுத்தாபனம் | | 48,884 |
| (3) | இலங்கை சீனிக் | ,, | வி. கி. |
| (4) | அரசாங்க மா அரைத்தற் | ,, | 177,859 |
| (5) | தேசிய உப்புக் | ,, | 6,631 |
| (6) | இலங்கை புகையிலைத் கைத்தொழில் கூட்டுத்தாபனம் | | 52,605 |
| (7) | அரசாங்க வடித்தற் | ,, | 4,115 |
| (8) | தேசிய புடவைக் | ,, | 149,351 |
| (9) | இலங்கை தோற்பொருட்கள் | ,, | 11,570 |
| (10) | கிழைத்தாள் ஆலைக் | ,, | 85,497 |
| (11) | இலங்கை ஒட்டுப் பலகைக் | ,, | 49,460 |
| (12) | அரசாங்க மரப்பொருள் | ,, | 42,903 |
| (13) | பரந்தன் இரசாயனக் | ,, | 6,848 |
| (14) | இலங்கை ரயர் | ,, | 103,094 |
| (15) | இலங்கை பெற்றோலிய | ,, | 949,386 |
| (16) | இலங்கை ஆயுள்வேத | ,, | வி. கி. |
| (17) | ,, மட்பாண்டக் | ,, | 42,728 |
| (18) | ,, சீமெந்து | ,, | 139,812 |
| (19) | ,, கனிப்பொருள் | ,, | 2,343 |
| (20) | ,, உருக்கு | ,, | 129,564 |
| (21) | ,, அரசாங்கவன்கலம் | ,, | 21,212 |
| (22) | ,, மீன்பிடித்தொழில் | ,, | வி. கி. |
| (23) | ,, அரசாங்க அச்சகக் | ,, | 10,143 |
| (24) | ,, அரசாங்கக் காரியக் | ,, | 9,213 |
| | மொத்தம் | | 2,207,497 |

மூலம்: திறைசேரியின் கூட்டுத்தாபனப் பிரிவும் தொடர்பான கூட்டுத்தாபனங்களும்.

கப்பட்டமையால் அரச துறைக் கைத்தொழில்களில் பெருமளவு மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை. 1979-ம் ஆண்டு வரையில் எந்தப் பெரிய அரசாங்கத் துறைக் கைத்தொழிற் திட்டங்களும் பூர்த்தி செய்யப்படவில்லை.

கைத்தொழில் உற்பத்தியானது 1977-ம் ஆண்டின் பிற்பகுதி தொடக்கம் வேகமான முறையில் உயர்வடைந்து செல்கின்றது எனலாம். பொதுத்துறையைப் பொறுத்தளவில் மின்சாரம், சீமெந்து, பெற்ரோலியம், உருக்கு, மட்பாண்டம், காரீயம், இரசாயனங்கள், டயர்கள் என்பவற்றின் உற்பத்தியில் பாரிய விருத்தி காணப்பட்டது. இறக்குமதிகள் தாராளமயமாக்கப்பட்டமை காரணமாக மூலப் பொருட்களும் ஏனைய உள்ளீடுகளும் தடைகளின்றி தாராளமாகக் கிடைத்தமை, சார்பு ரீதியாக இக் காலப்பகுதியில் நிலவிய கைத்தொழில் அமைதி இச் செழிப்பு நிலைக்கு ஏதுவான சில காரணிகளாகும். எனினும் இறக்குமதி தாராளமயமாக்கப்பட்டமையால் ஜவுளிகள், பொம்மைகள், கண்ணாடிப் பொருட்கள், தீப்பெட்டி, மின் விசிறிகள், வானொலிப் பெட்டிகள் என்பனவற்றின் உற்பத்தி ஓரளவு பாதிக்கப்பட்டுள்ளன. 1979-ம் ஆண்டின் அரையாண்டு காலப்பகுதியில் சீமெந்து உற்பத்தி 9 சதவீதத்தாலும், உருக்கு 29 சதவீதத்தாலும் டயர்கள் 10 சதவீதத்தாலும் அதிகரிப்பைக் காட்டின. அத்துடன் இக்காலப் பகுதியில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் நிறுவப்பட்டமை கைத்தொழில் வளர்ச்சிக்கு மேலும் ஊன்றுகோலாக அமைந்தது. எனவே முன்னைய ஆண்டு காலப்பகுதிகளோடு ஒப்பிடும் பொழுது கைத்தொழில் உற்பத்திப்போக்குகள் 1978-ம் ஆண்டின் பின்னர் துரிதமாக வளர்ச்சியடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கதொன்றாகும்.

**தொழில் வாய்ப்புக்களும் கூலிகளும்:**

கைத்தொழிலில் தொழில் வாய்ப்புக்களையும் கூலியையும் பற்றிய தரவுகள் காலத்துக்குக் காலம் மாற்ற

மடைந்து சென்றுள்ளன. உற்பத்தி நிறுவனங்களின் மாற்றங்களுக்கிணங்கவும் உற்பத்தியின் ஏற்றத்தாழ்வுகளுக்கு இணங்கவும் தொழில் வாய்ப்புக்கள் மாற்றமடைந்துள்ளன. 1961-ல் 315 நிறுவனங்களே உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. இதில் 19,988 ஊழியர்கள் வேலை வாய்ப்பினைப் பெற்றிருந்தனர். 1974-ம் ஆண்டில் கைத்தொழிலிலுள்ள ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 96,668 ஆகும். இவ்வாண்டின் உற்பத்தி நிறுவனங்கள் 1492 ஆகக் காணப்படுகின்றன. 1978-ல் நிறுவனங்களின் எண்ணிக்கை ஏறத்தாள 3000 க்கு மேல் அதிகரித்துள்ளது. அதற்கேற்ப ஊழியத்தின் எண்ணிக்கையும் பெருமளவு அதிகரித்துச் சென்றுள்ளது. கடந்த 20 வருட காலப்பகுதியில் நிறுவனங்களின் எண்ணிக்கையானது 5 மடங்காகவும் ஊழியர்களின் எண்ணிக்கை 7 மடங்காகவும் அதிகரித்துள்ளது. அட்டவணை 35 கைத்தொழில் நிலையங்களின் எண்ணிக்கையையும் ஊழியர்களின் எண்ணிக்கையையும் காட்டுகின்றது.

அட்டவணை 35

**கைத்தொழில் நிறுவனங்களும் தொழில் வாய்ப்பும்**

| வருடம் | நிறுவனங்களின் எண்ணிக்கை | ஊழியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1961 | 315 | 19,988 |
| 1965 | 1,381 | 56,835 |
| 1971 | 1,897 | 110,141 |
| 1975 | 1,489 | 107,944 |
| 1978 | 2,458 | —— |

மூலம்: மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்

அண்மைக் காலப்பகுதிகளில் கைத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கையும், ஊழியத்தின் அளவும், கூலிகளும் பெருமளவு அதிகரித்துச் சென்றுள்ளன: அரசாங்கம் தனியார் துறைக் கைத்தொழில்களுக்கு போதியளவு

சலுகைகள் வழங்கியுள்ளமை கைத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை பெருமளவு அதிகரிக்கக் காரணமாக அமைந்துள்ளன. 1978-ம் ஆண்டில் கைத்தொழில் அமைச்சு 1315 புதிய கைத்தொழில் முயற்சிகளுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதில் 20,153 பேருக்கு வேலை வசதி வழங்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சும் 1978-ம் ஆண்டில் 1070 வரையிலான புதிய தொழில் முயற்சிகளை அங்கீகரித்துள்ளது. இதன் மூலம் 23,191 பேர் வேலை வாய்ப்பைப் பெறுவர் என மதிப்பிடப்பட்டுள்ளது. சுதந்திர வர்த்தக வலயத்தில் 14 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அதில் 1979-ம் ஆண்டின் முடிவில் 6000 பேர் அளவில் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். இக்காலப் பகுதியில் ஊழியர்களுக்கான கூலியும் பெருமளவு அதிகரித்துள்ளது. நிருமானத்துறை ஊழியர்கள் பலர் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுச் சென்றமை காரணமாக வினைத்திறன் மிக்க தொழிலாளர்களுக்கு நாட்டில் பற்றுக்குறை ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து அண்மைக் காலங்களில் கைத்தொழில் ஊழியர்களுக்கான வேதனமும் கணிசமான அளவு உயர்ந்துள்ளன.

## மூலப் பொருட்களின் பயன்பாடு:-

இலங்கையின் ஆரம்பக் கைத்தொழில்கள் வெளிநாட்டு மூலப்பொருட்களையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. இன்றும் கைத்தொழிலின் பெரும்பங்கு வெளிநாட்டு மூலப்பொருட்களிலேயே பெருமளவு தங்கியுள்ளன. ஆரம்ப காலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அனைத்தும் ஆடம்பரப் பொருட்களாக அமைந்தமையால் அவை வெளிநாட்டு மூலப் பொருட்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வந்தன. ஏறத்தாள 75 சதவீதமான மூலப்பொருட்கள் இறக்குமதி மூலமே பெறப்பட்டன. கைத்தொழிலுக்குப் பயன்படுத்தப்படும் அரைப் பங்கிற்குச் சிறிது குறைந்தளவு மூலப்பொருட்கள் கனிப் பொருட்களின் மூலமேயாகும். இவை உள்நாட்டில் போதி

யளவு இல்லாமையினுல் கைத்தொழிலாக்கம் இறக்குமதியையே நம்பி இருக்க வேண்டியுள்ளது. ஆனுல் தொடர்ந்து நிலவிய அன்னிய செலாவணிப் பற்ருக்குறை கைத்தொழில் மூலப்பொருட்களின் இறக்குமதி குறைவடையவும் கைத்தொழில் வளர்ச்சி வீழ்ச்சியடையவும் காரணமாக இருந்துள்ளன. 1970-ம் ஆண்டின் பின்னர் உள்நாட்டு மூலப்பொருட்களின் பயன்பாடும் அதிகரித்து வந்துள்ளது. 1974-ம் ஆண்டில் கைத்தொழில் பயன்படுத்தப்பட்ட மொத்த மூலதனப் பொருட்களின் பெறுமதியை சத வீதத்தில் அட்டவணை 36 காட்டுகின்றது.

அட்டவணை 36

**உள்நாட்டினதும் வெளிநாட்டினதும் மூலப்பொருட்களின் பயன்பாடு — 1974.**

| கைத்தொழில் பிரிவு | மூலப் பொருட்கள் (சத வீதம்) | |
|---|---|---|
| | உள் நாட்டு | வெளி நாட்டு |
| (1) உணவு, குடிபானம், புகையிலை ஆகியவற்றின் தயாரிப்பு | 50·7 | 49·3 |
| (2) புடைவைகள், அணியும்ஆடைகள், தோற்கைத்தொழில் | 32·1 | 67·9 |
| (3) தளபாடங்கள் உட்பட மர, மர உற்பத்திகளின் தயாரிப்பு | 86·9 | 13·1 |
| (4) தாள், தாள் உற்பத்திகளின் தயாரிப்பு | 45·0 | 55·0 |
| (5) இரசாயன, பெற்ருேலிய, நிலக்கரி, றப்பர், பிளாஸ்ரிக் பொருட்களின் தயாரிப்பு | 11·1 | 88·9 |
| (6) உலோகச் சார்பற்ற கனிப் பொருள்களின் தயாரிப்பு | 80·2 | 19·8 |
| (7) அடிப்படை உலோகப் பொருட்கள் | —— | 100·0 |
| (8) தயாரிக்கப்பட்ட உலோகப் பொருட்கள், இயந்திரம் போக்கு வரத்துச் சாதனங் களின் தயாரிப்பு | 28·2 | 71·8 |
| (9) தயாரிக்கப்பட்ட உற்பத்தி கள் வே. கூ. ப. | 24·5 | 75·5 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

சமீப காலங்களில் வெளிநாட்டு மூலப்பொருட்களின் பயன்பாடு பெருமளவு அதிகரித்துச் சென்றுள்ளன. அர சாங்கத்தின் இறக்குமதித் தளர்வுக் கொள்கை வெளி நாட்டு மூலப் பொருட்களின் பயன்பாடு பெருமளவு அதி கரிக்க ஓர் காரணமாகும். 1978-ல் மொத்த இறக்குமதி யில் நடுத்தரப் பொருட்களினதும் மூலதனப் பொருட் களினதும் பங்கு 70 சதவீதமாகும். இவ் இறக்குமதிப் பண்டச் சேர்க்கையில் ஏற்பட்ட மாற்றம் வெளிநாட்டு மூலப்பொருட்களின் முக்கியத்துவத்தினைப் பிரதிபலிப்ப தாக அமைந்துள்ளது. ஏறத்தாள 79 சதவீதத்திற்கு மேற்பட்ட கைத்தொழில் மூலப் பொருட்கள் வெளி நாடுகளிலிருந்து பெறப்படுகின்றன.

### வலுவினதும் எரிபொருளினதும் பயன்பாடு:-

கைத்தொழிற் துறையில் பெற்ருேலும் எண்ணெயும், நிலக்கரியும் வாயுவும், ஏனைய எரிபொருட்களும் பயன் படுத்தப்படுகின்றன. இவற்றின் உற்பத்தி வருடா வருடம் அதிகரித்துச் செல்கின்றது. 1974-ம் ஆண்டு தொடக்கம் இவற்றின் அதிகரிப்பு வேகம் கூடியதொன்ருகக் காணப் படுகின்றது. மின்சக்தியினதும் எரிபொருட்களினதும் பெறு மதியின் கூடுதலான அதிகரிப்பிற்குப் பெற்ருேலியப் பொருட்களின் விலை அதிகரிப்பே அடிப்படைக் காரணமா கும். 1969-ம் ஆண்டு சுத்திகரிக்கப்படாத ஒரு பீப்பா மசெண்ணெயின் விலை உலக சந்தையில் 1·34 அமெரிக்க டொலராக இருந்தது. இவ்விலை 1979-ல் 18 அமெரிக்க டொலராக அதிகரித்தது. இவ்வாருன விலையேற்றமே கைத்தொழிலில் எரிபொருளின் பெறுமதி அதிகரித்தமைக் குரிய காரணமாகும். கடந்த 7 ஆண்டுகளில் இலங்கை யின் பெற்ருேலிய இறக்குமதியின் பெறுமதி 1500 சத வீதத்தால் உயர்வடைந்துள்ளன. எரிபொருளின் பயன் பாடு அதிகரிப்பிலும் பார்க்க அவற்றின் விலை அதிகரிப்பு பெருமளவு கூடிக் காணப்படுகின்றமையால் கைத்தொழி லாக்கம் பல பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றதெனலாம்.

## கைத்தொழிலின் முக்கியத்துவம் :-

தேசிய உற்பத்தியில் நீண்ட காலமாக பின்தங்கிக் காணப்பட்ட கைத்தொழில் 1978-ன் பின்னர் குறிப்பிடத் தக்க அளவு மாற்றத்தினைக் கண்டுள்ளது. இறக்குமதி தாராளமாக்கப்பட்டமை மூலப்பொருட்களினதும் உதிரிப் பாகங்களினதும் கிடைக்கத்தக்க தன்மையை இலகுவாக் கியது. 1978-ல் தனியார்துறைக் கைத்தொழில்களும் அரச துறைக் கைத்தொழில்களும் கணிசமான அளவில் வளர்ச்சி யடைந்தன. நடைமுறைப் பெறுமதி நியதிகளில் தனியார் துறைக் கைத்தொழில் வெளியீடு 30 சதவீதத்தாலும் அரச துறை வெளியீடுகள் 26 சதவீதத்தாலும் அதிகரித்தன. உண்மையான வளர்ச்சி வீதம் 1976-ல் 1·2 ஆக அமைய 1978-ல் 10·6 சதவீதமாகக் காணப்படுகின்றது. சில துறை களின் உற்பத்தி வீழ்ச்சியடைந்திருப்பினும் பொதுவாக நோக்கின் கைத்தொழில் உற்பத்தி முன்னரிலும் பார்க்க அதிகரித்துள்ளது. எனினும் இலங்கை மக்களின் வாழ்க் கைத்தர உயர்விற்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் கைத் தொழில் வளர்ச்சியின் போக்கு போதுமானதொன்ருக அமையவில்லை.

இலங்கையின் கைத்தொழிற் துறை பல்வேறு வகை யான பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றது. மூலவளம் பற்ருமை, மூலதனமின்மை, தொழில் நுட்பம் வளர்ச்சி யடையாமை, மூளைசாலிகளின் வெளியேற்றம், சந்தை வாய்ப்புக்களின்மை, கைத்தொழிற் செறிவு பற்ருமை ஆகிய காரணங்களால் கைத்தொழில் வளர்ச்சியானது நீண்ட காலமாக பெருமளவு தேக்க நிலையிலேயே காணப் படுகின்றது. இலங்கையில் மூலவளங்கள் இயற்கையாகவே குறைவாகக் காணப்படுகின்றன. மூலவளங்கள் பற்றிய ஆய்வுகளும் குறைவு. எனவே கைத்தொழிற் துறையில் உள்நாட்டு மூலவளங்களின் பயன்பாடு மிகக் குறைவா கவே காணப்படுகின்றது. தேவையில் 75 சதவீதமான மூலப்பொருட்கள் இறக்குமதி மூலமே பெறப்படுகின்றன. இவ் இறக்குமதி அன்னிய செலாவணியை அடிப்படை

யாகக் கொண்டதாகும். இது நாட்டின் கைத்தொழில் உறுதியற்ற நிலையில் உள்ளதென்பதையே புலப்படுத்து கின்றது. அத்துடன் கைத்தொழிலுக்குத் தேவையான தொழில் நுட்பங்கள் பெருமளவு வளர்ச்சியடையவில்லை. வளர்ச்சியடைந்த தொழில் நுட்பங்களும் அதிக கூலி காரணமாக வெளிநாடுகள் சென்றுவிடுகின்றன. இதன் காரணமாக தொழில் நுட்பம் மிக்க தொழிலாளர்களுக்கு இன்று நாட்டில் பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலை வேலையற்றோர் பிரச்சனைக்குத் தீர்வாக அமையி னும் கைத்தொழில் வளர்ச்சிக்கு ஒரு தடைக்கல்லாகும். கைத்தொழில் அமைப்பானது கொழும்பு நகரைச் 'சுற்றி யுள்ளமையும் அதன் வளர்ச்சிக்குத் தடையான மற்றுமோர் காரணமாகும். உற்பத்திப் பெறுமதியில் 90 சதவீதத்திற்கு வகை கூறும் தயாரிப்புக் கைத்தொழிலில் 80 சதவீதத்திற்கு அதிகமானவையும் தொழிற்படையில் 81 சதவீதமானவை யும் கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ளதாக அளவீடு காட்டுகின்றது. இத்தகைய கைத்தொழில்களின் அடித் தளம் சிறந்ததாகக் காணப்படவில்லை. இவ்வாறான காரணி கள் இலங்கையின் கைத்தொழிலின் வேகமான வளர்ச்சிக் குத் தடையாக அமைகின்றன.

1978-ம் ஆண்டின் பின்னர் கைத்தொழில் வளர்ச்சி யானது முன்னைய காலப்பகுதியிலும் பார்க்கப் பெரு மளவு அதிகரித்துள்ளது. இவ்வாறான அதிகரிப்பு நிரந்தரம் ஆக்கத்தக்க வகையில் கைத்தொழிற் துறை மாற்றி அமைக்கப்பட வேண்டியது அவசியமாகும். பெருகிச் செல் லும் ஊழியப்படைக்கு வேலை வாய்ப்பை வழங்கக் கூடிய அளவு சகல மாவட்டங்களிலும் பெருமளவு சமமான கைத்தொழில்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். கொழும்பு மாவட்டத்திற்கு வெளியிலிருந்து முதலீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காகத் தேவையான உள்ளமைப்புடன் கூடிய மாநிலக் கைத்தொழில் நிலையங்கள் அமைக்கப்பட வேண் டும். எவ்வாறெனினும் நாட்டின் பொருளாதார உறுதிக் கும் வளர்ச்சிக்கும் ஏற்ற வகையில் கைத்தொழிற்துறை விஸ்தரிக்கப்பட வேண்டியது அவசியமானதொன்றாகும்.

**இதுவரை கற்றவை :**

1. இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சியடையாமைக்கு அத்துறையில் ஆர்வமின்மையே மூலகாரணியாகும்.

2. 1950—60 காலப்பகுதியில் கைத்தொழிலை விருத்தி செய்யும் முகமாக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

3. 1977—78 காலப்பகுதியில் கைத்தொழில் வளர்ச்சி வேகம் கூடியதொன்றாகக் காணப்பட்டது.

4. உற்பத்தியடிப்படையில் குடிசைக் கைத்தொழில், சிறிய ஆலைகள், கூட்டுஸ்தாபனங்கள், கூட்டுறவுத்துறை என நான்கு பிரிவுகளை அவதானிக்கலாம்.

5. இலங்கையின் கைத்தொழில்கள் மேல் மாகாணத்தில் கொழும்பைச் சுற்றியே அமைந்துள்ளன.

6 உற்பத்திப் போக்குகள் காலத்திற்குக் காலம் மாற்றமடைந்துள்ளன. தனியார்துறைக் கைத்தொழில்களே இன்று உற்பத்தியில் பெரும் பங்கினை வகிக்கின்றது.

7. கைத்தொழில் துறையில் தொழில் வாய்ப்புக்கள் குறைவாகவே காணப்படுகின்றன.

8. மூலப்பொருட்களின் 75 சதவீதம் இறக்குமதி மூலமே பெறப்படுகின்றது.

9. எரிபொருட்களின் செலவு வேகமாக அதிகரித்துச் சென்றுள்து.

10. இலங்கையின் பொருளாதார உறுதிக்கும், வளர்ச்சிக்கும் கைத்தொழில் வளர்ச்சியே ஊன்றுகோலாகும்.

# தீர்வையற்ற வர்த்தக வலயமும்

வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் தமது கைத்தொழில் வளர்ச்சியை உருவாக்கவும் இறக்குமதிப் பதிலீடுகளை உருவாக்கவும் 1956-ம் ஆண்டிற்குப் பின்னர் கையாண்டு வரும் வழி முறைகளில் தீர்வையற்ற வர்த்தக வலயமும் ஒன்றாகும். வெளிநாட்டு மூலதனங்களைக் கவரக்கூடிய முறையில் கட்டுப்பாடற்றதுமான கைத்தொழில் பேட்டையையே இது குறிக்கின்றது. எனவே இதனை உண்மையில் ஓர் மூலதன அபிவிருத்தி வலயம் என அழைக்கலாம். வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கும் உரிய வாய்ப்பினையும் பாதுகாப்பினையும் வழங்கும் பொருட்டு ஒரு கைத்தொழிற் பேட்டையை உருவாக்கி அப் பேட்டையில் உருவாக்கப்படும் பொருட்களை எவ்வித கட்டுப்பாடுமின்றி ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்பட்ட பிரதேசமே தீர்வையற்ற வர்த்தக வலயமாகும். இவ்வர்த்தக வலயத்தில் வரி விதிப்போ, அன்னிய செலாவணிக் கட்டுப்பாடோ, இறக்குமதிக் கட்டுப்பாடுகளோ இடம்பெற மாட்டாது. அதே சமயம் உள்நாட்டு மூலதனமும் வெளிநாட்டு மூலதனமும் இலகுவான முறையில் இப்பிரதேசத்தினுள் பாயமுடியும்.

1977-ன் பொருளாதார சீர்திருத்தங்கள் இலங்கையின் கைத்தொழிற் துறையில் மாற்றத்தினை வலியுறுத்தும் முறையில் அமைந்தது. இதனடிப்படையில் முதன் முதலாகத் தீர்வைற்ற வர்த்தக வலயம் நிறுவத் திட்டமிடப்பட்டது. 1978-ம் ஆண்டு ஜனவரி மாதம் அரசாங்கம் தீர்வையற்ற வர்த்தக பிராந்தியத்தினை சட்டரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைத்தது. கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவிடம் இதனை அமைக்கும் உரிமை ஒப்படைக்கப்பட்டது. இதன் முதல் நடவடிக்கையாக கட்டுநாயக்காவில் 600 ஏக்கர் நிலப் பரப்பில்

ஒரு முதலீட்டு ஊக்குவிப்பு வலய கைத்தொழிற்பேட்டை உருவாக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் ஏற்றுமதிக்கான கைத்தொழில்களில் உள்நாட்டுடன் இணைந்தோ இணையாமலோ இக் கைத் தொழில் வலயங்களில் முதலிடுமாறு கேட்கப்பட்டனர். ஒரு ஆண்டிலிருந்து பத்து ஆண்டு வரையிலான வரி விடுதலை, அதன் பின் சலுகையுடன் கூடிய மொத்த விற்பனை வரி, இறக்குமதி ஏற்றுமதித் தீர்வைகள், துறைமுகக் கட்டணங்கள் போன்றவற்றிலிருந்து விலக்கு, உள்நாட்டுச் சந்தையில் மட்டுப்படுத்தப்பட்ட ஆனால் விரும்பியதைப் பெறக்கூடிய தன்மை, வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களில் செலாவணிக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கு ஆகிய கவர்ச்சிகரமான தூண்டல்கள் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன. கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுப் பகுதிக்கு வெளியே வெளிநாட்டு முதலீட்டை ஒட்டிய கொள்கையானது தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய தொன்றாகவும், மட்டுப்படுத்தப்பட்டதாகவும் இருந்தது.

இலங்கையில் இவ் வர்த்தக வலயம் அமைக்கப்பட பல நோக்கங்கள் அடிப்படையாக அமைந்தன.

(1) இலங்கையின் தேசிய உற்பத்தியில் கைத்தொழிலின் பங்கு மிகவும் பின்தங்கியதொன்றாகவே காணப்பட்டது. இதற்கு மூலதனப் பற்றாக்குறையே அடிப்படைக் காரணமாகக் காட்டப்பட்டது. எனவே சுதந்திர வர்த்தக வலயம் அமைக்கப்படுவதன் மூலம் அன்னிய முதலீடுகளை இலகுவில் பெற்று கைத் தொழில் வளர்ச்சியையும் அதனூடாக பொருளாதார அபிவிருத்தியையும் ஏற்படுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(2) எமது நாட்டில் இதுவரை காலமும் பயன்படுத்தப் படாதிருந்த உள்ளூர் மூலவளங்களை உச்சப் பயன் அளிக்கத்தக்க வகையில் பயன்படுத்தத் தீர்வையற்ற வர்த்தக பிராந்தியம் வழிவகுக்கலாம்.

**(3)** வெளிநாட்டவர் முதலீடுகளை இடும் பொழுது தமது தொழில் நுட்பம், இயந்திர சாதனங்கள் என்பன வற்றை அதிகளவில் பயன்படுத்துவர். இதன் காரண மாக இலங்கை மக்களும் வெளிநாட்டவர்களின் தொழில் நுட்பத்தை அறிந்து கொள்ளவும் அதற் கிணங்கத் தமது உற்பத்தி நிறுவனங்களை அமைத்துக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்படலாம்.

(4) இலங்கையில் பெருகி வரும் வேலையற்றோர் பிரச்சனை யைக் குறைக்கவும் சுதந்திர வர்த்தக வலயம் ஓர் வழிகாட்டியாக அமையலாம். இவ் வர்த்தக வலயத் தினுள் ஏறக்குறைய 50,000 பேருக்கு வேலை வாய்ப் பினை வழங்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 1979-ம் ஆண்டின் முடிவில் இவ் வலயத்தினுள் செயல் பட்டு வரும் 14 தொழிற்சாலைகளில் ஏறத்தாள 6000 பேர் வேலை வாய்ப்பினைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

(5) ஏற்றுமதி அடிப்படையிலேயே இவ் உற்பத்தி வலயம் நிறுவப்படுவதால் இலங்கையின் வெளிநாட்டுச் சந்தை விரிவடைய வாய்ப்புண்டு. இறக்குமதி ஏற்றுமதித் தீர்வைகள் விலக்களிக்கப்பட்டுள்ளமையால் இவ் வர்த்தக வலயத்தினுள் முதலீடு செய்யும் நாடுகள் பெருமளவு ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளுள் ஈடுபடும். இதன் மூலம் இலங்கை நிலையானதோர் வெளிநாட்டுச் சந்தையினைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படலாம்.

(6) இப்பிரதேசத்தில் முதலீடு செய்பவர்களின் வசதிக் காக உள்நாட்டு வங்கிகளும் வெளிநாட்டு வங்கி களும் அமைக்கப்படவிருப்பதால் வங்கித்தொழில் விரிவடைவதுடன் அதிகளவு நிதி உதவிகளை நாட் டின் அபிவிருத்திக்குப் பெறமுடியும்.

(7) பல்வேறு நாட்டினைச் சேர்ந்த மக்கள் இங்கு வந்து முதலீடுகளை மேற்கொள்வதால் வெளிநாட்டுக் கலாச்

சாரங்களை நாம் பின்பற்றிக் கொள்ளவும் எமது கலாச்சாரங்களை வெளிநாட்டவர் பின்பற்றவும் வாய்ப்பு ஏற்படும். இக் கலாச்சாரப் பரிமாற்றம் நாடுகளிடையே நல்லுணர்வினை வளர்க்கும்.

இவ்வாறான நோக்கங்களைக் கருத்திற் கொண்டே இலங்கையில் முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் நிறுவப்பட்டுள்ளது. இந் நோக்கங்கள் எந்தளவிற்கு பயனளிக்கும் என்பது அதன் வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது.

**வளர்ச்சிப் போக்கு:—**

கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் கீழ் செயற்பட்டு வரும் கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் துரித முன்னேற்றம் அடைந்து வருவதாகப் புள்ளி விபர தரவுகள் காட்டுகின்றன. 1978-ம் ஆண்டின் முடிவில் கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவானது ரூபா 16,240 இலட்ச முதலீட்டுடன் 52 கைத்தொழிலுக்கு ஒப்புதல் வழங்கியது. இதில் 74 சதவீதமான தொகை வெளிநாட்டு முதலீடாகும். இவற்றில் வெளிநாட்டு முதலீட்டின் அரைப் பகுதியை பிரதிபலிக்கும் 32 கைத்தொழில்கள் புடைவைகள், ஆடைகள் பிரிவைச் சார்ந்ததாகும். ஆடைத் தொழிலுக்கான சுதந்திர வர்த்தக வலயத்திற்குள் நிறுவப்படவுள்ள புதிய இயலளவும் திரண்ட இயலளவும் கீழ்க்காணும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 37**

**சுதந்திர வர்த்தக வலயத்தினுள் நிறுவப்படவுள்ள இயலளவு**

(இயலளவு : மில்லியன் துண்டுகளில்)

| ஆண்டு | வருடாந்த புதிய இயலளவு | திரண்ட இயலளவு |
|---|---|---|
| 1978 | 78·5 | 78·5 |
| 1979 | 482·5 | 561·0 |
| 1980 | 22·6 | 583·6 |
| 1981 | 21·3 | 604·9 |
| 1982 | 23·2 | 628·1 |
| 1983 | 373·2 | 1001·3 |
| 1984 | 445·7 | 1447·0 |
| 1985 | 7·1 | 1454·1 |

மூலம்: பொருளியல் நோக்கு டிச. 1979

இவ் உற்பத்தி வலயத்தில் ஈடுபடும் எல்லாக் கம்பனி களும் தமது ஆரம்ப இயலளவினை 1981 இலும் இறுதி இயலளவினை 1982–85 காலகட்டத்திற்குள்ளும் நிறைவு செய்ய இணங்கியுள்ளன. 1979–ம் ஆண்டு வருட இறுதி யில் சுதந்திர வர்த்தக வலய இயலளவு 56·1 கோடித் துண்டுகளைத் தயாரிக்கக் கூடியதாக அமையும் என எதிர் பார்க்கப்பட்டது. இதில் ஓரளவு நிறைவும் அடைந்துள் ளது. புடைவைகள் ஆடைகள் தவிர்ந்த வேறு பல உற் பத்திகளும் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இரசாயனம், இறப்பர், பிளாஸ்டிக் உற்பத்திகள் பெரு மளவு மேற்கொள்ளப்படுகின்றன. அட்டவணை 38 கட்டு நாயக்கா மூதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் செயல் அளவினைக் காட்டுகின்றது.

அட்டவணை 38

**கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்**

| | டிசம்பர் 1978 வரை | டிசம்பர் 1979 வரை |
|---|---|---|
| (1) அனுமதிக்கப்பட்ட முதலீட்டுத் திட்டங்கள் | 53 | 91 |
| (2) அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் மொத்த மூலதன முதலீடு (கோடி ரூபா) | 163·4 | 261·5 |
| (3) தொழில் உருவாக்கம் | 27,400 | 40,769 |
| (4) ஏற்றுமதிச் சம்பாத்திய ஆற்றல் (கோடி ரூபா) | 460 | 720,13 |
| (5) கைச்சாத்திடப்பட்ட ஆரம்ப ஒப்பந்தங்கள் | 32 | —— |
| (6) தொடங்கப்பட்ட நிர்மாண வேலைகள் | 12 | 43 |
| (7) வர்த்தக உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனங்கள் தொகை | 1 | 14 |
| (8) ஏற்றுமதியைத் தொடங்கியிருக்கும் ,, ,, | —— | 10 |

ஆரம்பிக்கப்பட்ட காலப் பகுதியுடன் ஒப்பிடும் பொழுது தீர்வையற்ற வர்த்தகப் பிராந்தியம் விரை வான முறையில் வளர்ச்சியடைந்து சென்றுள்ளதை அவ தானிக்க முடிகின்றது. அனுமதிக்கப்பட்ட முதலீட்டுத் திட்டங்களில் 43 திட்டங்கள் இதுவரை ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளன. 14 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. 22 தொழிற்சாலைகளுக்கான கட்டிட நிர்மான வேலைகள்

நடைபெற்று வருகின்றன, ஏறத்தாள 6000 பேர் இங்கு நேரடி வேலை வாய்ப்பைப் பெற்றுள்ளனர். அனுமதிக்கப் பட்ட முதலீட்டுத் திட்டங்கள் முழுவதும் செயற்படுமாயின் 40,000 பேருக்கு மேற்பட்டோர் வேலை வாய்ப்பினைப் பெற முடியும். ஏறத்தாள 25 நாடுகள் சுதந்திர வர்த்தக வலயத் தினுள் முதலீடு செய்ய முன்வந்துள்ளன. சுதந்திர வர்த்தக வலயத்தினுள் உள்ளாகவும் வெளியிலும் பெருமளவு ஈடுபாடு கொண்டுள்ள நாடு ஹொங்ஹொங் ஆகும். சுதந்திர வர்த்தக வலயத்துக்கு வெளியில் ஏறக்குறைய 1–5 பங்கினையும் சுதந்திர வர்த்தக வலயத்துக்குள்ளாக ½ வாசிக்கும் குறைந்த தொகையையும் இது கொண்டுள்ளது. ஜப்பான், சிங்கப்பூர், ஹொரியா போன்ற வேறுபல நாடு களும் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. இவ்வாறன செயற் பாடுகள் இலங்கையின் கைத்தொழில் வர்த்தக நடவடிக் கைகள் வேகமான முறையில் வளர்ச்சியடைய வழி வகுத் துள்ளன. எனவே எதிர் காலத்தில் இலங்கையின் கைத் தொழில் வளர்ச்சிக்கும் பொருளாதார உறுதிக்கும் சுதந்திர வர்த்தக வலயம் ஊன்றுகோலாக அமையலாம்.

**இதுவரை கற்றவை:-**

(1) இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சிக்குத் தேவையான மூல தனத்தினைத் திரட்டும் முகமாக உருவாக்கப்பட்டதே தீர்வை யற்ற வர்த்தக வலயமாகும்.

(2) நோக்கங்கள்:

- (A) கைத்தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தல்.
- (B) உள்ளூர் மூலப்பொருட்களுக்குக் கேள்வி ஏற்படல்.
- (C) தொழில் நுட்பம் விருத்தியடைதல்.
- (D) வெளிநாட்டுச் சந்தை வளர்ச்சி.
- (E) வங்கி வளர்ச்சி.
- (F) கலாச்சார வளர்ச்சி

(3) 1978-ம் ஆண்டிலும் பார்க்க 1979-ல் வர்த்தக வலயம் பெரு மளவு வளர்ச்சியடைந்துள்ளது.

(4) இதுவரை 91 தொழிற்சாலைகள் அமைக்க அங்கீகாரம் வழங் கப்பட்டுள்ளது. 14 தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. 22 தொழிற்சாலைக்கான நிர்மான வேலைகள் முடிவடைந் துள்ளன.

(5) இலங்கையின் கைத்தொழில் வளர்ச்சிக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் தீர்வுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் சுதந்திர வர்த்தக வலயம் ஊன்றுகோலாகும்.

அத்தியாயம் 9

# வெளிநாட்டு வர்த்தகம்

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் பொதுவாக நீண்டகாலமாக குடியேற்ற அதிகார நாடுகளுடனேயே காணப்பட்டது. ஐரோப்பியர் ஆட்சிக்காலம் தொட்டே வெளிநாட்டு வர்த்தகம் முக்கியம் பெறத்தொடங்கியது. இக் காலப்பகுதியில் இலங்கையின் ஏற்றுமதியில் 90 சதவீதமான பொருட்கள் முதன்மை உற்பத்திப் பொருட்களாகக் காணப்பட்டன. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் அடிப்படை ஏற்றுமதிப் பொருளாக விவசாயம் காணப்பட்டது. இலங்கையிலும் ஏற்றுமதிப் பொருளாதாரமானது பெருந்தோட்ட விவசாயத்தினையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. இக்காலப் பகுதியில் இறக்குமதிகள் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களையும், ஆடம்பரப் பொருட்களையும் கொண்டதாக அமைந்திருந்தன. இலங்கை சுதந்திரம் அடைந்த பின் இறக்குமதி மூலங்களை பல திசைகளுக்குத் திருப்பவும் ஏற்றுமதி செய்யும் நாடுகளை பரவலாக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இத்துறையிலான பிரதான முயற்சிகளில் ஒன்றுதான் 1954-ல் மக்கள் சீனக் குடியரசுடன் ஏற்படுத்தப்பட்ட இறப்பர் - அரிசி ஒப்பந்தமாகும். இக்காலப் பகுதியிலிருந்து இலங்கையில் வெளிநாட்டு வர்த்தகம் பன்முகப்படுத்தப்பட்டுள்ளதுடன் குடியேற்ற அதிகார நாடுகளுடனான வர்த்தக நடவடிக்கைகள் பெருமளவு குறைவடைந்துள்ளன.

இன்று இறக்குமதி ஏற்றுமதி மூலங்கள் பன்முகப்படுத்தப்பட்டுள்ளதுடன் கடந்த 10 ஆண்டுகளில் இலங்கையின் வர்த்தகம் மூன்றும் உலக நாடுகளுடன் நெருங்கிய தொடர்புடையதாய் இடம்பெயர்ந்துள்ளது. 1966-க்கும் 1975-க்கும் இடையில் நடைபெற்ற இவ்விடப் பெயர்தலை அட்டவணை 39 காட்டுகின்றது.

## அட்டவணை 39
## ஏற்றுமதி 1966 — 1975
### (சதவீதமாக)

| நாடு | 1966 | 1975 |
|---|---|---|
| (1) பிரிட்டன் | 24·8 | 7·7 |
| (2) மக்கள் சீனக் குடியரசு | 10·6 | 11·5 |
| (3) அமெரிக்கா | 8·1 | 5·5 |
| (4) ஈராக் | 6·1 | 4·7 |
| (5) சோவியத் யூனியன் | 4·9 | 2·6 |
| (6) தென் ஆபிரிக்கா | 4·8 | 3.1 |
| (7) அவுஸ்திரேலியா | 4·4 | 2·8 |
| (8) கனடா | 2·8 | 2·4 |
| (9) மேற்கு ஜேர்மன் குடியரசு | 2·8 | 3·0 |
| (10) ஜப்பான் | 2·5 | 4·4 |
| (11) பாகிஸ்தான் | 2·5 | 8·6 |
| (12) நியூசிலாந்து | 1·8 | — |
| (13) நெதலாந்து | 1·7 | 1·8 |
| (14) இத்தாலி | 1·4 | 1·7 |
| (15) போலந்து | 1·6 | — |
| (16) இந்தியா | 1·4 | — |
| (17) கிழக்கு ஜேர்மன் குடியரசு | 1·2 | — |
| (18) ருமேனியா | 1·2 | — |
| (19) பிரான்ஸ் | 1·0 | — |
| (20) மெக்ஸிகோ | 1·0 | — |
| (21) ஐக்கிய அரபுக் குடியரசு | — | 3·1 |
| (22) லிபியா | — | 2·9 |
| (23) ஈரான் | — | 2·9 |
| (24) சவூதி அரேபியா | — | 2·4 |
| (25) சிறியா | — | 1·6 |
| (26) குவைத் | — | 1·5 |
| (27) ஹொங்ஹொங் | — | 1.5 |

மூலம்: பொருளியல் நோக்கு

1966–ல் இலங்கையின் ஏற்றுமதியில் 25 சதவீதத்தை கொள்வனவு செய்த பிரிட்டன் 1975–ல் 7·7 சதவீதமான பொருட்களையே கொள்வனவு செய்து மூன்றும் இடத்துக்குத் தாழ்ந்துள்ளது. இலங்கையின் உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் 20 பிரதான நாடுகளைக் கவனத்தில் எடுக்கும் பொழுது அவற்றுள் மூன்றும் உலகைச் சார்ந்த 5 நாடுகளே 1966–ல் எமது மொத்த ஏற்றுமதியின் 21·5 சதவீதத்தை மொத்தமாகக் கொள்வனவு செய்துள்ளன. ஆனால் 1975-ல் கொள்வனவு செய்த நாடுகளில் 10 நாடுகள் மூன்றும் உலக நாடுகளாக மாறிய

துடன் 40·7 சதவீதமான பொருட்களைக் கொள்வனவு செய்துள்ளனர். ஏற்றுமதிப் பொருட்களைக் கொள்வனவு செய்த நாடுகளின் எண்ணிக்கையும் கடந்தகாலப் பகுதிகளில் பெருமளவு மாற்றமடைந்துள்ளன. 1966-ல் இலங்கைப் பொருட்களை 90 நாடுகளே கொள்வனவு செய்த அதேவேளையில் 1975–ல் 125 நாடுகள் கொள்வனவு செய்தன. அதிகரிப்புக் காட்டிய நாடுகளில் பெரும்பாலானவை மூன்றும் உலக நாடுகளாகும்.

இறக்குமதி மூலமாகவும் மூன்றும் உலக நாடுகளுடனுன இலங்கையின் உறவு 1966–ன் பின் பெருமளவு மாற்றமடைந்துள்ளன. 1966-ல் மூன்றும் உலக நாடுகள் எமது இறக்குமதியில் 34 சதவீதத்தை மாத்திரமே பூர்த்தி செய்தது. ஆனால் 1975-ல் 47·7 சதவீதமானவை மூன்றும் மண்டல நாடுகளிலிருந்தே பெறப்பட்டன.

1976-ம் ஆண்டின் பின்னர் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகப் போக்குகள் பெருமளவு மாற்றமடைந்துள்ளன. 1977-ன் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்கள் வெளி நோக்கிய பொருளாதார வளர்ச்சிக்குரிய முன் ஆயுத்தமாகக் கருதப்பட்டது. இந் நடவடிக்கைகளைத் தொடர்ந்து இலங்கையில் ஒப்பீட்டு ரீதியில் திறந்த பொருளாதாரம் இடம் பெறலாயிற்று. பொருளாதாரத்தில் உற்பத்தி நடவடிக்கைகளுக்குத் தூண்டுதல் அளிக்கும் நோக்குடன் வர்த்தகம், நாணய மாற்று ஆகிய நடவடிக்கைகளில் இருந்த கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. இறக்குமதி, வெளிநாட்டு நாணய மாற்றுத் தளர்வு என்பவற்றின் விளைவாக ஏற்றுமதி ,இறக்குமதி வர்த்தகப் போக்குகள் பெருமளவு மாற்றமடைந்துள்ளன.

**அமைப்பு: (ஏற்றுமதி)**

இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் நீண்டகாலமாக குறிப்பிட்ட ஓர் அமைப்பினைக் கொண்டே காணப்பட்டு வந்துள்ளன; சமீப காலங்களில் இவ்வமைப்பு

முறையில் ஓர் சிறு மாற்றம் ஏற்பட்டிருப்பினும் அது பெருமளவிலான ஒரு பாதிப்பினை ஏற்படுத்தவில்லை.

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் ஏற்றுமதி வருமானத்தில் ஏறத்தாள 90 சதவீதம் விவசாய முதல் விளைவுப் பொருட்களான தேயிலை, தென்னை, இறப்பர் ஆகியவற்றிலிருந்தே பெறப்பட்டன. 1970-ம் ஆண்டு காலம் வரை இம் மூன்று பொருட்களுமே ஏற்றுமதித் துறையில் முழு செல்வாக்கினையும் வகித்து வந்தன. 1978-ல் இவற்றின் பங்கு 70 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. 1972-ம் ஆண்டின் பின்னர் மரபு ரீதியற்ற பொருட்களின் ஏற்றுமதி அதிகரித்தமையே இவற்றின் முக்கியத்துவம் குறைவடையக் காரணமாகும். பின்வரும் அட்டவணை கடந்த இரு தசாப்தங்களில் ஏற்றுமதி அமைப்பினைக் காட்டுகின்றது.

அட்டவணை 40

ஏற்றுமதிகளின் அமைப்பு 1960 – 1978

(சதவீதமாக)

| காலம் | 1960 | 1965 | 1970 | 1975 | 1978 |
|---|---|---|---|---|---|
| தேயிலை | 60 | 62 | 55 | 49 | 48 |
| இறப்பர் | 21 | 16 | 22 | 17 | 15 |
| தெங்கு | 10 | 14 | 12 | 10 | 08 |
| ஏனையவை | 9 | 08 | 11 | 24 | 29 |
| மொத்தம் | 100 | 100 | 100 | 100 | 100 |

மூலம்: மத்திய வங்கியின் ஆண்டறிக்கை.

இலங்கையின் ஏற்றுமதியில் நீண்ட காலமாக தேயிலையே பெரும் பங்கினை வகித்து வந்துள்ளது. விவசாய முடிவுப் பொருளான தேயிலை சராசரி 50 சதவீதத்திற்கு மேலான வருமானத்தினைப் பெற்றுத் தருகின்றது. ஏற்றுமதி வருமானத்தில் இரண்டாவது இடத்தினை வகிப்பது இறப்பராகும். இறப்பரின் உலக சந்தை விலை அதிகரிப்பினும் அதன் ஏற்றுமதி மூலம் பெறப்படும் வருமானம் அண்மைக் காலங்களில் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்

கினையே கொண்டுள்ளது. 1960-ல் 21 சதவீத வருமானத்தினைப் பெற்றுத் தந்த இறப்பர் 1978-ல் 15 சதவீதமான வருமானத்தை மாத்திரமே பெற்றுத் தந்துள்ளது. தெங்கின் ஏற்றுமதி வருமானமும் வீழ்ச்சிப் போக்கினைக் கொண்டதாகவே காணப்படுகின்றது. 1960-ம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது 1965/70-ம் ஆண்டு காலப்பகுதிகளில் அதன் ஏற்றுமதி வருமானம் அதிகரித்துச் சென்றிருப்பினும் 1978-ம் ஆண்டு அதன் மூலம் பெற்ற வருமானம் பெருமளவு வீழ்ச்சியடைந்துள்ளது. 1975-ல் 914 மில்லியன் காய்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1979-ல் ஏறத்தாள 596 மில்லியன் காய்களே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. தெங்குப் பொருட்களின் பெரும் பகுதி உள்நாட்டில் நுகரப்படுகின்றமையும் காலநிலை பாதிப்பின் காரணமாகத் தெங்கு உற்பத்தி வீழ்ச்சியடைகின்றமையுமே தெங்கின் ஏற்றுமதி வருமானம் குறைவடையக் காரணமாகும்.

இலங்கையின் ஏற்றுமதியில் 1972-ம் ஆண்டின் பின்னர் மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளின் பங்கு படிப்படியாக அதிகரித்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளில் சிறு வேளாண்மை உற்பத்திகள், இரத்தினக் கற்கள், சிறு கைத்தொழில் உற்பத்திகள், கப்பற்றுறை உற்பத்திகள் என்பன அடங்கும். சிறு வேளாண்மை உற்பத்தி என்னும் பொழுது கறுவா, ஏலம், கராம்பு, சிற்றநெல்லா போன்ற வாசனைத் திரவியங்கள் அடங்கும். இரத்தினக் கற்கள் சமீப காலமாக இலங்கையின் ஏற்றுமதியில் முக்கிய பங்கினை வகித்து வந்துள்ளது. சிறு கைத்தொழில் உற்பத்தியில் பெற்றோலிய உற்பத்திகள், ஆடை வகைகள் என்பன அடங்கும். இம் மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளின் பங்கு கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்துச் சென்றுள்ளன.

அட்டவணை 41

## மரபு ரீதியற்ற ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் (1976 — 1978)

| வகை | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|
| | 1976 | 1977 | 1978 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 5 | 6 | 5 |
| இரத்தினக் கற்கள் | 5 | 4 | 4 |
| சிறு கைத்தொழில் ஏற்றுமதிகள் | 16 | 14 | 14 |
| ஏனைய ஏற்றுமதிகள் | 4 | 4 | 6 |
| மொத்தம் | 30 | 28 | 29 |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

இலங்கையின் ஏற்றுமதியில் மரபு ரீதியற்ற பொருட்களின் பங்கு 1960-ம் ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடும் பொழுது பெருமளவு மாற்றம் அடைந்திருப்பினும் சமீப காலங்களில் மாற்றம் குறைவாகவே காணப்படுகின்றது. மரபு ரீதியானதும், மரபு ரீதியற்றதுமான ஏற்றுமதிகளின் அண்மைக் காலப் போக்குகள் மிகவும் பின்தங்கிய தொன்றாகவே காணப்படுகின்றது.

அண்மைக் காலங்களில் இலங்கையின் ஏற்றுமதி அமைப்புக்களில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஏற்றுமதிகளின் குறைந்த விலைகளும் குறுங்காலத்தில் ஒப்பீட்டு ரீதியில் நிரம்பல் நெகிழ்ச்சியற்ற தன்மையும் ஏற்றுமதி வருமானம் சமீப காலங்களில் பெருமளவு அதிகரிக்காமைக்கு அடிப்படையாக அமைகின்றது. குறிப்பாக தேயிலையின் விலை 1978/79-ம் ஆண்டு காலப்பகுதிகளில் வீழ்ச்சிப் போக்கினைக் காட்டுவனவாகவுள்ளன. 1978-ல் தேயிலையின் ஏற்றுமதி வருமானம் எஸ். டீ. ஆர். வடிவில் நோக்குமிடத்து 8 சதவீதத்தினல் வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வருமான வீழ்ச்சிக்குத் தேயிலையின் உலக சந்தை விலை வீழ்ச்சியே காரணமாகும். உலக சந்தையில் இறப்பரின் விலை 11 சதவீதத்தினல் அதிகரித்தமையால்

இறப்பர் ஏற்றுமதி வருமானத்தின் எஸ். டீ. ஆர். பெறுமானம் 11 சதவீதத்தால் அதிகரித்தது. தென்னைச் செய்கை மீட்சி பெற்ற உற்பத்தி அதிகரித்தமையால் 1978-ல் ஏற்றுமதிப் பெறுமானம் பெருமளவு அதிகரித்தது. எவ்வாறெனினும் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் தேயிலை அரைப்பங்கினை வகிப்பதால் ஏற்றுமதியில் அதன் மோசமான தாக்கம் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. எனவே ஏற்றுமதி வருவாய்களைப் பெற்றுக்கொடுப்பதில் பாரம்பரிய ஏற்றுமதிகள் தொடர்ந்தும் பெரும் பங்கினை வழங்கி வருகின்றதாயினும் 1978–79-ம் ஆண்டுகளில் 6 மாதப் பகுதியில் இப்பொருட்களின் ஏற்றுமதி அளவு விகிதங்களில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்படுகின்றது.

அட்டவணை 42

**1978 – 79 ஆண்டுகளின் ஜனவரி – ஜூன் வரையிலான ஏற்றுமதி (சதவீதமாக)**

| வியாபாரச் சரக்கு | 1978 ஜூன் | 1979 ஜூன் |
|---|---|---|
| (1) தேயிலை | 49·1 | 40·9 |
| (2) இறப்பர் | 18·6 | 15·2 |
| (3) தென்னை உற்பத்திகள் | 5·9 | 6·5 |
| (4) இரத்தினக் கற்கள் | 3·0 | 3·4 |
| (5) தெங்கு துணை உற்பத்திகள் | 2·3 | 2·6 |
| (6) சிறு விவசாய உற்பத்திகள் | 5·3 | 6·2 |
| (7) உற்பத்தித் தயாரிப்புக்களும் ஏனைய பலவகைப்பட்ட உற்பத்திகளும் | 8·3 | 14·5 |
| (8) கப்பற்றுறை உற்பத்திகள் | 2·0 | 2·6 |
| (9) ஏனையவை | 5·5 | 8·1 |
| மொத்தம் | 100·0 | 100·0 |

மூலம்: பொருளியல் நோக்கு டிசம்பர் 1979

மரபுரீதியற்ற ஏற்றுமதிகள் சமீப காலங்களாக அதிகரித்துச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்க தொன்றாகும். இவை இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் ஏறத்தாள 25 சதவீதமான பங்கினை வகிக்கின்றன. 1978-ல் கைத்தொழில் ஏற்றுமதிப் பெறுமானம் 10 கோடி எஸ். டி. ஆர்

ஆக அமைந்தது. இது மொத்த ஏற்றுமதி வருமானத்தில் 14 சதவீத அதிகரிப்பாகும். 1978-ல் ஜூன் வரை மொத்த ஏற்றுமதியில் 8·3 சதவீதமாக இருந்த உற்பத்தித் தயாரிப்புக்கள் 1979-ன் இதே காலப்பகுதியில் 14·5 சதவீதமாக அதிகரித்துள்ளமையைக் காணலாம். இரத்தினக் கற்களின் உற்பத்தி 1978-ம் ஆண்டு வீழ்ச்சியடைந்து காணப்படினும் 1979-ம் ஆண்டு உயர்ச்சிப் போக்கினையே காட்டுகின்றது. எனவே இலங்கையின் ஏற்றுமதிப் பண்டச் சேர்க்கை சமீப காலங்களில் மாற்றமடைந்து செல்கின்றன எனலாம்.

1965 – 75 காலப்பகுதிகளில் வெளிநாட்டுச் சந்தைகள் மூன்றும் மண்டல நாடுகளுடன் மாற்றமடைந்தன. ஆனால் 1977-ம் ஆண்டின் பின்னர் அவை மீண்டும் முதலாளித்துவ நாடுகளை நோக்கி நகர்ந்துள்ளன. இன்று இலங்கைக்கு வெளிநாட்டு ஏற்றுமதிகளையும் வெளிநாட்டுச் செலாவணி வருமானங்களையும் பெற்றுக் கொடுக்கும் 6 முக்கிய சந்தைகளில் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராட்சியம், ஜப்பான், மேற்கு ஜேர்மனி, பாகிஸ்தான் என்பவற்றுடன் விமானங்களுக்கும், கப்பல்களுக்கும் எரிபொருள் வழங்குவதற்குரிய வருவாயும் இடம் பெற்றன. நாட்டின் அன்னிய செலாவணி வருமானங்களில் சுமார் 45 சதவீதம் இந்த 6 மூலங்களிலிருந்தே கிடைத்துள்ளன. எனவே இலங்கையின் ஏற்றுமதிச் சந்தை நடவடிக்கைகளும் மாற்றமடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இறக்குமதிகள் :-

இலங்கையின் இறக்குமதியில் பெரும்பகுதி உணவுத் தொகுதியைச் சார்ந்ததாகும். அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களான அரிசி, சீனி, மா ஆகியவையே இலங்கையின் இறக்குமதியில் நீண்ட காலமாகப் பெரும் பங்கினை வகித்து வந்துள்ளன. 1960-ம் ஆண்டில் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி, மொத்த இறக்குமதி

யில் 60 சதவீதமாகும். ஆனால் தொடர்ந்து இறக்குமதியில் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் பங்கு குறைவடைந்தே வந்துள்ளது. 1965-ல் 52·8 சதவீதமாகவும், 1975-ல் 50·5 சதவீதமாகவும் காணப்பட்ட அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதி 1978-ல் 38 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது. நடுத்தரப் பொருட்களும் மூலதனப் பொருட்களும் நீண்ட காலமாக இலங்கையின் இறக்குமதியில் பெரும் பங்கினை வகிக்கவில்லை. ஆனால் 1972-ம் ஆண்டின் பின்னர் இவற்றின் பங்கு அதிகரித்துச் செல்கின்றது. அட்டவணை 43 இறக்குமதிப் பண்டச் சேர்க்கையினை சதவீதத்தில் காட்டுகின்றது.

அட்டவணை 43

இறக்குமதிகள் 1960 — 78 (சதவீதமாக)

| | 1960 | 1965 | 1970 | 1975 | 1978 |
|---|---|---|---|---|---|
| (1) நுகர்வுப் பொருட்கள் | 60·0 | 52·8 | 55·8 | 50·5 | 38 |
| (2) நடுத்தரப் பொருட்கள் | 20·3 | 28·1 | 19·5 | 36·0 | 88. |
| (3) மூலதனப் பொருட்கள் | 18·1 | 17·7 | 23·5 | 12·4 | 23 |
| (4) வகுக்கப்படாதவை | 1·6 | 1·4 | 1·2 | 1·1 | 1 |
| மொத்தம் | 100·0 | 100·0 | 100·0 | 100·0 | 100 |

மூலம்: மத்திய வங்கி ஆண்டறிக்கைகள்

உணவுப் பண்டங்கள், குடிவகைகள், புடவைகள், நுகர்வுப் பொருட்கள் ஆகியன மொத்த நுகர்வுப் பண்டங்களில் அடங்கும். நடுத்தரப் பொருட்கள் என்னும் பொழுது உரம், பெற்றோலியம், உதிரிப்பாகங்கள் என்பன அடங்கும். கஸபுடப் பொருட்கள், போக்கு வரத்துச் சாதனங்கள், இயந்திரசாதனங்கள் என்பன மூலதனப் பொருட்களில் அடங்கும். நீண்டகாலமாக இறக்குமதியில் முக்கிய பங்கினைக் கொண்டிருந்த நுகர்வுப் பொருட்கள் 1975-ல் பெருமளவு குறைவடைந்துள்ளன. நடுத்தரப் பொருட்களின் பங்கு பெருமளவு மாற்றமடையவில்லை. ஆனால் ஒப்பீட்டு ரீதியில் மூலதனப் பொருட்களின் பங்கு அதிகரித்துச் சென்றுள்ளது. 1975-ல் மொத்த இறக்குமதியில்

12·4 சதவீதமாக இருந்த மூலதனப் பொருட்கள் 1978-ல் 23 சதவீதமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

பல வருடகால நிர்வாகக் கட்டுப்பாடுகள், கொடுப் பனவு, நாணய மாற்றுக் கட்டுப்பாடுகளின் பின்னர் 1977-ம் ஆண்டு நவம்பரில் அரசாங்கம் அறிமுகம் செய்த புதிய பொருளாதாரக் கொள்கை காரணமாக வெளி நாட்டு வர்த்தகம் சுதந்திரமாக இயங்க ஆரம்பித்துள்ளது. பெரும்பாலான நுகர்வுப் பொருட்கள், நடுத்தரப் பொருட் கள், மூலதனப் பொருட்கள் (ரூபா 7,00,000 வரை) என்பன அரசாங்க அனுமதியின்றி இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டது. இவ் இறக்குமதி தளர்வு காரணமாக இறக்குமதிப் பெறுமானம் வேகமாக அதிகரித்தது. அதே சமயம் இறக்குமதிப் பண்டச் சேர்க்கையிலும் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டன. மூலதனப் பொருட்களினதும் முதலீட்டுப் பொருட்களினதும் இறக்குமதி பெருமளவு அதிகரித்துள்ளது.

அட்டவணை 44

**இறக்குமதிகள் 1977 – 79-ம் ஆண்டுகளின் ஜனவரி – செப்டம்பர் வரை**

(சதவீதமாக)

| வியாபாரப் பொருட்கள் | 1977 | 1978 | 1979 |
|---|---|---|---|
| பெற்றோலிய உற்பத்திகள் | 22·5 | 17·3 | 18·1 |
| தானியங்கள் | 18·0 | 6·1 | 5·2 |
| தானியங்களின் மாவு | 17.5 | 17·7 | 8·5 |
| சீனி | 3·2 | 4.2 | 3·9 |
| பருத்தி | 6·2 | 4·7 | 4·9 |
| உரவகைகள் | 0·2 | 1·4 | 2·8 |
| மருந்தாக்க உற்பத்திகள் | 1·1 | 1·0 | 1·1 |
| கொதிகலன் இயந்திரங்களும் உதிரிப்பாகங்களும் | 5·0 | 8·2 | 9·1 |
| இரும்புருக்குப் பொருட்கள் | 3·0 | 3·7 | 5·3 |
| வாகனங்களும் உதிரிப்பாகங்களும் | 3·8 | 9·7 | 9·1 |
| ஏனையவை | 19·5 | 26·0 | 32·0 |
| | 100·0 | 100·0 | 100·0 |

மூலம் : புள்ளி விபரப்பகுதி, வர்த்தகத் திணைக்களம்

அட்டவணை 44–ல் 1977-ம் ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது தானியங்கள், மா, சீனி போன்றவற்றின் இறக்குமதி பெருமளவு குறைவடைந்துள்ளதையும் பெற்ரோலியப் பொருட்களினதும் ஏனைய மூலதனப் பொருட்களினதும் இறக்குமதி அதிகரித்துள்ளமையையும் காணலாம். இயந்திரங்கள், வாகனங்கள், இரும்புருக்குற்பத்திகள் போன்ற இடையீட்டுப் பொருட்களினதும் முதலீட்டுப் பொருட்களினதும் இறக்குமதிகளின் அதிகரிப்பு இறக்குமதியமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. ஏனைய காரணிகள் சாதகமாக அமையின் இவ் இறக்குமதிப் பண்டச் சேர்க்கையில் ஏற்பட்ட மாற்றம் ஒரு கால இடைவெளிக்குப் பின்னர் உற்பத்தி அதிகரிப்பினை ஏற்படுத்தி நீண்டகால ரீதியில் அபிவிருத்தியை ஏற்படுத்தும்.

### வர்த்தக மாற்று விகிதம் :-

திறந்தவெளிப் பொருளாதார அமைப்புடைய நாட்டில் வர்த்தக மாற்று விகிதம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தொன்ருகும். ஏற்றுமதியும் இறக்குமதியும் விகிதாசார ரீதியில் எவ்வாறு இயங்குகின்றன என்பதனையே வர்த்தக மாற்று விகிதம் சுட்டிக் காட்டுகின்றது. ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணை இறக்குமதி விலைச் சுட்டெண்ணுல் பிரித்து அதனை 100 ஆல் பெருக்க வருவதே வர்த்தக மாற்று விகிதமாகும். பொதுவாக ஒரு நாட்டின் ஏற்றுமதி விலைகள் இறக்குமதி விலைகளைவிட அதிகரித்துக் காணப்படின் வர்த்தக மாற்று விகிதம் அந்நாட்டுக்குச் சாதகமாகவும் இறக்குமதி விலைகள் கூடிக் காணப்படின் அது அந்நாட்டுக்குப் பாதகமாகவும் அமையும். பொதுவாக இலங்கை போன்ற விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கு வர்த்தக மாற்று விகிதம் பாதகமான போக்கினைக் கொண்டே காணப்படுகின்றது.

இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதி விலைச் சுட்டெண்களை நோக்கும் பொழுது கடந்த 10 ஆண்டுகளில் ஏற்றுமதி விலைகளிலும் பார்க்க இறக்குமதி விலைகளே பெருமளவு அதிரித்துச் சென்றுள்ளன. 1967–ம் ஆண்டினை

அடிப்படையாகக் கொண்டு நோக்கும் பொழுது இலங்கையின் வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை 45

**மத்திய வங்கியின் வர்த்தகச் சுட்டெண்கள்**
(1967 = 100)

| காலம் | ஏற்றுமதி விலைகள் | இறக்குமதி விலைகள் | வர்த்தக மாற்று விகிதம் |
|---|---|---|---|
| 1967 | 100 | 100 | 100 |
| 1968 | 117 | 126 | 93 |
| 1969 | 117 | 134 | 88 |
| 1970 | 118 | 140 | 84 |
| 1971 | 117 | 150 | 78 |
| 1972 | 118 | 158 | 75 |
| 1973 | 137 | 209 | 65 |
| 1974 | 213 | 270 | 58 |
| 1975 | 199 | 433 | 46 |
| 1976 | 239 | 383 | 62 |
| 1977 | 382 | 471 | 81 |
| 1978 | 698 | 877 | 80 |

மூலம்: புள்ளி விபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

கடந்த பத்து ஆண்டுகளில் இலங்கையின் வர்த்தக மாற்று விகிதம் பாதகமான போக்கினையே பிரதிபலிக்கின்றது. இலங்கையின் ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகள் உயர்வடைந்து சென்றிருப்பினும் அவற்றிலும் பார்க்க இறக்குமதிப் பண்டங்களின் விலைகள் கூடிய தொன்ருக அமைந்துள்ளமையே பாதகமான வர்த்தக மாற்று விகிதத்திற்குக் காரணமாகும். 1968-ல் 93 சதவீதமாக இருந்த வர்த்தக மாற்று விகிதம் 1974/75-ம் ஆண்டு காலப்பகுதிகளில் மிக மோசமான முறையில் வீழ்ச்சியடைந்து 1978-ல் ஓரளவு உயர்ச்சிப் போக்கினைக் காட்டுகின்றது. ஆயினும் இலங்கைக்கு இன்றும் வர்த்தக மாற்று விகிதம் பாதகமாகவேயுள்ளது. ஏற்றுமதிப் பெறுமானத்தினை விடவும் இறக்குமதிப் பெறுமானம் மிக வேகமாக அதிகரித்துச் செல்வதனுல் 100 க்குக் குறைவான சுட்டெண் இலங்கையின் வர்த்தக மாற்று விகிதாசாரத்தின் சீர்குலைவினைக் காட்டுகின்றது.

இலங்கையின் ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகள் அடிக்கடி தளம்புவது மாத்திரமன்றிக் குறுங்காலத்தில் நிரம்பல் நெகிழ்ச்சியற்ற தன்மைப் போக்கினையும் கொண்டுள்ளது. இதற்கு மாற்ருக இறக்குமதிப் பண்டங்களின் விலைகள் மிக வேகமாக அதிகரித்துச் சென்றுள்ளன. 1968-ம் ஆண்டு 126 சதவீதமாக இருந்த இறக்குமதி விலைச் சுட்டெண் 1978-ல் 877 சதவீதமாக அதிகரித்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் இறக்குமதிப் பண்டங்களின் விலைகள் ஏறத்தாள 700 சதவீதத்திஞல் அதிகரித்துள்ளன. உலக சந்தையில் இலங்கை இறக்குமதி செய்யும் பொருட்களின் விலைகள் பெருமளவு உயர்வடைந்தமையும் எரிபொருட்களின் விலைகள் பன்மடங்கு உயர்வடைந்தமையும் இறக்குமதிப் பண்டங்களின் விலை ஏற்றத்திற்கு அடிப்படைக் காரணங்களாகக் கருதப்படுகின்றன. ஒப்பீட்டு ரீதியில் ஏற்றுமதிகளின் விலைகள் குறைவாகக் காணப்படுகின்றமையும் இறக்குமதியின் விலைகள் வேகமாக அதிகரித்துச் செல்கின்றமையுமே வர்த்தக மாற்று விகிதம் பாதகமாக அமையக் காரணமாகும்.

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு இப் பாதகமான வர்த்தக மாற்று விகிதம் ஒரு தடைக்கல்லாக அமைகின்றது. வர்த்தக நிலுவைப் பற்ருக்குறை ஏற்பட இப் பாதகமான வர்த்தக மாற்று விகிதம் ஓர் காரணியாகக் காட்டப்படுகின்றது.

அட்டவணை 46

**வெளிநாட்டு வர்த்தகக் கணக்கு 1974 — 78**
(ரூபாய் மில்லியனில்)

| | 1974 | 1975 | 1976 | 1977 | 1978 |
|---|---|---|---|---|---|
| ஏற்றுமதிகள் | 3,472 | 3,933 | 4,815 | 6,638 | 13,206 |
| இறக்குமதிகள் | 4,554 | 5,251 | 4,645 | 6,007 | 14,663 |
| வர்த்தக நிலுவை | 1,082 | 1,318 | 170 | 631 | 1,457 |
| வர்த்தகமாற்று விகிதம் (1967 = 100) | 58 | 46 | 62 | 81 | 80 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 46-ல் 1976/77-ம் ஆண்டு காலப் பகுதிகளைத் தவிர்ந்த ஏனைய காலப் பகுதிகளில் பாதகமான வர்த்தக நிலுவைக்கு வர்த்தக மாற்று விகிதத்தின் பாதகமான போக்கே அடிப்படைக் காரணமாகும். ஏற்றுமதி விலைகளை உறுதியாக்குவதன் மூலமும் தெரிந்தெடுக்கப்பட்ட இறக்குமதிகளை மேற்கொள்வதன் மூலமும் இலங்கையின் வர்த்தக மாற்று விகிதம் சாதகமான போக்கில் அமைய முடியும். ஆனால் இலங்கையின் ஏற்றுமதிப் பண்டங்கள் விவசாயப் பண்டங்களாக அமைவதாலும் அவற்றை இறக்குமதி செய்யும் நாடுகள் மத்தியில் போட்டி குறைவாகக் காணப்படுவதாலும் அவற்றின் விலைகளை உறுதியாக வைத்திருத்தல் பிரச்சனைக்குரிய தொன்றாக அமைகின்றது. மேலும் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களினதும் இடைநிலைப் பொருட்களினதும் முதலீட்டுப் பொருட்களினதும் இறக்குமதியினைக் கட்டுப்படுத்தல் சாத்தியமானதல்ல. எனினும் ஏனைய காலப்பகுதிகளுடன் ஒப்பிடும் பொழுது 1977-ம் ஆண்டின் பின்னர் வர்த்தக மாற்று விகிதம் சாதக நிலையைக் காட்டி நிற்கின்றது. ஆனால் வர்த்தக மாற்று விகிதம் 100 க்கு மேலாக அமையும் நிலையில் தான் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் சீராக அமைய முடியும்.

## சென்மதி நிலுவை :-

ஒரு நாட்டின் வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களைப் பிரதிபலித்துக் காட்டும் அட்டவணையே சென்மதி நிலுவையாகும். இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகள் அனைத்தையும் சென்மதி நிலுவைப் புள்ளி விபரங்களைக் கொண்டு கண்டுகொள்ள முடியும். ஒரு நாட்டுக்கும் ஏனைய உலக நாடுகளுக்கும் இடையே நடைபெறும் பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்களை (சட்டரீதியான) புள்ளி விபர அடிப்படையில் காட்டும் அட்டவணையே சென்மதி நிலுவை எனப்படும். இந் நிலுவை நடைமுறைக் கணக்கு நிலுவை, முதல் கணக்கு நிலுவை ஆகிய இரு பிரிவுகளை உள்ளடக்கிக் காணப்படும். இச் சென்மதி நிலுவை அட்டவணை கொண்டு இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகப் போக்கினைக் கண்டு கொள்ளலாம்.

அட்டவணை 47

## சென்மதி நிலுவை 1969 — 78

(மில்லியன் ரூபாய்களில்)

| ஆண்டு | வர்த்தக நிலுவை | தேறிய பணிகள் | தேறிய மாற்றங்கள் | நடைமுறைக் கணக்கில் உள்ள நிலுவை | தேறிய நீண்ட தவணை மூலதனம் | அடிப்படை நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| 1969 | — 746 | — 90 | + 39 | — 797 | + 275 | — 522 |
| 1970 | — 315 | — 104 | + 69 | — 359 | + 184 | — 166 |
| 1971 | — 287 | — 14 | + 85 | — 216 | + 404 | + 188 |
| 1972 | — 255 | — 15 | + 74 | — 196 | + 292 | + 96 |
| 1973 | — 299 | + 53 | + 85 | — 161 | + 190 | + 29 |
| 1974 | —1263 | + 76 | + 280 | — 907 | + 298 | — 609 |
| 1975 | —1421 | + 89 | + 560 | — 772 | + 559 | — 213 |
| 1976 | — 709 | + 112 | + 547 | — 50 | + 610 | + 560 |
| 1977 | + 350 | + 304 | + 612 | +1266 | + 563 | +1829 |
| 1978 | —2143 | + 119 | +1242 | — 782 | + 2640 | +1858 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

1969-ம் ஆண்டு தொடக்கம் 1978-ம் ஆண்டு வரை சென்மதி நிலுவையின் செயலாற்றத்தை நோக்கும் பொழுது சில ஆண்டுகளைத் தவிர ஏனைய காலப் பகுதிகளில் பாதகமான போக்கினையே கொண்டுள்ளது. பாதகமான சென்மதி நிலுவைக்கு வர்த்தக நிலுவையின் பற்றுக் குறையே அடிப்படைக் காரணமாகும். 1977-ம் ஆண்டைத் தவிர்ந்த ஏனைய காலப்பகுதிகளில் பாதகமான வர்த்தக நிலுவை காரணமாக நடைமுறைக் கணக்கு நிலுவையும் பாதகமாகவே காணப்படுகின்றது. உண்மையில் ஒரு நாட்டின் வெளிநாட்டு வர்த்தகத்தினை நிர்ணயிப்பதில் நடைமுறைக் கணக்கு நிலுவையே முக்கியத்துவம் வாய்ந்ததாகும். கடந்த இரு தசாப்தங்களில் 1965, 1977-ம் ஆண்டுகளைத் தவிர்ந்த வேறு எக்காலப் பகுதிகளிலும் நடைமுறைக் கணக்கு நிலுவை சாதகமாக அமையவில்லை. அண்மைக் காலங்களில் தேறிய நீண்ட தவணை மூலதனம் சாதகமாக அமைந்தமையே 1976-ம் ஆண்டின் பின்னர்

அடிப்படை நிலுவை சாதகமாக அமைந்திருக்கக் காரண மாகவுள்ளது. வெளிநாட்டுச் சொத்துக்களின் வளர்ச்சி நீண்டகால மூலதனங்களில் கூடிய உட்பாய்ச்சல்களினுல் உருவாக்கப்பட்ட மூலதனக் கணக்கின் மிகையினுலும் பன்னுட்டு நாணய நிதியத்தில் இருந்து பெறப்பட்ட கடன் களினுலும் நீண்டகால தவணை மூலதனம் அதிகரித்துக் காணப்படுகின்றது. இவ் அதிகரிப்பே அடிப்படை நிலுவை சாதகமாக அமையக் காரணமாகும்.

அண்மையில் சென்மதி நிலுவையின் மீது செலாவணி வர்த்தகம் ஆகியவை தாராளமாக்கப்பட்டதனுல் ஏற் பட்ட தாக்கம் இறக்குமதியைப் பொறுத்த வரையில் நெருக்கடியினை ஏற்படுத்தியுள்ளது. இறக்குமதிக் கொடுப் பனவுகள் 1977-ல் ரூபா 62,900 இலட்சத்திலிருந்து 1978-ல் ரூபா 1,53,500 இலட்சமாக அதிகரித்தது. பல ஆண்டு களாக கட்டுப்பாடுகள் காரணமாக அடக்கி வைக்கப்பட் டிருந்த கேள்வி வெளிக் கொணரப்பட்டமையே இறக்கு மதியில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குக் காரணமாகும். இறக்கு மதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு மூலதனப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள் விரைவாக இறக்குமதி செய்யப் பட்டமையே காரணமாகும். இறக்குமதிகளின் குறிப்பிடத் தக்க அதிகரிய்பிற்கு மாருக 1978—ல் ஏற்றுமதி வருவாய் கள் 1977-ல் ரூபா 66,400 இலட்சத்திலிருந்து 1978—ல் 1,32,070 இலட்சங்களுக்கு அதிகரித்தது. ஏற்றுமதிகளின் மெதுவான வளர்ச்சியினதும் இறக்குமதிகளின் மிக விரை வான வளர்ச்சியினதும் விளைவாக 1978—ல் வர்த்தக மீதி ரூபா 21,430 இலட்சம் கொண்ட பற்ருக் குறையாக மாறி யது. இவ்வாருன நிலை இலங்கையில் தொடர்ந்து காணப் படுகின்றமை இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் பாதக மான போக்கினையே கொண்டுள்ளமையைப் பிரதிபலிக் கின்றது.

சென்மதி நிலுவைப் பற்ருக்குறைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் காலத்திற்குக் காலம் இலங்கை அரசாங்கம் பல்வேறு வகையான வழிமுறைகளை கையாண்டு வந்துள்

ளது. கைவசமுள்ள அன்னிய செலாவணியைப் பயன் படுத்தல், இறக்குமதிக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளல், இறக்குமதிப் பண்டங்கள் மீது வரி விதித்தல், வெளிநாட்டுச் செலாவணி வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல், நாணய மதிப்பிறக்கம், வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம், வெளிநாட்டுக் கடன்கள் என்பன பற்றுக் குறையை நீக்க கடைப்பிடிக்கப்பட்டு வந்துள் ளன.

கைவசமுள்ள அன்னிய செலாவணி என்பது இறக்கு மதியிலும் பார்க்க ஏற்றுமதி கூடிக் காணப்பட்ட நிலையில் கிடைத்த மேலதிகமாகும். சென்மதி நிலுவைப் பற்றுக் குறையை நீக்க இது ஓர் குறுங்கால வழி மாத்திரமே. 1957–60 காலப் பகுதிகளில் கைவசம் இருந்த செலாவணி கொண்டே சென்மதி நிலுவைப் பற்றுக்குறைப் பிரச்சனைக் குத் தீர்வு காணப்பட்டது. 1957–ல் 1275·7 மில்லியன் ரூபாய்களாக இருந்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1960-ல் 734 மில்லியன் ரூபாய்களாக வீழ்ச்சியடைந்தது. தொடர்ந் தும் வெளிநாட்டுச் சொத்துக்களைப் பயன்படுத்த முடி யாத நிலையில் 1960–ம் ஆண்டின் பின்னர் பல தீவிர மான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை அரசாங்கம் மேற் கொண்டது. ஆனால் இலங்கையின் இறக்குமதிப் பண்டங் கள் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களாகவும் கைத் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களாகவும் அமைந்தமையால் இக் கட்டுப்பாடுகள் பெருமளவு வெற்றி யைத் தரவில்லை.

அந்நிய செலாவணியைச் சிக்கனமாகப் பயன்படுத்தல் மூலம் சென்மதி நிலுவைப் பற்றுக்குறைப் பிரச்சனைக்கு அரசாங்கம் தீர்வு காண முனைந்தது. இதனடிப்படையில் 1963-ம் ஆண்டு அன்னிய செலாவணி வரவு செலவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இது 1965-ம் ஆண்டு தொடக்கம் அமுல் நடத்தப்பட்டது. பெறப்படும் அன்னிய செலாவணியைச் சிறந்த முறையில் பங்கீடு செய்தலே

இதன் நோக்கமாகும். ஆனால் அன்னிய செலாவணியைப் பெற்றுத் தரும் மூலங்கள் உறுதியற்றவையாக இருந்தமை யாலும் பெறப்படும் செலாவணி பற்றாக் குறையுடைய தாகக் காணப்பட்டமையாலும் இவ் வழிமுறை பெரு மளவு பயனைத் தரவில்லை.

சென்மதி நிலுவைப் பற்றாக்குறைப் பிரச்சனையை நீக்க நாணய மதிப்பிறக்கம் ஒரு கருவியாகப் பயன்படுத்தப் படுகிறது. நாணய மதிப்பிறக்கம் என்பது ஒரு நாடு தானே தனது நாட்டின் நாணயப்பெறுமதியைக் குறைத்துக்கொள் ளுதலைக் குறிக்கும். நாணய மதிப்பிறக்கம் மேற்கொள்ளப் படும் நிலையில் ஒரு நாட்டின் ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகள் குறைவடைந்து உலக சந்தையில் அவற்றின் கேள்வி அதிகரித்து ஏற்றுமதி கூடி ஏற்றுமதி வருமானம் உயர்வடையும். மாறாக இறக்குமதிப் பண்டங்களின் விலை கள் கூடி அவற்றின் கேள்வி குறைந்து இறக்குமதிச் செலவு குறையும். இதன் மூலம் பற்றாக்குறைப் பிரச்சனைக்குத் தீர்வு காணலாம். இதனைக்கொண்டே அரசாங்கம் பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கை ரூபாவின் பெறுமதியைக் குறைத்துள்ளது. 1967-ம் ஆண்டு இலங்கை நாணயத்தின் பெறுமதி 20 சதவீதத்தால் மதிப்பிறக்கம் செய்யப்பட்டது. 1968-ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் மூலம் நாணயத் தின் பெறுமதி மேலும் மறைமுகமாகக் குறைக்கப்பட்டது. இந் நாணய மதிப்பிறக்கம் பெருமளவு வெற்றியைத் தர வில்லை. வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சியற்ற பொருட் களே இலங்கையின் ஏற்றுமதிப் பண்டங்களாக அமைவ தால் அவற்றின் விலை வீழ்ச்சி ஏற்றுமதிகளின் கேள்வியைப் பெருமளவு அதிகரிக்கவில்லை. மாறாக இறக்குமதிப் பண் டங்கள் அத்தியாவசிய பண்டங்களாக அமைவதால் அவற் றின் விலை உயர்வடையினும் இறக்குமதியைக் குறைத்தல் சாத்தியமானதல்ல.

தற்போதைய அரசாங்கம் இலங்கை ரூபாவை உலக சந்தையில் மிதக்க விட்டதன் மூலமும், பிற நாடுகளிடம்

பெருந் தொகைக் கடன்களேயும் உதவிகளேயும் பெறுதல் மூலமும் பற்றுக் குறைக்குத் தீர்வு காண முனேந்துள்ளது. 1978-ல் வெளிநாட்டு மூலவள இடைவெளி 1977-ன் நீண்ட காலக் கடன்களிலேயே ஏறக்குறைய முழுமையாக நிதியிடப்பட்டது. நீண்டகாலக் கொடுகடன்களின் மொத்த உள்ளோட்டம் 1977-ல் ரூபா 11,840 இலட்சத்திலிருந்து 1978-ல் ரூபா 36,800 இலட்சத்துக்கு உயர்ந்தது. 1978-ல் நன்கொடையாகப் பெறப்பட்ட தொகை ரூபா 9,00,000 இலட்சமாகும். இவ் வெளிநாட்டு உதவிகளேயும் கடன் களேயும் கொண்டே சென்மதி நிலுவைப் பற்றுக்குறை நிறைப்படுத்தப்பட்டதனுல் சமீப காலங்களில் அது சாதக மான போக்கினேக் காட்டுவதாக அமைந்துள்ளது.

ஒரு நாட்டின் வெளிநாட்டு வர்த்தகம் வளர்ச்சிப் பாதையைக் கொண்டு அமைய வேண்டுமாயின் அந் நாட் டின் வர்த்தக நிலுவை, சென்மதி நிலுவை ஆகியன மிகு நிலேயில் காணப்பட வேண்டும். ஆனுல் இலங்கையின் வர்த்தக நிலுவையும், அடிப்படை நிலுவையும் பற்றுக் குறையுடையனவாகவே காணப்படுகின்றன. நீண்ட கால மாகச் சர்வதேச வர்த்தகத்தில் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் சாதகமாக அமையாமையை இது குறிக்கின் றது. எனவே இலங்கை சென்மதி நிலுவையில் மிகு நிலே அடையத்தக்க வகையில் வெளிநாட்டு வர்த்தகம் விஸ்தரிக் கப்பட வேண்டியது இன்றியமையாததொன்ருகும்.

**இதுவரை கற்றவை:-**

(1) இலங்கையின் ஆரம்பகால வெளிநாட்டு வர்த்தகம் முதல் விளேவுப் பொருட்களே ஏற்றுமதி செய்யும் நிலேயிலும் ஆடம் பர நுகர்வுப் பொருட்களே இறக்குமதி செய்யும் நிலேயிலும் காணப்பட்டது.

(2) ஆரம்ப காலத்தில் வர்த்தகப் போக்குகள் முதலாளித்துவ நாடு களுடனும் பின்னர் மூன்ரும் மண்டல நாடுகளுடனும் சமீபத் தில் மீண்டும் முதலாளித்துவ நாடுகளுடனும் மாற்றமடைந் துள்ளது.

(3) ஏற்றுமதியின் பெரும்பங்கு மரபுரீதியான பொருட்களிலேயே அன்றும் இன்றும் பெறப்படுகின்றது. ஆனால் 1972-ம் ஆண்டின் பின்னர் மரபுரீதியற்ற பொருட்களின் ஏற்றுமதி அதிகரித்துச் சென்றுள்ளது.

(4) இறக்குமதிப் பண்டச் சேர்க்கையில் நீண்டகாலமாக நுகர்வுப் பொருட்கள் பெரும் பங்கினை வகித்து வந்தன. 1977-ம் ஆண்டின் பின்னர் மூலதனப் பொருட்களின் இறக்குமதிகள் அதிகரித்துச் சென்றுள்ளது.

(5) வர்த்தக மாற்று விகிதம் தொடர்ந்தும் பாதகமான போக்கினையே கொண்டுள்ளன. ஏற்றுமதி விலை அதிகரிப்பிலும் பார்க்க இறக்குமதி விலைகள் பெருமளவு அதிகரித்துச் செல்கின்றமையே இதற்கான காரணமாகும்.

(6) சென்மதி நிலுவையும் பாதகமான போக்கினையே பிரதிபலிக்கின்றது. இப் பற்றாக்குறை வெளிநாட்டு உதவிகளாலும் கடன்களாலும் நிரப்பப்படுகின்றமை எதிர்காலத்தில் பல பிரச்சனைகளைத் தோற்றுவிக்கலாம்.

அத்தியாயம் 10

# அந்நிய செலாவணியும் பற்றுக்குறையும்

வளர்முக நாடுகளின் பல்வேறு வகையான பிரச்சனைகளுக்கு அந்நிய செலாவணிப் பற்றுக்குறை ஓர் காரணமாகக் காட்டப்படுகின்றது. இந் நாடுகளின் வாழ்க்கைத் தர உயர்விற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் அந்நிய செலாவணியே அடிப்படைக் காரணமாகும். இவ் அந்நிய செலாவணி என்னும் பொழுது ஒரு நாடு பிற நாடுகளிடமிருந்து பண்டங்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தேவையான சக்தியினைக் (பணம்) குறிக்கும். சர்வதேச நாணயங்களான டொலர், ஸ்டேலிங், பவுண் போன்ற பண அடிப்படையில் இவை காணப்படும். ஒரு நாட்டின் ஏற்றுமதிகள் மூலம் பெறப்படும் வருவாய்கள், பிற நாடுகளிடமிருந்து பெறப்படும் உதவிகள். நன்கொடைகள், கடன்கள் என்பவையே அந்நிய செலாவணியைப் பெற்றுத்தரும் மூலங்களாகும். எனினும் அடிப்படை மூலமாக அமைவது ஏற்றுமதி மூலம் பெறப்படும் வருவாய்களே.

**பிரச்சனைகள்:**

இலங்கை பல ஆண்டுகளாக அந்நிய செலாவணிப் பிரச்சனையை அனுபவித்து வருகின்றது. அந்நிய செலாவணிப் பிரச்சனை என்னும் பொழுது எமக்குத் தேவைப்படும் வெளிநாட்டுப் பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்வதற்குத் தேவையான வெளிநாட்டு நாணயம் பற்றுக்குறையாகவுள்ளதைக்குறிக்கும். இலங்கையின் தேசிய பொருளாதாரம் இச் செலாவணிப் பற்றுக் குறையினால் நீண்ட காலமாகப் பெரும்ளவு பாதிக்கப்பட்டு வந்துள்ளது. கடந்த 25 ஆண்டுகளில் அந்நிய செலாவணிப் பற்றுக்குறை மிகவும் தாக்கமான பிரச்சனையாக இருந்து வந்துள்ளது. 1956-ம் ஆண்டு வரை உலக சந்தையில்

சாதகமாக இருந்த எங்கள் பொருளாதாரக் காரணிகள் அந்நிய செலாவணி குறிப்பிடத்தக்களவு உயர்வடைய வழி வகுத்தது. இதன் காரணமாக 1956-ல் 1228·8 மில்லியன் ரூபாய்கள் மட்டத்திற்கு அந்நிய செலாவணி உயர்ந்திருந்தது. ஆனால் 1956-ன் பின்னர் ஏற்றுமதி வருவாய்கள் பெருமளவு குறைவடைந்துள்ளமையும் இறக்குமதிச் செலவுகள் பெருமளவு அதிகரித்தமையும் எமது வெளிநாட்டுச் செலாவணி படிப்படியாகக் குறைவடையக் காரணமாயிற்று. இதன் காரணமாக வெளிநாட்டு வர்த்தக நிலுவையும் பாதகமாக அமைந்தது.

அட்டவணை 48

இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள்

| காலம் | வெளிநாட்டுச் சொத்துக்கள் | சொத்துக்களின் மாற்றங்கள் |
|---|---|---|
| 1940 | 324·4 | + 49·3 |
| 1945 | 1,259·9 | + 299·9 |
| 1950 | 1,132·9 | + 169·2 |
| 1955 | 1,228·8 | + 284·5 |
| 1960 | 541·3 | — 192·7 |
| 1965 | 439·9 | + 88·9 |
| 1970 | 402·6 | + 25·5 |
| 1975 | 833·9 | — 54·9 |
| 1978 | 7,477·0 | + 1,903·8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஏற்றுமதி உழைப்புக்களின் வீழ்ச்சி, இறக்குமதி விலைவாசி ஏற்றம், அதிகரித்துவிட்ட சனத்தொகையின் நுகர்வின் செலவு, அதிகம் தேவைப்பட்ட கைத்தொழில் மூலப் பொருட்களின் இறக்குமதி, கப்பற் கட்டண உயர்வு, வெளிநாட்டு நிதி வசதிகள் இறுகியமை, கடந்த காலங்களில் எடுத்த வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பு அதிகரித்தமை போன்ற காரணிகள் செலாவணி அருகி வருகின்றமைக்கு அடிப்படையாகும். சிறப்பாக

ஏற்றுமதி வருவாய்களின் வீழ்ச்சி இப் பற்ருக்குறைக்கு ஓர் அடிப்படைக் காரணியாகக் கருதப்படுகின்றது. ஏற்றுமதி வருவாய்கள் உலக சந்தையில் எமது ஏற்றுமதிப் பண்டங்களுக்கு நிலவுகின்ற விலைகளில் தங்கியுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக எமது ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகள் உயர்வடைந்து செல்லினும் நீண்ட காலமாக அவை வீழ்ச்சிப் போக்கினையே கொண்டிருந்தன. எடுத்துக் காட்டாக 1947-ம் ஆண்டு இலங்கை 2770 இலட்சம் இருத்தல் தேயிலையை ஏற்றுமதி செய்து 1700 இலட்சம் டொலர்களை வருவாயாகப் பெற்றது. ஆனல் 1970-ல் 4590 இலட்சம் இருத்தல் ஏற்றுமதியிலிருந்து கிடைத்த வருவாய் 1880 இலட்சம் டொலர்கள் மாத்திரமே. எனவே 1947-க்கும் 1970-க்கும் இடையே ஏற்றுமதி அளவு 60 சதவீதத்தால் அதிகரித்த போதும் அதன் பெறுமதி 10 சதவீதத்தால் மட்டுமே அதிகரித்துள்ளது. 1978-ல் தேயிலையின் ஏற்றுமதி வருமானம் 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைய உலக சந்தையில் தேயிலையின் விலை வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். இதேநிலை இறப்பருக்கும் காணப்பட்டது. இந்தியா, மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகள் பெருமளவு இயற்கை இறப்பர் உற்பத்தியில் ஈடுபட்டன. மறுபக்கத்தில் விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் காரணமாக மேலை நாடுகள் செயற்கை இறப்பர் உற்பத்தியில் ஈடுபட்டன. இதன் காரணமாக இறப்பரின் விலைகளும் வீழ்ச்சிப் போக்கினையே காட்டுகின்றன. 1947-ம் ஆண்டு தொடக்கம் 1970-ம் ஆண்டு வரையான காலப் பகுதியில் இறப்பரின் ஏற்றுமதி 95 சதவீதத்தால் அதிகரிக்க ஏற்றுமதி வருவாய்கள் 85 சதவீதத்தாலேயே அதிகரித்துச் சென்றுள்ளது. ஆனல் ஒபெக் நாடுகள் செயற்கை இறப்பரின் மூலப்பொருளான எரிபொருளின் விலையை உயர்த்தியமையால் இயற்கை இறப்பருக்கான கேள்வியும் விலையும் அண்மைக் காலங்களில் பெருமளவு உயர்ந்து செல்கின்றன. தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி விலைகள் உயர்வாக அமையினும் ஏற்றுமதி அளவு குறைவாக இருப்பதனல் அந்நிய செலாவணி ஈட்டித் தருவதில் இது முக்கிய

பங்கினைப் பெறவில்லை. எனவே ஏற்றுமதியின் மந்த நிலையே அந்நிய செலாவணிப் பற்ருக்குறைக்குக் காரணமாக அமைகின்றது.

ஏற்றுமதிப் பண்டங்களின் விலைகள் வீழ்ச்சியடைவது போன்று இறக்குமதிப் பண்டங்களின் விலைகளும் வீழ்ச்சியடைந்திருக்குமாயின் இலங்கையின் அந்நிய செலாவணி நெருக்கடி குறைவாக இருந்திருக்கும். ஆனுல் இறக்குமதிச் செலவுகள் வருடா வருடம் பெருமளவு அதிகரித்துச் செல்கின்றன. இவ்வாறு அதிகரித்துச் செல்ல இறக்குமதி அளவு கூடியுள்ளது எனக் கூறுவதிலும் பார்க்க இறக்குமதி செய்யப்படும் பொருட்களின் விலைகள் உலக சந்தையில் மிக வேகமாக அதிகரித்துச் செல்கின்றன எனக் கூறுவதே பொருத்தமானதாகும். சமீப காலங்களில் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களான அரிசி, சீனி, மா என்பவற்றின் விலைகள் உலக சந்தையில் மிக வேகமாக உயர்வடைந்து செல்கின்றன. அத்துடன் எரிபொருளின் விலையேற்றம் பல மடங்கு அதிகரித்துச் சென்றுள்ளது. 1967—ல் இறக்குமதி விலைச் சுட்டெண் 100 ஆகவும் 1967 உடன் ஒப்பிடும் பொழுது 1978-ல் 877 ஆகவும் காணப்படுகின்றது. இவ் விலையேற்றம் இறக்குமதிச் செலவுகள் பல மடங்கு உயர்வடையவும் கைவசம் உள்ள செலாவணி பெருமளவு வீழ்ச்சியடையவும் காரணமாக அமைந்துள்ளது. 1978-ம் ஆண்டின் முடிவில் 750 கோடி ரூபாவாக இருந்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1979-ன் முதல் இரு மாதங்களில் 30 கோடி ரூபாவாகக் குறைவடைய இறக்குமதிச் செலவுகளின் அதிகரிப்பே மூலகாரணியாகும்.

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் தமது பொருளாதாரத்தை கைத்தொழில் மயமாக்க எத்தனிக்கும் இவ் வேளையில் அதற்குத் தேவையான மூலப் பொருட்களையும் மூலதனப் பொருட்களையும் இறக்குமதி மூலமே பெற வேண்டியுள்ளது. இலங்கையின் கைத் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களில் 77 சத

வீதம் இறக்குமதி மூலமே பெறப்படுகின்றன. இத் தேவை கருதியும் பெருந் தொகையான அந்நிய செலாவணியைப் பயன்படுத்த வேண்டியிருப்பதனுல் அந்நிய செலாவணிப் பற்ருக்குறை தோன்றுகின்றது. 1978-ல் மொத்த இறக்குமதிகள் 14,663 மில்லியன் ரூபாக்களாகும். இதில் நடுத்தரப் பொருட்களினதும் மூலதனப் பொருட்களினதும் பங்கு 61·1 சதவீதமாகும். எனவே கைவசம் உள்ள அந்நிய செலாவணியும், கிடைக்கும் அந்நிய செலாவணியும் பெருமளவு இறக்குமதிக்காகப் பயன்படுத்தப்படும் நிலையில் அந்நிய செலாவணிப் பற்ருக்குறை தவிர்க்க முடியாததாகும்.

சமீப ஆண்டுகளில் வெளிநாட்டுப் படுகடனைத் தீர்ப்பதற்கான செலுத்தல் அதிகரித்துச் சென்றன. இலங்கையின் ஏற்றுமதி வருவாயில் ஏறத்தாள 25 சதவீதம் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய தவணைக் கடனுகவும் வட்டியாகவும் காணப்படுகின்றது. இவ்வாருன நிலையில் இன்றும் வெளிநாட்டுக் கடன்களின் அளவு பெருமளவு அதிகரித்துச் செல்கின்றன. இவ்வாருன கடன்களை திருப்பிச் செலுத்த வேண்டிய நிலையும் அந்நிய செலாவணிப் பற்ருக்குறை நிலவ ஓர் காரணமாகும். இவ்வாருன சூழ்நிலைகளில் உலக நாடுகளிடையே நிலவும் யுத்த நெருக்கடிகள் பல்வேறு வகையான பிரச்சனைகளைத் தோற்றுவிக்கின்றன. கப்பற் கட்டண உயர்வுகள், பண்டங்களின் விலையேற்றம் இலங்கை வர்த்தக மாற்ற விகிதக் குறிகாட்டி தொடர்ந்தும் பாதகமான நிலையில் அமையக் காரணமாகவுள்ளது. இலங்கைக்கு ஏற்பட்டுள்ள அந்நிய செலாவணிப் பிரச்சனையின் அடிப்படை இயல்பு இதுவேயாகும்.

அந்நிய செலாவணிப் பிரச்சனை இலங்கையின் பொருளாதாரத்தினை வருடா வருடம் சிறிது சிறிதாகப் பாதித்து வந்துள்ளது. இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் நட்டமடையும் பொழுது உள்நாட்டு நிலைமை சீராக இருக்க முடியாது என்பது தெளிவு. இன்றைய சூழ்நிலை

யில் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் கணிசமான அளவு வாழ்க்கைத் தரத்தினையடையவும் செலாவணிப் பற்றுக்குறை பெரும் தடையாகவுள்ளது. தொடர்ந்து காணப்படும் சென்மதி நிலுவைப் பற்றுக் குறையை நீக்க பிற நாடுகளிடம் கடன்களையும் உதவிகளையும் எதிர்பார்த்து நிற்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. 1968-ம் ஆண்டு ஏறத்தாள 1500 மில்லியன்களாக இருந்த வெளிநாட்டுக் கடன்கள் 1978-ல் 15,840 மில்லியன் ரூபாக்களாக அதிகரித்துள்ளன. இவ்வாறு வெளிநாட்டுக் கடன்கள் அதிகரித்துச் சென்றமை பிறநாடுகள் தங்கள் செல்வாக்கினை நம் நாட்டின் மீது செலுத்த வழி வகுக்கும்.

இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கைத்தொழில் வளர்ச்சியைத் தடை செய்யும் ஓர் காரணியாகவும் அந்நிய செலாவணிப் பற்றுக் குறை காணப்படுகின்றது. கைத்தொழிலுக்குத் தேவையான மூலப் பொருட்களையும் மூலதனப் பொருட்களையும் இறக்குமதி செய்வதற்குப் போதிய அந்நிய செலவாணியின்மை அவற்றின் இறக்குமதிக்குத் தடையாக அமைகின்றன. 1972-75-ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் கைத்தொழில் வளர்ச்சி வேகம் குறைவடைந்தமைக்கு மூலப் பொருட்களின் இறக்குமதி வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும். 1960-ம் ஆண்டு தொடக்கம் வருடா வருடம் 4·7 சதவீதம் வளர்ச்சியடைந்து வந்த கைத்தொழிற் துறையில் 1973-ம் ஆண்டு வளர்ச்சி ஏறக்குறைய பூச்சியமாகும். ஆக்கத்துறைக்குத் தேவையான மூலப்பொருட்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியளவிற்கு அந்நிய செலாவணி கிடைக்கப்படாமையே இவ் வளர்ச்சி வேகம் பின் தங்கக் காரணமாகும். கைத்தொழிற்றுறையின் வளர்ச்சியின்மை வேலையில்லாத் திண்டாட்டத்தை விரிவுபடுத்துவதுடன் விவசாயத்துறையிலும் கீழுழைப்புத் தோன்றக் காரணமாக அமைந்துள்ளது.

இலங்கைக்குக் கிடைக்கக்கூடிய அந்நிய செலாவணி மிகக் குறைவாக அமைவதால் அத்தியாவசியப் பொருட்களாகிய அரிசி, மா, சீனி, எரிபொருள் போன்றவற்றினைப் போதியளவு எப்பொழுதும் இந் நாடு தன்வசம் வைத்திருக்க முடியாதுள்ளது. உடனடித் தேவைக்கான பொருட்களை அன்றன்றுடம் உலக சந்தையில் நிலவும் விலைகளில் கொள்வனவு செய்வதே இந் நாட்டின் இன்றைய நடைமுறைக் கொள்கையாகவுள்ளது. வருங்காலத்திற்காக ஏற்கனவே கொள்வனவு செய்யும் முறை மிக அருமையாகவேயுள்ளது. அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படவும், விலை மட்டங்கள் வேகமாக உயர்வடைந்து செல்லவும், வாழ்க்கைச் செலவு அதிகரிக்கவும், வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடையவும் இவை காரணமாக அமைகின்றன.

**தீர்வுகள்:**

இலங்கையின் பல்வேறு வகையான பிரச்சனைக்குத் தீர்வுகாண வேண்டுமாயின் அந்நிய செலாவணிப் பிரச்சனைக்கு முதற்கண் தீர்வுகாண வேண்டியது அவசியமாகும். இப் பிரச்சனை நீக்கப்பட வேண்டுமானல் முதலில் நாடு தன்னை சென்மதி நிலுவைப் பற்றுக்குறையிலிருந்து நீக்கும் வழி முறையில் ஈடுபடவேண்டும். தொடர்ந்தும் உறுதியற்ற பெருந் தோட்ட விவசாயத்துறையில் தங்கியிராது ஏற்றுமதித் துறையை உறுதியான துறையாக மாற்றியமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மரபுரீதியற்ற ஏற்றுமதிகளை பெருமளவு விஸ்தரிக்க வேண்டும். ஏற்றுமதியில் கைத்தொழிலின் பங்கு அதிகரிக்கப்பட வேண்டும். ஏற்றுமதியை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் அதே சமயம் இறக்குமதி செலவினைக் குறைப்பதற்குரிய வழிமுறை மேற்கொள்ளப்பட வேண்டும். மொத்த இறக்குமதியில் நுகர்வுப் பொருட்களின் பங்கு 1978-ல் 30·7 சதவீதமாகும். இவை மீளாய்வு செய்யப்படல் வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதியைக் குறைவடையச் செய்து அந்நிய செலாவணியைச் சேமிக்கலாம்.

இலங்கையின் கைத்தொழில்கள் வெளிநாட்டு மூலப் பொருட்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்நிய செலாவணிப் பிரச்சனைக்கு இம் மூலப்பொருள் இறக்குமதியும் ஓர் காரணமாகும். எனவே ஆரம்பிக்கப்படும் கைத்தொழில்கள் உள்நாட்டு மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு அமைதல் வேண்டும். இவற்றைவிட இறக்குமதிக்குரிய பதிலீடுகள் உள்நாட்டில் உருவாக்கப்பட வேண்டும்.

அந்நிய செலாவணிப் பிரச்சனையை நீக்க அரசாங்கம் காலத்துக்குக் காலம் பல்வேறு வழி முறைகளைப் பின்பன்றி வந்துள்ளது. 1960-ம் ஆண்டு தொடக்கம் கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் செலாவணிக் கட்டுப்பாடுகளும் அரசினல் விதிக்கப்பட்டன. 1967–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ம் திகதி நாணயப் பெறுமதி இறக்கமும் 1968-ம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டமும் அமுல் நடத்தப்பட்டன. 1973–ம் ஆண்டு தொடக்கம் மாற்றத்தக்க ரூபாய்க் கணக்கு செயல்முறைப் படுத்தப்பட்டது. 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் திகதி இலங்கையின் ரூபா மிதக்க விடப்பட்டது. இவ்வாறன நடவடிக்கைகள் மூலம் இறக்குமதிகளைக் குறைத்து ஏற்றுமதிகளைக் கூட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்நிய செலாவணிப் பிரச்சனையை நீக்க மேற்கூறிய நடவடிக்கைகள் தீர்வாக அமையினும் அவை பெருமளவு பயனைத் தரவில்லை. உண்மையான தீர்வு ஏற்றுமதித் துறையைப் பன்முகப்படுத்தி அதிக வருவாயைப் பெற்றுக் கொள்ளலும் இறக்குமதிக்குரிய பதிலீடுகளை உள்நாட்டில் ஆரம்பித்தலுமே.

**இதுவரை கற்றவை:—**

(1) இலங்கையின் அந்நிய செலாவணிப் பிரச்சனை நீண்டகாலமாகக் காணப்படுவதுடன் வெளிநாட்டுச் சொத்துக்கள் பெருமளவு குறைவடையவும் காரணமாகவுள்ளது.

(2) செலாவணிப் பற்றுக்குறை நிலவ ஏற்றுமதி உழைப்புக்களின் வீழ்ச்சியும் இறக்குமதி விலைவாசி ஏற்றமுமே காரணங்களாகும்.

(3) உலக சந்தையில் இலங்கையின் இறக்குமதிப் பண்டங்களின் விலைகள் பெருமளவு அதிகரித்துச் சென்றமையே வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சிக்கு மூலகாரணியாகும்.

(4) செலாவணிப் பற்றுக்குறையின் காரணமாக சென்மதி நிலுவை குறை நிலையில் காணப்படுவதுடன் கைத்தொழில் வளர்ச்சி இன்மை, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற வேறுபல பிரச்சனைகளும் தோன்றுகின்றன.

(5) ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதலும் இறக்குமதிச் செலவைக் குறைப்பதற்கான வழிமுறைகளுமே செலாவணிப் பற்றுக் குறையை நிவிர்த்தி செய்வதற்கான தீர்வாகும்.

## ரூபாவை மிதக்கவிடல்

இலங்கையின் பொருளியல் துறையில் ஒரு திருப்பு முனையாக ரூபாவை மிதக்கவிட்டமை அமைகின்றது. இது செலாவணி மாற்றுவீத அமைப்பில் ஒரு திருப்பத்தினை ஏற்படுத்தியதெனலாம். 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் வரை எமது நாணயம் வேறோர் நாட்டு நாணயத்துடன் அல்லது ஒரு தொகுதி நாணயங்களுடன் இணைக்கப்பட்டிருந்தது. ஆனால் 1978-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இத் தொடர்பானது துண்டிக்கப்பட்டு இப்பொழுது இலங்கையின் ரூபாய் மிதக்கவிடப்பட்டுள்ளது. ஒரு நாட்டு நாணயம் இன்னொரு நாட்டு நாணயத்துடன் அல்லது தொகுதி நாணயங்களுடன் எவ்வகையிலும் இணைக்கப்பட்டில்லாமல் காணப்படுதலையே நாணயத்தை மிதக்கவிடல் என்பர். இவ்வாறான ஒரு நிலை நாணயத்திற்கான செலாவணி வீதத்தினை அன்றன்றாடம் தீர்மானிக்க வழி வகுக்கின்றது. எனவே நாணயத்தை மிதக்கவிடல் மூலம் நாணயத்திற்கான செலாவணி வீதம் தினமும் மத்திய வங்கியில் நடைபெறும் மத்திய வங்கியின் உயர் அதிகாரிகள், வர்த்தக வங்கிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய கூட்டமொன்றில் நிர்ணயிக்கப்படும். வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் நிலவும் கேள்வி நிரம்பல் நிலைமைகளை அனுசரித்தே இந் நாளாந்த வீதங்கள் தீர்மானிக்கப்படுகின்றன.

ரூபாவை மிதக்கவிடல் திட்டத்தின் கீழ் முதல் செலாவணி மாற்று வீதம் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் திகதி நிர்ணயிக்கப்பட்டது. இதன்படி 100 அமெரிக்க டொலருக்கு ரூபா 1600 ஒரு நடுத்தர வீதமாக நிர்ணயிக்கப்பட்டது. இதற்கேற்ப ஏனைய நாணயங்களுக்கான ரூபாய் பெறுமதியும் தீர்மானிக்கப்பட்டது. வெளிநாட்டுச் செலாவணிக்கான கேள்வி நிரம்பல் பற்றிய மதிப்பீடுகள்

ஏற்றுமதியாளர்களாலும் இறக்குமதியாளர்களாலும் வர்த்தக வங்கிகளுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன. இக் கேள்வி நிரம்பலை அடிப்படையாகக் கொண்டு ரூபாவின் அன்றன்ருடப் பெறுமதி நிர்ணயிக்கப்படுகின்றது. உதாரணமாக வெளிநாட்டுச் செலாவணிக்கான கேள்வியைவிட நிரம்பல் அதிகமாகக் காணப்படின் ரூபாவின் பெறுமானம் குறைவாகக் காணப்படும். கேள்வி நிரம்பலுக்கு ஏற்ப ரூபாவின் பெறுமதி அடிக்கடி மாற்றமடைகின்றமையால் அது நாளாந்தம் பல ஏற்றத்தாழ்வுகளை உள்ளடக்கியதாகக் காணப்படும்.

இலங்கையில் காலத்திற்குக் காலம் பல்வேறு செலாவணித் திட்டங்கள் அமுலில் இருந்து வந்தன. 1949-ம் ஆண்டு முதல் 1971-ம் ஆண்டு நவம்பர் மாதம் வரை சர்வதேச நாணய விதிகளுக்கு அமைய ஒரு நிலையான நாணய பெறுமான வீதம் இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. 1971-ம் ஆண்டு முதல் 1977-ம் ஆண்டு வரை ரூபாவின் செலாவணி மாற்றுவீதம் இன்னொரு நாணயத்துடன் இணைக்கப்பட்டதன் மூலம் நிர்ணயிக்கப்பட்டது. 1967-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நாணய மதிப்பிறக்கம், 1968-ம் ஆண்டு மே மாதம் உருவாக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம், 1972-ல் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றத்தக்க ரூபாய்க் கணக்குப் போன்றவை இச் செலாவணி மாற்றத்தில் விஷேட மாற்றத்தினை ஏற்படுத்தியிருந்தன. ஆனால் இவையனைத்தும் 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் முற்ருக ஒழிக்கப்பட்டு இலங்கையின் ரூபாவின் பெறுமதி வெளிநாட்டுச் சந்தையில் மிதக்கவிடப்பட்டது. புதிய திட்டத்தின் கீழ் செலாவணி மாற்று வீதம் 1977-ம் ஆண்டு நவம்பர் 16-ம் திகதியன்று நிர்ணயிக்கப்பட்டது. இதன்படி ஒரு அமெரிக்க டொலரின் நடுத்தரப் பெறுமதி ரூபா 16 என வரையறை செய்யப்பட்டது. இவ் அமெரிக்க டொலரது விகிதாசாரத்திற்கு ஏற்ப ஏனைய நாணயங்களுக்கான ரூபா பெறுமதியும் நிர்ணயிக்கப்படும்.

ஐக்கிய அமெரிக்கா, பிரிட்டன், ஜப்பான், மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், கனடா, நைஜீரியா, சவூதி அரேபியா, சிலி, பிறேசில் போன்ற பல்வேறு நாடுகளில் நாணயத்தை மிதக்கவிடும் செயன்முறை பின்பற்றப் படுகின்றது. இலங்கையிலும் பல்வேறு வகையான பொருளாதார நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டே நாணயத்தை மிதக்க விடும் செயன்முறை பின்பற்றப்பட்டுள்ளது.

(1) இலங்கை நீண்ட காலமாக சென்மதி நிலுவைச் சமநிலையின்மையை அனுபவித்து வருகின்றது. இச் சென்மதி நிலுவையைச் சமநிலைப்படுத்தும் ஓர் ஆயுதமாக நாணயத்தை மிதக்கவிடும் செயன்முறை மேற்கொள்ளப்பட்டது.

(2) வெளிநாட்டுச் செலாவணி மாற்று வீதத்தில் நீண்ட காலத்திற்கு ஒரு முறை மாற்றங்களை மேற்கொள்ள முற்படும் பொழுது பெருந் தொகையான செலவுகளையும் நடைமுறைகளையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. கேள்வி நிரம்பல் நெகிழ்ச்சியடிப்படையில் தினமும் செலாவணி மாற்றங்களைச் செய்து கொள்வதால் இத்தகைய செலவுகளைத் தவிர்க்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(3) நாணயத்தின் உறுதியானது பொருளாதார உறுதிக்கு ஊன்றுகோலாகும். எமது நாணயம் அடிக்கடி மதிப்பிறக்கம் செய்யப்பட்டு வந்தமையால் பொருளாதாரத் த்ளம்பலை எதிர் நோக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. குறுகிய கால வேளைகளில் நாணய நிலைமைகளை ரூபாவை மிதக்கவிடல் கொண்டு சரி செய்வதன் மூலம் அதனை உறுதியாக வைத்திருக்க உதவியாக அமையலாம்.

(4) செயற்கையாகச் செலாவணி மாற்றங்களை உயர்த்தல், தாழ்த்தல் போன்ற நடவடிக்கைகளின் விளைவாக ஏற்படும் பாரதூரமான தாக்கங்களை ரூபாவை மிதக்க விடல் மூலம் தவிர்க்கலாம் எனக் கருதப்படுகிறது.

(5) அந்நிய செலாவணியைக் கையிருப்பில் வைத்திருக்க வேண்டிய நிலையிலிருந்து தவிர்த்துக் கொள்ள நாணயத்தை மிதக்கவிடல் ஊன்றுகோலாக அமைகின்றது. செலாவணி மாற்றுவீதம் மூலமாக மிதக்கும் நாணய வீதங்கள் சரி செய்யப்படுவதால் வெளிநாட்டுச் செலாவணியை வைத்திருக்க வேண்டியதில்லை எனக் கோட்பாட்டு ரீதியாக வலியுறுத்தப்படுகின்றது. அத்துடன் கள்ளக் கடத்தல், சட்ட விரோத ஏற்றுமதி இறக்குமதி போன்ற சமூக விரோத நடவடிக்கைகளை ஒழிக்கவும் இம் மிதக்கும் நாணயத்திட்டம் உதவியாக அமையும்.

மேற்குறிப்பிட்ட பொருளாதார நன்மைகளைக் கருத்திற் கொண்டே இலங்கையின் ரூபாவின் பெறுமதி மிதக்க விடப்பட்டது. சிறப்பாக வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளை நிர்ணயிப்பதில் இது பெரும் பங்கினை வகிக்கும். இது எந்தளவிற்கு வெற்றிகரமாகச் செயல்படுகின்றது என்பது செலாவணி மாற்று வீதங்களில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளுக்கு இணங்க இறக்குமதி ஏற்றுமதி நடவடிக்கைகளில் எவ்வளவு தூரம் மாற்றம் ஏற்படுகின்றது என்பதனைப் பொறுத்தேயமையும்.

**இதுவரை கற்றவை:–**

(1) இலங்கையின் நாணயம் எந்த ஒரு நாட்டு நாணயத்துடனும் கட்டுப்பாட்டு அடிப்படையில் இணைக்கப்படாதிருத்தலையே ரூபாவை மிதக்க விடல் எனலாம்.

(2) இது 1977-ம் ஆண்டு நவம்பர் மாதம் 16-ம் திகதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

(3) மத்திய வங்கியால் ரூபாவின் அன்றன்றுடப் பெறுமதி நிர்ணயிக்கப்படும்.

(4) சென்மதி நிலுவையைச் சமநிலைப்படுத்தவும், செலாவணி மாற்று வீதத்தில் ஏற்படும் செலவினங்களைத் தவிர்க்கவும், ரூபாவின் பெறுமதியை உறுதியாக வைத்திருக்கவும், சட்ட விரோத நடவடிக்கைகளை ஒழிக்கவும், அந்நிய செலாவணிப் பிரச்சனையைத் தவிர்க்கவும் இது உதவியாக அமையும்.

# அரச நிதி (வரவு செலவுத் திட்டம்)

அரசாங்கம் தனது வருடாந்த செலவுகளுக்கும் அச் செலவுகளை ஈடு செய்வதற்கும் எவ்வெவ்விடங்களிலிருந்து வருமானங்களைத் திரட்டிக் கொள்வது எனத் திட்டமிடுதலையே வரவு செலவுத் திட்டமெனலாம். நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை அமுலாக்கம் செய்யும் திறவுகோலாகவும் பிரதான கொள்கை விளக்கமாகவும் அது அமைகின்றது. வரவு செலவுத் திட்டத்தின் வருமானம் அறவிடல் தொடர்பான பிரேரணைகள், நாட்டின் வளங்களை ஒன்று திரட்டுவதில் அரசாங்கம் கையாளும் நாணயக் கொள்கைகளைச் சுட்டிக் காட்டுகின்றன. அதேபோல செலவு தொடர்பான பிரேரணைகள் நாட்டின் அபிவிருத்தி முயற்சியில் பொதுத்துறையின் பங்கினை எடுத்துக் காட்டுகின்றன. மேலும் நாட்டின் பொருளாதாரத்தில் வரவு செலவுத் திட்டம் ஏற்படுத்தும் தாக்கம் இவ் வரவு செலவுக் கொள்கையில் மட்டுமன்றி வரவு செலவுக் குறையை நிதிப்படுத்தும் வழி வகைகளிலும் தங்கியுள்ளது. எனவே நாட்டின் அபிவிருத்தித் திட்டத்தில் நிதியின் பங்கு என்ற வகையில் வரவு செலவுத் திட்டங்கள் நோக்கப்படுதல் வேண்டும்.

இலங்கையின் வரவு செலவுத் திட்டங்கள் பொருளாதாரப் பிரச்சனைகளை அணுகும் முறையில் காலத்திற்குக் காலம் மாற்றமடைந்து வந்துள்ளன. அரசியல் கட்சிகளின் பொருளாதாரக் கொள்கைக்கு இணங்க வரவு செலவுக் கொள்கைகளும் மாறுபட்ட போக்கினைக் காட்டுகின்றன. இலங்கை அரசாங்கத்தின் பிரதான செலவினங்களை நிர்வாகம், சமூக சேவைகள், பொருளாதார சேவைகள், வர்த்தக முயற்சிகளின் மொத்தக் கொடுப்பனவுகள், அரசாங்கத் திணைக்களங்களுக்கு இடையிலான கொடுப்பனவுகள், மாற்றுக் கொடுப்பனவுகள் எனப் பலவகை

யாகப் பாகுபடுத்தலாம். நிர்வாகம் என்னும்பொழுது பொது நிர்வாகம், பாதுகாப்பு ஆகியன அடங்கும். சமூக சேவைகளுக்கான செலவினங்கள் என்னும்பொழுது கல்வி, சுகாதாரம், ஏனைய சேவைகள் அடங்குகின்றன. பொருளாதார முதலீடுகளை மேற்கொள்ளும் அதேசமயம் பொருளாதார மேலதிக முதலீடுகளை மேற்கொள்ள வேண்டியதும் அவசியமாகவுள்ளது. இதனையே பொருளாதார சேவைகள் என்பர். விவசாயம், நீர்ப்பாசனம், போக்குவரத்து, செய்தித் தொடர்பு ஆகியன இதில் அடங்கும். இலங்கை அரசு அரச புகையிரத சேவை, தபால் தந்தித் தொடர்புகள், துறைமுகச் சேவை என்பவற்றை உள்ளடக்கிய வர்த்தக முயற்சிகள் மீதும் பெரும் தொகையான செலவினை மேற்கொள்ளுகின்றது. இவற்றைவிட உணவு மானியங்கள், இளைப்பாற்றுச் சம்பளங்கள், உள்ளூராட்சி மன்றங்களுக்கான மானியங்கள் ஆகியன மாற்றுக்கொடுப்பனவில் அடங்கும்.

அரசாங்கம் தனது பல்வேறு செலவினங்களுக்குமான வருமானத்தினைப் பல்வேறு துறைகளிலிருந்தும் பெற்றுக்கொள்கின்றது. இவ் வரவினை இரு பிரதான பிரிவில் அடக்கலாம்.

(1) நடைமுறை வரவுகள்.

(2) மூலதன வரவுகள்.

நடைமுறை வரவுகளில் சொந்தக் கூட்டு வருமானங்களிலிருந்து வரிகள், உற்பத்தியிலும் செலவிலும் மீதான வரிகள், பெறப்பட்ட வட்டியும் பங்கு இலாபங்களும், வர்த்தக முயற்சியின் மொத்த வரவுகள், ஏனைய நடைமுறை வரவுகள் என்பன அடங்கும். சொந்தக் கூட்டு வருமானங்களிலிருந்து வரிகளில் வருமானவரி முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. புகையிலை வரி, தேயிலை வரி, மது வரி ஆகியன தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனை வரிகளாகும். இவை நடைமுறை வரவாக அமைகின்றன. இறக்குமதித் தீர்வைகளில் பல்வேறு அம்சங்கள் இடம்பெறு

கின்றன. காய்கறி உற்பத்திகள், தயாரிக்கப்பட்ட உணவு வகைகள், குடிபானங்கள், புகையிலை, கனிப்பொருள் உற்பத்திகள், கைத்தொழில் இரசாயனத் தயாரிப்புக்கள், பிளாஸ்டிக் பொருட்கள், கடுதாசி தயாரிக்கும் பொருட்கள், புடைவைகள், அடிப்படை உலோகப் பொருட்கள், இயந்திரங்கள், மின்சார உபகரணங்கள், வாகனங்கள், விமானத் தளங்கள், இறக்குமதி உத்தரவுச் சீட்டுக் கட்டணங்கள் ஆகியன இறக்குமதித் தீர்வையில் அடங்கும் நடைமுறை வரவுகளாகும். ஏற்றுமதித் தீர்வை என்னும் பொழுது தேயிலை, இறப்பர், தென்னை ஏனையன அடங்கும். இவற்றைவிட உத்தரவுச் சீட்டு வரிகள், சொத்து மாறல் வரிகள், அரசாங்கத் தனி உடைமைகளின் மிகைகள், உணவு விற்பனை மூலமான இலாபங்கள், கூட்டுத் தாபனங்களிலிருந்து பெறப்பட்ட பங்கு இலாபங்கள் ஆகியனவும் நடைமுறை வரவில் இடம்பெறும். வர்த்தக முயற்சிகள் மூலமும் இலங்கை அரசாங்கம் நடைமுறை வரவினை பெற்றுக் கொள்கின்றது. வர்த்தக முயற்சிகளான புகையிரத சேவை, மின்சக்தி, தபால் தந்திப் போக்குவரத்து, துறைமுகங்கள் ஆகியன மூலமும் அரசாங்கம் வருமானத்தைப் பெறுகின்றது. ஏனைய நடைமுறை வரவுகளாகத் தேசிய சீட்டிழுப்புப் போன்றவை காணப்படுகின்றன.

மூலதன வரவு என்னும் பொழுது உள்நாட்டுத் துறையும் மூலதனக் கணக்கில் இருந்து ஏற்பட்ட மாற்றங்களையும் ஏனைய மூலதன வரவுகளையும் உள்ளடக்கியனவாகக் காணப்படும். பூதல் வரி, செல்வ வரி, நன்கொடை வரி, மூலதன வரி என்பவற்றை உள்ளடக்கியனவாக இவ் வரவுகள் அமைகின்றன. ஏனைய மூலதன வரவுகள் என்னும் பொழுது அரசாங்கத்தின் ஒன்று திரட்டிய நிதியிலிருந்து பெறப்பட்ட முற்பண மீளக் கொடுப்பனவுகளையும் மூலதனப் பொருட்களின் விற்பனையையும் உள்ளடக்கும்.

இவ்வாறான இலங்கை அரசாங்கத்தின் வரவும் செலவும் காலத்திற்குக் காலம் அக்காலத்திற்குரிய நிதி மந்திரியால் தயாரிக்கப்பட்டு அமுல் நடத்தப்படுகின்றது. அட்டவணை 49 கடந்த இரு தசாப்தங்களில் இலங்கை அரசின் வரவையும் செலவையும் காட்டுகின்றது.

அட்டவணை 49

**இலங்கை அரசின் அரசிறையும் செலவும்**

( மில்லியன் ரூபாய்களில் )

| காலம் | அரசிறை | செலவு | தேறிய பணக் குறை |
|---|---|---|---|
| 1957-58 | 1,280·0 | 1,502·3 | 222·3 |
| 1958-59 | 1,330·4 | 1,743·8 | 413·4 |
| 1959-60 | 1,403·8 | 1,821·3 | 417·5 |
| 1960-61 | 1,513·9 | 1,976·4 | 462·5 |
| 1961-62 | 1,620·6 | 2,076·6 | 456·0 |
| 1962-63 | 1,593·4 | 1,985·3 | 391·9 |
| 1963-64 | 1,759·0 | 2,220·7 | 461·7 |
| 1964-65 | 1,816·4 | 2,246·8 | 430·4 |
| 1965-66 | 1,833·3 | 2,399·3 | 566·0 |
| 1966-67 | 1,954·8 | 2,561·6 | 606·8 |
| 1967-68 | 2,156·4 | 2,872·1 | 715·7 |
| 1968-69 | 2,497·3 | 3,284·9 | 787·6 |
| 1969-70 | 2,736.4 | 3,672·0 | 935·6 |
| 1970-71 | 2,815·3 | 3,898·6 | 1083·3 |
| 1971-72 | 4,102·0 | 5,396·8 | 1294.7 |
| 7973 | 4,034·0 | 5,025·7 | 991·7 |
| 1974 | 4,787·0 | 5,821·7 | 1024·8 |
| 1975 | 5,083·5 | 7,186·6 | 2103·1 |
| 1976 | 5,738·9 | 8,653·0 | 2914·4 |
| 1977 | 6,686·0 | 8,761·2 | 2126·8 |
| 1978 | 11,632·5 | 17,774·5 | 6140·0 |
| 1979 | 11,431·0 | 18,086·4 | 6655·4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

மேற் காட்டப்பட்ட அட்டவணையில் கடந்த 20 வருடங்களில் இலங்கை அரசாங்கத்தில் வரவிலும் பார்க்கச் செலவுகளே கூடுதலாக அமைந்துள்ளன. அரசாங்கத்தின் பொருளாதார முதலீடுகளும் சமூக நல முதலீடுகளும்

அதிகரித்துச் சென்றமையே பற்ருக்குறை வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட அடிப்படைக் காரணமாகும். இப் பணக் குறைக்கு நிதியிட இலங்கை அரசாங்கம் பல்வேறு வழி முறைகளைக் கையாண்டு வந்துள்ளது. கடன் தொழிற் பாடுகளிடமிருந்தும், நன்கொடைகளிடமிருந்தும் ஏற் பட்ட தேறிய பண வருவாய்கள், உள்நாட்டுச் சந்தைக் கடன்கள், வெளிநாட்டு நிதி, பண நிலுவையில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பவை மூலம் பறருக் குறைக்கு நிதி பெறப் படுகின்றது. உள்நாட்டுச் சந்தைக் கடன்களில் ரூபாய்க் கடன்கள், திறைசேரி உண்டியல்கள், மத்திய வங்கி முற் பணங்கள், வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் ஆகியன முக்கியம் பெறுகின்றன. வெளிநாட்டு நிதி என்னும் பொழுது செயற் திட்டக் கடன்கள், செயற் பண்ட திட்டமில்லாத கடன் கள் ஆகியன முக்கியத்துவம் பெறுகின்றன. நீண்ட கால மாக இவ்வாருன வழி முறைகளைப் பின்பற்றியே வரவு செலவுத் திட்டப் பற்ருக்குறைக்கு நிதி காணப்பட்டது.

1978-ம் ஆண்டின் பின்னர் இலங்கையின் வரவு செல வுத் திட்டம் முற்றிலும் மாறுபட்ட போக்கினைக் கொண்ட தாகக் காணப்படுகின்றது. குறிப்பாகக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி பொருளாதாரத்தை எளிதாக்கவும் சுதந்திர மான சந்தைகளை அனுமதிப்பதும் முக்கிய அம்சங்களா கக் கருதப்பட்டன. அந்நிய செலாவணிச் சான்றிதழ் திட்ட முறை இல்லாது ஒழிக்கப்படுவதுடன் இதுவரை காலமும் நிலவி வந்த இரட்டை நாணய முறைக்குப் பதிலாக ஐக்கியப்படுத்தப்பட்ட நாணய முறையொன்று அமுலுக்கு வந்தது. அத்துடன் வரி வீதங்களிலும் பெரு மளவு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. தனியார் உற்பத்தி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முகமாக வரி ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட்டன. மேலும் விவசாயத் துறையை விஸ்தரிக்கும் முகமாக உத்தரவாத விலைத் திட்டம் மாற்றியமைக்கப்பட்டது நுகர்வோர் அரிசி மானியத்தைப் பெருமளவில் குறைத்து நெல் புசல் ஒன்றின் உத்தரவாத விலையை ரூபா 33/- இலிருந்து ரூபா 40/- ஆக உயர்த்தியதன் மூலம் உற்பத்தியாளர்களுக்கான

மானிய உதவிகள் விரிவு பெற்றுள்ளன. உர மானியமும் 1978-ல் 50 சதவீதத்திலிருந்து 75 சதவீதமாக அதிகரிக்கப் பட்டது. பெருந்தோட்ட மீள் நடுகைக்கான மானியங் களும் அதிகரிக்கப்பட்டன. 1979/80-ம் ஆண்டுகளுக்கான வரவு செலவுத் திட்டங்களும் 1977-ம் ஆண்டு நவம்பரில் அரசாங்கத்தால் அறிமுகம் செய்யப்பட்ட புதிய பொரு ளாதாரக் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்லும் ஒன்றாகவே தென்படுகின்றது.

1980 ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் தேசியப் பொருளாதாரத்தின் முற்றும் முழுதான வளர்ச்சிக்கும் விஸ்தரிப்பிற்கும் உள்நாட்டு வெளிநாட்டு தனியார்துறை யின் கூடிய பங்களிப்பினை அரசாங்கம் நாடி வருகின்ற மையைத் தெளிவுபடுத்துகின்றது. இவ் வரவு செலவுத் திட்டத்தில் தனியார் துறைக்குப் பல்வேறு வகையான ஊக்குவிப்புக்களும் வரிச் சலுகைகளும் வழங்கப்பட்டுள் ளன. பெயரளவிலான தனியார் முதலீட்டு உட்பாய்ச்சலை இவை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இப் புதிய கொள்கை இலக்குக் குறித்து 1980-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் பின்வரும் பிரதான மாற்றங்களை அறி முகம் செய்துள்ளது.

(1) வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட கம்பனிகளுக்கான கம்பனி வரி 50 சதவீதத்தி லிருந்து 40 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. அத் தகைய கம்பனிகளில் இலாபப் பங்குகள் தொடர் பான பணம் மீளப் பெறுதல் மீது அறவிடப்பட்ட $33\frac{1}{3}$ சதவீத வரி ஒழிக்கப்பட்டது.

(2) தனியார் வருமான வரிக்கான உச்ச எல்லை 70 சத வீதத்திலிருந்து 55 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

(3) மகாவலித் திட்டத்தில் நிர்மான நடவடிக்கைகளி லும் நிலத்தைச் சுத்திகரிக்கும் வேலைகளிலும் ஈடு பட்டிருக்கும் புதிய கம்பனிகள், அங்கீகரிக்கப்பட்ட

சொத்துடைமை அபிவிருத்தியில் ஈடுபட்டிருக்கும் கம்பனிகள், சில இறக்குமதிப் பிரதியீட்டுக் கம்பனிகள், முன்னோடி இயல்பினைக் கொண்ட கைத் தொழில்கள் என்பனவற்றிற்கு 5 ஆண்டு கால வரி விலக்களிக்கப்பட்டது.

(4) இரத்தினக்கல் ஆபரணங்கள் கைத்தொழிலுக்குப் பல சலுகைகள் வழங்கப்பட்டன.

இவ்வாறான வரவு செலவுத் திட்ட நடவடிக்கைகள் பெயரளவிலான தனியார் முதலீட்டு உட்பாய்ச்சலை ஊக்குவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பொருளாதார நடவடிக்கைகளுக்கு மாத்திரமன்றி பொதுநல நடவடிக்கைகளுக்கும் வரவு செலவுத் திட்டத்தில் வழி வகுக்கப்பட்டுள்ளது. இவ் வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட மிகப் பிரதானமான பொதுநல நடவடிக்கை 9-ம் தரம் வரையிலான மாணவர்களுக்கு இலவசமாக பாடப் புத்தகங்களை வழங்கும் திட்டமாகும். வருடம் ஒன்றிற்கு 3·2 கோடி ரூபா செலவாகும். இந் நடவடிக்கை 1946-ல் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட இலவசக் கல்வி மீதான பிறிதொரு விஸ்தரிப்புக் கொள்கையாகும். இவ் வகையில் இலங்கை அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டங்கள் அரசியல் கட்சிகளின் பொருளாதாரக் கொள்கைக்கு ஏற்ப மாற்றமடைந்து செல்கின்றன எனலாம்.

### பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம்:-

அண்மைக் காலங்களில் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டச் செயற்பாடுகளில் ஒரு முக்கிய அபிவிருத்தி என்னவெனில் வரவு செலவுத் திட்டத்தின் மூலதனத்தின் ஒரு பகுதியை பன முகப்படுத்தலாகும். 1973-ம் ஆண்டு தொடக்கம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டம் அமுல் நடத்தப்பட்டு வருகின்றது. 1973-ல் உணவுறபத்தித் திட்டத்தைத் துரிதப்படுத்தவும் ஒன்றிணைக்கவும் மாவட்ட ரீதியாக அரசியல் அதிகார சபைகள் நிறுவப்பட்டன; இந்

நிறுவகம் பயனுள்ள முறையில் செயற்படுவதற்குத் தேவை யான நிதியைப் பெற உடனடிப் பணம் பெறக்கூடிய நட வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாயிற்று. எனவே அரசியல் அதிகார சபைகளை (இன்று மாவட்ட அமைச்சு) அமைத்தலுக்கான தர்க்க ரீதியான ஆதார மாக வரவு செலவுத்திட்டத்தைப் பன்முகப்படுத்தல் அமைந் தது. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தினது வரவு செலவுத்திட்ட மூலதனத் தினது ஒரு பகுதி நாட்டின் 22 நிர்வாக மாவட்டங்களுக் கும் வெவ்வேறாகப் பகிர்ந்து ஒதுக்கப்படும். ஒரு மாவட் டத்திற்கு இவ்விதம் ஒதுக்கப்பட்ட நிதியைச் செலவிடுவது பற்றிய தீர்மானம் அம்மாவட்டத்தின் பாராளுமன்றப் பிரதிநிதிகளின் ஆலோசனைகளுடன் அரசியல் அதிகாரியால் (மாவட்ட அமைச்சரால்) மேற்கொள்ளப்படும். வரவு செலவுத் திட்டத்தின் நோக்கங்களுக்காக அம் மாவட்டத் தின் அரசாங்க அதிபரே கணக்கு வைக்கும் அலுவலராகச் செயற்படுவதோடு அவர் அரசியல் அதிகாரிகளின் பணிப் புக்களின்படி செயற்படுவார்.

மாவட்டங்களுக்கு இந்த நிதி ஒதுக்கீட்டில் பொது வாகக் கடைப்பிடிக்கப்படும் விதிகள் அம் மாவட்டத்தின் சனத்தொகை, பரப்பளவு, மாவட்டம் அபிவிருத்தியுற் றுள்ள அளவு, அபிவிருத்தியுறக் கூடிய அளவு என்பன வற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். நாட்டின் மொத்தச் சனத்தொகையில் 40 சதவீதத்தை உள்ளடக்கிய கொழும்பு, கண்டி, குருநாகல் மாவட்டங்களுக்குப் பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்காக ஒதுக் கப்பட்ட மொத்த நிதியில் கிட்டத்தட்ட 1/3 பங்கு ஒதுக் கப்பட்டுள்ளது. ஆகக்கூடிய ஒதுக்கீடு கொழும்பு மாவட் டத்திற்கும் மிகக் குறைந்த ஒதுக்கீடு வவுனியா மாவட் டத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. 1976-ம் ஆண்டு தொடக் கம் 1978-ம் ஆண்டு வரை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட மொத்தத் தொகைகள் பின்வருமாறு அமைந்துள்ளது.

அட்டவணை 50

## பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ஒதுக்கீடுகள்

(இலட்ச ரூபாய்களில்)

| மாவட்டம் | 1976 | 1977 | 1978 |
|---|---|---|---|
| கொழும்பு | 540 | 1549 | 1330 |
| களுத்துறை | 160 | 348 | 620 |
| கண்டி | 300 | 189 | 340 |
| மாத்தளை | 88 | 49 | 81 |
| நுவரெலியா | 85 | 89 | 237 |
| காலி | 180 | 229 | 418 |
| மாத்தறை | 140 | 187 | 347 |
| அம்பாந்தோட்டை | 100 | 350 | 115 |
| யாழ்ப்பாணம் | 160 | 192 | 349 |
| மன்னார் | 30 | 67 | 20 |
| வவுனியா | 30 | 11 | 37 |
| மட்டக்களப்பு | 110 | 75 | 128 |
| அம்பாறை | 120 | 171 | 111 |
| திருகோணமலை | 91 | 64 | 127 |
| குருநாகல் | 240 | 448 | 729 |
| சிலாபம் – புத்தளம் | 96 | 206 | 228 |
| அநுராதபுரம் | 162 | 281 | 286 |
| பொலநறுவை | 70 | 74 | 75 |
| பதுளை | 160 | 73 | 268 |
| மொனறாகலை | 72 | 17 | 60 |
| இரத்தினபுரி | 164 | 100 | 452 |
| கேகாலை | 160 | 311 | 491 |

மூலம்: பொருளியல் நோக்கு

1974-ல் 1811 இலட்ச ரூபாய்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் செலவிடப்பட்டது. 1978-ல் இது 6800 இலட்ச ரூபாய்களுக்கும் மேற்பட்டதாக அமைந்துள்ளது. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் நடவடிக்கைகள் விரிவடைந்து செல்வதனையே இது பிரதிபலிக்கின்றது. விவசாயம், நீர்ப்பாசனம், போக்குவரத்து, கல்வி, உள்ளூர் ஆட்சிப் பணிகள், அரசாங்க நிர்வாகம், சுகாதாரம், சமுதாய சேவைகள், மீன்பிடி, உற்பத்தித் தயாரிப்புப் போன்ற பல துறைகளுக்கும் இத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாடசாலைக் கட்டணங்கள், விவசாய உற்பத்தி நிலையங்கள், கிராமிய வைத்தியசாலைகள், மருந்துச்சாலைகள், உதவி அரசாங்க அதிபர் பகுதி அரசிறை அலு

வலர்களுக்கான அலுவலகங்கள், சனசமூக நிலையங்கள் போன்றன இத்திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகின்றன.

பன்முகப்படுத்தப்பட்ட திட்டம் கடந்த ஆறு ஆண்டுகளாகவே அமுலில் இருந்து வருவதால் அதன் வெற்றி குறித்தோ அல்லது பிராந்திய அபிவிருத்தியில் அது ஏற்படுத்திய தாக்கம் பற்றியோ மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்வது கடினமாகும். மாவட்ட அமைச்சர்களின் திறமையைப் பொறுத்து மாவட்டத்திற்கு மாவட்டம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் சாதனைகள் வெவ்வேறு அளவினதாய்க் காணப்பட்டன. எவ்வாறாயினும் இந்த முறையினால் மாவட்ட மட்டத்திலான அபிவிருத்தி நடவடிக்கைகள் பெருமளவு துரிதப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக விவசாயம், போக்கு வரத்து பிராந்திய நிர்வாகம் போன்ற துறைகளிலான சில மூலதனப் பணிகள் துரிதப்படுத்தப்பட இத் திட்டமே காரணமாகும்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இது காலவரை இருந்து வந்த நடைமுறை என்னவெனில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அரசு குறிப்பிட்ட ஒரு தொகையை ஒதுக்குவதும் அதன் பின்னர் அத் தொகையை எவ்வெவ் செயற் திட்டங்களில் செலவிடுவதெனத் தீர்மானிப்பதுமாகும். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் பணம் ஒதுக்கப்பட்ட பின்பே நடப்பாண்டுக்கான செயற்திட்டங்கள் பற்றிய தீர்மானம் மேற்கொள்ளப்படுகின்றது. சிறந்த நடைமுறை என்னவெனில் ஒவ்வொரு மாவட்டமும் அந்த மாவட்டங்களின் பொருளாதார சமூக விருத்திகளுக்கான ஆக்கத்திட்டங்களை முதலில் உருவாக்கிய பின்னர் அவற்றிற்குத் தேவையான நிதியை வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்குவதே. இவ்வாறு செயற்படுத்தப்படுமாயின் திட்டமிடப்பட்ட பிராந்திய அபிவிருத்திக்கான ஒரு ஆயுதமாக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் அமையலாம். இதுகால வரையும் பன்

முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பெரு மளவிலான செலவினங்கள் நிர்மான வேலைகளுக்காகவே செலவிடப்பட்டன. கைத்தொழில் நடவடிக்கைகளில் அவ் வளவாகக் கவனம் செலுத்தப்படவில்லை. குறுகிய ஒரு காலப் பிரிவினுள் மேற்படி பிராந்தியத்தில் விவசாயக் கைத்தொழில் உற்பத்திகளை அதிகரிக்கக் கூடிய வகையில் செலவினங்களின் ஒரு பகுதியை நேரடியாக ஈடுபடுத்து வது அத்தியாவசியமாகும். தற்பொழுது பன்முகப்படுத்தப் பட்ட வரவு செலவுத் திட்டம் ஓர் நிர்வாக ஒழுங்கு மாத் திரமே. எனவே இத் திட்டத்தைச் சிறந்த முறையில் செயற்படுத்தச் செய்வதன் மூலம் பொருளாதாரத்துறை யிலும் சமூகத்துறையிலும் வேகமான வளர்ச்சியை ஏற் படுத்த இது வழி வகுக்கும்.

**இதுவரை கற்றவை:-**

(1) அரசாங்கத்தின் நிதி நடவடிக்கைகளை ஒன்று கூட்டிக் காட்டும் ஓர் அட்டவணையே வரவு செலவுத் திட்டமாகும்.

(2) இலங்கை அரசாங்கத்தின் செலவுகளை பொருளாதார முத லீடுகள், பொருளாதார மேலதிக முதலீடுகள், சமூக நல முதலீடுகள், பாதுகாப்பிற்கான முதலீடுகள் என வகைப் படுத்தலாம்.

(3) வரவினை நடைமுறை வரவுகள் எனவும், மூலதன வரவுகள் எனவும் வகைப்படுத்தலாம்.

(4) 1957-ம் ஆண்டின் பின்னர் இலங்கையின் வரவு செலவுத் திட்டம் பற்றுக்குறைத் திட்டமாகவே தயாரிக்கப்பட்டு வந்துள்ளது.

(5) பற்றுக்குறைக்கு நிதி காண பெரும்பாலும் வெளிநாட்டுதவி களும் நன்கொடைகளுமே பெறப்பட்டுள்ளன.

(6) 1973-ம் ஆண்டு தொடக்கம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் அமுல் நடாத்தப்பட்டு வருகின்றது.

(7) அரசியல் அதிகார சபைகள் துரிதமாகச் செயற்பட உருவாக் கப்பட்டதே பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட மாகும்,

(8) மாவட்டத்திற்கான நிதி ஒதுக்கீடுகள் அம் மாவட்டத்தின் சனத்தொகை, பரப்பளவு, அபிவிருத்தி என்பனவற்றை அடிப் படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படும்.

(9) இது மிகக் குறுங்கால அளவிலேயே செயற்பட்டு வருவதனுல் இது பற்றிய மதிப்பீடுகளை மேற்கொள்ளல் கடினமாகும்.

# பொருளியலில் உள்நாட்டு இறைவரியின் பங்கு

மூலதனப் பெருக்கத்தினுல் உத்தரவாதம் அளிக்கப் பட்டதும் உள்நாட்டுச் சேமிப்புக்களால் நிதிப்படுத்தப் பட்டதுமான திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்திக் காக மூலவளங்களை ஒன்று திரட்டுதல் பெரும்பாலான வளர்முக நாடுகளின் அபிவிருத்தி நாணயக் கொள்கை யின் பிரதான நோக்கமாய் இருக்கின்றது. இவ்வகையில் வரி அறவிடுதல் அரசாங்க வருமானத்தினை ஒன்று திரட் டும் ஓர் இயந்திரமாக மட்டும் இருந்த நிலை மாறி வரு கின்றது. இன்று வரி அறவிடல் பொருளாதாரத் திட்ட மிடலிலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆக்க பூர்வ மான சக்தியாக விளங்குவதோடு சமுதாய மாற்றம் தொடர்பான முக்கிய கூறாகவும் இருக்கின்றது. இலங்கை யில் வரி பொருளாதார வளர்ச்சியோடு நெருங்கிய தொடர்புடையதொன்ருக அமைந்துள்ளது. பல்வேறு நோக்கங்களைக் கருத்திற் கொண்டே இவ் வரி விதிப்பு அமைகின்றது.

இன்றைய அபிவிருத்தி முயற்சிகளின் பிரதான நோக் கம் உற்பத்தியைக் கூட்டுவதாக இருக்கின்றது. குறிப்பாகக் கைத்தொழில் வெளியீட்டினை அதிகரிக்கும் செயல் முறை யில் இலங்கையின் வரி விதிப்புக்கள் சமீப காலங்களில் பெருமளவு மாற்றமடைந்துள்ளன. உற்பத்தியை அதிகரிக் கும் முகமாக வரிச் சலுகைகள் வழங்கப்படுவதுடன் வரி யால் பெறப்படும் வருமானத்தைக் கொண்டு அரசும் பல் வேறு துறைகளில் முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றது. தனியார் அபிவிருத்தியில் ஈடுபட மூலதன விடுதொகை, அபிவிருத்தித் தள்ளுபடி, உழைப்பு வருமான விடுதொகை, ஏற்றுமதி வரிச் சலுகை என்பன வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையின் பண நிரம்பலைக் கட்டுப்படுத்தி நாண யத்தின் பண நிரம்பலைப் பாதுகாக்கவும் வரி ஊன்று

கோலாக அமைகின்றது. பண நிரம்பல் கூடிக் காணப்படும் காலங்களில் வரி விகிதம் அதிகரிக்கப்படுவதனால் புளக்கத்திலுள்ள பணத் தொகை குறைவடைந்து பண நிரம்பல் கட்டுப்படுத்தப்படுவதுடன் பண வீக்கமும் தடை செய்யப்படுகின்றது. மாறாக பண நிரம்பல் குறைவடைந்து காணப்படும் காலங்களில் வரிவீதம் குறைக்கப்பட்டுப் பணத்தின் பெறுமதி பாதுகாக்கப்படுகின்றது. இலங்கை மக்களின் வருமான ஏற்றத்தாழ்வினைச் சீராக்கவும் இறைவரி ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது. வருமானம் கூடிய வர்க்கத்திடமிருந்து வரி அறவிடப்பட்டு வருமானம் குறைந்த வர்க்கத்திற்கு மறு பங்கீடு செய்யப்படுவதன் மூலம் வருமான ஏற்றத் தாழ்வுகள் சீராக்கப்படுகின்றன. உணவு மானியம், உபகாரச் சம்பள நிதி, இலவசக் கல்வி, இலவசப் பாடப் புத்தகங்கள், இலவச வீடமைப்பு என்பவை மூலம் அவை மறுபங்கீடு செய்யப்படுகின்றன. இதன் மூலம் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்க இறைவரி தேவையாக அமைகின்றது.

இலங்கையில் ஆடம்பரப் பொருட்களின் நுகர்ச்சி நாட்டம் நீண்ட காலமாகக் கூடிய பங்கினையே வகித்து வந்துள்ளது. செல்வ குழாத்தின் இடாம்பீக வாழ்க்கை முறையைக் கட்டுப்படுத்த வரி விதிப்பு வழி வகுக்கும். சிகரட், மதுபானம், ஆடம்பர வாகனங்கள் என்பவற்றின் மீது வரி விதிக்கப்படுவதன் மூலம் அவற்றின் நுகர்ச்சி மட்டம் குறைக்கப்படுகின்றது. இதே சமயம் அத்தியாவசியப் பண்டங்களின் உற்பத்திக்கு வரிச் சலுகைகள் வழங்கப்படுவதன் மூலம் அவற்றின் உற்பத்தி ஊக்குவிக்கப்படுகின்றது. எனவே உற்பத்தியையும் நுகர்வையும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு ஏற்ற வகையில் கொண்டு நடாத்துவதில் இறைவரி முக்கிய இடத்தினை வகிக்கின்றது எனலாம்.

1932/33-ம் ஆண்டு காலப்பகுதிகளிலேயே இலங்கையின் இறைவரி இயங்கத் தொடங்கியது. இவ் இறைவரியை இயக்குவது இறைவரித் திணைக்களமாகும். இத் திணைக்

களம் நீண்ட காலமாக அரசாங்கத்தின் ஓர் அங்கமாகவே இயங்கி வந்தது. ஆனால் 1971-ம் ஆண்டு தொடக்கம் இதனை புனரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. அரசாங்கத்துடன் சேர்ந்து இயங்குவதன் மூலம் இத் திணைக்களம் பல்வேறு பிரச்சனைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தமையால் 1974-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தொடக்கம் இது தனித்தியங்கும் ஸ்தாபனமாக்கப்பட் டது. வரி விதித்தல், அறவிடல் போன்ற விடயங்களில் இத் திணைக்களத்திற்குப் பூரண அதிகாரம் வழங்கப்பட் டது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் புனரமைப் பின் முன்னர் ஆணையாளர் என அழைக்கப்பட்டவர் புனரமைப்பின் பின்னர் ஆணையாளர் அதிபதி என அழைக் கப்பட்டார். இவருக்கு உதவியாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர்களும், பிரதி ஆணையாளர்களும் கடைமை யாற்றுவார்கள். இவர்களது திட்டத்தினை நடைமுறைப் படுத்த உள்நாட்டு இறைவரி மதிப்பாளர்களும், வரி உத்தி யோகஸ்தர்களும் செயற்படுவர். எனவே உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஒரு சட்டத்தால் உருவாக்கப் பட்டு தனிமுதல் அதிகாரம் நிறைந்த இறமை படைத்த தனித்தியங்கும் ஸ்தாபனமாகக் காணப்படுகின்றது. இத் திணைக்களம் பல்வேறு வரி விதிப்பினை மேற்கொள்வதுடன் அரசாங்க பொருளாதாரக் கொள்கைக்கிணங்க அதில் காலத்திற்குக் காலம் பல மாற்றங்களையும் செய்து வந் துள்ளது.

### வருமான வரி:-

இலங்கையின் முதல் வருமானவரி மதிப்பாண்டாக 1932-33-ம் ஆண்டு காணப்படுகின்றது. இவ் வருமான வரி தனி நபர்கள், கம்பனிகள், நிறுவனங்கள் போன்ற பல் வேறு துறைகளிலும் விதிக்கப்படுகின்றது. வியாபாரம், விவசாயம், வர்த்தகம், உயர் தொழில், கண்ணியத் தொழில், வாடகை, இறைகள், பங்கு இலாபம், வட்டி. மூலதன ஆதாயம் போன்ற பல துறைகளிலிருந்தும் பெறப் படும் வருமானங்களுக்கு வருமானவரி அறவிடப்படுகின்றது.

இவ் வருமான வரியானது காலத்திற்குக் காலம் மாற்ற மடைந்து வந்துள்ளன. 1969/70–ம் ஆண்டு காலப்பகுதி களில் தனி நபராயின் ரூபா 2000 க்கு மேற்பட்ட வரு மானம் உடையவராயின் வரி விதிப்பிற்குட்பட்டவராகக் கருதப்பட்டார். அவர் குடும்ப அங்கத்தவராயின் மனைவிக்கு ரூபா 600–ம், முதல் இரு குழந்தைகளுக்கு ரூபா 600-ம் வரி விலக்களிக்கப்பட்டது. 1974/75-ம் ஆண்டு காலப் பகுதிகளில் உழைத்த வருமான விடுதொகையாக ரூபா 900 அறிமுகப்படுத்தப்பட்டது. 1976/77-ம் ஆண்டு காலப் பகுதிகளில் வருடாந்தம் ரூபா 9000 உழைத்த வருமான மாக அமையின் வரி விலக்களிக்கப்பட்டது. 1978/79–ம் ஆண்டுப் பகுதியில் வருமான வரி 70 சதவீதத்திற்கு அதி கரிக்கப்பட்டுள்ளது. இவ் விகிதம் தொழில் வருமானத் திற்கும் ஏனைய வருமான மூலங்களுக்கும் செல்லுபடியா கும். இவ் வருமான வரியிலிருந்தே அரசாங்கம் வருடா வருடம் பெரும் தொகை வருமானத்தினைப் பெற்றுக் கொள்கின்றது.

## செல்வ வரி :-

தேங்கிக் கிடக்கும் மூலதனங்களைத் திறமை வாய்ந்த துறைகளின்பால் செலுத்து முகமாக உருவாக்கப்பட்டதே செல்வ வரியாகும். செல்வ வரி அறவிடுவதனால் முதலீட் டாளர்கள் தமது வருமான வரியைச் செலுத்தியதன் பின்னர் செல்வ வரியைச் செலுத்தக் கூடிய வகையில் கூடிய பலன் தரக்கூடிய துறைகளின்பால் தமது கவனத் தைத் திருப்புவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் காரணமாக 1959/60-ம் ஆண்டு காலப்பகுதிகளில் செல்வ வரி அறிமுகப்படுத்தப்பட்டது. இக் காலப் பகுதிகளில் 1,00,000 ரூபாவுக்கு மேற்பட்ட செல்வமுடையோர் செல்வ வரி செலுத்த வேண்டியவர்களாக வரையறை செய்யப்பட்டனர். ½ வீதம் தொடக்கம் 2 வீதம் வரை சொத்தின் தன்மைக்கிணங்க வரி அறவிடப்பட்டது. 1979/80-ம் ஆண்டு காலப்பகுதிகளில் செல்வ வரிக்கால அளவீடு ரூபா 2,00,000 மாக மாற்றியமைக்கப்பட் டுள்ளது.

**நன்கொடை வரி :-**

நன்கொடை செலுத்துவோர் 5% தொடக்கம் 100% வரை வரி செலுத்த வேண்டுமென 1958-ம் ஆண்டு வரையறை செய்யப்பட்டது. தற்பொழுது தனிப்பட்ட நபரின் நன்கொடை வரி 5 தொடக்கம் 70 சதவீதமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. ரூபா 1000 க்கு மேற்பட்ட தனி நபர் நன்கொடை மீது 1978/79 வரை நன்கொடை வரி அறவிடப்பட்டது. 1979/80-ம் ஆண்டு காலப்பகுதிகளில் இது ரூபா 2000 ஆக மாற்றியமைக்கப்பட்டது. கம்பனிகளைப் பொறுத்த வரையில் நன்கொடை வரியானது அவை வழங்கும் நன்கொடையின் பெறுமதியின் 50 சதவீதமாக வரையறை செய்யப்பட்டது, முன்னர் 10,000 ரூபாவிற்கு மேல் வரதட்சணை கொடுப்பின் அவர் வரிவிதிப்பிற்குட்பட்டவராகக் கருதப்பட்டார். தற்பொழுது அத்தொகை ரூபா 25,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**மொத்த விற்பனவு வரி :-**

இலங்கை அரசாங்கத்தின் அரசிறையின் நெகிழ்ச்சியுடையதும், உற்பத்தித்தன்மையுடையதுமான மூலமாக விளங்குவது மொத்த விற்பனை வரியாகும். இம் மொத்த விற்பனை வரி 1963-ம் ஆண்டு 11-ம் இலக்க நிதிச் சட்டத்தினுல் உருவாக்கப்பட்டு 1964-ம் ஆண்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. வருடம் 1,00,000 ரூபாவுக்கு அதிகமான தொகைக்கு வியாபாரம் நடைபெறும் ஸ்தாபனங்களிலிருந்து இவ் வரி அறவிடப்பட்டது. அத்தியாவசியப் பொருட்களுக்கு 1 வீதம் தொடக்கம் 10 வீதம் வரையும் ஆடம்பரப் பொருட்களுக்கு 10 வீதம் தொடக்கம் 35 சதவீதம் வரையும் வரி விதிக்கப்படும். 1964-ல் ஆரம்பிக்கப்பட்ட பொழுது உற்பத்திப் பொருள், உற்பத்தியல்லாத பொருள் என வேறுபடுத்தப்பட்டு உற்பத்திப் பொருட்களுக்கு 3% மும் உற்பத்தியல்லாத பொருட்களுக்கு ½% மும் விதிக்கப்பட்டது. ஆனுல் இன்று உற்பத்திப் பொருட்களுக்கு 1–35 சதவீதம் வரையும் உற்பத்தியல்லாத பொருட்

களுக்கு 1% மும் அறவிடப்படுகின்றது. 1969-ம் ஆண்டு அக்டோபர் மாதம் விற்பனை வரி 75,000 ரூபாவாகக் குறைக்கப்பட்டது. இது 1977-ம் ஆண்டு மீண்டும் 1,00,000 ரூபாவாக மாற்றியமைக்கப்பட்டது.

**கம்பனி வரிகள் :-**

1932/33 காலப்பகுதிகளில் கம்பனி வரிகள் அறிமுகப் படுத்தப்பட்டன. கம்பனிகளுக்கான வரிவிதிப்பு 1969/70-ம் ஆண்டு காலப்பகுதிகளில் 50 சதவீதமாகக்கணிப்பிடப்பட்டது. இது 1972/73-ம் ஆண்டு காலப்பகுதிகளில் 60 சதவீதமாக உயர்த்தப்பட்டது. ரூபா 2,50,000 முதலீடுகளைக் கொண்ட கம்பனிகள் 1969/70-ம் ஆண்டு காலப்பகுதிகளில் 25 சத வீதமான வரியைச் செலுத்திய பின்னர் இது 35 சதவீத மாக மாற்றியமைக்கப்பட்டது. 1980-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் கம்பனிகளுக்கான வரியமைப்பில் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. தனியார் உற்பத்தி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் முகமாக அரசாங்கம் மேற் கொண்ட நடவடிக்கைகளில் இது முக்கிய பங்கினை வகிக் கின்றது. வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட கம்பனிகளுக்கான கம்பனி வரி 50 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாகக் குறைக்கப்பட்டது. அத்தகைய கம்பனி களின் இலாபப் பங்கீடு தொடர்பான பணம் மீளப் பெறு தல் மீது அறவிடப்பட்ட 33⅓ சதவீத வரி ஒழிக்கப்பட் டது. இக் கம்பனிகளின் பங்குடைமையை மாற்றுவதன் மூலம் பெறப்படும். மூலதனச் சம்பாத்தியங்களுக்கு வரி விலக்களிக்கப்பட்டது. இவற்றை விட மகாவலித் திட்டத் தில் நிர்மான நடவடிக்கைகளிலும், நிலத்தினைச் சுத்தி கரிக்கும் வேலைகளில் ஈடுபட்டிருக்கும் புதிய கம்பனிகள், அங்கீகரிக்கப்பட்ட சொத்துரிமை அபிவிருத்தியில் ஈடுபட் டிருக்கும் கம்பனிகள் ஆகியவற்றிற்கு வரி விலக்களிக்கப் பட்டது.

இலங்கை அரசிறையில் வரியால் பெறப்படும் வரு மானமே பெரும் பங்கினை வகிக்கின்றது. எனவே அரச நிதி நடவடிக்கைகளில் வரிமுக்கிய பங்கினைப் பெறுகின்றது.

அட்டவணை 51

## இலங்கை அரசிறை

(மில்லியன் ரூபாய்களில்)

| அரசிறைத் தலைப்புகள் | 1976 | 1977 | 1978 | | 1979 |
|---|---|---|---|---|---|
| | தொகை | தொகை | ஒப்புதல் அளிக்கப் பட்ட மதிப் பீடுகள் | தொகை (தற்கா லிகமா னது) | ஒப்புதலளிக் கப்பட்ட மதிப் பீடுகள் |
| (1) உற்பத்திச் செல வினம் மீதான வரிகள் | 3,730.8 | 4,503·7 | 8,607·6 | 9,217·2 | 8,975·8 |
| (2) கூட்டு,கூட்டில்லா நிலையங்களின் வருமானத்தின் மீதான வரிகள் | 935·5 | 936·5 | 1,076·0 | 1,102·5 | 1,152·0 |
| (3) ஏனைய வரவுகள் | 1,072·6 | 1,245·8 | 1,146·4 | 1,312·8 | 1,303·2 |
| (4) மொத்தம் | 5,738·9 | 6,686·0 | 10,830·0 | 11,632·5 | 11,431·0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 51-ல் இலங்கையின் மொத்த அரசிறையில் ஏறத்தாள 90 சதவீதம் வரி மூலமே பெறப்படுகின்றது. எனவே அரசாங்கத்தின் வருமானத்தினை நிர்ணயிப்பதில் வரி முக்கிய பங்கினை வகிக்கின்றது. இவ்வரி விதிப்புத் தொடர்பான முக்கியத்துவம் யாதெனில் காலத்திற்குக் காலம் அவை மாற்றமடைந்து செல்கின்றமையேயாகும். இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் பொருளாதாரத்தில் புதிய முயற்சிகள் ஆரம்பிக்கப்பட இருப்பதனாலும் மரபுரீதியான பாதுகாப்பான துறைகளிலிருந்து புதிய துறைகளுக்கு மூலதனங்களைக் கவர வேண்டிய அவசியம் இருப்பதனாலும் இத்தகைய பெயர்ச்சி தவிர்க்க முடியாததொன்றாகும்.

**இதுவரை கற்றவை:—**

(1) வரி விதிப்பானது அரசாங்க வருமானமாக மாத்திரமன்றி பொருளாதார அபிவிருத்தியிலும் ஆக்கபூர்வமான சக்தியாக விளங்குகின்றது.

(2) வரி விதிப்பின் நோக்கங்கள் :-

(அ) கைத்தொழிலுக்குத் தேவையான நிதியைத் திரட்டுதல்.

(ஆ) பண நிரம்பலைக் கட்டுப்படுத்தல்;

(இ) ஆடம்பரப் பொருட்களின் நுகர்ச்சியையும் உற்பத்தியையும் கட்டுப்படுத்தல்.

(ஈ) வருமான ஏற்றத்தாழ்வைச் சீராக்குதல்.

(3) 1932/33-ம் ஆண்டு காலப்பகுதியிலேயே இலங்கையின் இறை வரி தோற்றுவிக்கப்பட்டது.

(4) வருமான வரி, செல்வ வரி, நன்கொடை வரி, விற்பனை வரி, கம்பனி வரி ஆகியன இலங்கையில் விதிக்கப்படும் முக்கியத்துவம் வாய்ந்த வரிகளாகும்.

அத்தியாயம் 14

# பணமும் வங்கித் தொழில் அபிவிருத்திகளும்

ஒரு நாட்டின் பண நிரம்பல் என்பது குறிக்கப்பட்ட காலப் பகுதியில் சுழற்சியில் இருக்கும் பணத் தொகையினைக் குறிக்கும். இப் பண நிரம்பலில் ஏற்படும் மாற்றங்கள் விலை மட்டத்தைப் பாதிப்பதாகக் கருதப்படுகின்றது. இலங்கையின் பண நிரம்பல் காலத்திற்குக் காலம் மாற்றமடைந்து செல்வதுடன் அதற்கிணங்க விலைமட்டங்களும் மாற்றமடைந்து செல்கின்றன. இவ்வாறு பண நிரம்பலும் விலை மட்டங்களும் மாற்றமடைந்து செல்ல பண நிரம்பலைப் பாதிக்கும் காரணிகளே அடிப்படையாக அமைகின்றன. ஒரு நாட்டின் பண நிரம்பலில் நாணயமும், கேள்வி வைப்புக்களுமே அங்கமாக அமைகின்றது. இவற்றினைப் பாதிப்பதில் பல காரணிகள் முக்கியம் பெறுகின்றன. இலங்கையின் பண நிரம்பல் காலத்திற்குக் காலம் பல்வேறு காரணிகளால் பாதிக்கப்பட்டு வந்துள்ளது. வங்கியின் தேறிய வெளிநாட்டு இருப்புச் சொத்துக்கள், கூட்டுறவு நிறுவனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன், ஏனைய தனியார்துறை பகுதிகளுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன், கூட்டுறவு நிறுவனங்களின் தவணைச் சேமிப்பு வைப்புக்கள், ஏனைய தனியார் துறைப் பகுதியினரின் தவணைச் சேமிப்பு வைப்புக்கள், வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும், அரசாங்கக் கூட்டுத் ஸ்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன், அரசாங்கக் கூட்டுத் தாபனங்களின் தவணை சேமிப்பு வைப்புகள், வர்த்தக வங்கிகளிலுள்ள திறைசேரி உண்டியல்கள், அரசாங்க உத்தரவாதப் பிணைகள், மத்திய வங்கி வசமுள்ள திறைசேரியுண்டியல்கள், மத்திய வங்கி முற்பணங்கள் போன்ற பல்வேறு காரணிகள் இலங்கையின் பண நிரம்பலைப் பாதித்து வந்துள்ளன. அட்டவணை 52 கடந்த இரு தசாப்தங்களில் பண நிரம்பலில் ஏற்பட்ட மாற்றத்தினைக் காட்டுகின்றது.

அட்டவணை 52
பண நிரம்பல்
( மில்லியன் ரூபாய்களில் )

| காலம் | பண நிரம்பல் |
|---|---|
| 1960 | 1208·9 |
| 1965 | 1715·7 |
| 1970 | 1966·6 |
| 1975 | 3085·1 |
| 1978 | 5936·4 |

மூலம் : மத்திய வங்கி அறிக்கை

முன்னைய காலப் பகுதியிலும் பார்க்க சமீப காலப் பகுதியில் பண நிரம்பலின் அதிகரிப்பு வேகம் கூடியதொன்றாகக் காணப்படுகின்றது. 1977-ம் ஆண்டின் பின்னர் பண நிரம்பலில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பிற்கு அரசாங்கத்தின் கட்டுப்பாடற்ற பொருளாதாரக் கொள்கை ஓர் காரணமாக அமைந்துள்ளது. 1976, 77-ம் ஆண்டுகளில் முறையே 36, 29 சதவீதத்தினல் பண நிரம்பல் அதிகரித்துள்ளது. 1978-ல் பண நிரம்பல் வீழ்ச்சிப் போக்கினைக் காட்டுவதாக அமைந்துள்ளது. இவ்வாண்டில் நாணயத்தையும் பொது மக்கள் வசமுள்ள கேள்வி வைப்புக்களையும் கொண்ட பண நிரம்பல் ரூபா 5700 இலட்சத்தால் அல்லது 11 சதவீதத்தால் மாத்திரமே அதிகரித்துள்ளது. அரச துறையின் நிதித் தொழிற்பாட்டிலிருந்து ஏற்படும் சுருக்கமும் வங்கியல்லாத் தனியார் துறையின் தவணைச் சேமிப்பு வைப்புக்களில் ஏற்பட்ட மிக கணிசமான அளவு உயர்வுமே நாணய விரிவு வீத வீழ்ச்சியின் முக்கிய அடிப்படைக் காரணமாகும். எனினும் இலங்கையின் பண நிரம்பல் அதிகரிப்பு வேகம் கூடியதொன்றுகவே அமைந்துள்ளது.

## விலைகள் :-

குடி மதிப்பு புள்ளி விபரத் திணைக்களத்தினல் தயாரிக்கப்படும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணும் மத்திய வங்கியினல் தயாரிக்கப்படும் மொத்த விற்பனை விலைச் சுட்டெண் மட்டுமே இலங்கையின் பொருளாதாரத்

தில் விலை மட்டங்களில் ஏற்படும் மாற்றங்களைக் காட்டுவதற்காக வெளியிடப்படும் குறிகாட்டிகளாகும். நுகர்வோர் விலைச் சுட்டெண் என்பது விலை மட்ட மாற்றத்தின் அளவு கோலாகும். நாட்டின் பொதுவான விலை மட்டத்தை அளவிடுவதற்கு இது ஒரு கருவியாகக் கையாளப்படுகின்றது. விலைச் சுட்டெண் முன்னரிலும் பார்க்கக் கூடிக் காணப்படுமானால் நாட்டின் விலை மட்டங்கள் முன்னரிலும் பார்க்க உயர்வடைந்துள்ளது எனவும் விலைச் சுட்டெண் முன்னரிலும் பார்க்க குறைவடைந்து காணப்படுமாயின் விலை மட்டங்கள் குறைவடைந்துள்ளது என்பதும் பொருளாகும். பொதுவாக ஓர் அடியாண்டு விலைமட்டங்களை வைத்துக் கொண்டு இன்னொரு ஆண்டின் விலைமட்டத்தை ஒப்பீடு செய்து பார்த்தலே இதன் நோக்கமாகும். பின்வரும் கொழும்பு நுகர்வோர் குறிகாட்டி விலைச் சுட்டெண் மூலம் இதனை அறியலாம்.

அட்டவணை 53

**வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் கொழும்பு நகரம்**

(1952 = 100)

| ஆண்டு | எல்லா விடயங்களும் | பண்ட வகைப்படி | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | உணவு | உடை | எரி பொருள் | வாடகை | பலவகைப் பொருள் |
| 1957 | 102·8 | 104·9 | 84·4 | 97·3 | 101·5 | 106·9 |
| 1958 | 105·0 | 105·8 | 87·5 | 101·0 | 101·5 | 113·1 |
| 1959 | 105·2 | 104·7 | 92·1 | 102·4 | 101·5 | 115·3 |
| 1960 | 103·5 | 100·8 | 95·1 | 102·7 | 101·5 | 117·5 |
| 1961 | 104·8 | 99·8 | 103·9 | 104·4 | 101·5 | 122·8 |
| 1962 | 106·3 | 100·9 | 108·2 | 105·6 | 101·5 | 124·9 |
| 1963 | 108·8 | 103·0 | 118·2 | 103·0 | 101·5 | 126·6 |
| 1964 | 112·2 | 106·4 | 127·2 | 103·2 | 101·5 | 129·3 |
| 1965 | 112·5 | 107·3 | 126·8 | 100·7 | 101·5 | 128·3 |
| 1966 | 112·3 | 109·1 | 117·0 | 95·9 | 101·5 | 127·3 |
| 1967 | 114·8 | 112·7 | 116·7 | 96·5 | 101·5 | 128·9 |
| 1968 | 121·5 | 121·2 | 120·1 | 103·2 | 101·5 | 133·6 |
| 1969 | 130·5 | 127·9 | 130·9 | 124·9 | 108·4 | 147·1 |
| 1970 | 138·2 | 136·6 | 137·3 | 136·1 | 109·8 | 153·2 |
| 1971 | 141·9 | 139·1 | 145·0 | 140·8 | 109·8 | 159·5 |
| 1972 | 150·8 | 147.5 | 163·0 | 145·9 | 109·8 | 169·4 |
| 1973 | 165·4 | 164·8 | 186·1 | 164·4 | 109·8 | 170·0 |
| 1974 | 185·8 | 189·7 | 204·6 | 221·0 | 109·8 | 178·3 |
| 1975 | 198·3 | 204·3 | 208·2 | 237·1 | 109·8 | 191·9 |
| 1976 | 200·7 | 202·1 | 211·7 | 265·2 | 109·8 | 203·8 |
| 1977 | 203·2 | 203·3 | 223·8 | 257·5 | 109·8 | 208·4 |
| 1978 | 227·8 | 237·5 | 226·2 | 262·1 | 109·8 | 224·8 |

மூலம்: குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை நோக்கும் பொழுது விலைமட்டங்கள் கடந்த 20 ஆண்டு காலப் பகுதிகளில் ஏறத்தாள 125 சதவீதம் அதிகரித்துள்ளதைக் காணலாம். இவ் அதிகரிப்பிற்கு பண நிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு ஓர் காரணமாகக் காட்டப்படுகின்றது: 1978-ல் பொருளாதாரத்தில் பண வீக்கத்தின் வீதம் 16 சதவீத மாகும். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது குறைவான தொன்றெனக் கருதப்படுகிறது. காரணம் பண நிரம்பலின் அதிகரிப்பில் ஏற்பட்ட வீழ்ச்சியேயாகும். இவ்வாறுன நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டே இலங்கையின் முழுவகையான வாழ்க்கைச் செலவும் கணிக்கப்படுகிறது. பொதுவாக நுகர்வோர் வாழ்க்கைச் செலவினை அளவிடுவதற்கு மூலமாக அமைந்த ஒரே குறிகாட்டியாக கொழும்பு நுகர்வோர் குறிகாட்டி அமைகின்றது. ஆனுல் இது ஒரு திருப்தியற்ற குறிகாட்டியாகக் கருதப்படுகின்றது. இச் சுட்டெண்ணனது எமது வாழ்க்கைச் செலவினை மதிப்பீடு செய்வதற்குத் தகுதியான்தா என்பதில் கருத்து வேறுபாடு உண்டு. அத்துடன் உண்மையான விலை மட்ட உயர்வையும் இச் சுட்டெண்ணின் மூலம் கண்டுகொள்ள இயலாது.

**வங்கித் தொழில் .-**

அபிவிருத்தியடைந்த நாடுகளோடு ஒப்பிடும் பொழுது இலங்கையின் வங்கித் தொழில்கள் அபிவிருத்தி படி முறையிலேயே காணப்படுகின்றது. மத்திய வங்கியினதும், வணிக வங்கிகளினதும் நடவடிக்கைகள் பெருமளவு வளர்ச்சியடையவில்லை. இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தில் வங்கித் தொழில் நடவடிக்கைகள் இன்றியமையாத தொன்ருகும். மக்களின் பொருளாதார வாழ்க்கைக்குப் பணமே அத்திவாரமாகும். அத்தியாவசிய தேவை கருதியும், பாதுகாப்புத் தேவை கருதியும், உத்தேசத் தேவை கருதியும் பணத்திற்குக் கேள்வி எழுப்பப்படுகின்றது. இப் பண வெளியீட்டினை நிர்ணயிப்பது மத்திய வங்கியும், வணிக வங்கிகளுமே பண வெளியீட்

டில் ஏற்படும் மாற்றங்களும் வட்டி வீத மாற்றங்களும் ஒரு நாட்டின் பொருளாதாரத்தைப் பெருமளவில் பாதிக் கலாம். எனவே பொருளாதார நோக்கங்களை அடைவ தற்குப் பயன்படுத்தப்படும் பணத்தின் பெறுமதி உறுதி யாகப் பேணப்பட வேண்டியது அவசியமாகும். இலங்கை அரசாங்கத்தின் பணக் கொள்கையை நடைமுறைப்படுத் தும் நிருவகமாக மத்திய வங்கி அமைந்துள்ளது.

**மத்திய வங்கி :-**

ஒரு நாட்டின் மத்திய வங்கியின் நோக்கமும் தொழிற் பாடும் இயங்கும் நாட்டின் பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்ப மாறுபடவேண்டியது அவசியமாகும். இவ்வகையில் பொருளாதாரத்தில் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மத்திய வங்கியானது பொருளாதார உறுதியைப் பாது காப்பதுடன் பொருளாதார வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டு செயற்பட வேண்டியது அவசியமாகும். இலங்கை யின் மத்திய வங்கி 1949-ம் ஆண்டு திரு. ஜோன் எக்ஸ்டர் (**John Exter**) இன் ஆலோசனையின் அடிப்படையில் ஸ்தா பிக்கப்பட்டது. இது வரை இயங்கி வந்த நாணய சபை யின் இலாபமாகிய 15 கோடி ரூபாய் மத்திய வங்கியின் ஆரம்ப முதலாக்கப்பட்டது. இதன் அதிகாரம் ஆட்சியா ளர், திறைசேரி உதவிக் காரியதரிசி, பிரதமரால் நியமனம் பெற்ற ஒரு நியமன அங்கத்தவர் ஆகியோர் கையில் ஒப் படைக்கப்பட்டது. இலங்கையின் மத்திய வங்கியின் நோக்கங்கள் மரபு ரீதியான மத்திய வங்கியின் நோக்கங் களிலிருந்து வேறுபட்டதொன்றாக அமைந்துள்ளது.

(1) உள்நாட்டு நாணயத்தின் பெறுமதியை உறுதியாகப் பாதுகாத்தல். பண வீக்கமோ, பணச் சுருக்கமோ ஏற்படாமல் விலை மட்டங்களை நிலையாக வைத் திருத்தலை இது குறிக்கும்.

(2) உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டுப் பெறு மதியை நிலையாகப் பாதுகாத்தல், இதன் மூலம்

நடைமுறைச் சர்வதேசக் கொடுக்கல் வாங்கல் களில் ரூபாவை கட்டுப்பாடற்ற முறையில் பயன் படுத்த வழி வகுத்தல்.

(3) நாட்டின் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்யுமுகமாக உற்பத்தி, உழைப்பு, மெய் வரு மானம் என்பனவற்றினை ஊக்குவித்தல்.

(4) நாட்டில் நிலவும் வேலையற்றோர் பிரச்சனையை நீக்குமுகமாக நிறை தொழில் மட்டத்தை உரு வாக்குதல்.

இவ்வாறான நோக்கங்களை நிறைவேற்றும் முகமாக இலங்கையின் மத்திய வங்கி பல்வேறு வகையான நட வடிக்கைகளில் ஈடுபடுகின்றது. மத்திய வங்கியின் இந் நோக்கங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாகக் காணப்படுகின்றன. முதல் இரு நோக்கங்கள் பொருளா தார உறுதியையும் ஏனைய இரு நோக்கங்கள் பொருளா தார வளர்ச்சியையும் அடிப்படையாகக் கொண்டவை. இலங்கையின் மத்திய வங்கி பொருளாதார உறுதியிலும் பார்க்கப் பொருளாதார வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது.

அரசாங்கக் கணக்குகளை வைத்திருத்தல், தேசிய கடனை நிர்வகித்தல், அரசுக்குக் கடன்களை வழங்குதல், அரசின் சார்பாக நாணயத்தை வெளியீடு செய்தல் ஆகிய தொழிற்பாடுகள் மூலம் அரசாங்க வங்கியாகக் கடமை யாற்றி பொருளியல் அபிவிருத்திக்கு வழி வகுக்கின்றது. இலங்கையின் வர்த்தக வங்கிகள் மேலதிக திரவத் தன்மை காரணமாக அளவிற்கு மீறி வழங்கும் கடன்களைக் கட்டுப் படுத்த வங்கி வீதம், பகிரங்க சந்தை நடவடிக்கை, எல்லை ஒதுக்கு வீதம் என்பன போன்ற மரபுக் கட்டுப்பாடுகளை யும் இழிவு ஒதுக்கு வீதம், சொத்து முதல் வீதம், தொழில் அடைப்புக்கள், கடன் நசுக்கல் திட்டங்கள் போன்ற பண்புக் கட்டுப்பாடுகளையும் கையாளுகின்றது. அத்துடன்

வர்த்தக வங்கியின் தேவைக்கேற்ப கடன்களை வழங்குவதோடு வர்த்தக வங்கிகள் வழங்கும் விவசாயக் கடன்களுக்கு உத்தரவாதம் அளித்து விவசாய உற்பத்திக்கு உதவி புரிகின்றது. உத்தரவாத விலைத்திட்டக் கொள்வனவிற்கும் உள்ளூரில் பயிரிடப்பட்ட விவசாயப் பொருட்களின் கொள்வனவு களஞ்சியப்படுத்தல் என்பனவற்றிற்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் வழங்குவதற்காக மத்திய வங்கி 3 வீத வட்டிக்கு வணிக வங்கிகளுக்குக் கடன் வழங்குகின்றது. வணிக வங்கிகள் வழங்கும் கடன்களுக்கு வங்கி உத்தரவாதம் அளிக்கின்றது. விவசாயப் பயிர்களுக்கு வணிக வங்கிகள் வழங்கும் கடன்கள் திருப்பிச் செலுத்தப்படாத நிலையில் 75 வீதத்தினை அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கி ஈடு செய்கின்றது. வணிக வங்கிகளின் இறுதிக் கடன் ஈய்வோனுகவும், வங்கித் தீர்வகமாகவும் மத்திய வங்கி தொழிற்படுகின்றது. இலங்கையின் மத்திய வங்கி வணிக வங்கிகளின் உண்டியல்களை மையமாகக் கொண்டு குறுங்காலக் கடன்களை 10 சதவீத வட்டிக்கு வணிக வங்கிகளுக்கு வழங்குகின்றது. 1977-ம் ஆண்டு ஜனவரியில் 6½ சதவீதமாக இருந்த இலங்கை மத்திய வங்கியின் வட்டி வீதம் பின்னர் 8½ சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டு அதன் பின்னர் 10 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளமை வட்டி வீதத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்கதோர் மாற்றமாகும்.

வணிக வங்கிகளுக்கு மாத்திரமன்றி ஏனைய பல கடன் நிறுவனங்களுக்கும் கடன் வழங்கி உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கவும் மத்திய வங்கி பல நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. தன் மேற்பார்வையின் கீழ் பல கடன் ஸ்தாபனங்களை நிறுவி விவசாயம், கைத்தொழில், பெருந்தோட்டத் துறைகள் என்பவற்றிற்கு மறைமுகமாக உதவுகிறது. வேளாண்மையை ஊக்குவித்தல் அல்லது அபிவிருத்தி செய்வதற்கு ஆண்டுக்கு 6½ சதவீத வட்டியிலும் வேளாண்மையற்ற நோக்கங்களுக்கு ஆண்டுக்கு 7½ சதவீத வட்டியிலும் நடுத்தர நீண்ட தவணைக் கொடுகடன்களைக்

கொடுகடன் நிறுவனங்களுக்கு மத்திய வங்கி வளங்குகின்றது. இவ்வாறுபல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலம் இலங்கையின் பொருளியல் சூழ்நிலைக்கு இணங்க மத்திய வங்கி இயங்கி வருகின்றது.

**வணிக வங்கிகள் :-**

இலங்கையின் வணிக வங்கிகள் காலத்திற்குக் காலம் விரிவடைந்து செல்கின்றன. வணிக வங்கிகளுள் இலங்கை வங்கி, மக்கள் வங்கி ஆகியன முக்கிய இடத்தினை வகிக்கின்றன. இலங்கை வங்கி 1939-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1978-ம் ஆண்டு இறுதியில் இலங்கை வங்கிக் கிளை அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை 90 ஆகும். இவ் வங்கியால் ஆரம்பிக்கப்பட்ட புதிய வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள் 190 ஆகக் காணப்படுகின்றது. எனவே 1978-ம் ஆண்டு இறுதியில் இலங்கை வங்கிக் கிளை அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை 280 ஆகும். மக்கள் வங்கி 1961-ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது. கிராமிய விவசாயத் துறையை விஸ்தரிக்கும் முகமாகத் தோற்றுவிக்கப்பட்ட இவ் வங்கி இன்று 216 கிளைகளையும், 544 கூட்டுறவுக் கிராமிய வங்கிகளையும், 4 கடற்றொழில் வங்கிகளையும் உள்ளடக்கியனவாகக் காணப்படுகின்றன. இலங்கையின் வணிக வங்கிகளின் வளர்ச்சி வங்கித் தொழில் அமைப்பின் விரிவாக்கத்தினை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

வணிக வங்கிகள் நடைமுறைக் கணக்குகள், நிலையான வைப்புக்கள், சேமிப்புக் கணக்குகள், பிரத்தியேகமான முதலீட்டுச் சேமிப்புக் கணக்குகள் என்பவற்றை உள்ளடக்கிய பல்வேறுபட்ட வங்கிச் சேவைகளை ஆற்றுவதுடன் பல வகையான கடன் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றன. நெல், தேயிலை, இறப்பர், தென்னை, கறுவா, புகையிலை, உப உணவுப் பயிர்கள் போன்றவற்றின் உற்பத்திக்குப் பயிர்ச் செய்கைக் கடன்களை வழங்குகின்றன. பொதுத் துறை, தனியார் துறை நிறுவனங்களினதும், கூட்டுத்

ஸ்தாபனங்களினதும் கைத்தொழில் இயந்திரங்களுக்கு நிதி வழங்குகின்றன. ஏற்றுமதி இறக்குமதி வசதிகள், ஆவண மிடல், சந்தைத் தகவல் போன்ற உதவிகளை வழங்குகின் றன. வெளிநாடுகளில் வாழும் இலங்கையருக்கான வெளி நாட்டுச் செலாவணிக் கணக்குகள் வணிக வங்கிகளால் அறிமுகப்படுத்தப்பட்டன. சிறு வியாபாரிகளுக்கான தின சரிக் கடன் திட்டம், கடற்றொழிலாளர், தச்சுத் தொழி லாளர்களுக்கான விஷேட கடன்கள், கிராமிய மின்மய மாக்கலுக்கு நிதி வசதி, உயர் கல்விக் கலைகள், கைவினைத் திறன் போன்றவற்றிற்கு உதவி வழங்குதல், கைத்தறி மின்தறிக் கைத்தொழிலுக்கான நிதி வசதி, உள்நாட்டுத் திரைப்படக் கைத்தொழிலுக்கான கடன்கள், பொதுத் துறை வங்கி ஊழியர்களின் வீடமைப்புத் திட்டங்களுக்கு நிதி வசதி, அடகு எடுத்தல் போன்ற பல்வேறு நடவடிக் கைகளிலும் வணிக வங்கிகள் ஈடுபட்டு வருகின்றன.

அட்டவணை 54

**வர்த்தக வங்கிகளின் மூலவளங்களிலும் அவற்றின் பயன்பாட்டிலும் ஏற்பட்ட மாற்றங்கள்**

( பத்து இலட்சம் ரூபாய்களில் )

| | 1975 / இறுதி 1976/இறுதி | 1976/இறுதி 1977/இறுதி | 1977/இறுதி 1978/இறுதி |
|---|---|---|---|
| (1) அரசு | — 104·9 | 25·6 | 220·8 |
| (2) மத்திய வங்கி | — 251·2 | 197·6 | 126·1 |
| (3) அரச கூட்டுத் ஸ்தாபனங்கள் | 182·8 | — 197·3 | — 282·0 |
| (4) கூட்டுறவு நிறுவனங்கள் | — 27·7 | — 474·9 | — 451·8 |
| (5) ஏனைய தனியார்துறை | 332·2 | 546·1 | — 350·5 |
| (6) வங்கிகளுக் கிடை யிலானவை | 34·3 | 541·0 | 722·3 |
| (7) வெளிநாட்டுத்துறை | —165·0 | — 637·7 | 15·0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வணிக வங்கிகளின் மூலவளங்களில் அண்மைக் காலங் களில் அதிகரிப்பு ஏற்பட்டு வருகின்றமை அவற்றின்

வளர்ச்சியைக் காட்டுகின்றன. 1976-ல் 24 சதவீதத்தாலும் 1977-ல் 56 சதவீதத்தாலும் 1978-ல் 35 சதவீதத்தினலும் மூலவளங்கள் வளர்ச்சியடைந்துள்ளது. வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பே இவ் வளர்ச்சிக்குரிய மூலகாரணியாகும்.

வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பில் தவணை சேமிப்பு வைப்புக்கள் முக்கிய பங்கினைக் கொண்டிருந்தன. 1977-ன் வட்டி வீதத் திருத்தத்தினைத் தொடர்ந்து வங்கித் தொழில் முறையும் தவணை சேமிப்பு வைப்புக்கள் பெருமளவு அதிகரித்துள்ளன. மூலவளங்களின் வளர்ச்சிக்கு மூலவளச் செயற்கை செலுத்தப்பட்ட மூலதன ஒதுக்கு நிதியங்கள், பகிரப்படாத இலாபங்கள், வங்கிகளுக்கிடையிலான கடன்பாடுகள், வெளிநாட்டுக் கடன்பாடுகள், ஏனைய பொறுப்புக்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புகளும் ஒரு காரணமாகும். இவற்றின் காரணமாக 1978-ல் ரூபா 35,850 இலட்சத்தால் வர்த்தக வங்கிகளின் மூலவளங்கள் அதிகரித்தன. இவ் அதிகரிக்கப்பட்ட மூலவளங்கள் புதிய பொருளாதாரக் கொள்கைக்கிணங்கப் பயன்படுத்தப்பட்டது. இவ்வாருன வணிக வங்கிகளின் நடவடிக்கை மேலும் விரிவடையும் நிலையில் தான் இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு அவை ஊன்றுகோலாக அமைய முடியும்.

## தேசிய சேமிப்பு வங்கி :-

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு சேமிப்பே அடிப்படையாகும். சேமிப்பின் அதிகரிப்பு முதலீட்டைக் கூட்டி உற்பத்தியாக்கத்திற்கு வழி கோலுகின்றது. இலங்கையில் அமைக்கப்பட்ட நிதி நிறுவனங்களில் பொருளியல் அபிவிருத்தித் துறையில் நேரடியாகப் பங்கு கொள்ளும் நிறுவனங்களில் தேசிய சேமிப்பு வங்கியும் முக்கியத்துவம் வாய்ந்ததொன்ருகும். 1971-ம் ஆண்டு நிறுவப்பட்ட இத் தேசிய சேமிப்பு வங்கி படிப்படியாக முன்னேறி 1972-ம் ஆண்டு 100 கோடி ரூபாவையும் 1974-ம் ஆண்டில் 150

கோடி ரூபாவையும் 1976–ம் ஆண்டில் 200 கோடி ரூபாவையும் வைப்புக்களாக ஏற்றது. சேமிப்பு விகிதாசார வளர்ச்சி பொருளாதார ரீதியில் ஓர் அடிப்படை மாற்றத்தை உருவாக்குவதில் முக்கியத்துவம் பெறுகின்றது. இலங்கையின் தேசிய சேமிப்பு வங்கி உயர்ந்த வட்டி வீதங்களை அறிமுகப்படுத்தி வைப்பாளரின் மத்தியில் கவர்ச்சியை உருவாக்கி முதலீட்டுக்குத் தேவையான சேமிப்பினை உருவாக்குகின்றது. நீண்ட காலமாக இச் சேமிப்பு வங்கி சேமிப்பு வைப்புக்களுக்கான வட்டி வீதத்தை 7·2 ஆகவே வைத்திருந்தது. 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இவ் வட்டி வீதம் 8·4 ஆக அதிகரிக்கப்பட்டது. முதிர்வுக் காலத்தையும், வைப்பு வகைகளையும் பொறுத்து நிலையான வைப்பு வட்டி வீதங்கள் பல்வேறு அளவுகளில் அதிகரிக்கப்பட்டன. 6 மாத கால வைப்புக்கு 12% மாகவும், 12 மாத கால வைப்புக்கு 15% மாகவும், 18 மாத கால வைப்புக்கு 18% மாகவும் இவையமைந்தன. இம் மாற்றத்திற்கு முன்னர் கடந்த 6 வருட காலத்தில் நிலையான வைப்புக்கான வட்டி வீதம் தொடர்ந்தும் 7·5% மாகவே இருந்து வந்துள்ளது. 1978-ம் ஆண்டு ஜூலை மாதம் தேசிய சேமிப்பு வங்கியில் இருந்து வந்த வசதிகளில் சில சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஓராண்டு தவணை வைப்புக்கள் மீது 14·4 சதவீத மாதாந்த வட்டிக் கொடுப்பனவையும் 18 மாத கால தவணை வைப்புக்கள் மீது 16·8 சதவீத மாதாந்த வட்டிக் கொடுப்பனவையும் தேசிய சேமிப்பு வங்கி அறிமுகப்படுத்தியது.

சேமிப்பு வைப்புக்களுக்கு மிக உயர்ந்த வட்டியை வழங்குவது மாத்திரமன்றி 75,00,000 க்கும் மேற்பட்ட வைப்பாளர்களைக் கொண்டு இது செயற்படுகின்றது. 1978-ல் 27 கிளைகளின் மூலமும், 1000-க் கணக்கான அஞ்சல் அலுவலகங்கள், உப அஞ்சல் அலுவலகங்கள் மூலமும் இதன் சேமிப்பைத் திரட்டி வருகின்றது. இலங்கையின் தேசிய சேமிப்பு வங்கியின் தோற்றம் பதுக்கப்பட்டிருந்த பல கோடி ரூபாய்களை உற்பத்திக்குப் பயன்படத்தக்க வகையில் வெளியேகொண்டு வர வழி வகுத்த தெனலாம்.

**வட்டி வீதங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் :-**

இலங்கையில் துரிதமாக அதிகரித்து வரும் பண நிரம் பலைத் தடுப்பதற்கும், பண வீக்கத்தினைக் கட்டுப்படுத்து வதற்கும் பாரிய நடவடிக்கை ஒன்றினை மேற்கொள்ள வேண்டியது அவசியமாயிற்று. இந் நடவடிக்கைகளின் முக்கிய அம்சமாக 1977-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வட்டி வீதங்கள் மாற்றியமைக்கப்பட்டன. மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்கு வழங்கும் கடன்களுக்கான வட்டி வீதத்தை 8·5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக அதிகரித்தது. இவ் அதிகரிப்பினைத் தொடர்ந்து வர்த்தக வங்கிகளும் ஏனைய நிதி நிறுவனங்களும் தம் வைப்புக்களுக்கான வட்டி வீதங் களையும், கொடுகடன்களுக்கான வட்டி வீதங்களையும் அதிகரித்தன.

இம் மாற்றத்திற்கு முன்னர் 1975-ம் ஆண்டு ஏப்பிர லில் இருந்து ஆகக் குறைந்த வட்டி வீதம் 6 ஆகவும் ஆகக் கூடியது 7·5 சதவீதமாகவும் இருந்து வந்தது. வர்த் தக வங்கிகள் தம் வட்டி வீதங்களை மிகக் குறைந்தளவு 8·5 சதவீதமாகவும், கூடியளவு 15 சதவீதமாகவும் நிர்ண யித்தன. வர்த்தக வங்கிகள் கடன்களுக்கான வட்டி வீதத்தை 6·5 சதவீதத்திலிருந்து 12 சதவீதமாகவும் அதிக பற்றுக்களுக்கான வட்டி வீதத்தை 14 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகவும் அதிகரித்தன. பிணையையும் முதிர்வு காலத்தையும் பொறுத்து வட்டி வீதங்கள் மாறுபடும். தேசிய சேமிப்பு வங்கி சேமிப்பு வைப்புக்களுக்கான வட்டி வீதத்தை 7·2 சதவீதத்திலிருந்து 8·4 சதவீதமாக அதிகரித் தது. 6 மாதகால நிலையான வைப்புக்கு 12 சதவீதத்தினை யும், 12 மாதகால நிலையான வைப்பிற்கு 15 சதவீதத்தினை யும், 18 மாத கால நிலையான வைப்புக்கு 18 சதவீதத்தினை யும் அறிமுகப்படுத்தியது. தேசிய சேமிப்பு வங்கி முன்னர் நிலையான வைப்புக்கு 7·5 சதவீத வட்டியையே வழங்கி வந்தது. இவற்றைத் தொடர்ந்து வங்கிகளல்லாத ஏனைய நிதி நிறுவனங்களும் தமது வட்டி வீத அதிகரிப்புக்களை அறிவித்தன. சராசரியாக மூன்று மாத அறிவிப்பின் பின் னர் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடிய தவணை வைப்புக்

களுக்கான வட்டி வீதம் 9 சதவீதமாக அதிகரிக்கப்பட்டது. ஏனைய தவணை வைப்புக்களுக்கான வட்டி வீதங்கள் முதிர் வுக் காலத்தைப் பொறுத்து 11 — 24 சதவீதங்கள் வரை காணப்பட்டன.

இலங்கையின் வட்டிவீத அமைப்பு மாற்றியமைக்கப் பட பல காரணங்கள், அடிப்படையாக அமைகின்றன. இலங்கை போன்ற வளர்முக நாடொன்றின் பொருளா தார வளர்ச்சிக்குத் தொடர்ந்து நிலவி வந்த குறைந்த உள்நாட்டுச் சேமிப்பு அளவுகள் பெரும் தடைகளாக இருந்து வந்துள்ளன. இச் சேமிப்பு அளவுகளில் ஏற்படும் அதிகரிப்பானது மிகப் பிரதானமான பொருளாதார அபிவிருத்திக்கு உபாயமொன்ருகக் கருதப்படுகின்றது. சேமிப்பினை நிர்ணயிப்பதில் வட்டி வீதங்களே முக்கிய பங்கினை வகிக்கின்றது. எனவே வட்டி வீத உயர்வானது கூடிய சேமிப்புக்களுக்கான தூண்டுதலை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒழுங்கமைக்கப்பட்ட பணச் சந்தையிலும், ஒழுங்க மைக்கப்படாத பணச் சந்தையிலும் நிலவி வந்த வட்டி வீதங்களுக்கு இடையிலான இடைவெளியைக் குறைப் பதன் பொருட்டு ஒழுங்கமைக்கப்பட்ட பணச் சந்தையின் வட்டி வீதங்களை அதிகரித்தல் அத்தியாவசியமாக இருந் தது. வங்கிகளும் ஏனைய நிதி நிறுவனங்களும் ஒழுங்கமைக் கப்பட்ட பணச் சந்தையாகும். நண்பர், உறவினர், கடன் கொடுப்போர் ஆகியோரை உள்ளடக்கியதே ஒழுங்கமைக் கப்படாத பணச் சந்தையாகும். ஒழுங்கமைக்கப்பட்ட பணச் சந்தையில் வட்டி 7 சதவீதமளவில் காணப்பட ஒழுங்கமைக்கப்படாத பணச் சந்தையில் அவை 175 வரை காணப்பட்டன. இதன் காரணமாக ஒழுங்கமைக்கப்பட்ட பணச் சந்தை பெருமளவில் வளர்ச்சியடையவில்லை. இவ் இரு சந்தைகளிலும் நிலவிய வட்டி வீத வித்தியாசம் நாட்டின் முழுப் பொருளாதாரத்தினதும் வட்டி வீத அமைப்பில் திரிபுகளை ஏற்படுத்தியது. நிறுவன ரீதியற்ற கடன் வழங்குவோர் முதலீட்டை அடிப்படையாகக்

கொள்ளாது சொந்த இலாபத்தை அடிப்படையாகக் கொண்டே செயற்படுவர். இக்குறைபாட்டை நீக்க நிறுவன ரீதியான சேமிப்புக்களுக்கான வட்டி வீதங்களை அதிகரித்தல் அவசியமாயிற்று.

ஒழுங்கமைக்கப்பட்ட பணச் சந்தையிலும் கூட பல் வேறு வர்த்தக வங்கிகளுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் இடையே வேறுபட்ட வட்டி வீதங்கள் இருந்து வந்தன. உதாரணமாக 24 மாத கால நிலையான வைப்பொன்றிற்கு வர்த்தக வங்கிகள் 7 சதவீத வருட வட்டி வழங்கிய பொழுது இதே வைப்பிற்கு நிதி நிறுவனங்கள் 12 சதவீத வட்டியை வழங்கின. வர்த்தக வங்கிகளினதும் தேசிய சேமிப்பு வங்கிகளினதும் அதிகரித்த வட்டி வீதங்கள் நிதி நிறுவனங்களை நோக்கிச் சென்ற சேமிப்புக்களை ஓரளவு கட்டுப்படுத்தக் கூடியனவாக இருந்தது.

1977-ம் ஆண்டு வட்டி வீதச் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அபிவிருத்தி நிறுவனத் தொகையினுல் திரட்டப்பட்ட வைப்புக்களின் வீதத்தில் மிகப் பெரிய அதிகரிப்பை ஏற்படுத்தியது. வட்டி வீத அதிகரிப்பு அறிவிக்கப்பட்ட முதல் 6 வாரங்களில் தேசிய சேமிப்பு வங்கியின் நிலையான வைப்புக்கள் 28·9 கோடி ரூபாவால் அதிகரித்தன. 1977–ம் ஆண்டு டிசம்பருடன் முடிவடைந்த 4 மாத காலப் பகுதியில் வர்த்தக வங்கிகளுடனுன வங்கியல்லா தனியார் துறையின் மொத்தத் தவணை சேமிப்பு வைப்புக்கள் ரூபா 5130 இலட்சத்தால் அதிகரித்தன. 1978-ன் முடிவில் மொத்தச் சேகரிப்பு 15,720 இலட்சம் ரூபாய்களாகும். எனவே வட்டி வீதத்தில் ஏற்பட்ட உயர்வின் முக்கிய விளைவு யாதெனில் சேமிப்பு அதிகரிப்பேயாகும்.

**இதுவரை கற்றவை :–**

(1) இலங்கையின் பண நிரம்பல் கடந்த சில ஆண்டுகளாக வேகமாக அதிகரித்துச் செல்கின்றன. இவ் அதிகரிப்பானது விலை மட்ட அதிகரிப்பிற்கு வழி வகுத்துள்ளது.

(2) கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் விலை மட்டங்கள் கடந்த 20 ஆண்டு காலப்பகுதிகளில் சராசரி 6 சதவீதத் தினால் அதிகரித்துச் சென்றுள்ளதைக் காட்டுகின்றது.

(3) கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் உண்மையான வாழ்க்கைச் செலவினை மதிப்பிடுவதற்குத் தகுதியான ஒரு குறிகாட்டியல்ல.

(4) இலங்கையின் மத்திய வங்கி பொருளாதார உறுதியினும் பார்க்கப் பொருளாதார வளர்ச்சியைக் கொண்டு செயற்படுகின்றது.

(5) வணிக வங்கிகளின் வளர்ச்சியிலும் வட்டி வீதத்திலும் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இவை நிறுவன ரீதியான பணச் சந்தையின் வளர்ச்சியினைப் பிரதிபலிக்கின்றது.

---

அத்தியாயம் 15

# குடித்தொகையும் குறைவிருத்தியும்

உலக குடித்தொகையின் ⅔ பங்கு குறை விருத்தி நாடுகளான மூன்றும் மண்டல நாடுகளில் காணப்படுகின்றன. இக் குடிப்பெருக்க அதிகரிப்பின் மீதான கவனமும் அக் குடிப்பெருக்கத்தினைத் தாங்கிக் கொள்வதற்கான உலக வளங்கள் அருகி வருகின்றமையும் இலங்கையுட்பட மூன்றும் மண்டல நாடுகளில் ஒரு பிரச்சனையைக் கிளப்பியுள்ளது. இலங்கையின் குடித்தொகை இன்று நாளொன்றுக்கு ஏறத்தாள 750 ஆல் அதிகரித்துச் செல்கின்றது: எனவே குறைவிருத்திப் போக்கினைக் கொண்ட இலங்கையின் பொருளாதாரத்தில் குடித்தொகை வளச்சியானது அதி முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனையாக அமைகின்றது. அபிவிருத்தியடைந்து வரும் இலங்கையின் பொருளாதார சமூக வளர்ச்சி முன்னேற்றத்திற்கு வேறு எந்தப் பிரச்சனையும் பெரியதொரு மிரட்டல் அல்ல. அளவிடற்கரிய குடிப்பெருக்கத் தாக்கத்தின் கசப்பான இறுதி விளைவுகளாய் இருப்பவை, அமைதியின்மை, அரசியல் கொந்தளிப்பு, தீவிரவாதத்திற்கு இட்டுச் செல்லும் இயல்புக்கு மாறுன எழுச்சி ஆகியவையேயாகும். எனவே இலங்கையின் பொருளாதார ஆய்வில் குடித்தொகை பற்றிய ஆய்வு இன்[illegible]யமையாத தொன்றுகக் காணப்படுகின்றது.

இலங்கையின் குடித்தொகைக் கணிப்பீடுகள் மு[illegible] முதலாக 1871-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. [illegible] வாண்டில் இலங்கையின் குடித்தொகை 2·4 மில்லிய[illegible] இன்று இலங்கையின் குடித்தொகை 15 மில்லியனை [illegible] விட்டது: 1978-ம் ஆண்டு நடுப்பகுதியில் மேற்கொ[illegible] பட்ட குடித்தொகைக் கணிப்பீட்டின்படி 14·2 மில்லி[illegible]ன மக்கள் இந்நாட்டில் வாழ்வதாக கணிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் குடித்தொகை வருடமொன்றிற்குச் சராசரியாக 1·8 சதவீதத்திஞல் அதிகரித்துச் சென்றுள்ளது.

அபிவிருத்தியடைந்த நாடுகளின் சராசரி வளர்ச்சி வீதத்தோடு ஒப்பிடும் பொழுது இது வேகம் கூடியதொன்ருகக் காணப்படுகின்றது.

அட்டவணை 55

**உலகக் குடிப்பெருக்கம் பற்றிய குறிப்பு விபரம் – 1973**

| | |
|---|---|
| இலங்கை | 1.8 |
| சோவியத் ருஷ்யா | 1.0 |
| ரூமேனியா | 1.0 |
| ஹங்கேரி | 0.1 |
| செக்கோஸ்லோவாகியா | 0.5 |
| சீன | 1.7 |

மூலம்: பொருளியல் நோக்கு

இலங்கையின் குடித்தொகை வளர்ச்சி வீதம் சமீப காலங்களில் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைப் பதிவு செய்திருப்பினும் இயற்கையாக அதிகரித்துச் செல்லும் போக்கினையே காட்டுகின்றது. இதன் காரணமாகக் கடந்த 100 ஆண்டுகளில் இலங்கையின் குடித்தொகை 12 மில்லியனுக்கும் மேலாக அதிகரித்துள்ளது. இவ்வாறு குடித்தொகைப் பெருக்கம் இலங்கையில் கூடியதொன்ருக அமைய பல காரணங்கள் அடிப்படையாக அமைகின்றன.

ஒரு நாட்டின் குடித்தொகைப் பெருக்கத்தினை நிர்ண
ப்பதில் இறப்பிலும் மீறிய பிறப்பு வீதம், இறப்பு வீதத்
ன் சடுதியான வீழ்ச்சி, குடியேற்றங்கள் ஆகிய காரணி
முக்கிய பங்கினை வகிக்கின்றன. இலங்கையின் ஆரம்ப
ல குடித்தொகை அதிகரிப்பை நிர்ணயிப்பதில் குடி
ற்றங்கள் முக்கிய பங்கினை வகித்தன. 1840-ம் ஆண்டி
ந்து பெருந் தோட்டங்களில் கூலிப்படி அடிப்படை
ல் பெரும் தொகையான தென் இந்தியர்கள் ஐரோப்பியரால் குடியமர்த்தப்பட்டனர். இலங்கை சுதந்திரம் அடையும் வரை இக் குடியேற்றத்தின் தாக்கங்கள் காணப்பட்டன. 1931-ம் ஆண்டு வரை இலங்கையின் குடித்

தொகையை நிர்ணயிப்பதில் இவ்வாறான குடியேற்றங்கள் மூலகாரணியாக அமைந்தது. அதன் பின்னர் இலங்கையின் குடித்தொகை அதிகரித்துச் செல்ல இயற்கை அதிகரிப்பே அடிப்படைக் காரணியாகும். அதிகரித்துவிட்ட சுகாதார வசதிகள், போக்குவரத்து வசதிகள், மனிதனை மரணத்திலிருந்து காப்பாற்றின. இதன் காரணமாக இறப்பு வீதம் சடுதியாக வீழ்ச்சியடைந்தது. பிறப்பு வீதம் பெருமளவு மாருநிலையில் இறப்பு வீதத்தின் சடுதியான வீழ்ச்சி இலங்கையின் குடித்தொகை மிக வேகமான முறையில் அதிகரித்துச் செல்லக் காரணமாயிற்று.

அட்டவணை 56

பிறப்பு, இறப்பு, இயற்கை அதிகரிப்பு விகிதம்

( ஆயிரத்திற்கு )

| ஆண்டு | பிறப்பு விகிதம் | இறப்பு விகிதம் | இயற்கையான அதிகரிப்பு விகிதம் |
|---|---|---|---|
| 1960 | 36.6 | 8.6 | 28.0 |
| 1961 | 35.8 | 8.0 | 27.8 |
| 1962 | 35·5 | 8·5 | 27.0 |
| 1963 | 34.4 | 8·6 | 25.8 |
| 1964 | 33·2 | 8.8 | 24.4 |
| 1965 | 33·1 | 8.2 | 24.9 |
| 1966 | 32·3 | 8.3 | 24.0 |
| 1967 | 31.6 | 7.5 | 24.1 |
| 1968 | 32.0 | 7.9 | 24.1 |
| 1969 | 30.4 | 8.1 | 22.3 |
| 1970 | 29.4 | 7.5 | 21.9 |
| 1971 | 30.1 | 7.7 | 22.4 |
| 1972 | 29.7 | 8.0 | 21.7 |
| 1974 | 27.2 | 8.8 | 18.4 |
| 1975 | 27.8 | 8.5 | 19.3 |
| 1977 | 27.9 | 7.4 | 20.5 |

மூலம்: பொருளியல் நோக்கு

அட்டவணை 56 இல் இயற்கையான அதிகரிப்பு வீதம் 1970-ம் ஆண்டின் பின்னர் வீழ்ச்சியடைந்து சென்றுள்ளமையைக் காணலாம். 1960-ம் ஆண்டு 1000 க்கு 28 சதவீதமாக இருந்த இயற்கையான அதிகரிப்பு வீதம்

1977-ல் 7·5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளது. இது வரவேற்பதாக அமையினும் ஒப்பீட்டு ரீதியில் இயற்கையான அதிகரிப்பு விகிதம் கூடியதொன்ருகவே காணப்படுகின்றது. இலங்கையின் பெரும்பான்மையோர் உற்பத்தித்திறன் குறைந்த கிராமிய விவசாயத் துறையிலேயே தங்கியுள்ளனர். இவர்கள் வறியவர்களாக இருப்பதனுல் தமது பிற்கால வாழ்க்கைக்கு பிள்ளைகளே உத்தரவாதம் எனக் கருதுகின்றனர். எனவே வறிய குடும்பம் பெரிய குடும்பமாக அமைய வேண்டியது தவிர்க்க முடியாததொன்ருகின்றது. மேலும் பங்கீட்டடிப்படையில் பண்டங்களின் விநியோகம், நவீன செயற்கைத் தடைகளில் நம்பிக்கையின்மை, மதக் கோட்பாடுகள், கிராமியச் சூழல், போதிய அறிவின்மை, பாலிய விவாகங்கள், சமூகப் பொருளாதார நிலைமை போன்ற காரணிகளும் இயற்கையான குடித்தொகைப் பெருக்கத்திற்கு அடிப்படையாக அமைகின்றன. இதன் காரணமாகக் குடித்தொகை வளர்ச்சி விகிதம் வேகம் கூடியதொன்ருகக் காணப்படுவதுடன் வருடா வருடம் குடித்தொகையானது சராசரி 3 இலட்சத்தினுல் அதிகரித்துச் செல்கின்றது. அட்டவணை 57 இலங்கையின் குடித்தொகையினையும், அதன் வளர்ச்சிப் போக்கினையும் காட்டுகின்றது.

**அட்டவணை 57**

**சனத்தொகையின் அளவும் வளர்ச்சியும் (1871 — 1979)**

| ...லம் | மொத்தச் சனத்தொகை (மில்லியன்களில்) | வருடச் சராசரி வளர்ச்சி வீதம் |
|---|---|---|
| ...1 | 2.4 | — |
| | 2.8 | 1.4 |
| | 3.0 | 0·9 |
| | 3.6 | 1.7 |
| | 4.1 | 1.4 |
| | 4.5 | 0.9 |
| | 5.3 | 1·6 |
| | 6.7 | 0.9 |
| | 8.1 | 2.8 |
| 1963 | 10.6 | 2.7 |
| 1971 | 12.7 | 2·2 |
| 1979 | 14.5 | 1.7 |

மூலம்: குடிசன மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

1971-ம் ஆண்டு இறுதியாக மேற்கொள்ளப்பட்ட குடிசனத் தொகை மதிப்பீட்டின்படி இலங்கையின் குடித் தொகை 12·7 மில்லியனாகும். இன்று இலங்கையின் குடித் தொகை 14·5 மில்லியனுக்கு மேலாகக் காணப்படுகின்றது. அபிவிருத்தியடைந்த நாடுகளின் வளர்ச்சியோடு ஒப்பிடும் பொழுது இவ்வதிகரிப்பு வேகம் கூடியதொன்றாகும்.

## குடித்தொகைப் பரம்பல் :-

இலங்கையின் குடித்தொகைப் பரம்பல் இடத்திற்கிடம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. இவ்வாறு குடிப் பரம்பல் வேறுபட்டுக் காணப்பட பொருளாதார, சமூக, அரசியற் காரணிகள் அடிப்படையாக அமைகின்றன. இலங்கையின் சனத்தொகைப் பரம்பலைப் பிரதேச ரீதியாகவும் நகர, கிராமிய ரீதியாகவும் பாகுபடுத்தலாம். இவ்வாறு பாகுபடுத்த அவ்வப் பிரதேசங்களின் அபிவிருத்தி காரணமாக அமைகின்றது. ஐரோப்பியரின் வருகையும், கொழும்பு தலைநகரமாக்கப்பட்டமையும் இலங்கையின் மேல் மாகாணத்தில் குடித்தொகைப் பரம்பல் கூடிக் காணப்படவும், ஏனைய பகுதிகளில் குடித் தொகைப் பரம்பல் குறைவாகக் காணப்படவும் அடிப்படையாக அமைந்துள்ளது. குடித்தொகைக் கணிப்பீட்டுக் காலம் தொடக்கம் இப் பரம்பலில் வேறுபாடு ஏற்படவில்லை.

இறுதியாக 1971-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட் குடித்தொகைப் புள்ளி விபர தரவுகளின்படி இலங்கை குடித் தொகையில் 60·5 சதவீதத்தினர் விருத்தியடை ஈரலிப்புப் பிரதேசங்களில் காணப்பட்டனர். 75" மேற்பட்ட மழை வீழ்ச்சியைப் பெறும் பிரதேசங்க விருத்தியடைந்த பிரதேசங்களாக வரையறை செய்யப் கின்றன. மேல் மாகாணமும், மத்திய மாகாணமும் இ விருத்தியடைந்த பிரதேசங்களின் பெரும் பகுதியை உள்ளடக்குகின்றது. இம் மாகாணங்களில் காணப்பட்ட சாதகமான புவியியல் காரணிகள், வேலை வாய்ப்புக்கள், வர்த்தக

நடவடிக்கைகள் ஆகியன குடித்தொகைப் பரம்பல் கூடிக் காணப்பட அடிப்படையாக அமைகின்றன. இலங்கையில் கொழும்பு, களுத்துறை, குருநாகல், காலி, கண்டி ஆகியன குடிப்பரம்பல் கூடிய மாவட்டங்களாக வரையறைசெய்யப் பட்டுள்ளன. 39·5 சதவீதமான குடித்தொகை விருத்தி யடையாத பிரதேசங்களில் காணப்படுகின்றது. இப் பிர தேசங்கள் பெருமளவு வரண்ட பிரதேசங்களாக இருப்ப தனல் இப் பகுதிகளில் சனத் தொகைப் பரம்பல் மிகக் குறைவாகக் காணப்படுகின்றது. எனினும் சமீப காலப் பகுதிகளில் இலங்கையின் வரண்ட பிரதேசங்களில் நீர்ப் பாசனத் திட்டங்கள் அமுல் நடத்தப்பட்டு வருவதுடன் குடியேற்றத் திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. இதன் காரணமாக இவ் வரண்ட பிரதேசங்களில் குடிப் பரம்பல் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்க தோர் மாற்றமாகும்.

## குடியடர்த்தி :-

குடிப் பரம்பலுக்கு இணங்க குடியடர்த்தியும் வேறு பட்டுக் காணப்படுகின்றது. குடியடர்த்தி என்னும் பொழுது சராசரி சதுர மைலுக்குரிய சனச் செறிவினைக் குறிக்கும். இலங்கையின் சனத்தொகைப் பெருக்கத்திற்கு இணங்கச்

அட்டவணை 58

**சனத்தொகைச் செறிவு**

(1 சதுர மைலுக்கு)

| காலம் | தொகை மதிப்பு |
|---|---|
| 1871 | 98.8 |
| 1901 | 140.8 |
| 1931 | 209.5 |
| 1946 | 262.8 |
| 1953 | 319.7 |
| 1963 | 417.7 |
| 1971 | 500.9 |
| 1979 | 572.0 |

மூலம்: *United Nations, Population of Sri Lanka.* 1977

சராசரி சதுர மைலுக்குரிய அடர்த்தியும் வேறுபட்டுச் சென்றுள்ளன. அட்டவணை 58 கடந்த 100 ஆண்டு காலப் பகுதிகளில் குடித்தொகை அடர்த்தியில் ஏற்பட்ட மாற்றங்களைக் காட்டுகின்றது.

சராசரி சதுர மைலுக்குரிய அடர்த்தி கடந்த பல ஆண்டுகளில் பெருமளவு அதிகரித்துச் சென்றுள்ளது. 1871-ம் ஆண்டில் 98·8 ஆகக் காணப்பட்ட குடியடர்த்தி 1979-ல் சதுர மைலுக்கு 572 ஆகக் காணப்படுகின்றது. இலங்கையின் நிலப்பரப்பில் 1901-ம் ஆண்டு சராசரி 1 நபருக்குரிய நிலத்தினளவு 4·5 ஏக்கராகக் காணப்பட்டது. இன்று சராசரி 1 நபருக்குரிய நிலத்தின் அளவு 1·1 ஏக்கர் மாத்திரமே. இது குடியடர்த்தியின் வேகத்தினைப் பிரதிபலிப்பதாகவுள்ளது. சராசரி சதுரமைலுக்குரிய அடர்த்தி 1979-ம் ஆண்டு 572 க்கு மேற்பட்டுக் காணப்படினும் எல்லா இடங்களிலும் சம அளவிலான அடர்த்தியினைக் காண முடியாது. அபிவிருத்தியடைந்த கொழும்பு போன்ற பிரதேசங்களில் சராசரி சதுரமைலுக்குரிய அடர்த்தி 3000 — 4000 இடைப்பட்டதாகக் காணப்படுகின்றது. அபிவிருத்தியடையாத மிகப் பின்தங்கிய பிரதேசங்களில் சராசரி சதுர மைலுக்குரிய அடர்த்தி 100 க்குட்பட்டதாகக் காணப்படுகின்றது. எனவே சதுர மைலுக்குரிய அடர்த்தியின் அடிப்படையில் 3 பெரும் பிரிவினை நோக்கலாம்.

**(1) அடர்த்தி கூடிய மாவட்டங்கள்:**

கொழும்பு, களுத்துறை, குருநாகல், காலி, க[illegible] மாத்தறை, கேகாலை ஆகியன அடர்த்தி [illegible] மாவட்டங்களாக வரையறை செய்யப்பட்டுள[illegible] இம் மாவட்டங்களின் சதுர மைலுக்கு 1000 [illegible] 4000 க்கும் இடைப்பட்ட மக்கள் வாழ்கின்றார்[illegible] இம் மாவட்டங்களில் குடியடர்த்தி கூடிக் காணப்பட அவற்றின் அபிவிருத்தியே காரணமாகும்.

(2) **மத்திம அடர்த்தியுடைய மாவட்டங்கள்:**

யாழ்ப்பாணம், மாத்தளை, பதுளை, இரத்தினபுரி, நுவரெலியா போன்றவை மத்திய அடர்த்தியுடைய மாவட்டங்களில் அடங்கும். சதுர மைலுக்கு 400 க்கும் 1000 க்கும் இடைப்பட்ட அடர்த்தியினைக் கொண்ட மாவட்டங்களாக இவை காணப்படுகின்றன.

(3) **அடர்த்தி குறைந்த மாவட்டங்கள்:**

புத்தளம், சிலாபம், மட்டக்களப்பு, அம்பாறை, அம்பாந்தோட்டை, மன்னார், வவுனியா, அநுராதபுரம், பொலநறுவை, திருகோணமலை, மொனராகலை ஆகியன அடர்த்தி குறைந்த மாவட்டங்களாக வரையறுக்கப்பட்டுள்ளன. சதுர மைலுக்கு 400 பேருக்கும் உட்பட்டவர்களே இப் பிரதேசங்களில் வாழ்கின்றனர்.

**போக்கு :-**

இலங்கையின் குடித்தொகை வளர்ச்சிப் போக்கினை நோக்கும்பொழுது அவை காலத்துக்குக் காலம் மாற்ற

அட்டவணை 59

**குடித்தொகைப் பெருக்க வீதம் 1871 — 1979**

| காலம் | பெருக்க வீதம் |
|---|---|
| 1871 | — |
| 1881 | 1.4 |
| 1891 | 0.9 |
| 1901 | 1.7 |
| 1911 | 1.4 |
| 1921 | 0.9 |
| 1931 | 1.6 |
| 1946 | 0.9 |
| 1953 | 2.8 |
| 1961 | 2.7 |
| 1971 | 2.2 |
| 1973 | 2.2 |
| 1975 | 1.5 |
| 1977 | 1.7 |
| 1979 | 1.7 |

மூலம் : குடிசன மதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம், மத்திய வங்கி

மடைந்து சென்றுள்ளன. குடித்தொகைப் பெருக்க வீதம் கணிப்பீட்டின் ஆரம்ப காலத்தில் குறைவாகவே காணப் பட்டது. ஆனுல் 1953-ம் ஆண்டின் பின்னர் வளர்ச்சி வீதம் வேகம் கூடியதொன்ருக அமைந்தது; எனினும் கடந்த சில ஆண்டுகளாகப் பெருக்க வீதம் குறைவடைந்து செல்கின்றன. 1871-ம் ஆண்டு தொடக்கம் 1971-ம் ஆண்டு வரை பெருக்க வீதத்தில் ஏற்பட்ட மாற்றத்தினையும் அதன் பிற்பட்ட காலப்பகுதியில் பெருக்க வீதத்தின் போக்கினையும் அட்டவணை 59 காட்டுகின்றது.

இலங்கையின் குடிப்பெருக்க வீதம் சமீப காலங்க ளில் குறைவடைந்து சென்றுள்ளது. இது இலங்கையின் சமூக அமைப்பானது பெரு மாற்றங்களுக்கு இலக்காகி யுள்ளதைப் புலப்படுத்துகின்றது. போதியளவு பொருளி யல் முன்னேற்றம் காணப்படாத நிலையிலும் கடந்த 10 ஆண்டுகளில் இலங்கையின் கருவளம் தீவிரமாக வீழ்ச்சி யடைந்துள்ளது. இவ் வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் அடிப்படையாக அமைகின்றன. இலங்கைக் குடும்பத் திட்டச் சங்கம் குடித்தொகைப் பெருக்கத்தைக் குறைப் பதற்குப் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதும் அதைவிட ஏனைய காரணிகளே பெருக்க வீதம் குறைவடைய அடிப்படையாக அமைகின்றன. இலங்கை யின் இலவசக் கல்வி பெருந்தொகையான மக்களை கல்வி யறிவுடையோராகவும் நாகரீக வளர்ச்சிப் பாதை நோக்கிச் செல்வோராகவும் மாற்றி வருகின்றது. இ கையின் குடித்தொகையில் 18 சதவீதமானேரே ப சாலைக்குச் செல்லாதோராவர். எனவே குடித்தொ பெருக்கத்தால் தோன்றும் பிரச்சனைகளை மக்கள் அ வாய்ப்பினைப் பெற்றுள்ளனர். இதன் காரணமாக கையாகவே பெருக்க வீதம் குறைவடைந்து செல்கின்ற பெருமளவு பெண்கள் கல்வித்துறையில் ஈடுபடுகின்றமை யால் படித்து முடித்தவுடன் உத்தியோகம் பார்க்கும் மனேபாவம் உடையவர்களாகக் காணப்படுகின்றனர். இதன் காரணமாகத் திருமண வயதின் எல்லை கூடிக்

காணப்படுகின்றது. பெரும்பாலான பெண்கள் வயது சென்ற பின்னரே திருமணம் செய்யத் தலைப்பட்டுள்ளனர். அதிகமான பெண்கள் திருமணம் புரியாமலே இருந்து விடுகின்றனர். விவாகம் புரிந்த சோடிகள் எண்ணிக்கையில் குறைந்த பிள்ளைகளையே விரும்புகின்றனர். இக்காரணங்கள் பிறப்பு வீதம் குறைவடைய அடிப்படையாக அமைகின்றன. 1964-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஸ்ரீமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் பெருந்தோட்டங்களிலுள்ள தென்னிந்தியத் தொழிலாளர்கள் குடிபெயர்க்கப் பட்டமை பெருக்க வீதம் குறைவடைந்து செல்ல மற்றுமோர் காரணியாகும். அத்துடன் தற்போதைய அரசாங்கம் வெளிநாடு செல்ல அனுமதி வழங்கியமையால் பெரும்பாலான ஆண்கள் வேலை தேடி வெளிநாடு செல்கின்றனர். இவ்வாறான காரணங்களே பெருக்க வீதம் சமீப காலங்களில் குறைவடைந்து செல்ல அடிப்படையாக அமைந்தன.

**வயதமைப்பு:-**

இலங்கையின் சனத்தொகைவயதமைப்பானது பொருளாதார ரீதியில் ஏற்புடையதாக அமையவில்லை. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் குடித்தொகையில் பெரும் பங்கினர் 15 வயதிற்கும் உட்பட்ட சிறுவர்களாவே காணப்படுகின்றனர். இலங்கையிலும் வயதமைப்பை நோக்கும் பொழுது 15 வயதிற்கு உட்பட்டோர் குடித்தொகையில் ஏறத்தாள 40 சதவீதமாகக் காணப்படுகின்றனர். உழைக்கும் வர்க்கம் இவ் உழைக்காத வர்க்கத்தினைக் கவனிக்க வேண்டியிருப்பதனால் சேமிப்பு மட்டம் வீழ்ச்சியடைந்து முதலீடுகள் தடைப்படுகின்றன. எனவேதான் இலங்கை மக்களின் வயதமைப்பு குறைபாடுடையதாகக் கருதப்படுகின்றது. குடிமதிப்பு ஆண்டுகளை அடிப்படையாகக் கொண்டு வயதமைப்பின் வேறுபாட்டினைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது:

அட்டவணை 60

வயதமைப்பு 1911 — 1971

(சதவீதமாக)

| ஆண்டு | வயதுப் பிரிவு | | |
|---|---|---|---|
| | 0 — 14 | 15 — 64 | 65க்கு மேல் |
| 1911 | 41.0 | 56.7 | 2.3 |
| 1921 | 39.4 | 58.2 | 2.4 |
| 1946 | 37.3 | 59.2 | 3.5 |
| 1953 | 39.6 | 56.9 | 3.5 |
| 1963 | 41·6 | 54·8 | 3.6 |
| 1971 | 39.0 | 56.8 | 4.2 |

மூலம்: *United Nations, Population of Sri Lanka* 1977.

14 வயதிற்குட்பட்டவர்கள் சிறுவர்களாகவும் 15 வயதிற்கும் 64 வயதிற்கும் இடைப்பட்டோர் தொழில் புரிவோராகவும், 65 வயதிற்கு மேற்பட்டோர் பிறரில் தங்கி வாழ்வோராகவும் கருதப்படுகின்றனர். இலங்கை மக்களின் வயதமைப்பில் 65 வயதிற்கு மேற்பட்டோரின் பிரிவு அதிகரிப்பு வீதத்தினை பிரதிபலிப்பதாகவுள்ளது. 1911-ல் 2.3 சதவீதமாகவிருந்த 65 வயதிற்கு மேற்பட்டோர் 1971-ல் 4.2 சதவீதமாக அதிகரித்துள்ளனர். சுகாதார வசதிகளின் காரணமாக மரண விகிதம் பெருமளவு குறைவடைந்தமையே இதற்கான காரணமாகும். 15 வயதிற்கும் 64 வயதிற்கும் இடைப்பட்ட தொழில் புரிவோரில் இன்று ஏறத்தாள 9.2 சதவீதமானோர் வேலையற்றோராகக் காணப்படுகின்றனர். இதன் காரணமாக அ... வாழ்பவர்கள் தொகை மிகக் கூடுதலாகக் காணப்ப...றது. 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களும் 65 வய... மேற்பட்ட முதியவர்களும் பிறரில் தங்கி வாழும் ... சமயம் வேலையற்றோரும் பிறரில் தங்கி வாழ வே...வர்களாகவேயுள்ளனர். 1911-ம் ஆண்டு அண்டி ... வோர் எண்ணிக்கை 76.1 சதவீதமாகக் காணப்பட... 1971 இலும் அண்டி வாழ்வோர் வீதம் அதேயளவாகவு...ளது. இது ஒரு உழைப்பவரை நம்பிப் பல உழைக்காதவர்கள் வாழும் சூழ்நிலையை உருவாக்குகின்றது. இதன்

காரணமாகத் தனி நபரின் வருமானம் குறைவதுடன் வாழ்க்கைத் தரமும் மோசமான முறையில் பாதிக்கப்படுகின்றது. எனவேதான் இலங்கையில் பிறக்கும் குழந்தைகளுக்கு இடையேயுள்ள இடைவெளி அதிகரிக்கப்பட வேண்டும் என்னும் கருத்து வலியுறுத்தப்படுகின்றது.

**பிரச்சனைகள் :-**

குடித்தொகைப் பெருக்கம் பற்றிய ஆராய்ச்சிகள் காலத்துக்குக் காலம் பல்வேறு அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. அண்மைக் கால ஆய்வுகளின்படி அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வளர்ச்சிக்கு அந்நாடுகளின் வேகமான குடித்தொகைப் பெருக்கம் ஒரு காரணியல்ல என வாதிடப்படுகின்றது. எனினும் நவீன மல்தஸ் ஆதரவாளர்கள் இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுகளின் பல்வேறு வகைப்பட்ட பிரச்சனைகளுக்கு அந்நாடுகளின் குடித்தொகைப் பெருக்கமே காரணம் என வாதிடுகின்றனர். குடிப் பெருக்க நடவடிக்கைகளுக்கான ஐக்கிய நாடுகள் நிதி குடிப்பெருக்கம் பற்றி 1973-ல் பின்வருமாறு கூறிற்று. "தேசிய நிலையிலும் சர்வதேச நிலையிலும் இறுக்கமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டால் அன்றி இன்றைய துயரகரமான வாழ்க்கைச் சூழ்நிலைகளில் அபிவிருத்திக்குத் தேவையான வளங்கள் தொடர்ந்து வரும் குடிப்பெருக்க அதிகரிப்பினால் விழுங்கப்பட்டுவிடும் என்பதைப் பல அபிவிருத்தி[illegible]டைந்துவரும் நாடுகள் கண்டுகொள்ளக் கூடியதாக [illegible]க்கும்." இலங்கை போன்ற குறைவிருத்தி நாடுக[illegible] இக் கூற்று ஏற்புடையதாக அமையாவிடினும் [illegible]தொகைப் பெருக்கம் பொருளாதார வளர்ச்[illegible] ஒரு தடைக்கல்லாக அமைந்துள்ளதை மறுப்பதற்[illegible] குறைந்து கொண்டு செல்லும் இலங்கையின் [illegible]ளாதார வளர்ச்சி வீதம் இதற்கு உதாரணமாக [illegible]ன்றது. இதனடிப்படையில் இலங்கை பல்வேறு [illegible]ான பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றது.

குடித்தொகைப் பெருக்கத்தின் அதிமுக்கிய விளைவாக அமைவது வேலையில்லாத் திண்டாட்டமாகும். இலங்கையில் பதவி ஏற்கும் ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் மிகப்பெரிய

பிரச்சனையாக அமைவது வேலையற்றோர் பிரச்சனையே. சமூக ரீதியான இப்பிரச்சனை பொருளாதார ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பல தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. இலங்கையில் மணித்தியாலத்திற்கு 31 குழந்தைகள் பிறக்கின்றன. நாளொன்றுக்கு 700க்கும் மேலாக நாட்டின் குடித்தொகை அதிகரிக்கின்றது. இதன் காரணமாக ஒவ்வொரு வருடமும் 1,25,000 பேர் புதிதாக வேலைப் படையினரில் சேர்கின்றனர். ஏற்கனவே கீழுழைப்பும் வேலையின்மையும் காணப்படும் நிலையில் புதிதாக வேலை தேடி நிற்போரின் எண்ணிக்கை அதிகரிக்கின்றமை பல்வேறு பிரச்சனைகளுக்கு வழிவகுக்கின்றது, 1971-ம் ஆண்டு குடிமதிப்புத் தரவுகளின்படி தொழிற்படை 45 லட்சம் பேராக விளங்கி குடித்தொகையில் 35 சதவீதத்தினை உள்ளடக்கியிருந்தது. 1978-ல் மொத்தத் தொழிற்படை 56 லட்சமாகக் காணப்படுவதுடன் குடித்தொகையில் 39 சதவீதமாகவும் அமைந்திருந்தது. 1979-ல் வேலைப்படையினர் குடித்தொகையில் 44 சதவீதமாகக் காணப்பட்டனர். இவ்வேலைப் படையினரில் 9.2 சதவீதம் வேலையற்றோராகக் காணப்படுகின்றனர். எனவே வேலையற்றோர் பிரச்சனை பெருகிச் செல்ல குடித்தொகைப் பெருக்கம் ஒரு காரணியாக அமைகின்றது. 1971-ம் ஆண்டு 5,50,000 ஆகக் காணப்பட்ட வேலையற்றோர் படை இன்று 12 லட்சத்திற்கும் 15 லட்சத்திற்கும் இடைப்பட்டதாக ஏறத்தாள 3 மடங்கு அதிகரித்துள்ளது. ஒவ்வொரு அரசாங்கமும் பொருளாதார வளர்ச்[illegible] யிலும் பார்க்க வேலையற்றோர் பிரச்சனையை எவ்வா[illegible] தீர்க்கலாம் என்பதிலேயே கூடிய கவனம் செலுத்துகி[illegible] றனர். எனவே பெருகும் குடித்தொகை வேலையற்[illegible] பிரச்சனையை மாத்திரமன்றி வேறு பல நெருக்கடி[illegible] யும் தோற்றுவிக்கின்றன,

இலங்கையின் தனிநபருக்கான நிலத்தின் அளவீடு வேகமான வீழ்ச்சிப் போக்கினைக் காட்டுகின்றது. இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 1901-ல் தனிநபருக்கான

நிலத்தின் அளவு 4.5 ஏக்கராகும். 1946-ல் இது 2·4 ஏக்கராகவும் 1979-ல் 1.1 ஏக்கராகவும் குறைவடைய வேகமான குடித்தொகைப் பெருக்கமே காரணமாகும். 16.2 மில்லியன் ஏக்கர் பரப்பளவினைக் கொண்ட இலங்கையின் நிலப்பரப்பில் 4,00,000 ஏக்கர் நிலம் மாத்திரமே காடுகளாகவுள்ளன. பெருகும் குடித்தொகையினுல் காடுகள் அழிக்கப்படுகின்றமை காலநிலைப் பாதிப்பினை ஏற்படுத்துவது மாத்திரமன்றி விவசாய உற்பத்தியையும் பாதிக்கின்றது. பெருகும் குடித்தொகை விவசாய நிலங்கள் துண்டாடப்படவும் காரணமாக அமைகின்றது. இலங்கையின் நிலப்பரப்பில் 39,40,000 ஏக்கர் நிலத்தில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. இன்னும் பயிர்ச் செய்கைக்குரிய நிலங்களாக 64,80,000 ஏக்கர் நிலங்கள் காணப்படுகின்றன. இந்த அடிப்படையில் தனிநபருக்குரிய சராசரி விவசாய நிலத்தின் அளவு அரை ஏக்கருக்கும் குறைவெனலாம். எனவே காணிகள் துண்டாடப்பட்டு ஏக்கருக்குரிய சராசரி விளைச்சல் குறைவடையவும் வேகமான குடித்தொகைப் பெருக்கம் வழி வகுக்கின்றது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பெரும்பாலானவை முதல் விளைவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகளாகவும் அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகளாகவும் காணப்படுகின்றன. இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல; இலங்கையின் இறக்கு[illegible]யில் நீண்ட காலமாக அத்தியாவசிய நுகர்வுப் பொருட்[illegible] பெரும் பங்கினை வகித்து வந்துள்ளன. உணவும் குடி[illegible]கயும், புடைவைகள், ஏனைய நுகர்வுப் பொருட்கள் [illegible]யன மொத்த இறக்குமதியில் 1978-ல் 38 சதவீதமா[illegible] இவ்வாருன இறக்குமதிச் செலவுகள் வருடா வருடம் [illegible]நகிச் செல்ல குடித்தொகைப் பெருக்கமும் ஓர் காரணி[illegible]க அமைகின்றது. அதிகரிக்கும் குடித்தொகைக்கிணங்க [illegible]ணவு, புடைவைகள், மருந்து வகைகள் போன்றவற்றினைப் பெருமளவு இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. இதன் காரணமாக வருடா வருடம் இறக்குமதிச் செலவு

கள் வேகமாக அதிகரித்துச் செல்கின்றன. 1974-ல் 4554 மில்லியன் ரூபாய்களாகவிருந்த இறக்குமதிகள் 1978-ல் ரூபா 14,663 மில்லியனாக அதிகரித்துள்ளது. ஏற்றுமதி வருமானம் அதிகரிக்காத நிலையில் இறக்குமதி செலவுகளின் வேகமான அதிகரிப்பு பாதகமான வர்த்தக நிலுவைக்கு வழி கோலுகின்றது. 1978-ல் வர்த்தக நிலுவைப் பற்றாக் குறை 1457 மில்லியன் ரூபாய்களாக அமைய இறக்குமதிச் செலவுகளின் அதிகரிப்பே அடிப்படைக் காரணமாகும். எனவே பெருகும் குடித்தொகை சென்மதி நிலுவைப் பற்றாக் குறையைத் தோற்றுவிப்பது மாத்திரமன்றி அந்நியசெலாவணி இருப்பு பெருமளவில் வீழ்ச்சியடையவும் காரணமாக அமைகின்றது.

பெருகும் குடித்தொகைக்கிணங்க அரசாங்கத்தின் சமூகநல முதலீடுகள் பெருகிச் செல்கின்றன. இதன் காரணமாகப் பொருளாதார முதலீடுகள் தடைப்படுகின்றன. உணவு மானியம், இலவசக் கல்வி, இலவசப் பாடப் புத்தகங்கள், இலவச சுகாதார வசதி, வீடமைப்பு போன்ற பல்வேறு சமூகநல முதலீடுகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பெருகும் குடித்தொகை இச்செலவுகள் வருடாவருடம் அதிகரிக்கக் காரணமாக அமைகின்றன. இன்று நாட்டின் குடித்தொகையில் ஏறத்தாள 70,00,00 பேர் இலவச உணவுக் கூப்பன்களைப் பெறுகின்றன இதற்காக அரசாங்கம் பல கோடி ரூபாய்களைச் செ வேண்டியுள்ளது. மேலும் கல்வி கற்கும் மாணவர் தொகை வருடாவருடம் அதிகரித்துச் செல்கின்றது வசக் கல்விக்கான செலவுகள் அதிகரிப்பது மாத்திர அரசாங்கம் இலவசப் பாடப்புத்தக விநியோகத்தை முகப்படுத்தியுள்ளமையால் செலவுகள் இரட்டிப் றன. 1980-ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் மொன்றுக்கு இலவசப் பாடப் புத்தகங்களை வழங்க கோடி ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இன்றைய இலங்கையில் வதிவிடப் பிரச்சனை முக்கிய

இடத்தினை வகிக்கின்றது. பெருகும் குடித்தொகைக்கு இணங்க வீடுகள் இல்லாமையால் வீதியோர வாழ்க்கை யையும், சேரி வாழ்க்கையையும் காணக்கூடியதாகவுள் ளது. இப் பிரச்சனையை நீக்க அரசாங்கம் வீடமைப்புத் திட்டங்களை உருவாக்சிச் செயற்படுத்த வேண்டியுள்ளது. இவற்றைவிட சுகாதாரத் தேவை கருதியும் அரசாங்கம் பல கட்டிடங்களை நிறுவ வேண்டியுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் அரசாங்கத்தின் சமூக நல முதலீடுகள் வருடாவருடம் வேகமாகப் பெருகிச் செல்ல வழிகோலு கின்றது. 1970/71-ம் ஆண்டு காலப் பகுதியில் சமூக நல முதலீடுகள் 55.7 கோடி ரூபாய்களாகும். 1978-ம் ஆண்டு சமூக நல முதலீடுகள் 104.8 கோடி ரூபாய்க ளாகக் காணப்படுகின்றது. இவை பொருளாதார முத லீடுகள் குறைவடையவும் தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதம் பாதிக்கப்படவும் காரணியாக அமைகின்றது.

வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பிற்கும் வாழ்க்கைத் தர வீழ்ச்சிக்கும் பெருகும் குடித்தொகையே காரண மாகும். உலக குடித்தொகையில் ⅔ பங்கினைக் கொண்ட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் அனேகமானவை பொருளாதார மேம்பாடுள்ள நாடுகளிடமிருந்து தூர விலகி வருவது உலகில் இன்று துயரகரமான சம்பவமா ம். தனிநபர் தேசிய உற்பத்தி அபிவிருத்தியடைந்து ம் நாடுகளில் 230 டொலர்களாகவும் முன்னேறிய களில் 3085 டொலர்களாகவும் காணப்படுகின்றன. த்தியின் விகிதாசாரம் 1:13 ஆக அமைந்துள்ளது. கையின் தேசிய உற்பத்தியையும், தலா உற்பத்தி ம் ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் குறைவிருத்தியின் மையினைக் கண்டு கொள்ளலாம். கடந்த 25 வருடங் க இலங்கையின் தேசிய வருமானம் 5 சதவீதமாக திகரித்துச் செல்ல தலா வருமானம் சராசரி 2 சத வீதமாகவே அதிகரித்துச் சென்றுள்ளது. தேசிய உற்பத்தி அதிகரிப்பிலும் பார்க்க தலா உற்பத்தி அதிகரிப்பு குறை

வாகக் காணப்பட குடித்தொகையின் வேகமான அதிகரிப்பே காரணமாகும். தலா வருமானம் பெருமளவு அதிகரிக்கா நிலையில் விலை மட்டங்களின் வேகமான வளர்ச்சி வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பிற்கும், வாழ்க்கைத்தர வீழ்ச்சிக்கும் வழிவகுக்கின்றது. எனவே சராசரி மனிதன் உட்கொள்ள வேண்டிய உணவின் அளவிலும் பார்க்க இலங்கையில் ஒரு மனிதனின் உணவின் அளவு மிகக் குறைவாகக் காணப்பட குடித்தொகைப் பெருக்கமே காரணமாகும்.

வேலையில்லாத் திண்டாட்டம், மெய் வருமான வீழ்ச்சி வாழ்க்கைத்தர உயர்வின்மை, சென்மதி நிலுவைச் சமநிலையின்மை, நிலம் துண்டாடப்படல், முதலீடுகள் தடைப்படல் போன்ற பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கும் இலங்கையில் பெருகிச் செல்லும் குடித்தொகையே காரணமாகக் காட்டப்படுகின்றது. பெருகும் குடித்தொகை உழைப்புச் சக்தி அதிகரிப்பிற்கும், உற்பத்திப் பெருக்கத்திற்கும் வழிவகுக்கும் என வாதிடப்பட்டாலும் இலங்கையில் அவை சரியான முறையில் பயன்படுத்தப்படாமை பிரச்சினைக்குரிய தொன்றுகின்றது. எனவே இலங்கை போன்ற நாடுகள் பெருகும் குடித்தொகையைக் கட்டுப்படுத்தினாலன்றி பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது.

**தீர்வுகள்:-**

இலங்கையில் குடித்தொகை பற்றிய ஆய்வுகள், வடிக்கைகள் பல்வேறு காலப் பகுதிகளில் பல்வேறு வனங்களால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. தொகைக் கட்டுப்பாட்டினை ஏற்படுத்தல் ஒன்றே வேறு வகையான பிரச்சினைகளுக்கும் தீர்வாகக் க பட்டது. சமூகக் காரணியான குடித்தொகையினை கட் படுத்தப் பல நடவடிக்கைகள் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்டன. ஆரம்ப காலங்களில் குடியேற்றங்கள் இலங்கையின் குடித்தொகைப் பெருக்கத்திற்குக்

காரணமாக அமைந்தமையால் 1948-ம் ஆண்டுக்குப்
பின்னர் குடிவரவு சட்ட ரீதியாகக் கட்டுப்படுத்தப்பட்
டது. இதனைத் தொடர்ந்து இயற்கையான குடிப்பெருக்க
வீதத்தைக் குறைக்கும் முகமாக 1953-ல் ஆரம்பிக்கப்
பட்ட குடும்பநலத் திட்டச் சங்கங்கள் பல்வேறு வகைப்
பட்ட பிரச்சாரங்களை ஆரம்பித்தன. குடும்பக் கட்டுப்
பாட்டினைப் பின்பற்றும் குடும்பங்களுக்குப் போதிய ஆலோ
சனைகளையும் வழிமுறைகளையும் இச் சங்கங்கள் அறிமுகப்
படுத்தின, கிராமங்கள் தோறும் பல்வேறு பிரச்சாரங்கள்
மேற்கொள்ளப்பட்டன. 1964-ம் ஆண்டு கைச்சாத்திடப்
பட்ட ஸ்ரீமா – சாஸ்திரி ஒப்பந்தம் தென்னிந்தியத் தோட்
டத் தொழிலாளர்களை குடிபெயர்க்க வழிவகுத்தது.
இவற்றை விட மாவட்ட சனத்தொகைக் குழுக்கள், சனத்
தொகைத் தகவல் நிலையம் போன்றவை நிறுவப்பட்டன.
இவ்வாறான பல்வேறு நடவடிக்கைகள் இலங்கையின்
குடித்தொகைப் பெருக்க வீதம் சமீபகாலப் பகுதிகளில்
ஓரளவு வீழ்ச்சியடைந்து செல்ல வழிவகுத்துள்ளது.

இலங்கையில் கடந்த 5 ஆண்டு காலப் பகுதிகளில்
குடித்தொகைப் பெருக்க வீதம் குறைவடைந்து சென்
றுள்ளமை குறிப்பிடத்தக்கதோர் சிறப்பம்சமாகும். எனி
னும் அபிவிருத்தியடைந்த நாடுகளோடு ஒப்பிடும்பொழுது
வ்வளர்ச்சி வீதம் கூடியதாகவேயுள்ளது. பொதுவாக
டில் பல மக்கட் தொகுதியினருக்கு ஆகக் குறைந்த
ழில் செய் வசதிகளோ, வாழ்க்கை வசதிகளோ கிடை
. அதே நேரத்தில் வேறு பல நாடுகள் விஞ்ஞான
ழில்நுட்ப மறுமலர்ச்சிகளின் பயனைப் பிரதிபலிக்கும்
உயர்ந்த பொருளாதார அபிவிருத்திப் படிகளை
ந்து விட்டன. இலங்கையும் அவ்வாறான படிமுறை
அடைவதற்குப் பெருகும் குடித்தொகையைக் கட்
டுத்தல் ஒன்றே வழியாகும். அளவான மக்கட்
தாகையைக் கொண்டு சிறப்புமிக்க திட்டங்களைத் தயா
ரித்து செயற்படுவதன் மூலம் இலங்கை மக்களின் எதிர்
காலம் ஒளிமயமானதாகவிருக்கும்.

**இதுவரை கற்றவை :-**

(1) இலங்கையின் குடித்தொகை அதிகரிப்பானது குறை விருத்தி நாடுகளின் போக்கினைக் கொண்டதாக அமைந்துள்ளது:

(2) 1871-ம் ஆண்டு 2·4 மில்லியனாகக் காணப்பட்ட குடித்தொகை 1978-ல் 14'2 மில்லியனாக அதிகரித்துள்ளது.

(3) அதிகரித்த கருவளமும், குறைந்த மரண விகிதமுமே குடித் தொகைப் பெருக்கத்திற்குக் காரணமாகும்.

(4) குடிப்பரம்பல் ஈரலிப்புப் பிரதேசங்களில் கூடிக் காணப்பட அப் பகுதிகளின் வேலை வாய்ப்பே அடிப்படைக் காரணமாகும்.

(5) குடியடர்த்தி சாராசரி 500 க்கு மேற்பட்டுக் காணப்படினும் இடத்திற்கிடம் வேறுபட்டுக் காணப்படுகின்றது.

(6) பெருக்க வீதம் 1975-ம் ஆண்டின் பின்னர் வீழ்ச்சியடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.

(7) குடித் தொகையில் 15 வயதிற்கும் 60 வயதிற்கும் இடைப் பட்ட உழைக்கும் வர்க்கம் ஒப்பீட்டு ரீதியில் குறைவாகக் காணப்படுகின்றது.

(8) வேலையில்லாத் திண்டாட்டம், காடுகள் அழிக்கப்படுதல், சென் மதி நிலுவைச் சமநிலையின்மை, வாழ்க்கைத்தர வீழ்ச்சி, முதலீடுகள் தடைப்படல் போன்றவற்றிற்குக் குடிப்பெருக் அதிகரிப்பே காரணமாகக் காட்டப்பட்டது.

(9) சமூக ரீதியிலும், அரசியல் பொருளாதார ரீதியிலும் தொகையைக் கட்டுப்படுத்த வழிமுறைகள் மேற்கொ பட்டு வந்துள்ளன.

(10) பெருகும் குடித்தொகையைக் கட்டுப்படுத்தல் ஒன்றே இ யின் சுபீட்சமான பொருளாதார வளர்ச்சிக்கு வழி வ

## பாடநூல்களும் குறிப்பு நூல்களும்

இந்நூல் பெரும்பாலும் பின்வரும் நூல்களைத் தழுவி எழுதப்பட்டது.


(1) பொருளியல் நோக்கு (எல்லா வெளியீடுகளும்)

(2) மத்திய வங்கியின் ஆண்டறிக்கைகள் (1950-1978)

(3) Economic and Social Statistics of Sri Lanka (1978)

(4) Central Bank of Ceylon Senza Lectures

(5) United Nations, Population of Sri Lanka 1977

(6) Department of Census and Statistics, Statistical

(7) Pocket Book of Sri Lanka 1970 — 1977

(8) Governtment of Sri Lanka, 5 Years plan

(9) Minister of Finance Budjet speech 1950–1977

(10) வித்தியோதயம் (இலங்கைப் பல்கலைக் கழகம் வித்தியோதய வளாக வெளியீடு)

(11) வரவு செலவுத் திட்டங்கள் (71 — 80 வரை)

(12) புள்ளி விபரத் திணைக்கள ஆண்டறிக்கை

) மகாவலித்திட்ட வெளியீடுகள்

அரசாங்கத்துறை முன்னேற்றம் 1973

# இலங்கையின் பொருளாதாரம்

பெருந்தோட்டப் பயிர்களின் தோற்றமே வரலாற்று ரீதியாக இலங்கையின் பொருளாதாரம் பற்றிக் கண்டு கொள்ள உதவியாக அமைகின்றது. இந்நூல் கடந்த ஒரு நூற்றாண்டு காலமாகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களையும், புதிய பொருளாதார நடவடிக்கைகளையும் விளக்குகின்றது. க. பொ. த. உயர்தர மாணவர்களின் பரீட்சைக்குத் தேவையான இலங்கையின் பொருளாதாரம் பற்றிய முழு விபரங்களும் இதில் அடங்குகின்றன. உயர்வகுப்பு மாணவர்களுக்கும், இலங்கையின் பொருளாதாரம் பற்றி அறிந்து கொள்ள விரும்பும் அனைவருக்கும் இது உதவியாக அமையும்.

விலை ரூபா 14/90

...லங்கா புத்தகசாலை,
...பாணம்.